# புது டில்லி

சா. கந்தசாமி



# புது டில்லி

சா.கந்தசாமி

கே.கே.நகர் மேற்கு, சென்னை & 600 078.
[பாண்டிச்சேரி கெஸ்ட் ஹவுஸ் அருகில்]
Ph: 044-4855 7525 Mobile: +91 87545 07070

புது டில்லி (நாவல்)

ஆசிரியர்: சா.கந்தசாமி©

thor: Sa.Kandasamy ©

First Edition: December - 2019

Pages: 160

ISBN: 978-93-89857-08-5

Published by :

Discovery Book Palace (P) Ltd,

# 6, Mahaveer Complex, Munusamy Salai,

K.K.Nagar West, Chennai-600 078.

Mobile: +91 87545 07070

E-mail: discoverybookpalace@gmail.com,

Website: www.discoverybookpalace.com

Rs. 180

சா. கந்தசாமி

அறுபதாண்டுகாலமாக சிறுகதைகள், நாவல்கள், விமர்சனக் கட்டுரைகள், பயண நூல்கள், வாழ்க்கைச் சரித்திரங்கள் எழுதிவரும் படைப்பு எழுத்தாளர். முதல் நாவல் ‘சாயாவனம்’, 1965--ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. மூன்றாண்டுகளுக்குப் பிறகு லட்சுமி கிருஷ்ணமூர்த்தி வாசகர் வட்டத்தின் வழியாக வெளிவந்தது. சுற்றுப்புறச் சூழல் பற்றி அதிகம் அறியப்படாத காலத்தில், வாழ்க்கையோடு சேர்ந்து போகும்படியாக எழுதப்பட்டது. ஆங்கிலம் உள்பட சில இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

‘அவன் ஆனது’, ‘தொலைந்துபோனவர்கள்’, ‘வான் கூவர்’ ‘சூரியவம்சம்’, ‘பெருமழை நாட்கள்’, ‘மாயாலோகம்’, ‘நீலவன்’, ‘எட்டாவது கடல்’, ‘கருப்பின் குரல்’ --என பதினொரு நாவல்கள் வெளிவந்துள்ளன. 300 – சிறுகதைகள் எழுதியுள்ளார்.

1970--ஆம் ஆண்டில் வெளிவந்த ‘கசடதபற’ –என்னும் இலக்கியச் சிற்றிதழின் தொடக்கத்திலும் செயற்பாட்டிலும் முக்கியமான பங்காற்றியவர்.

1998--ஆம் ஆண்டில் ‘விசாரணைக் கமிஷன்’– நாவலுக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றவர். 2009--ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசின் ‘கலைமாமணி’ விருது பெற்றவர்.

23--07--1940--ஆம் ஆண்டில், நாகை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறையில் பிறந்த சாந்தப்ப தேவர் கந்தசாமி என்னும் சா.கந்தசாமியின் தாயின் பெயர் சின்னம்மாள்.

சென்னை நந்தனத்தில் அடையாற்றின் கரையில் மனைவி ரோகிணியுடன் வசித்து வருகிறார்.

## அத்தியாயம் 1

நான் தனிஆள். எப்பொழுதும் தனியாகவே இருக்கிற ஆள். இன்று, நேற்று இல்லை. நினைவு தெரிந்த நாள் முதலாக நான் தனிஆள். நான் பிறந்ததே அப்படித்தான். எனக்கு அண்ணன், தம்பி கிடையாது. அக்கா, தங்கையும் இல்லை. தனிக்காட்டு ராஜா. ராஜா என்றால் காட்டில் ஒரு சிங்கம்தான். நாட்டிற்கு ஒரு ராஜாதான். அப்படித்தான் நான் என் வீட்டிற்கு ஒரே பிள்ளை. பெயர் ராஜராஜன். ராஜாவுக்கு எல்லாம் ராஜன்.

அம்மா வயிற்றில் இருந்து பிறந்துவிட்டால் தனி ஆள்தான். அது மனிதனுக்கு மட்டுந்தான் என்றில்லை. சிங்கம், புலி, நாய், நரிக்கும்கூடத்தான். எல்லாம் தனித்தனியாகத்தான் திரிகின்றன. வானத்தில் பறக்கும் பறவைகளும் அப்படித்தான். ஒவ்வொன்னும் கொஞ்சம் காலம் கூடி குலாவி காதல் செய்து குட்டிப்போடுகின்றன; குஞ்சு பொரிக்கின்றன என்பதால் அவை சேர்ந்திருப்பதில்லை. அதுதான் முக்கியம். உலகத்தில் பிறந்த எந்த ஜீவராசியும் இன்னொன்றை கட்டிப்பிடித்துக் கொண்டு சொந்தம் பாராட்டுவது இல்லை. பிறப்பது இயற்கை. வளர்ந்து கூடுவதும் இயற்கை. அப்புறம் செத்துப்போவது அதுதான்.

இறப்பிற்கும் பிறப்பிற்கும் இடைபட்ட காலத்தில் மனிதன்தான் ஒவ்வொன்றின் மீதும் சொந்தம் பாராட்டுகிறான். அதிலும் இது நான் பெற்ற பிள்ளை; எனக்குப் பிறந்த மகன். என்னுடைய மகள் என்றும் பெருமிதம் அடைகிறான். நிஜத்தில் அதெல்லாம் கிடையாது. உனக்குப் பிறந்ததால் உன் மகன்; உன் மகள் ஆக மாட்டார்கள். நீ ஒரு பெண்ணோடு கூடி கலவி புரிந்தால் குழந்தைகள் பிறப்பார்கள். நீ கூடினால் மட்டும் குழந்தை பிறப்பார்கள் என்பது கிடையாது. யார் கூடினாலும் பிறப்பார்கள். ஆனால் என் குழந்தைகள் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளக்கூடாது. இதெல்லாம் எனக்கு யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. நானாகவே தெரிந்துகொண்டு சொல்வதுதான்.

உலகத்தில் யாரும், இன்னொருவர்க்கு எதையும் சொல்லிக் கொடுக்க முடியாது. ஏனென்றால் சொல்லிக் கொடுக்க என்று ஒன்றும் இல்லை. அதாவது, சொல்லிக் கொடுக்க உனக்கு ஒன்றும் தெரியாது; உனக்கு மட்டும் தெரிந்தது என்று உலகத்தில் ஒன்றுமே இல்லை. உனக்கு என்ன தெரியுமோ அது இன்னொருவனுக்கும் தெரியும்; அவனுக்குத் தெரிந்தது உனக்குத் தெரியும். அப்படி இருக்க நீ எப்படி இன்னொருவனுக்குச் சொல்லிக் கொடுக்க முடியும்? அதுதான் என் கேள்வி. கற்பதற்கு ஒன்றுமில்லை என்பதும்; கற்றுக் கொடுக்க ஏதுமில்லை என்பதும் தான். அதனாலேயே நான் தனிஆள்.

எனக்கு மூன்று நான்கு வயதாகும்போதே ஞானம் சுடர்விட்டு பிரகாசிப்பது தெரிந்தது. ஞானம் என்பது அறிவது. எப்பொழுது சொல்லவேண்டுமோ அப்பொழுது சொல்வது. சொல்லாமல் இருப்பதும், சொல்வதும் ஒரு வகையில் ஞானம்தான்.

மூன்று வயதாகும்போதே, என்னைச் சுற்றி நடப்பது எல்லாம் கண்களால் கண்டது; காதால் கேட்டது எல்லாம் மனத்தில் ஏறியது. அவற்றில் காண்பதற்கும், கேட்டதற்கும் மத்தியில் மறைந்து கொண்டிருப்பது, ஒளித்து வைத்திருப்பது என்பது என்ன என்று தெரிந்தது. அதனால் சிரித்துக் கொள்வேன்.

“எங்கள் ராஜராஜன் சின்ன வயதில் இருந்தே சிரிப்பான்; அவன் சிரிப்பே ஒரு அழகு. ஆனால் ஒரேமாதிரி சிரிக்க மாட்டான். விதவிதமாகச் சிரிப்பான். செல்லமா, ‘சிரிப்பு ராஜா’ என்று கூப்பிடுவோம்Ó என்று எனக்கு ஒன்பது வயதாகும்போது அம்மா கமலம் டீச்சர் சொல்லியது.

“இப்பக்கூட வகுப்பில் வித்தியாசம் வித்தியாசமாக சிரிக்கிறான். மாயக் கண்ணன் சிரிக்கறது மாதிரி என நான் நினைத்துக் கொள்வேன்.”

“நான் கண்ணா என்றுதான் குறிப்பிடுவேன். அப்பாதான் ராஜராஜன் என்று பெயர் வைத்தார்கள். தஞ்சாவூர் மகாராஜா. கல்வெட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பொறிக்கப்பட்ட பெயர், என்று சொன்னார்கள்.”–

“ஆமாம். ராஜராஜன் பெரிய சோழ மன்னன்.”

“அப்பா, தஞ்சாவூர் அழைத்துக்கொண்டு போய் காட்டினார்கள். பெரிய கோயில். நாளெல்லாம் சுற்றிப் பார்த்தோம். பாலசுப்பிரமணியம் என்னும் கல்வெட்டுப் படிக்கிறவர், புத்தகம் படிக்கறது மாதிரி படித்தார். அதில் ராஜராஜன் என்ற பெயர் இரண்டுமுறை வந்தது.”

“நான் இன்னும் தஞ்சாவூர் பெரிய கோயிலுக்குப் போனது இல்லை. போக வேண்டுமென்று நினைக்கிற போதெல்லா என்னவோ முடியாமல் போய்விடுகிறது.”

“அடுத்த விடுமுறைக்கு அவசியம் போயிட்டு வாருங்கள்.”

“நீங்கள் சொல்லுறது நடக்க வேண்டும்.”

“நான் எங்கே சொல்கிறேன். எங்கள் ராஜராஜன் சொல்கிறான்” என்று அம்மா என் கையைப் பிடித்தது.

“நான் எங்க அம்மா சொன்னேன்?”

“இதுதான் டீச்சர் ராஜராஜன். இவன வச்சிக்கிட்டு ஒன்னும் பேச முடியாது.”

“குழந்தை என்றால் அதுதான்?”

அம்மா என் கையைப் பிடித்துக்கொண்டு, டீச்சரைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு முன்னே அடியெடுத்து வைத்தது.

என் மனதில் ஏறியது எல்லாம் அப்படியே நினைவில் இருக்கிறது. அதில் விசேஷம் என்னவென்றால் எப்பொழுதோ நடந்ததை எல்லாம், அது இப்பொழுது நடந்ததுமாதிரியே சொல்ல வருகிறது. இரண்டும், நான் முயற்சி செய்து கற்றுக்கொண்டதில்லை. மனத்திற்குப் பயிற்சிக்கொடுத்து சரிப்படுத்தியதுமில்லை. அதில் சொல்ல வேண்டியது, முயற்சி பயிற்சி என்பதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. அது பின்னால்தான் தெரிந்தது. எது உனக்குத் தெரிய வேண்டுமோ, அது தானாகவே தெரியும் என்பதுதான் நான். எதையும் நான் நின்று நிதானித்து இரண்டு, மூன்றுமுறை பார்க்கிறவனில்லை. நடக்கும்போது, நிற்கும்போது கண்களில் எவ்வளவு படுகிறதோ– எவ்வளவு பார்க்க முடிகிறதோ அவ்வளவுதான். எதையும் ரொம்ப சிரத்தை எடுத்துக்கொண்டு உற்றுக் கவனித்துப் பார்க்கிற ஆளில்லை. அது மாதிரிதான் பேச்சு. ஒருமுறை செவியில் எது விழுகிறதோ அதுதான். இன்னொரு முறை திருப்பிக் கேட்க மாட்டேன். அதற்காக அரைகுறையாக கேட்டுக் கொண்டேன் என்பதில்லை.

நான் என்னைப் பற்றி அறிந்து கொண்டிருக்கிறேன். அதனால் அறிந்ததை அறிந்த விதமாகச் சொல்கிறேன். பலர் தன்னைப்பற்றி அறிவதில்லை. அறிய முடியாததால் சொல்வதுமில்லை. முதலில் தன்னைச் சுற்றி நிகழ்வதை அறிய வேண்டும். நிகழ்வு என்பதின் காரண காரியங்களை தொ¤ய வேண்டும். நடந்ததை அப்படியே அறிவது அறிவு. அதன் பின்னேயும் முன்னேயும் இருப்பதை அறிவது ஞானம். அதனை அப்படியே சொல்வது ஞானம் என்பதின் வெளிப்பாடு.

என் மெய் நண்பன் ஐராவதம் வீட்டுக்குச் சென்றேன். பூக்கார தெருவில் புது வீடு கட்டி குடியேறியிருந்தார். மாடியில் படிக்க, பேச என்று பெரிய அறை வைத்திருந்தார். அவர் வீட்டிற்குப் போனால் மணிக்கணக்கில் பேசிக்கொண்டு இருப்போம். பேசிக்கொண்டிருப்போம் என்று நான் சொல்வதுகூட சரியில்லை. நான் பேசுவேன். அவர் கேட்டுக்கொண்டு இருப்பார். எனக்குப் பேசுவதில் உள்ள ஆர்வத்தைப் பார்த்துவிட்டு, “உனக்கு பேசுவதில் பேராசை இருக்கிறது?” என்றார்.

“பேச்சு என்பது மனிதன் கற்றுக்கொண்டது. அது வித்தைமாதிரி. பாடகன் பாடிக் காட்டுகிறான்; ஆடக் கற்றவள் ஆடிக் காட்டுகிறாள்; பேசத்

தெரிந்தவன் பேசிக் காட்டுகிறான்.''

''அப்படியென்றால் மேடை போட்டுப் பேச வேண்டும்.''

''ஓஷோ ஆயிரம் மணிநேரம் பேசி இருக்கிறாராம். அவர் பேச்சையெல்லாம் புத்தகமாகப் போட்டு இருக்கிறார்கள். நேற்று மாணிக்கம் போன் பண்ணார். மயிலாப்பூரில் ஒரு வீட்டில் இருந்து ஓஷோவின் எல்லா புத்தகத்தையும் இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கினாராம்.''

''ரொம்ப மலிவாக இருக்கிறதே''

''நான்கூட அப்படித்தான் நினைத்தேன். ராகவலு என்ற வக்கீல் பதினைந்து வருடமாகச் சேர்த்து வைத்திருந்தாராம். எல்லாம் பூனாவில் இருந்து வரவழைக்கப்பட்டது. அவரே படித்துவிட்டு, பென்சிலால் கோடெல்லாம் போட்டு வைத்திருக்கிறாராம். இரண்டு மாதத்திற்கு முன்னால செத்துப் போயிட்டார். மகன் ஆஸ்திரேலியாவில் கண் டாக்டராம். அவனுக்குப் புத்தகம் என்றால் ஏகக் கடுப்பாம். தன் சிநேகிதனிடம் புத்தகத்தையெல்லாம் ஒழித்துக் கட்டச் சொன்னானாம். எப்படியோ மாணிக்கத்திற்கு தகவல் வந்திருக்கிறது. பத்தாயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு போயிருக்கிறார். சிநேகிதன், ''முதல்ல இந்தக் குப்பையை எல்லாம் அள்ளிக்கிட்டு போயிடுங்க. கார் இருக்கிறதா?'' என்று கேட்டிருக்கிறான்.

''பெரிய கார் இருக்கிறது''

''எங்கள் வேலைக்கார ஆள்கள் அள்ளிப்போட்டுடுவார்கள்''

''பணம்.''

''பணமா?'' என்று ஒரு நிமிஷம் யோசித்தவன், ''ரெண்டாயிரம் கொடுங்கள்'' என்றானாம். அவர் ஒரு கணம் திணறிப் போய், நான்கு ஐநூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்துவிட்டு தங்கப் புதையலை எடுத்துக்கொண்டு வந்ததுமாதிரி சந்தோஷமாக வந்தேன்'' என்றார்.'

''பாவம்''

''யார்?''

''தெரியவில்லை''

ஐராவதம் இப்படித்தான். ‘நறுக் நறுக்’கென்று ஏதாவது சொல்வார். அவா¢ என்ன சொல்கிறார்,- என்ன செய்கிறார் என்பது எனக்குத்தான் தெரியும்.

ஒரு நாள் ஐராவதம் வீட்டிற்குப் போய் இருந்தேன். மாலை நான்கு மணி இருக்கும். அவன் மனைவி காபி கொடுத்தாள். ஐராவதம் வெந்நீர் குடித்துக் கொண்டிருந்தார்.

“என்ன ஆச்சு?” என்று அவர் மனைவி சாரதாவைக் கேட்டேன்.

“உங்களுக்குத் தெரியாதா? இரண்டு நாட்களாக காபி சாப்பிடுவதில்லை. வெந்நீர்தான் குடிக்கிறார். அமிர்தம் போல இருக்கிறது” என்கிறார்.

“அப்படியா?” என்று ஐராவதத்தைத் திரும்பிப் பார்த்தேன். அவர் கண்களை மூடிக்கொண்டு, தலைகுனிந்து வெந்நீர் குடித்துக் கொண்டிருந்தார்.

“உங்கள் சிநேகிதர் ரொம்ப அழுத்தம்” என்றாள். என் மூஞ்சியைப் பார்த்தபடி. இருவருக்கும் கல்யாணமாகி ஏழு ஆண்டுகள் ஆகிறது. குழந்தைகள் இல்லை. மாநகராட்சி கணக்காயர். பி.காம்., முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். பேங்கில் வேலைக்குப் போய் இருக்கலாம். என்னவோ மாநகராட்சி வேலையில் சேர்ந்து கொண்டுவிட்டார்.

நான் அண்ணாமலையில் இரண்டு ஆண்டுகள் சரித்திரம் படித்தேன். அது போதுமென்று பட்டது நின்றுவிட்டேன், மூன்றாம் ஆண்டு தேர்வு எழுதப் போகவில்லை. ஞானம்தான் சொன்னது. இரண்டு பேர்கள் ஒன்றாக இருந்தாலும் ஒன்றில்லை. அது கணவன்-மனைவி, அப்பா--மகன், அக்கா--தங்கை என்றுதான் இல்லை, சிநேகிதர்களுக்கும் அதுதான்.

★

## அத்தியாயம் 2

என் மெய்நண்பன் ஐராவதம். 'அதுயென்ன மெய்நண்பன் என்றால்' நான் நிறைய சொல்வேன். எனக்குப் பெரிய நண்பர்கள் குழாம். நான் கணக்குப் போட்டு, பெயர் எழுதிப் பார்ப்பதில்லை. ஆனால் நூறு பேர்களுக்கு மேல் என்று சாதாரணமாகச் சொல்லிவிடலாம். அவ்வளவு பேர்களும் எனக்கு நண்பர்கள்தான். அதில் பெண்களும் உண்டு. ஆண்களுக்கு பெண் நண்பர்கள் பொதுவாக இருக்க மாட்டார்கள். பெண்கள் விரும்பினாலும் அம்மா, அப்பா, கணவன், மகள், மகன் நண்பனாக மற்றவர்களோடு இருக்கவிடமாட்டார்கள். அதுதான் பெண்களுக்குக் கொடுமை. அதுபற்றி எவளாவது யோசித்து இருக்கிறாளா? யோசித்ததை வெளியில் சொல்லி இருக்கிறாளா? 'யோசனை என்பதும், அதனை வெளியில் சொல்வது என்பதும் ஒன்றில்லை' என்று ஐராவதம் ஒரு நாள் சொன்னார்.

"ஏன்? அது என்ன அப்படி?"

"மனத்தில் ஆயிரம் கசடுகள் இருக்கின்றன. உள்ளே இருப்பதைச் சொல்ல முடியுமா?"

"சொன்னால் என்ன?"

"இரண்டு பேரும் சேர்ந்திருக்க முடியாது."

"அது நல்லதுதானே? மனத்தில் இருப்பதைச் சொன்னால் பிரிய வேண்டுமென்றால் பிரிவதுதானே நல்லது."

அவா¢ சிரித்தார்.

"என்ன சொல்லு?"

"நீ ரொம்ப பெரிய ஞானியாக இருக்கிறே, அதுதான் பிரச்சனை?"

"அது தெரியும். நீ விஷயத்திற்கு வா."

"வெளியூரில் இருந்து நகரத்திற்கு ஒரு ஆள் வந்தான். அவன் நாட்டுப் புறத்தான். பரட்டைத்தலை. கொஞ்சம் தாடி. முறுக்கிவிட்ட மீசை. தலையில் சிவப்பு முண்டாசு. இடுப்பில் வெள்ளை வேட்டி. காலில் சலங்கைக் கட்டிக்கொண்டிருந்தான். சலங்கை நடக்கும்போது சப்தம்

போட்டுக்கொண்டே இருந்தது. கையில் மஞ்சள் கொடி கட்டிய கொம்பு. பூவரசு போத்துக் கொம்பு. எண்ணெய்த் தடவி வழுவழுவென்று இருந்தது. அதன் உச்சியில் நான்கு பெரியமணிகள். அதுவும் நடக்கும்போது சப்தம் போட்டது. அவனை ஒரு தெரு நாய் பார்த்தது.''

``பெரிய கதைபோல இருக்குது.''

``சின்ன கதைதான். சீக்கிரம் முடித்துடுறேன்.''

``இல்லை. இல்லை. சொல்லு''

``உனக்கு நல்லா தெரியும். உலகத்தில் இன்னொருவன் பேசுறத எவனும் கேட்க மாட்டான். ஒவ்வொருத்தனுக்கும் தானே பேசணுமென்று ஆசை. தான் பேசுவதைக் கேட்கவே மற்றவர்களுக்கு நேரமும், செவியும் இருக்கிறது என்பது நினைப்பு. அதனால் இவன் குறுக்கே புகுந்து குதறிவிடுகிறான்.''

``சரி, நீ கதையைச் சொல்லு''

``கதை என்பது ஒன்றும் கிடையாது. மனுஷன் பேசத்தெரிந்தவன். அவனால் சும்மா இருக்க முடியாது. அதனால் தனக்குத் தோன்றியதை எல்லாம் சொல்கிறான். அதைத்தான் கதை என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம்.''

``அது இல்லை. நீ என்னமோ ஒரு நாட்டுப்புறத்தான், நாயென்று சொன்னியே அதைச் சொல்லு.''

``நாய்களும் மனிதர்களும், பதினைந்தாயிரம் ஆண்டுகளாக ஒன்றாக இருக்கிறார்கள். மனிதர்களோடு நெருக்கமாகப் பழகி வரும் பிராணி என்றால் அது நாய்தான். உலகத்தில் லட்சக்கணக்கான பிராணிகள் இருக்கின்றன. அதில் மனிதனோடு சேர்ந்திருப்பது நாய் ஒன்றுதான். ஏனென்றால் நாய்தான் மூர்க்க மனிதனோடு விசுவாசமாக இருப்பது. பெற்ற தாய் தந்தை, கட்டிய பொண்டாட்டி, பெற்ற பிள்ளையெல்லாம் கைவிட்டுவிட்டாலும், வளர்த்த நாய் அவனைவிட்டுப் போவதில்லை.''

``எங்கள் சித்தப்பா, நான்கு நாய் வளர்த்துக்கொண்டிருந்தார். எல்லாம் பெட்டை நாய்கள். ஒன்று மாற்றி ஒன்று குட்டி போட்டுக்கிட்டே இருக்கும். நாய்களுக்குத் தீனி போடுறது; குட்டிகளுக்குப் பால் ஊற்றுவது என்றே அவர் வாழ்க்கைப் போய்விட்டது.''

“என்ன சொல்லுற?”

“சித்தப்பா நாய்களோடு இருப்பதைப் பார்த்துவிட்டு சித்திக்கு கோபம் வந்துவிட்டது. என்னென்னமோ சொல்லி பார்த்தாங்க. ஆனால் சித்தப்பா நாய்களோடுதான் இருந்தார். அதனால சித்தி, ‘நீங்க நாயைக் கட்டிக்கிட்டே கிடங்க’ என்று சொல்லிவிட்டு பிறந்த வீட்டிற்குப் போயிட்டாங்க. சித்தப்பாவிற்கு அது ரொம்ப சௌகரியமாகப் போய் விட்டது. வாசல்ல இருந்த நாய்களையெல்லாம் முற்றத்திற்கு கொண்டுபோய் வைத்துக்கொண்டார்.”

“நாய் பாசம் பெரிய பாசந்தான்.”

“ஆமாம், பெரிய சித்தர்கள் எல்லாம் நாய்கள்கூடத்தான் இருந்திருக்கிறார்கள்.”

“அவர்கள் எங்கே நாய்கூட இருந்தார்கள். நாய்கள்தான் அவர்கள்கூட இருந்தன. சித்தர்களை முதலில் தெரிந்து கொண்டது என்றால் அது மனிதன் இல்லை. நாய்கள்தான்.”

“நீ சொல்லுறதுதான் சரி.”

“அது கிடக்கட்டும். நாய்க்கார சித்தப்பா கதையைச் சொல்லு!”

“அவரு சின்னச் சித்தப்பா. ரொம்ப நல்லவர். பெரிய படிப்பாளி. எங்கள் குடும்பத்திலேயே அவர்தான் அதிகம் படித்தவர். திறமையான வக்கீல். நல்லா வாதம் புரியக்கூடியவர், அவர் கேஸை எடுத்தால் ஜெயிக்க வைக்கக்கூடியவர் என்று பெயர் வாங்கியிருந்தார்.”

“மனுஷன் எப்பவும் ஒரு மாதிரியே இருப்பதில்லை.”

“அதுதான். சித்தப்பா நாய் பிரியராகி மற்ற வேலைகளை விட்டுவிட்டதும், வீட்டில் எல்லாம் பயந்து போய்விட்டார்கள்.”

“ஏன் சித்தப்பா வீட்டிற்குப் போகறதில்லை.”

“எல்லா இடத்திலும் நடக்கறதுதான்.”

“நான் கதையை முடித்துவிடுறேன்.” என்றேன்.

“இல்லை, இல்லை. நீ சொல்லு.”

“ஒரு கதையை எவ்வளவு நீட்டிச் சொன்னாலும் சரி, எவ்வளவு குறைத்துச் சொன்னாலும் சரி, முழு கதையையும் சொல்லிவிட முடியாது. சொன்னதுக்கு அப்பால் அது இருக்கிறது என்று படித்திருக்கிறேன். அது பெரிய புத்தகம். அதில் இது மட்டுந்தான் ஞாபகம் இருக்கிறது.”

ஐராவதம் என் முகத்தையே பார்த்தபடி இருந்தார். நானே சித்தப்பா கதையைச் சொல்ல ஆரம்பித்தேன். உண்மையாகவே சித்தப்பா வாழ்க்கை ஒரு பெரிய கதைதான். அதை சினிமாவாகக்கூட எடுக்க முடியாது. அவ்வளவு சிக்கலான கதை. சினிமா கதையென்றால் ஒரு சின்ன முடிச்சு, சிக்கல். அதனை கஷ்டப்பட்டு பிரித்தெடுப்பது, அப்புறம் சந்தோஷம். வாழ்க்கையில் எல்லா கஷ்டத்திற்கும் தீர்வு உண்டு. முடிவு என்பது இனிமையானது. எத்தனை கஷ்டம் வந்தாலும், இறுதியில் இன்பமாகவே முடியும். வாழ்க்கையில் இன்பம் இருக்கிறதோ இல்லையோ; இருப்பதாகச் சொல்வதும், அதுவும் எல்லா கஷ்டங்களுக்கும் இறுதியில் இன்பகரமான முடிவு என்பதும் வழக்கமாக இருக்கிறது. ஆனால், யதார்த்தமான உலகத்தில் எதுவும் அப்படி இல்லை.

மனிதர்கள் நிராசையிலும், வெறுப்பிலும்தான் இறந்து போகிறார்கள். பலர் அதனை வெளியில் சொல்லுவதில்லை. ஆனால் அதுதான் உண்மை. அறுபது வயது, எழுபது வயதான பெரிய மனிதர்கள், கடைசியில் பேசும் பேச்சில் இருந்தும், எழுதிய எழுத்தில் இருந்தும் அதுதான் தெரிந்தது. ஏனென்றால் இரண்டு தலைமுறைகள் வந்துவிடுகின்றன. அதாவது மகனுக்குப் பிறகு பேரன்கள், மகளுக்குப் பிறகு பேத்திகள். இவர்கள் உலகம் வேறு. ஆசை, அபிலாசைகள் வித்தியாசப்பட்டவை, அதனைப் புரிந்துகொள்ள முடியாமல், அழுது புலம்புகிறார்கள். நிறைவு இல்லவே இல்லை. தாங்கள் தோற்றுப் போய்விட்டது தெரியவில்லை. நீண்ட வாழ்க்கை அவர்களை நிறைய துன்புறுத்துகிறது. மகிழ்ச்சிக்குப் பதிலாக மனக் கஷ்டத்தில் உழலுகிறார்கள். வாழ்வது நல்லது என்பதுபோல, சாவது இனிமையானது. வாழ்வு என்பது சாகாவரம் பெற்றது. செத்தவன் ஜீவிக்கிறான். ஜீவிக்கிறவன் செத்துக்கிடக்கிறான். அதுதான் வாழ்க்கை என்பதின் மகத்தான துயரம்.”

“உன் பேச்சை பதிவுசெய்ய வேண்டும்.”

“சித்தப்பா நாய்களோடு சந்தோஷமாக இருந்தார். சமைத்துப்போட காரைக்குடியில் இருந்து சொக்கலிங்கம் செட்டியாரை அழைத்துக் கொண்டு வந்து, வீட்டோடு வைத்துக் கொண்டிருந்தார். அவருக்கு

இரண்டு சமையல். ஒன்று சித்தப்பாவிற்கு உப்பு இல்லாத சைவ சாப்பாடு. பருப்பு, கீரை பாகற்காய். நாய்களுக்கு இறைச்சி வகைகள். தினம் கா¦ம் சாயபு கொண்டுவந்து கொடுப்பான். சித்தப்பா சுகஜீவியாக இருந்தார்.''

''வாழத்தெரிந்தவர்.''

''எங்கள் குடும்பம் சுகஜீவியான குடும்பம். நான்கு தலைமுறையாக, காவிரி ஆற்றின் கரையில் பெரிய வீடு. அது தாத்தாவிற்கு தாத்தா பெரியமிராசு, கொழும்புக்கு அரிசி ஏற்றுமதி செய்தார். அவர்தான் எங்கள் பகுதியில் முதன்முதலாக நெல் அரைக்க மில் போட்டவர். புதுச்சேரிக்கு பாக்கு விற்பனை செய்தார். சென்னையில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதிக்கு புரட்டாசி மாதம் முழுவதும் துளசிமாலை கட்ட நந்தவனம் அமைத்துக் கொடுத்திருந்தார். ரொம்ப புத்திசாலி¢; நந்தவனத்தில் இரண்டு கிணறுகள் வெட்டினார்.''

தாத்தா குதிரையில்தான் போவார். வீட்டில் நான்கு குதிரைகள் இருந்தன. இரண்டு குதிரைகள் தாத்தா பயணத்திற்கு. இரண்டு குதிரைகள் வண்டிகளுக்கு. பெண்கள் பயணம் போக பல்லக்கு இருந்தது. குதிரைகளைப் பராமரிக்க இரண்டு ஆட்கள் இருந்தார்கள், கான் சாகிப், அவர் மகன் அலாவுதீன் சாகிப்.

தாத்தா பெயர் முத்துக்குமாரசாமி முதலியார். பெரிய மீசை வைத்துக்கொண்டு பச்சை பட்டு அங்கவஸ்திரம் போட்டுக்கொண்டு, நெற்றியில் திருநீறு பூசிக்கொண்டு¢ நாற்காலியில் உட்கார்ந்திருப்பதை திருவாரூர் சுப்பையா ஆச்சாரி படமாக வரைந்திருக்கிறார். இடுப்பு வேட்டியில் மயில்கண் கரை; திருபுவனம் வேட்டி. அவரைப் பற்றி ரகசியமாகச் சொல்வது சென்னை புரசைவாக்கத்தில் டாணா தெருவில் சிதம்பரம் ராஜாயி என்ற தாசிக்கு பெரியவீடு கட்டிக் குடிவைத்திருந்தார். அவருக்கு ஸ்ரீரங்கத்தில் குசலாம்பாள் என்ற தாசி இருந்தாள் என்பதுதான். அதெல்லாம் பெரிய மனிதர்கள் பற்றி வெளியில் சொல்லக்கூடிய விஷயமில்லை என்று பொதுவாகச் சொல்வார்கள். நான் அப்படி நினைப்பது இல்லை. எதுவும் நல்லது, கெட்டது என்பது கிடையாது. நடக்கிற காரியத்திற்கு நாமும் முழு பொறுப்பு கிடையாது, நாம் இருக்கும்போது நடக்கிறது. அதனோடு சேர்ந்து கொண்டு விடுகிறோம். அதனால் பொறுப்பு நமக்கென்றாகி விடுகிறது. எதற்கும் யாரும் பொறுப்பில்லை. அது, அது அதன் வழியில் போகிறது.''

''உனக்கு நிறைய பிரச்னைகள் இருக்கின்றன.''

“ஆறு அதன் போக்கில் ஓடுகிறது. அதாவது மேட்டில் இருந்து பள்ளத்தை நோக்கி ஓடுகிறது. அதுதான் அதன் வழி. ஆனால் மனிதர்கள் அணைகட்டி, கால்வாய் வெட்டி ஆற்றின் திசையை மாற்றி ஓடவைக்கிறார்கள். ஐம்பது வருஷம், அறுபது வருஷம் தங்கள் சாதனையைப் பற்றி பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாள் திடீரென்று பூமி அதிர்ந்து பிளந்து ஆறு பூமிக்குள் புதைந்து போய்விடுகிறது. ஓடிய தடம் தெரியவில்லை. முயற்சி, அறிவு எல்லாம் ஆற்றைத் தேடிக்கொண்டிருக்கிறது. அப்படித்தான் வாழ்க்கை, எப்படி வாழ்ந்தாலும், என்ன செய்தாலும், ஆனைமீது அம்பாரி போனாலும், குதிரைமீது சவாரி போனாலும், காரில் வேகமாகப் பயணித்தாலும் விமானத்தில் பறந்தாலும் செத்துப் போனால், இல்லாமல் போய்விடுகிறது. அதில் மனிதன் மட்டுந்தான் என்று இல்லை. லட்சக்கணக்கான உயிர் இனங்கள், தாவரங்கள், ஆறுகள், கடல்கள் எல்லாம் இல்லாமல் போய்விட்டன. இருப்பதும் இல்லாமல் போவதும் எப்பொழுதும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அது தன்னிடம் வருகிறபோது, தனக்கு நேர்கிறபோது பளிச்சென்று தெரிகிறது.”

“சித்தப்பா கதை.”

“அது இருக்கிறது. எந்தக் கதையும் முடிவதில்லை. கதைச் சொல்லுகிற ஒவ்வொரு ஆளும், தன் கை சரக்கை கதையில் ஏற்றிவிடுகிறான்.”

“கேட்கிறவன், படிக்கிறவன் அதைத்தூக்கி வெளியில் போட்டுவிடுகிறான்.”

“நான் எதைச் சொன்னாலும் அதில் என் கை சரக்கை சேர்ப்பது இல்லை என்பது மட்டுமல்ல, எவ்வளவு குறைத்துச் சொல்லமுடியுமோ அவ்வளவுதான் சொல்கிறேன்.”

“அது ரொம்ப சரி என்று சொல்ல மாட்டேன்.”

“சித்தப்பா விஷயத்திற்கு வருகிறேன். ஒருநாள் காலைப் பொழுது. சொக்கலிங்கம் செட்டியார் நாய்களுக்கு பால் ஊற்றி வைத்திருக்கிறார். அதைக் குடிக்காமல் எல்லா நாய்களும் ஊளையிட்டு அழுதுகொண்டு இருந்தன. செட்டியாருக்கு என்ன ஏது என்று புரியவில்லை. நாய்களையே பார்த்தபடி இருந்தார். மாடியில் படுத்திருந்த சித்தப்பா அவசர அவசரமாக எழுந்து வந்து பார்த்தார். வெள்ளை பெண் நாய்க்கு நாச்சியார் என்று பெயர்

வைத்திருந்தார். சித்தி, சிவகாமி நாச்சியார் என்பதின் சுருக்கம். சித்தப்பா நாச்சியார் என்றுதான் கூப்பிடுவார். நாச்சியார், சித்தப்பா காலடியில் படுத்துக்கொண்டு அழுது கண்ணீர்விட்டது. அவருக்கு ரொம்ப கஷ்டமாகப் போய்விட்டது.''

கீழே உட்கார்ந்து கொண்டு நாச்சியாரைத் தூக்கி மடியில் போட்டுக்கொண்டு தலையைத் தடவியபடி, ''நம்ப டாக்டர்க்கு போன் போடுங்கள்.'' என்றார். செட்டியார் போன் செய்யச் சென்றார். நாய்கள் ஒரே குரலில் ஊளையிட்டன. போன் அடித்தது. அவர் செய்தி கேட்டார். பரபரக்கக் கீழே இறங்கி வந்து,

''ஐயா?'' என்றார்.

''டாக்டர் கிடைத்தாரா?''

''அம்மா போயிட்டாங்களாம்.''

''என்ன?''

''ஐஞ்சு நிமிஷம் ஆகுதாம். போன் வந்தது.'' என்றார்.

''சித்தப்பா, நாய்களைப் பார்த்தார். அவை அவரை தலை நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்தன. அதன் பின்னர் நாய்கள் அழவே இல்லை. ரொம்ப ஆச்சரியம்.''

''ஆச்சரியம் அதில் ஒன்றுமில்லை. ஒரு நிகழ்வை அறியும் அறிவு பல ஜீவராசிகளுக்கு முன்கூட்டியே இருக்கிறது. அதில் நாய்களுக்கு அதிகமாக இருக்கிறது.''

''இருந்தாலும் சொல்ல வேண்டுமே.''

''ஆமாம். நீ சொல்லுவதுதான்.''

''ஒரு விஷயத்தை அறிந்தாலும், சொல்வதில் தயக்கம் வந்துவிடுகிறது. சொல்லலாமா? சொல்லக்கூடாதா என்பது முதல் அம்சம். இரண்டாவது அம்சம் சொல்கிற அம்சம் ஒரு ஆளை, ஒரு குடும்பத்தை எவ்வளவு பாதிக்கும், எப்படி எல்லாம் கஷ்டப்படுவார்கள் என்பது. மூன்றாவது அவராக் தெரிந்து கொண்டு லாபமோ; நஷ்டமோ அவரே அனுபவிக்கட்டும் என்று விடுவது. அதுதான் நடைமுறை. அதை தப்பித்துக்கொள்வதற்கு ஆன பெரிய வழி என்று சொல்லிவிடலாம்.''

“நீ பல்கலைக்கழகத்தில் லெக்சர் கொடுக்கலாம்?”

“ஏன்? எதற்கு?”

“நான் உண்மையாகத்தான் சொல்கிறேன். நீ ரொம்ப நல்ல பேசுற. மாணவர்கள், ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள். அறிவு என்று ஒன்று இருந்தால் அது எல்லோருக்கும் பயன்பட வேண்டும்.”

“இதைக் கேளு. ஒரு பதினைந்து பதினாறு வருஷத்துக்கு முன்னால் சென்னைக்குப் போயிருந்தேன். சிவமணி முதலியார் என்று ஒரு சொந்தக்காரர். பதிப்பகம் வைத்துக்கொண்டு புத்தகம் போட்டுக்கொண்டிருந்தார். நல்ல படிப்பாளி. ஆனால் பாட்டு ஒப்பிக்கின்றவர் இல்லை. அதுதான் சொல்ல வேண்டும்.”

“ஒவ்வொரு ஆள்கிட்டேயும் ஒரு திறமை இருக்கிறது.”

“ரொம்பப் பேர்கிட்ட ஒரு திறமையும் கிடையாது. ஏதோ கண்டதைத் தின்றுவிட்டு, வாயில் வந்ததைப் பேசிக்கொண்டு இருக்கிறவர்கள். ஆயிரத்திற்கு பத்து, இருபது பேர்தான் கொஞ்சம் விஷயம் தெரிந்தவர்கள். லட்சத்தில் நாலைந்து பேர்தான் அறிவாளி. கோடியில் ஒருத்தன் ஞானி. எனவே தான் ஞானியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.”

“இது ரொம்ப நல்ல கணக்கு?”

“சென்செஸ் எடுத்து, கம்ப்யூட்டரில் போட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டியதில்லை. மக்கள் பேசறது, படிக்கிறதப் பார்த்தால் சொல்லிவிடலாம்.”

“நீ என்னமோ, சென்னையில் நடந்தது பற்றி சொல்ல வந்ததுமாதிரி இருந்தது.”

“சொல்லுறேன்.”

★

## அத்தியாயம் 3

“நான் சென்னைக்குப் போகும் போதெல்லாம் இரண்டு இடத்திற்கு தவறாமல் போவேன். ஒன்னு, அண்ணாசாலையில் இருக்கும் காஸ்மோபாலிடன் கிளப். அதுதான் என் தங்குமிடம். இரண்டு, வெள்ளைக்காரா¢கள் ஒன்றாகச் சேர்ந்துவிட்டால், முதலில் கிளப் ஆரம்பித்துவிடுவார்கள். கிளப் இல்லாமல் அவர்களுக்கு வாழ்க்கை இல்லை. நாம் என்னவோ கிளப் என்றால் குடிக்கிற இடம், சூதாடுற இடமென்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நிஜத்தில் கிளப் அப்படி இல்லை.”

“நான்கூட ஒருமுறை ஜிம்கானா கிளப்பிற்குப் போய் இருக்கிறேன். லட்சுமணராவ்தான் கூட்டிக்கிட்டு போனார். போகும்போதே ‘காலர் வைத்த சட்டைப் போட்டுக்கோ, வேட்டியை அவிழ்த்து போட்டுட்டு பேண்ட் போட்டுக்கோ,’ என்றார். நான் செருப்பை மாட்டிக்கொண்டு கிளம்பினேன். இந்த ‘ஷு’வை போட்டுக்கோ என்று ஐந்தாறு ‘ஷு’ தனியாக வைத்திருந்தார். அதில் எனக்கொன்றை எடுத்துக் கொடுத்தார்.”

“வக்கீல் லட்சுமணராவ்தானே. அவருக்கு வாழ்க்கையே கிளப்பிலதான்.”

“அவர்தான் சொன்னார். இந்த கிளப்பில வேட்டிக்கட்டிக்கிட்டு, ஜிப்பா போட்டுக்கிட்டு, செருப்பு மாட்டிக்கிட்டு வந்தால் உள்ளேவிடமாட்டான். ஏனென்றால் வெள்ளைக்காரன் கிளப்பு. அவன் எப்பொழுதும் ஒரு பெரிய தோரணையில் இருப்பான்.”

“இந்தியாவில் கிளப் வைத்துக்கொண்டு இந்தியனை ரொம்ப காலம் வரைக்கும் உள்ளேவிடாமல் இருந்தான்.”

“படித்திருக்கிறேன்.”

“அதிலே கடுப்பாகிப்போன ஜமீந்தார்கள், மிராசுதார்கள் வக்கீல்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து கொண்டுதான் காஸ்மோபாலிடன் கிளப் ஏற்படுத்தினார்கள் அது கருப்பன் கிளப்.”

“ரொம்ப கிண்டல் பண்ணுற.”

“இல்லை அப்பா. நான் அடிக்கடி நம்ப கருப்பன் கிளப்பிலதான் தங்குறேன்.”

“சரி”

“நான் இரண்டாவதாகப் போகிற இடம் சிவமணியின் நன்முத்து பதிப்பகம். இது தியாகராய நகர் கீதா ஓட்டலுக்கு எதிரில். ஒரு பழைய காலத்து கட்டடம். அதில் முதல் கடை பதிப்பகம். நன்முத்து பதிப்பகம் என்று பெயர். அவர்தான் பதிப்பகத்தில் எப்போதும் உட்கார்ந்து இருப்பார். அம்மா வழியில் கொஞ்சம் சொந்தம், மாமா உறவு. ரொம்ப நல்ல மனிதர். எப்பொழுதும் ஏதாவது படித்துக்கொண்டு இருப்பார். இல்லாவிட்டால் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கவிஞர்கள் என்பவர்களோடு பேசிக்கொண்டிருப்பார்.”

“பதிப்பகத்திற்குப் பின்ன யார் வருவார்கள்?”

“நான் போன அன்று, சிவப்பாக உயரமாக சபாரி போட்டுக்கொண்டு ஓர் ஆள் பேசிக்கொண்டிருந்தார். டில்லி, மும்பையில் இருந்து ஏதோ பெரிய ஆள் வந்திருக்கிறார் என்று நினைத்துக்கொண்டு, “மாமா, நான் அப்புறம் வர்றேன்.” என்றேன். பெரிய விஷயம் பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது உள்ளே நுழைந்து அதம் பண்ணிவிடக்கூடாது.’

“தெரியுது?”

“சின்ன வயதில் இருந்து அப்படித்தான் இருக்கிறேன். அது யாரும் எனக்குக் கற்றுக்கொடுத்ததில்லை. என்னிடம் அது இருக்கிறது. நான் அதன்படி நடந்து கொள்கிறேன். எங்கே நான் போனாலும், புதிய ஆள்கள் இருந்தால் கடைசியில் உட்கார்ந்து கொள்வேன். மேசைமீது புத்தகம், டைரி, ஃபைல் இருந்தால் எடுத்துப் புரட்டிப்பார்க்க மாட்டேன். டெலிபோன் இருக்கிறதே என்று எடுத்துச் சுழற்ற மாட்டேன். குண்டூசியை எடுத்து நகக்கண்ணில் இருக்கும் அழுக்கை நோண்ட மாட்டேன். எந்தக் காரியத்திற்குப் போனேனோ அந்தக் காரியத்தை மட்டும் பார்த்துக் கொண்டு வந்துவிடுவேன். என் மனம் பரபரக்காது; என் மனத்தை நான் எப்போதும் கட்டுப்பாட்டில், குதிரைக்கு லகான் போட்டு, கண்ணுக்கு மறைப்புபோட்டு வைத்திருப்பது மாதிரி வைத்திருக்கிறேன்.”

“ஞானி மாதிரியே சொல்லுற.”

“ஞானியே சொல்கிறான்.”

“சரி, சொல்லு!”

“நான் ஒரு அதிகாரியைப் பார்க்கப் போனால்; அவன் பெரிய அதிகாரியாக இருந்தாலும் சரி; சின்ன அதிகாரியாக இருந்தாலும் சரி, முதலில் அவனுக்கு நேராக உட்கார்ந்து கொள்வேன். அவன் மேசை மீது இருக்கும் ஃபைல்கள், டைரிகள் எல்லாம் என் கண்களில் படாது. நான் உண்டு; அவன் உண்டு. அவன் மூஞ்சியைப் பார்த்துக்கொண்டு பேசுவேன். அவன் பேசும்போது ஆடாமல் அசையாமல் அவன் கண்களைப் பார்த்துக்கொண்டிருப்பேன். கேட்கும் தோரணையில் இருந்து அவன் பொய் சொல்லவோ; ஏமாற்றவோ முடியாது. என் நுண்ணியப் பார்வை உண்மையை மட்டும் அவனிடம் இருந்து கறந்துவிடும். அதாவது மாட்டில் இருந்து பால் கறப்பதுமாதிரி–”

“என்ன? சொல்லு?”

“பசுமாடு என்ன விரும்பியா பால் கொடுக்கிறது?”

“கேள்விகள் எப்போதும் அர்த்தம் உள்ளவை?”

“மாட்டிடம் பால் இருக்கிறது. நாம்தான் மடியைத் தடவிக் கொடுத்து காம்பைப் பிடித்து ‘சொர்... சொர்’ என்று பால் கறக்கிறோம். நாம் தடவுகின்ற பக்குவத்திலும், கறக்கிற சுகத்திலும், மாடு பால் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. அதுதான் எதிரே உட்கார்ந்திருக்கிறவனிடம் இருந்து வார்த்தையை வாங்குவதற்கும், அவன் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி நான் கேட்கிற கேள்வியில்–, பேசுற வார்த்தையில் மனசுக்குள் மறைத்து வைத்திருப்பதை எல்லாம்,– உன்னிடம் சொல்லக்கூடாது என்று நினைத்துக் கொண்டிருப்பதை எல்லாம் கொட்டிவிட வேண்டும். அதுதான் திறமை. அது உன்னிடம் இல்லாவிட்டால் நீ உதவாக்கரை.”

“அது சரி”

“நான் உன்னைச் சொல்லவில்லை. பொதுவாக மனிதர்களைப்பற்றி சொன்னேன்.”

“நீ கல்லூரி கல்லூரியாகப் போய் பேசலாம். நீ சொல்லுறது சுய முன்னேற்றம் மாதிரி படுகிறது. இப்பொழுதெல்லாம் அதுதான் பெரிய விஷயம். படிக்கும்போது, ஒண்ணும் தெரிந்துகொள்ளாமல் அரட்டை அடித்துப் பொழுது போக்கிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் நடு வயதில்

பணம் சம்பாரிக்க நாயா பேயா என்னன்னவோ படிக்கிறார்கள்; கருத்தரங்கு என்று போய் காசு கொடுத்து கண்டவன் பேச்சை எல்லாம் கேட்கிறார்கள்.''

"நான் அந்த அற்பர்கள் கூட்டத்தில் இல்லை. எனக்காக நான் படிக்கிறேன்; எனக்காக நான் சிந்திக்கிறேன். அதில் இன்னொருவனுக்கு இடமில்லை.''

''இது பற்றி நான் என்ன சொல்வது?''

"ஒன்னும் சொல்லாதே. உலகத்தை யாரும் திருத்த முடியாது. கோடிக்கணக்கான ஆண்டுகளாக அது அப்படியேதான் இருக்கிறது. அதில் கிழக்கு, மேற்கு என்ற வித்தியாசமெல்லாம் கிடையாது.

திசை என்பது எதுவும் உலகத்திற்கு இல்லை. நாமாகத்தான் வைத்துக் கொண்டிருக்கிறோம்.''

"சிவமணி, நன்முத்து பதிப்பகம் போனது பற்றி?''

"ஆமாம். அவர் என்னைப் பக்கத்தில் உட்காரச் சொன்னார். தனியாக இருந்தால் எதிராக உட்காரச் சொல்வார். அவரும் மூஞ்சியைப் பார்த்து பேசுற ஆள்தான். அவர் என்னை எதிராக உட்கார்ந்தவர்க்கு அறிமுகம் செய்துவைத்தார். நான் கரம் கூப்பி வணக்கம் தெரிவித்தேன். அப்புறம், 'சார் நம்மப் பக்கம். வைத்தீஸ்வரன் கோயில். டில்லி பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பேராசிரியர். பெயர்கூட வைத்தீஸ்வரன்தான். ரொம்ப விஷயம் தெரிந்தவர். ஆஸ்திரேலியாவில் ஒரு கான்பிரன்ஸ்க்குப் போயிட்டு வரார். சென்னைக்கு வந்தால் பதிப்பகத்திற்கு வந்து புது புத்தகம் வாங்கிக்கொண்டு போவார்'' என்றார்.

"டில்லி, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சமூகவியல் கற்பிக்கும் பேராசிரியர் தமிழ்ப் படிப்பது பற்றிக் கேட்டதும் பரவசமுற்றுப் போனேன். அது மொழிப் பற்று இல்லை. நான் எதன்மீதும் பற்று இல்லாதவன்.''

"பற்றுக பற்றற்றான்தாள்''

"யார் சொன்னது?''

"தெரியவில்லை. சின்ன வயதில் கோயிலில் கேட்டது. திருவாசகம், தேவாரமாக இருக்கலாம்.''

“ஆமாம்”

“தேவாரம், திருவாசகம் படிக்கிறார்களா?”

“நிறைய பேர்கள் கேட்கிறார்கள். நான் ரேடியோவில் கேட்கிறேன். கேசட், சி.டி. போட்டு விற்கிறார்கள். வெளிநாடுகளில் நல்ல விற்பனை என்று கேள்வி.”

“பேராசிரியர், பூம்புகார் போய்விட்டு வந்திருக்கிறார். அங்கேயே உட்கார்ந்து இரண்டு நாட்கள் சிலப்பதிகாரம் படித்திருக்கிறார். கோவலன், கண்ணகி நடந்த வழித் தடத்தில் காவி£¤யின் வடை கரையில் பதினைந்து மைல் நடந்து பார்த்திருக்கிறார். அது பற்றிதான் சொல்லிக் கொண்டிருந்தார்.”

நான் தலையசைத்தேன்.

பேராசிரியர் சொன்னார்: “எனக்கு சிலப்பதிகாரம் ரொம்பப் பிடிக்கும். அதன் தொடக்கமே ‘மாமழை போற்றுதும்’ என்று தொடங்குவது, ஏதோ தற்செயல் இல்லை. நீரின்றி அமையாது உலகு என்பதுதான். நான் கல்லூரியில் தமிழ்ப் படிக்கவில்லை. பிரெஞ்சு படித்தேன். ஆனால் அம்மா தமிழ் அபிமானி. அந்தக் காலத்து பத்தாம் வகுப்பு. திருவெண்காட்டு பெண். அவரோடு ஐம்பத்தெழு ஆண்டுகள் வாழ்ந்து விட்டேன். டில்லிக்கு வரும்போது, ஒரு ட்ரங்க் பெட்டியில் அறுபது, எழுபது தமிழ்ப் புத்தகங்கள் கொண்டு வந்தார்கள். அதில் பல புத்தகங்கள் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு, இரண்டாம் பரிசு பெற்றது. அதில் சிலப்பதிகாரம் இருந்தது.”

“அந்தக் காலத்தில் பரிசு என்றால் நல்ல புத்தகங்கள்தான்Ó என்றார் சிவமணி.

“நான் போட்டியில் கலந்துகொண்டதும் இல்லை. பரிசு வாங்கியதும் இல்லை.” என்றார் வைத்தீஸ்வரன்.

“உங்களுக்கு அவசியமா?”

“அன்றைக்கு டில்லியில் மழை பொழிந்து கொண்டிருந்தது. அம்மா ஜன்னல் ஓரம் உட்கார்ந்து மழையை கொஞ்ச நேரம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். என்னம்மா” என்று கேட்டேன்.

“மாமழை. இன்னைக்கு முழுவதும் மழை உண்டாம். டி.வி.யில் சொன்னார்கள். பள்ளிக்கூடத்திற்கு எல்லாம் விடுமுறையாம்” என்றார்கள்.

‘அப்படியா அம்மா’

“மழை இருந்தால், எதற்குப் பள்ளிக்கூடத்திற்கு எல்லாம் விடுமுறை. என் காலத்தில் மழையில் நனைந்துகொண்டே போய் கூரைபோட்ட பள்ளிக்கூடத்தில் படித்தோம். மழையென்றால் எங்களுக்கு ஒரே கொண்டாட்டம். மழை நிற்கவேகூடாது என்று சாமியை எல்லாம் வேண்டிக் கொள்வோம்.”

“எப்பொழுதும் மாணவர்கள் அப்படித்தான் அம்மா. மழை வந்தால் விடுமுறை கிடைக்குமென்று சாமியிடம் வேண்டிக்கொள்கிறார்கள். டி.வி.யில் கார்ட்டூன் பார்க்கலாம். வீடியோ கேம்ஸ் ஆடலாம் என்று.”

“அதெல்லாம் ஒரு ஆட்டமா? நாங்கள் பல்லாங்குழி ஆடுவோம். கல்லாங்காய் விளையாடுவோம். தாயம் ஆடுவோம். ஆட்டமென்றால் ஆடுவது; பார்ப்பது இல்லை.”

“படிக்கிறது அம்மா?”

“உண்டு. உங்கள் தாத்தா சாமிநாதையர் முன்சீப். பெரிய படிப்பாளி. ‘சுதேசமித்திரன்’, ‘இந்து’ எல்லாம் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தது. அதோடு பெரிய பீரோ நிறைய தாத்தா ஷேக்ஸ்பியர், டிக்கென்ஸ் புத்தகம் வாங்கிப் படித்துக்கொண்டு இருந்தார். தர்மபுரம் ஆதீனத்திற்கும், திருவாவடுதுறை மடத்திற்கும் போய் வந்துகொண்டிருந்தார். நல்லா சங்கீதம் தெரிந்தவர்.”

“அப்படியா, அம்மா?”

“தில்லையாடிக்கு வள்ளியம்மை மூதாதையா¢களைப் பார்க்க மகாத்மா காந்தி வந்தபோது உங்கள் தாத்தாதான் முன்னாலே இருந்து ஏற்பாடுகள் எல்லாம் செய்தார். அவருக்கு தரங்கம்பாடி கடற்கரையில் ஒரு வரவேற்பு. பொதுமக்கள் சார்பில் கொடுத்தார்கள். அதனை உங்கள் தாத்தாதான் இங்கிலீசில் எழுதிக் கொடுத்தார்.”

“காந்தி அதற்கு ஒன்றும் சொல்லவில்லையா?”

“சரியா கேட்கற. பாராட்டுப் பத்திரத்தைக் கவனமாகக் கேட்டுவிட்டு மகாத்மா ‘காந்தி நீங்கள் தமிழிலேயே கொடுத்து இருக்கலாம்’ என்றாராம்.”

“அதுதாம்மா காந்தி”

“அந்த வரவேற்புக் கூட்டத்திற்கு உங்கள் பாட்டியும் அத்தையும் வில் வண்டியிலே போய் வந்தார்கள். தாத்தா காரில் போய் காந்தியை மாயவரத்திலேயே ரயில் ஏற்றி விட்டுவிட்டு வந்தார்.”

“சர்க்கார் ஒன்றும் சொல்லலியா?”

“சர்க்கார் என்றால் சும்மாவா இருக்கும். மெமோ கொடுத்துப் பார்த்திருக்கிறது. அவர் இந்த வேலை பார்த்து நான் சாப்பிட வேண்டிய நிலையில் இல்லை. என் மூதாதையர்கள் சம்பாரித்து வைத்துப் போயிருக்கும் பாசன நிலம் இருக்கிறது என்று எழுதி வைத்துவிட்டு வந்துவிட்டார்.”

“பெரிய தியாகிதான்”

“வேலையை ராஜினாமா செய்த அப்புறம் வக்கீலாக பிராக்டீஸ் பண்ணினார். ரெண்டு வருஷத்திலேயே மாயவரம், சீர்காழி கச்சேரியில் பெரிய வக்கீல் என்று பெயர் வாங்கிவிட்டார்.”

“ஆச்சரியமாக இருக்கிறது, அம்மா?”

“அதில் என்ன ஆச்சரியம். நீ எவ்வளவு தூரம் வந்து ஜெயித்துக்கிட்டு இருக்கற. அதெல்லாம் உங்க தாத்தா புத்திதான்.”

“நீ சொன்னால் சரிதான் அம்மா?”

‘‘இதைக்கேள். நீடூரில் கான்சாகிப் என்ற ஒரு முஸல்மானுக்கு அவன் தம்பியோட சொத்து தகராறு. அவன் என்னவோ மூணாவது மனைவிக்குப் பிறந்த பையனாம். ஏழெட்டு வருஷமாக சமாதானப் பேச்சு வார்த்தை நடந்து இருக்கிறது. ஒன்றும் சாப்பட்டு வரவில்லை. கான் சாகிப் உங்க தாத்தாகிட்ட வந்து, ‘ஐயரே நீதான் இந்த வழக்க முடித்து வைக்கணும்; ராசி பேசினாலும் சரி; வழக்குப் போட்டாலும் சரி. இது முடிந்த பிறகுதான் நான் மெக்காவிற்கு ஹஜ் போகணுமென்று வந்து நின்றிருக்கிறான்.Ó

“நான் ராசி பண்ணினால் கேட்பாயா கான் சாகிப்?”

“ஐயர் உத்தமர்”

“அதெல்லாம் இருக்கட்டும். நீ வாக்குக் கொடுக்கணும்”

“ஐயர் என்ன சொன்னாலும் சரிதான்”

“அப்ப நீ வாக்கு தவறமாட்ட?”

“நான் ஐந்து வேளை தொழுவுறவன். இன்ஷா அல்லா”

“அது போதும். போ” என்று தாத்தா கான்சாகிப்பை அனுப்பிவிட்டு, அவர் தம்பி முகமது கான்சாகிப்பை வரவழைத்து பேசினார். அவன் அண்ணன் சொன்ன அதையே சொன்னான் : ‘ஐயரே! நீ உத்தமன். நீ என்ன சொன்னாலும் சரியாக இருக்கும். நீ தான் நான். அவ்வளவுதான்’ என்றான்.

“அது போதும்” என்றார் தாத்தா.

“உனக்கு என்ன வேணும் ஐயரே?”

“ஒரு குரான் புத்தகம் கொண்டு வா”

“இங்கிலீஷ் தானே ஐயரே?”

“என்னிடம் இங்கிலீஷ் இருக்கிறது. தமிழ் கிடைத்தால் கொண்டு வா”

“நீ பலே ஆள்” என்று போன முகமது கான்சாகிப் பத்து நாட்களில் திருக்குரான் தமிழ் கொண்டு வந்து கொடுத்தான். அதற்குள் உங்கள் தாத்தா தமிழ்க்குரான் கண்டுபிடித்து படித்து முடித்துவிட்டார். குரான் சொன்னது மாதிரியும் – பொது நீதியின் அடிப்படையிலும் அவர் பாகப்பிரிவினை செய்து கொடுத்தார். பதினேழு வருடங்களாக இருந்தப் பங்காளிகள் சண்டை முடிந்தது. ஆனால் உங்கள் தாத்தா இஸ்லாமியர்கள் மத்தியில் பெயர் பெற்ற வக்கீலாகிவிட்டார்.”

கான்சாகிப் அரேபியாவில் இருந்து தன் சொந்த உபயோகத்திற்காக வாங்கி வந்த குதிரையை உங்கள் தாத்தாவிற்கு கொடுத்தார். அப்பொழுது, ‘ஐயரே, இது உனக்கு வக்கீல் பீஸ் இல்லை. ஒரு முஸல்மான் அன்பளிப்பு, இன்ஷா அல்லா! என்று சொல்லி, குதிரையேறி சவாரிக்குப் பழக அப்துல்லா கான் என்று ஒரு ஆளையும் கொடுத்தார். தாத்தா இரண்டு நாளில் குதிரையேற கற்றுக்கொண்டு நேராக நீடூர் போய் கான்சாகிப் வீட்டின் முன்னே இறங்கி இருக்கிறார். அவர் ஆச்சரியப்பட்டுப் போயி, ‘ஐயரே! நீ லேசுப்பட்ட ஆளில்லை’ என்று மேலேல்லாம் ஜவ்வாது பூசி அனுப்பிவிட்டார்.’

“அம்மா நீ தாத்தாவைப் பற்றி ரொம்பவே சொல்லுற. நீ இதெல்லாம் எழுத வேண்டும்.” என்றேன்.

“நான் எதற்கு எழுத வேண்டும். நீதான் படித்து புரொபஸரா இருக்கற. நீ எழுதினால்தான் நன்றாக இருக்கும் என்றார்கள். நான் எதோ எழுதுகிறேன் என்றால் அது எங்கள் அம்மா எழுதுவதுதான்.”

“நான் அவர் மூஞ்சியை பார்த்துக் கொண்டு இருந்தேன்.”

அம்மா சொன்னது மாதிரி எழுத முடியவில்லை. அறிவு குறுக்கால் வந்து முறித்துவிடுகிறது. அம்மா சொன்னது காவிரியில் தண்ணீர் ஓடுவதுமாதிரி இருந்தது. என் அறிவை ஒழித்துவிட்டு இயல்பு என்கிற நிலைக்குப் போக பாடுபட வேண்டியது இருக்கிறது”

“அம்மா என்பது சும்மாதானா?” என்றார் சிவமணி.

‘ஒரு ஆள் பிறந்து வளர்ந்து எத்தனை ஆண்டுகள் ஆகியும், மயிர் நரைத்துப் போனாலும் அம்மா மடியில் படுத்துக்கொண்டு பால் குடித்துக்கொண்டுதான் இருக்கிறான். அது பழையது இல்லை. மறந்து போகவும் இல்லை. சாகிறவரையில் அவன் மனத்தைவிட்டு அகலாத நினைப்பென்றால் அம்மா மடியில் படுத்து சுகம் கண்டதுதான். அது சுகத்திற்கு எல்லாம் மேலான சுகம். அதைச் சொல்லில் சொல்ல முடியாது.’

நான் வைத்தீஸ்வரனையே பார்த்தபடி இருந்தேன்.

“நீங்கள் நாலு வருஷமாக வரும்போதெல்லாம் எழுத வேண்டும் என்றே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அவசியம் எழுத வேண்டும். நான் புத்தகம் போட்டுக் கொடுக்கிறேன். இதெல்லாம் மக்களுக்குத் தெரியவேண்டிய சரித்திரம்” என்றார் சிவமணி.

“அடுத்த வருஷம் அமெரிக்கா போகிறேன். அங்கே உட்கார்ந்து எழுதிவிட வேண்டும்” என்றவர் என்னைப் பார்த்து, “சார் என்ன செய்கிறார்?” என்று கேட்டார்.

“மயிலாடுதுறைக்காரர். சுக ஜீவனம்”

“ஆகா! அற்புதம்?” என்று எழுந்து வந்து என் கையைப் பிடித்து இரண்டுமுறை குலுக்கினார். அப்புறம் “ரொம்ப வருஷத்திற்குப் பிறகு ஒரு சுக ஜீவியை நேரில் பார்த்துப்பேச ஒரு பாக்கியம் கிடைத்திருக்கிறது.” என்றார்.

எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. மனிதன் என்றால் சுக ஜீவிதான். தன் சுகத்திற்காகவும், மற்றவர்கள் சுகத்திற்காகவும் ஜீவிக்கிறவன். ஜீவிக்கிறவன் என்றால் வேலை செய்கிறவன். வேலை என்பது ஜீவனத்திற்குத் தேவையான பணம் கொடுப்பது. ஆனால் பணம் பண்ணுவதே வேலையாகப் போய்விட்டது.

“சுக ஜீவியாக இருந்த கோவலன், பணம் சம்பாரிக்க ஆசைப்பட்டு, இருப்பத்தேழு வயதான தன் மனைவி கண்ணகியை மதுரை வரையில் நடக்கவிட்டே அழைத்துக்கொண்டு போனான். அவன் செத்துப்போனதுதான் சரி. சாகாவிட்டால், அவன் பலரை தவிக்கவிட்டிருப்பான்.”

“நீங்கள் அப்படியா நினைக்கிறீர்கள்?” என்று கேட்டார் சிவமணி.

“காப்பியமே முடிவிற்காகத்தான் எழுதப்படுகிறது. சிலப்பதிகாரம் கோவலன் கொலை செய்யப்பட்டதும் –கண்ணகி வழக்குரைத்து நீதியை நிலைநாட்டியதும் – பாண்டிய மன்னன்தானே கள்வன் எனக் கூறி உயிர் துறப்பதோடும் முடிந்துவிடுகிறது. அதன் பின்னர் வரும் வஞ்சிக்காண்டமெல்லாம் இளங்கோ எழுதி இருந்தாலும் சரி; வேறு யாரோ எழுதிச் சேர்த்திருந்தாலும் சரி” என்றார்.

டெலிபோன் அடித்தது.

சிவமணி டெலிபோனை எடுத்து, “ஹலோ” என்றார். அப்புறம், “அப்படியா... சுட்டுட்டாங்களா?” என்று கேட்டுவிட்டு போனை மெதுவாக வைத்துவிட்டு, “இந்திரா காந்தியை சுட்டுவிட்டார்களாம். ரொம்ப மோசமாக இருக்கிறதாம். மருத்துவமனைக்கு எடுத்துகொண்டு போய் இருக்கிறார்களாம். செக்ரட்ரியேட்டில் இருந்து மணிவாசகம் போன் பண்ணுகிறார்” என்றார்.

“யார்? எப்போது?” என்று படபடப்போடு கேட்டார்

வைத்தீஸ்வரன்.

“தெரியல. அவருக்கு டில்லியில் இருந்து தகவல் வந்திருக்கிறது.”

நான் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி பன்னிரண்டு ஆகியிருந்தது.

வைத்தீஸ்வரன் பரபரப்போடு எழுந்தார். ‘‘சரி. நான் அப்புறம் பார்க்கிறேன்’’ என்று சிவமணியிடம் சொல்லிக் கொண்டு அவசர அவசரமாக வெளியில் சென்றார்.

சிவமணி வெளியில் வந்து வாசலில் நின்று சாலையைப் பார்த்தார். நான் அவர் பின்னால் நின்று கொண்டிருந்தேன். பஸ், கார், ஆட்டோ, ஸ்கூட்டர் எல்லாம் ஓடிக்கொண்டிருந்தன. கீதா கேப் ஓட்டலுக்கு ஆட்கள் உள்ளே போவதும் வருவதுமாக இருந்தார்கள்.

“நடராஜனுக்குப் போன் பண்ணி கேட்கலாம்” என்று திரும்பி வந்தார். நான் கையைக் கட்டிக்கொண்டு அவர் பின்னால் நடந்தேன். நடராஜன் அரசுச் செயலாளர். அவருக்குப் போன் போட்டார்.

“ஆமாம். உயிர் போய் விட்டதாம். ஆனால் யாரும் உறுதி செய்யவில்லை. இது டில்லி செய்தி” என்றார்.

“ஐயோ, பாவம்?” என்று என்னைப் பார்த்தார்.

நான் அவர் முகத்தைப் பார்த்தபடி இருந்தேன்.

★

## அத்தியாயம் 4

சாவுதான் உயிர்களுக்கு எதிரி. சாவு என்பது உயிரைப் போக்கிச் சடலமாக்கி விடுகிறது. அதனை எரித்தோ, –புதைத்தோ இல்லாமல் ஆக்கிவிட வேண்டும். உயிர் போனா எதுவும் மகத்துவமானது இல்லை. அது வெறும் சடம். அகற்றப்பட வேண்டியதுதான். உலகத்தில் இருந்தவர்களைவிட இறந்து போனவர்கள்தான் அதிகம். ஆனாலும் சிலர் செத்தும் ஜீவிக்கிறார்கள்.

நன்முத்து பதிப்பகத்தில் இருந்து வெளியில் வந்தேன். பாண்டி பஜார் சாலையில் பிளாட்பாரத்தில் ஒரு நடை நடந்தேன். கூட்டம் கூட்டமாக ஆள்கள் நடந்து கொண்டிருந்தார்கள். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று பல வயதிலும் இருந்தார்கள். காலையில் பத்து மணி வாக்கில் வந்து கூடும் கூட்டம் இரவு ஒன்பது மணி வரையில் இருக்கிறது. ஆனால் அதே ஆட்கள் இல்லைதான். வேறு வேறு ஆட்கள் வந்து கூடி கூட்டமாகி விடுகிறார்கள். பனகல் பார்க் பக்கம் சென்றேன். பார்க் கதவு பூட்டப்பட்டிருந்தது. கையை கட்டிக்கொண்டு கொஞ்சநேரம் நின்றுகொண்டே இருந்தேன். கண்கள் சினிமா போஸ்டர்களைப் பார்த்துக் கொண்டிருந்தன. மனம், சுடப்பட்ட இந்திரா காந்தியைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தது. மனம் உடம்புக்குள் இருந்தாலும் அது வேறு. தன் போக்கில் போகிறது. இதற்கும் அதற்கும் அப்படி ஒன்றும் சம்பந்தம் இல்லை. உயிர் இருக்குமிடம் தெரிவதில்லை என்பதுபோல செல்கிற இடமும் தெரிவதில்லை.

ஓர் ஆட்டோ வந்தது. நிறுத்தி ஆட்டோவில் ஏறிக்கொண்டு ‘காஸ்மாபாலிட்டன் கிளப்’ என்றேன்.

“சாந்தி தியேட்டர் பக்கமா சார்?”

“ஆமாம்”

ஆட்டோ ஓட ஆரம்பித்தது. தேனாம்பேட்டை வந்ததும் “ஊரில் என்ன விசேஷம்?” என்று கேட்டேன்.

“என்ன சார் விசேஷம். தண்ணீர் இல்லை. போலீஸ் அராஜகம். இதுதான் சார் விசேஷம்”

“நீ எதாவது கேள்விப் பட்டியா?”

“என்ன சார்?”

“உனக்கு ஏதாவது தெரியுமா?”

‘என்ன சார்’

“அதான் உனக்குத் தெரியுமா? என்று கேட்டேன்.

“இரண்டு சவாரி மேற்கு மாம்பலம் போயிட்டு வந்தேன் ஒன்னும் தெரியாது. எதாவது இருந்தால் சொல்லுங்கள், சார்”

“ஒன்னும் இல்லை. இரண்டு மூணு கடையை சாத்தறாங்களே, என்னென்று தெரியுமா என்று கேட்டேன்” என்றேன். ஆட்டோ அண்ணா சாலையில் ஜெமினி மேம்பாலத்தில் ஏறி இறங்கியது. அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்தின் முன்னே துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரர்கள் நின்றுகொண்டு இருந்தார்கள்.

“இங்க எப்பொழுதும் போலீஸ்தான் சார். எதுக்கு நிக்கிறாங்கன்னே தெரியல”

“வெளிநாட்டு தூதுவர் அலுவலகம் இருக்கிறது. பாதுகாப்புக்கு”

“அப்ப நமக்கெல்லாம் யார் சார் பாதுகாப்பு?”

“போலீஸ்தான்”

“எங்கள் பேட்டையில் கள்ளச் சாராயமென்று நேற்று போலீஸ் புகுந்து ஒரே அடிதடி சார். சோடா பாட்டில் அடித்தாங்க. போலீஸ் பின்னி எடுத்துவிட்டது. நான் ஒன்பது மணிக்கு வீட்டு உள்ளே போனா வெளியே வரவே மாட்டேன். காலையில் ஏழு மணிக்குத்தான் வெளியே வருவேன். இடம் மாற்றலாமென்று இருக்கிறேன்.”

ஆட்டோ, கிளப் உள்ளே புகுந்து நின்றது. பணம் கொடுத்துவிட்டு படியேறி வரவேற்பாளாரிடம் கையை நீட்டினேன். சாவியை எடுத்துக் கொடுத்துவிட்டு, “சார் வெளியிலே ஒன்னும் கலாட்டா இல்லையா? எப்படி வந்தீங்க?” என்று கேட்டார்.

“பெரிசா ஒன்னும் இல்லை. பஸ், ஆட்டோ எல்லாம் வழக்கம் போலத்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. உங்களுக்கு எப்போது தகவல் வந்தது.”

“பன்னிரண்டு மணிக்கே வந்துவிட்டது சார். ஒரு மணிக்கு உயிர் போய்விட்டது என்று கன்பார்ம் பண்ணிட்டாங்க. ரொம்ப மோசம் சார்”

“கிளப் மூடிடுவீங்களா?”

“நீங்கள் உள்ளே போங்கள் சார். உங்களுக்கு கணேசன் என்று ஒருவர் இரண்டு முறை போன் பண்ணினார்.”

“அப்புறம்?”

“டில்லியில் இருந்து ஒரு கால் வந்தது சார். சீட்டு அறையிலே போட்டு இருப்பாங்க”

“சரி” என்று படியேறினேன். முருகேசன் மேலே இருந்து கீழே இறங்கிக் கொண்டு இருந்தார்.

“வாங்க ராஜா” என்று கை கொடுத்தார். அவர் சினிமா டிஸ்ட்ப்பூட்டர். பைனான்சியர். இன்னும் பல வேலைகள் பார்க்கிற ஆள் என்று சொன்னார். எனக்குப் படிப்பாளியாக இருந்தார். அவரை நான் முதன்முதலாக கிளப் நூலகத்தில்தான் பார்த்தேன். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் இரண்டு ஆண்டுகளாக அவரை கிளப்பில் சந்திக்கிறேன். யாரும் அவரைப் பற்றி ஒரு வார்த்தையும் நல்லதாகவோ கெட்டதாகவோ பேசியது இல்லை. அவர் எப்பொழுதும் சிரித்துக்கொண்டே இருப்பார். என்னை நூலகத்தில் பார்த்ததும், “வாங்க ராஜா. ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. நம்ம கிளப்பில் உருப்படியான இடம் என்றால் நூலகம்தான். ரொம்ப குறைச்சலாக நெம்பர் வரும் இடமும் இதுதான். நான் ஏழு வருஷமாக நூலகக் கமிட்டி உறுப்பினாராக இருந்து நல்ல நல்ல புத்தகம் எல்லாம் வாங்கிப்போடுகிறேன். புத்தகம் உள்ளே வருகிறதே தவிர வெளியில் போவதில்லை” என்றார்.

நான் ஒரு சிரிப்பு சிரித்தேன்.

“எனக்குத் துணைக்கு நீங்கள் வந்துவிட்டீர்கள். ரொம்ப சந்தோஷம். அடுத்த வருஷம் நீங்கள்தான் கமிட்டி உறுப்பினர்.”

“நீங்கள்தான் சார் சரியான ஆள். உள்ளூர் ஆசாமி. பழைய உறுப்பினர்.”

“இதெல்லாம் ஒரு தகுதியாகுமா? புத்தகத்தின்மீது காதல் கொண்டிருப்பவர்கள்தான் தகுதியான ஆள்கள். நான் ரிஜிஸ்டரைப்

பார்த்தேன். அடே அப்பா, ஒருத்தரும் படிக்காத புத்தகம் எல்லாம் கொண்டுபோய் இருக்கிறீர்கள். பிளாட்டோ ரிபப்ளிக் எடுத்துப் படித்து இருக்கிற முதல் நெம்பர் நீங்கள்தான்.''

“நாம் சந்திப்போம்''

“நான் பேசியே உங்களுக்குத் தொந்தரவு கொடுத்துவிட்டேன்.''

“அதெல்லாம் ஒன்றுமில்லை. மனிதர்களைச் சந்திப்பதும், அவர்கள் பேச்சைக் கேட்பதும் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.''

‘‘அது உங்கள் பேச்சில் தெரிகிறது’’ என்று எனக்கு இடம் கொடுத்து ஒதுங்கிக் கொண்டார்.

அன்றைக்கு ஆரம்பித்த பேச்சு எங்கே பார்த்தாலும் தொடர்கிறது.

“நாம் இன்னும் சந்திக்கவே இல்லை. இரண்டு வருஷங்கள் போய்விட்டன'' என்றார்.

“நீங்கள்தான் உத்தரவு கொடுக்க வேண்டும்.''

“நான் நாளை போன் செய்கிறேன். ஆமாம் வழியில் ஒன்றும் பிரச்னைகள் இல்லையே. ரொம்பக் கஷ்டம். ஒரு நாட்டின் பிரதம மந்திரியை– அதுவும் ஒரு பெண்மணியை சுட்டுக்கொன்று இருக்கிறார்கள்.''

“ஆமாம்'' என்று தலையசைத்துக் கொண்டு ஒரு படி மேலே ஏறினேன். ரகுராம் ரெட்டி இரண்டு பெண்களோடு கீழே வந்து கொண்டிருந்தார். அவரை பெண் சிநேகிதிகள் இல்லாமல் பார்க்க முடியாது என்று சொல்லிக்கொண்டு சிரிப்பார்கள். நல்ல குண்டு ஆசாமி. கழுத்து கிடையாது. எப்பொழுதும் கோட்டு சூட்டு போட்டுக்கொண்டு தெலுங்கு பேசிக்கொண்டிருப்பார். அவருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு அறைக்குச் சென்றேன். கதவில் இரண்டு சீட்டுக்கள் சொருகியிருந்தார்கள். அதையெடுத்துக்கொண்டு கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றேன்.

அறையில் தொலைக்காட்சி இருந்தது. ஆனால் அதைப் போட மனம் வரவில்லை. தலையை அசைத்துக்கொண்டு பேண்டை அவிழ்த்துப் போட்டுவிட்டு லுங்கிக் கட்டிக்கொண்டேன். ஒரு குவளைத் தண்ணீர் குடித்துவிட்டு சாய்ந்து உட்கார்ந்து கொண்டேன்.

மனம் சாவுபற்றியே சுழன்று கொண்டிருந்தது. எனக்குத் தெரிந்த முதல் சாவுப் பெரிய அத்தை சாவுதான். அப்பொழுது எனக்கு ஏழு வயதிருக்கும். மழை பொழியும் நாளில் செத்துப்போனது. காவிரி ஆற்றைத்தாண்டி தூக்கிக்கொண்டு போனார்கள். நானும்கூடவே சென்றேன். ஆனால் காவிரி ஆற்றைத்தாண்டும்போது சின்ன சித்தப்பா என்னை கையைப் பிடித்து நிறுத்திவிட்டார்.

''போதும். நீ வீட்டிற்குப் போ'' என்றார்.

நான் ஒரு நிமிஷம் அப்படியே நின்றுகொண்டு இருந்தேன்.

''தம்பி, வாங்க!'' என்று ஒற்றைத் தெரு மாணிக்கம் என் கையைப் பிடித்து வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தார். அதில் இருந்து பல சாவுகள் எங்கள் வீட்டில் ஏற்பட்டிருக்கின்றன. சாவு இல்லாத வீடு கிடையாது என்று அப்பா அடிக்கடி சொல்வார். பிறப்பு மாதிரி சாவும் ஒரு நிகழ்வு. ஆனால், மகிழ்ச்சியாக அதனைக் கொண்டாட முடியாது. அது துக்கமானது. மனத்தை நோக வைப்பது என்பதை என் மனைவி சாரதா செத்துப்போனபோதுதான் தெரிந்துகொண்டேன். அதுவரையில் எனக்கு சாவு என்றால் ஒரே அலட்சியம். அது நல்லதுதானே. எதற்காக இவர்கள் இப்படி அழுது புலம்புகிறார்கள். சாவு என்பது இல்லாவிட்டால் சந்தோஷம் உண்டா? என்று சொல்லிக்கொண்டு இருப்பேன். ஆனால் எதுவும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பதை நான் தெரிந்துகொண்டேன். அதுதான் பட்டறிவது.

அப்பாதான் சொல்வார்: ''சாவைப் பாராட்டக்கூடாது அது வரும். எப்பொழுது வரும் என்று சொல்ல முடியாது. வந்தால் வாரிக்கொண்டு போய்விடும். புலம்பி அதனை ஆற்ற முடியாது. ஆனால் மனம் தானாகவே ஆற்றிக்கொண்டுவிடும். மனத்தின் மகத்துவம் என்றால் மனக்காயத்தை ஆற்றுவதுதான். அதற்குச் சின்ன காயம், பெரிய காயம் என்பது எல்லாம் கிடையாது. எல்லா காயத்தையும் சுத்தமாக வடுவே தெரியாமல் ஆற்றிக்கொண்டுவிடும்'' என்று. இப்படிச் சொல்லிக்கொண்டிருந்த அப்பா, மகாத்மா காந்தி சுடப்பட்டு இறந்துபோனதும், காவிரி ஆற்றுக்குப் போய் தலையை மொட்டை அடித்துக்கொண்டு தலை மூழ்கிவிட்டு வந்து மௌன விரதம் இருந்தார். இவர்க்கும், அவர்க்கும் என்ன சம்பந்தம். அவரை இவர் சந்தித்து ஒரு வார்த்தைகூட பேசியதில்லை. கடிதம்கூட எழுதிக்கொண்டது கிடையாது. ஆனால், தன் தந்தைபோல பாவித்துக் கொண்டார். பிறகு

ஒருநாள் தேசத்தந்தை என்று குறிப்பிட்டார். தந்தைக்கு மகன் ஆற்றும் அஞ்சலிதான்.

அம்மா செத்தபோது அப்பா நிம்மதி அடைந்தார். அதனை அவர் வெளியே வாய்விட்டுச் சொல்லவில்லை. ஆனால் செயல் பூர்வமாகச் சொன்னார். ஏனெனில் அம்மா குணத்திற்கு அவரை யாரும் வைத்து பராமரிக்க முடியாது. முன்கோபி. வாய்த்துடுக்கு. எப்பொழுதும் பேசிக்கொண்டே இருக்கும். என் மனைவி சாரதா அம்மாவிற்குச் சொந்தக்காரப் பெண். அம்மாதான் கல்யாணத்திற்கே காரணம். அப்பா என்னைத் தனிக்குடித்தனம் வைத்தார்.

நான் ‘என்ன அப்பா?’ என்று கேட்டேன். ‘குடும்பம் தழைக்க வேண்டும். தனியாக வைக்காவிட்டால் சாரதா குளத்தில் விழுந்து செத்துப் போய்விடுவேன் என்று சொன்னாள். அவள் சாவதை என்னால் பொறுத்துக்க முடியாது. நல்ல பெண். நீ நன்றாக வருவாய். எனக்கு அவள் மீதோ உன் மீதோ கோபம் வருத்தம் கிடையாது. என்று புதுவீட்டில் குடியமர்த்தினார்.’ அவர் ஒரு சாவைத் தடுத்தார். சாவு என்பது தடுக்க முடியாது. ஆனால் யார் சாகிறார்கள் என்பதுதான் முக்கியம்.

நான் தனிக்குடித்தனம் ஆரம்பித்த இரண்டாண்டுகள் கழித்து அம்மா ரத்தத்தில் புற்றுநோய் வந்து இறந்துபோனார். அப்பா எளிமையாக அம்மா அடக்கத்தை நடத்தினார். நான் கொள்ளி வைத்தேன் அதனைக் கடமை என்பதா? பாக்கியம் என்பதா? என்பது இதுவரையில் எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் அம்மா சாவு மனைவிக்கு சந்தோஷம் தரும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவளோ தரையில் உருண்டு புரண்டழுதாள். அது போலி இல்லை, ஊரை ஏமாற்றச் செய்த காரியம் இல்லை என்பது அவள் மனத்திற்குத் தெரியும்; எனக்கும் தெரிந்தது.

அம்மா பேச்சுக்கு அடியாழத்தில் அன்பு இருந்தது. தன் நகைகள், வைர அட்டிகை, சீதனமாக வந்த ஐந்து ஏக்கர் வடபாதிமங்களம் ஆற்றுப்பாசன நிலத்தை சாரதாவிற்கு என்று உயில் எழுதி வைத்திருந்தது. அந்த உயில் அப்பாவிற்கு மட்டுந்தான் தெரியும். அவரோ ஒன்றும் தெரியாதவர்போல இருந்தார். அந்த நகை, உயிலுக்காகத்தான் சாரதா அழுது புரண்டாள் என்று சொல்ல முடியாது. இரண்டு பேர்களுமே ஆழ்மனத்தில் அன்பும், வெளியில் பகை எரிச்சலும் கொண்டிருந்தார்கள்.

அறையில் கதவு மெதுவாக தட்டப்பட்டது. எழுந்து கதவைத் திறந்தேன். கணேசன் வேகமாக உள்ளே நுழைந்து என்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு கேவிக்கேவி அழுதான். கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு "என்ன கணேசா?" என்று நாற்காலியில் உட்காரவைத்தேன்.

"அன்னை இந்திராவை பாவிகள் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்!" என்று சொல்லிவிட்டு முகத்தில் அடித்துக் கொண்டு மறுபடியும் அழுதான்.

அவன் கையைப்பிடித்துக்கொண்டு ஆறுதல் எப்படி சொல்வதென்று தெரியாமல் அவனையே பார்த்துக்கொண்டு இருந்தேன்.

★

## அத்தியாயம் 5

கணேசன் எனக்குச் சிநேகிதன். ஆனால் நெருக்கமானவன் என்று சொல்ல மாட்டேன். அவன் எப்படி நினைக்கிறான் என்பது தெரியாது. யார் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியெல்லாம் நான் கவலைப்படுவதே இல்லை, எனக்கு நான் முக்கியம். அவ்வளவுதான். நான் கிளப்பிற்கு வந்துவிட்டதைத் தெரிந்துகொண்டு நான்கைந்து பேர்கள் வந்து பார்ப்பார்கள். அதில் ஒரு ஆள் கணேசன்.

அவன் என்னிடம், வந்த முதல் நாள், “ஐயா, நான் பட்டமங்களம்” என்றான்.

“சந்தோஷம்”

“பட்டுநூல்கார வெங்கட்ராம் தம்பி மகன்”

“வெங்கட்ராம் நல்லா இருக்கிறாரா?”

“மூன்று வருஷத்திற்கு முன்னால் போய்விட்டார். அவர் இரண்டாவது மகள்தான் சினிமா நடிகை அனுராதா.”

“ஓ! அப்படியா?”

“நன்றாக நடனம் ஆடும். சினிமாவில் முதலில் நடனம் ஆடிக்கொண்டிருந்தது. அப்புறம் நடிக்க ஆரம்பித்துவிட்டது.”

நான் தலையசைத்தேன்.

“நம்ம கிளப் ஆண்டுவிழாவிற்கு அதுதான் நடனம் ஆடியது. கவர்னர் பாராட்டி கேடயம் கொடுத்தார். எல்லோரும் வந்திருந்தார்கள். நீங்கள்தான் வரவில்லை.”

“அப்படியா?” என்றேன்.

“மலேசியா, சிங்கப்பூருக்கு நடனம் ஆடப் போகிறது. பதினேழு பேர்கள் கொண்ட குழு. அதில் பி.ஆர்.ஓ.–வாக நானும் போகிறேன். இருபத்தொரு நாட்கள்”

“பெரிய பயணம்தான்”

“மலேசியா அமைச்சர் தத்தோ சண்முகவேலுதான் பின்னால் இருந்து ஏற்பாடு செய்துகொடுத்தார். அவருக்கு மலேசியாவில் நல்ல செல்வாக்கு என்கிறார்கள். அவர் நம்மூர் ஆள்தானாம். தரங்கம்பாடி”

“இருக்கும். ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் நிறைய பேர் மலேசியா போனார்கள்”

“எங்கள் குடும்பத்தில் மூன்றுபேர் போனதாக பெரியப்பா சொல்லிக்கொண்டே இருப்பார்.”

“வா, பாருக்குப் போகலாம்”

“இல்லை ஐயா. நான் எல்லாம் உங்கள்கூட சரிசமமாக உட்கார்ந்து குடிக்கக்கூடாது.”

நான் கணேசனை நிமிர்ந்து பார்த்தேன். அவன் கையெடுத்து கும்பிட்டுவிட்டு, ‘உத்தரவு வாங்கிக்கொள்கிறேன்’ என்று போய்விட்டான். அவன் பெரியப்பா வெங்கட்ராம், எங்கள் குடும்பத்திற்கு ரொம்ப வேண்டப்பட்டவர். அப்பா சிநேகிதர். எப்பொழுதும் கையில் வெற்றிலைப் பெட்டியோடுதான் வருவார். கும்பகோணம் கொழுந்து வெற்றிலை பெட்டி நிறைய இருக்கும். ஒரு பக்கம் கொட்டைப்பாக்கு வைத்துக்கொண்டு இருப்பார். வெள்ளிப்பிடிபோட்ட பாக்கு வெட்டி. அப்பாவிடம் திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டே பச்சை பாக்கை வெள்ளிப்பிடி போட்ட பாக்கு வெட்டியில் வைத்து வெட்டி சில்லுசில்லாக அள்ளி வாயில் போட்டுக்கொள்வார். வெற்றிலையை மேல் துண்டில் துடைத்து, நடு நரம்பை கிள்ளி எடுத்து வெளியில் போட்டுவிட்டு முதுகில் வாசனை சுண்ணாம்புத் தடவி மடித்து வாயில் திணித்துக் கொள்வார். அது என்னவோ மேஜிக் காட்டுவதுமாதிரி இருக்கும். அதற்காகவே நான் வெளியில் வந்து திண்ணை ஓரத்தில் நின்று கொண்டு இருப்பேன். வேடிக்கைப் பார்த்துக்கொண்டே பொ¤யப்பா வெங்கட்ராம் பேச்சில் இருந்து அரசியல் தெரிந்து கொண்டேன் என்பது தெரிகிறது.

எதற்கும் ஒன்று கிடையாது. ஒன்றுக்குள் ஒன்றாக என்னென்னமோ இருக்கிறது. அதனை அறிந்து கொள்ள காந்தி, நேரு, பெரியார், ராஜாஜி எல்லாம் அடிபட்டார்கள். அப்பா பெரியார் அபிமானி. கருப்பு சட்டை போட்டுக் கொள்ளவில்லையே தவிர பெரியாரை முழுக்க முழுக்க ஆதரித்தார். நாயக்கர் யோக்கியர்தான் என்பது அப்பா வாதம்.

“அவர் யோக்கியர்தான். ஆனால் கடவுள் இல்லை. கடவுள் கற்பனை என்கிறாரே”

“அது அவர் சொல்கிறார். நீங்கள் நம்பினால் அது சரிதான்.”

“கடவுள் இல்லாமல் லோகம் கிடையாது.”

முத்து படையாச்சி காபி கொண்டுவந்து கொடுப்பார். வெங்கட்ராம் காபியை ஒரு வாய் குடித்துவிட்டு, “ஓய் முதலியார். எங்க அம்மா காபிக்கு அப்புறம் உன் வீட்டு காபிதான்' அசல் காபி.” என்று சொல்லிவிட்டு துடையில் தட்டிக்கொள்வார். மூக்குப்பொடி போட்டுக்கொள்வார். அவர் ரொம்ப நல்ல ஆத்மா என்று அப்பா சொல்லிக்கொண்டிருந்தார். அவருக்கு ஆறு மகள்கள். கடைசியாக ஏழாவதாக ஒரு பையன். வெங்கடரத்னம். நான் அவனை பார்த்திருக்கிறேன். சிவப்பாக ஒல்லியாக வெங்கட்ராம் மாதிரியே மூஞ்சியைக் கொண்டிருந்தான். மூஞ்சு மனசாகாது. இரண்டும் ஒன்றில்லை என்பதா? அது வேறு, இது வேறு என்று சொல்வதா என்றால் இரண்டும் வித்தியாசப்பட்டது என்று சொல்லிவிடுவேன்? அதை என்னிடம் யாரும் கேட்க வேண்டியதில்லை. நானே அளந்து எடைபோட்டுச் சொல்லிவிடுவேன்.

“ராஜா, நீ மூஞ்சியில் அடித்ததுமாதிரி அபிப்பிராயம் சொல்லுற. நீ சொல்லுறது என்னமோ உண்மைதான் என்றாலும் அப்படிச் சொல்ல வேண்டுமா?” என்று சிவமணி ஒரு நாள் கேட்டார். கேட்கும்போது அவர் கையில் பாரதியார் கவிதைப் புத்தகம் இருந்தது.

“மனசில வருவதைச் சொல்லித்தானே ஆகவேண்டும்”

“மனசிலே எவ்வளவோ வருகிறது. அவ்வளவையும் சொல்லிக்கொண்டு இருக்க முடியுமா? பூட்டும் சாவியும் நம் கையில் இருக்கிறது” என்றார்.

“இது நல்லா இருக்கிறதே”

“நான் சொல்லுலே. உங்க அப்பா ஒருநாள் என்னிடம் சொன்னார்; அவர் சொல்லி இருபது வருஷம்போல ஆகிவிட்டது. ஆனால் நேற்றுதான் சொன்னதுபோல இருக்கிறது. மனிதனுக்குத்தான் வயதாகிறது. ஆனால் அவன் பேசிய பேச்சுக்கு வயதாகுவதே இல்லை. எனவேதான் மனிதன் முதுமை என்பதை ஏற்க மறுக்கிறான். சாவு என்பதே ஏற்படாமல் இருக்கப் பாடுபடுகிறான். என்றும் பதினாறாக இருக்க வேண்டுகிறான். தான்

மட்டுந்தான் அப்படி இருக்க ஆசைப்படுகிறான். காதலி, மனைவி வயதாகி பழசானாள் புது காதலியைப் பிடித்துக்கொள்ளலாம்; இளம் பெண்ணை மனைவியைக் கட்டிக்கொள்ளலாம் என்று ஆசைப்படுகிறான். மனித ஆசையிலேயே பெரிய ஆசை அதுதான். மரணமில்லாத பெருவாழ்வு. அதுவும் இளமை பொங்கி வழியும் வாழ்க்கை. அது அசல் சொர்க்க லோகம். அங்கே சாவு கிடையாது. முதுமை இல்லை. எப்பொழுதும் பெண்கள் ஆண்களோடும்; ஆண்கள் பெண்களோடும் சுகித்து சுகஜீவியாக இருக்கலாம். வயிறு பசிக்காது. முதுமை அண்டாது. அப்புறம் மனிதனுக்கு என்ன வேண்டும். கவிதை காப்பியம் புனையத் தேவையில்லை. சங்கீதம் கேட்க வேண்டியதில்லை. இன்பம் என்பதே வாழ்க்கை. மரணமில்லாத பெரு வாழ்க்கை. ஒழிக்கப்பட வேண்டியது என்றால் அது முதுமையும், மரணமுந்தான்.

அதைத்தான் தேடிக்கொண்டு கில்காமேஷ் நீண்ட நெடும் பயணம் மேற்கொண்டான். நான் கில்காமேஷ் காப்பியத்தை கிளப்பில்தான் கண்டெடுத்தேன். நான் புத்தங்கள் தேட ஒரு வழி வைத்திருக்கிறேன். என் வழி இன்னொருவர் வழி கிடையாது. ஒவ்வொரு ஆளுக்கும் ஒருவழி என்பது மாதிரியும் இல்லை. அதாவது நான் யாரும் படிக்காத, –படி என்று சிபாரிசு செய்யாதப் புத்தகத்தைத் தேடி எடுத்துப் படிப்பேன். எனக்கு இன்னொருத்தன் அறிவு என்பதன்மீது அவநம்பிக்கை என்பது கிடையாது. என் மீதான நம்பிக்கைதான். படிக்கப்படாத, –படிக்க முடியாத புத்தகம் என்றால் அதனைப் படிப்பதுதான் என் படிப்பு. அது என் ஆவணப் படிப்பு இல்லை. என்னால் முடியும் என்ற தன்முனைப்புதான்.

நான் அடிக்கடி என்ன பிரயோசனம் என்று சாமிநாதய்யரைப் பார்த்து சேலம் முன்சீப் ராமசுவாமி முதலியார் கேட்டதைத்தான் நினைத்துக்கொள்வேன். மகாவித்வானிடம் நூற்றுக்கணக்கான சுவடிகள்–, புராணங்கள், அந்தாதிகள் எல்லாம் படித்ததைச் சொன்னாலும் ‘என்ன பிரயோசனம்? கேட்டதை, ‘நன்றாகத்தான்’ சொல்லியிருக்கிறார். நல்ல புத்தகம் என்றால் அது படிக்கப்படாமல் இருக்கும் என்பது ஒரு அபிப்பிராயம். அது யாருடையதோ என்பது கிடையாது, என்னுடையதுதான். நான் எதற்கும் பொறுப்பு ஏற்றுக்கொள்கிற ஆள். என்னிடம் யாரோ சொன்னார்கள், கேள்விப்பட்டேன். ஏதோ ஒரு புத்தகத்தில் படித்தேன் என்பது எல்லாம் கிடையாது. நீதிமன்றம் மாதிரிதான். நீதிமன்றம் அப்படித்தானா என்றால், அப்படி நடக்க வேண்டும். அதுதான் முறை. சந்தேகம், ஐயப்பாடு என்பது எல்லாம் கிடையாது.

“பார்த்தாயா?” என்று கேட்டால், அதற்கு ஒரு பதில்தான் உண்டு. மழுப்பக்கூடாது. பார்த்ததுபோல இருக்கிறது, நினைவில் இல்லை என்பது எல்லாம்கூடாது. நான் படித்த புத்தகத்தை எல்லாம் டைரியில் எழுதி வைத்துக்கொள்கிற ஆளில்லை. டைரி, குறிப்பு கைவசம் கிடையாது. மனசுதான் ¬டா¤. அதில் எழுத எழுத ஏடுகள் வந்துகொண்டே இருக்கின்றன. என் டைரி என்னுடைய மூன்றாவது வயதில் இருந்து எழுதப்பட்டு வருகிறது.

அதில் என்னுடைய சொந்த, விவகாரந்தான் இருக்கும் என்பது இல்லை. மனிதனே பிரபஞ்ச ஆள். ஏதோ ஓர் ஊரில் பிறந்தான் என்பதற்காக - ஒரு மொழி பேசுறான் என்பதற்காக, ஒரு மதத்தைப் பின்பற்றுகிறான் என்பதற்காக அவனை குறுகிய வட்டத்திற்குள் அடைத்து வைத்துவிடக்கூடாது.

அவன் பிரபஞ்ச மனிதன். எல்லா நாட்டிற்கும், எல்லா மொழிகளுக்கும் சொந்தக்காரன். அவன் தாய்மொழி எவ்வளவு அவனுக்குச் சொந்தமோ அதேமாதிரி அவன் பேசாத மொழிகளும், அவன் கேட்காத மொழிகளுக்கும் அவனுக்குச் சொந்தம்தான். அவனுக்கு அன்னியமானது என்றோ, அறியாதது என்றோ ஒன்றும் கிடையாது. எதுவும் அவனைப் பற்றிய வரையில் செத்துப்போவது இல்லை. செத்துப்போன மொழியில் எழுதப்பட்டதாகச் சொல்லப்பட்ட கில்காமேஷ் காப்பியத்தை வெகு தற்செயலாகக் கண்டெடுத்தான்.

எது நான் படிக்க வேண்டுமோ அது எனக்குக் கிடைத்துவிடும். என் ராசி என்றுதான் சொல்லவேண்டும். மூன்றாவது அடுக்கில் இரண்டு பெரிய பெரிய புத்தகங்களுக்கிடையில் கில்காமேஷ் சொருகி வைக்கப்பட்டு இருந்தது. எடுத்துப் புரட்டிப்பார்த்தேன். 1960-ஆண்டில் வாங்கி இருக்கிறார்கள். அதற்கு பதினெட்டு வருஷத்திற்கு முன்னால் லண்டனில் வெளிவந்தது. சாவைக் கண்டு அஞ்சிய மனிதன் கில்காமேஷ் சாகாமல் இளமையோடு வாழ வழிதேடிப் போகிறான், போகிறான் என்று நீண்ட தூரம் வெல்லவே முடியாத வீரனைக் கொன்று போட்டுவிட்டு போகிறான்.

அந்தக் கில்காமேஷில் பிரளயம் பற்றிய ஒரு கதையும் வருகிறது. பிரளயம் என்றால் சமுத்திரம் பொங்கி ஆழிப் பேரலை வீசி உலகத்தில் இருந்த சகல உயிர்களையும் அழித்தது. அது நடந்ததா -கற்பனையா என்றால் நிஜந்தான் என்று சொல்ல வேண்டும். கில்காமேஷ் காப்பியம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டது என்றால் அதற்கு

ஐநூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பாபிலோனியா பகுதியில் ஒரு பிரளயம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால் பேரழிவு ஏற்பட்டிருக்க வேண்டும். பார்த்தவர்கள் அதை கதையாகச் சொல்லியிருக்க வேண்டும். கவிஞர்கள், புலவர்கள் பாடியிருக்க வேண்டும். பின்னால் மகா காப்பியமான கில்காமேஷ் எழுதியவன், காப்பியத்தில் நுழைத்திருக்க வேண்டும்.

"நடந்தவொன்றை எழுதுவதைவிட– கேட்டதைத் திரும்பச் சொல்வதைவிட படித்ததைச் சொல்வதும் – எழுதுவதும் சுலபமாக இருக்கிறது. எதுவுமே சொந்தமாகச் சொல்வதுதான் கடினம். சம்பாரிப்பது மாதிரி. இரவல், கடன் வாங்கிக் கொள்வது சுலபமாக இருக்கிறது. அதுமாதிரிதான் படித்ததில் இருந்து எடுத்துக் கொள்வது" என்று ஐராவதம் ஒருமுறை சொன்னார்.

"இன்னொருமுறை சொல்லுங்கள்?" என்றேன்.

"நாம் ஒருமுறை திருக்கடையூர் சென்று வருவோம்" என்றார்.

"ஏன்? எதற்கு?"

"காலசம்கார மூர்த்தியை தரிசனம் செய்துவிட்டு வருவோம்."

"மரணமில்லாத வாழ்க்கையா?"

"இல்லை இல்லை. மரணம் என்பது பற்றி எதாவது தெரிந்துகொள்ள முடியுமா என்பது பற்றி அறிந்து கொள்ளத்தான்."

"அறிய முடியாததை அறிந்துகொள்வதில் ஆர்வம் வருகிறது"

"அதில் முடியாதது மரணம் மட்டுந்தான் என்பது இல்லை. பல அம்சங்கள் அறியமுடியாமல்தான் இருக்கின்றன. அறிய முடியாததாலேயே வாழ்க்கை சுகமாக இருக்கிறது."

"இது நன்றாக இருக்கிறது?"

"எது தெரியவில்லையே, தெரிந்துகொண்டு எதுவும் ஆகப் போவதில்லையே. அதுபற்றி ஆலோசனை செய்துகொண்டு இருக்கக்கூடாது. அதுதான் உண்மையான வாழ்வது என்பதின் அர்த்தம். சாவு, புயல்காற்று வீசுவதுமாதிரி; மழை பொழிவது மாதிரி. கொஞ்ச நேரம் புயல் வீசிவிட்டுப் போய்விடும். மழை கொட்டிவிட்டு ஓய்ந்துவிடும். மரங்கள் கீழே விழுந்துவிடும். மழையால் ஆற்றின் கரை உடைந்துவிடும். இரண்டு

நாட்கள், மூன்று நாட்களில் எத்தனையோ கஷ்டப்பட்டு சரிசெய்து விடுகிறோம். அப்படித்தான், அதுதான் சாவு பற்றியும். ரொம்ப பாராட்டிக் கொண்டு இருக்கக்கூடாது.''

``சரி'' என்றேன்.

``திருக்கடையூர் அடுத்த மாதம் போகலாமா?''

``பயம் விட்டுவிட்டதா?''

``பயமே போய்விட்டது.'' என்றேன்.

``கணேசன் வருவதாகச் சொன்னார். அவர்தான் கோயிலுக்கு எல்லாம் சரியான துணை.''

``நல்ல துணை. அவர்மாதிரி துணை ஆகுமா?''

டெலிபோன் மணி அடித்தது. எடுத்தேன்.

``என்ன ஐராவதம்?''

``பத்திரமாக இருக்கிறீயா? சென்னை, தில்லியில் ஒரே கலவரமாம். டி.வி.யில் சொல்லிக்கொண்டே இருக்கிறான்.''

``நான் கிளப்பில்தான் இருக்கிறேன். இங்கே ஒன்றும் பிரச்னை இல்லை. கணேசன்கூட வந்திருக்கிறார்.''

``ஓ! கணேசன் இருக்கிறாரா? அப்புறம் பயப்பட ஒன்றுமில்லை'' என்றார். நான் கணேசனைப் பார்த்தபடி டெலிபோனைக் கீழே வைத்தேன்.

கணேசன் எழுந்து, ``நான் அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. உங்களிடம் சொல்லிக்கொண்டு போகத்தான் வந்தேன். இங்கே ஒன்றும் கலவரம் எல்லாம் இல்லை.''

``அதெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்.''

``நம் எம்.பி. ராமமூர்த்தி டில்லி போறார். அவரோட நானும் போறேன். உங்களிடம் உத்தரவு வாங்கிக் கொள்கிறேன்.''

``அதற்கென்ன?''

“செய்தி கிடைத்ததும், நம்ப எம்.பி. ரொம்ப பதறிப்போய் விட்டார். அப்ப நான்தான் கூட இருந்தேன். இது நிஜமா கணேசா என்று கேட்டு அழுதுட்டார்.”

“அப்படியா?”

“அன்னைதான் எனக்கு சீட் கொடுத்தாங்க. கட்சியில் ரொம்ப எதிர்ப்பு எல்லாம் இருந்தது. அதையெல்லாம் மீறி கடைசியா பெயர் அறிவித்தாங்க” என்றார். மந்திரி பதவி கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்தார். இன்னும் கொஞ்ச நாள் அன்னை இருந்தா மந்திரி பதவி கிடைத்திருக்கும்” என்றான்.

கணேசன் ராமமூர்த்திகூட நான்கு வருடங்களாக இருக்கிறான். டெலிபோன் அடித்தது.

“நான் உத்தரவு வாங்கிக்கொள்கிறேன். இங்கே ஒன்னும் கலவரம் எல்லாம் இல்லை. பயப்பட வேண்டாம்.”

நான் தலை அசைத்துக்கொண்டே ஐயாயிரம் ரூபாய் எடுத்துக் கொடுத்தேன். அவன் வாங்கிக்கொண்டு கும்பிட்டுவிட்டுப் புறப்பட்டுச் சென்றான்.

டெலிபோன் மணி அடித்துக்கொண்டே இருந்தது.

★

## அத்தியாயம் 6

அறையைப் பூட்டுவதற்கு எழுந்தேன். டெலிபோன் மணி அடித்தது. அதனை ஒருமுறை பார்த்துவிட்டு வெளியில் வந்தேன். கதவைச் சாற்றிப் பூட்டினேன். டெலிபோன் அடித்துக்கொண்டே இருந்தது. நான் டெலிபோன் அடித்தால் பரபரக்க ஓடி எடுக்கிற ஆள் இல்லை. விரும்பினால் எடுப்பேன்; இல்லாவிட்டால் மணி சப்தத்தைக் கேட்டுக்கொண்டே இருப்பேன். எனக்கு டெலிபோனில் பேசுவதைவிட அதிலிருந்து ஒலிக்கும் மணி சப்தம் பிடிக்கும். சப்தம் என்றால் இரைச்சல் இல்லை. கூச்சல் கிடையாது. ஒரே ஒழுங்கான ஒலி. அதுதான் மணி. மணி எத்தனைவிதமாக ஒலிக்கிறது.

எங்களூர் ஞானாம்பிகை கோயிலில் பெரிய காண்டாமணி இருந்தது. அதற்காக தனியாக மேடைகட்டி ராட்டினம்போல தொங்க விட்டிருந்தார்கள். நளவருஷம் ஆ.க.நா.சொக்கலிங்கம் செட்டியார் உபயம் என்று போட்டிருந்தது. அதன் கீழே இங்கீலிஷ் வருஷம் 1901 என்று இருந்தது. பழைய மணிதான். நான் எப்பொழுது போனாலும் காண்டாமணியை இழுத்து அடிப்பேன். 'கணீர்... கணீர்' என்று ஒலிக்கும். அதைக் கேட்கும் போதெல்லாம் மணி என்பது வெளியில் இல்லை. மனசுக்குள் அடிப்பதுமாதிரி இருக்கும். அதனை ஒருநாள் ஐராவதத்திடம் சொன்னேன்.

"என்ன இன்னும் சொல்" என்று கேட்டார்.

"உன்னிடம் இதுதான் ஒரே கஷ்டம். எது சொன்னாலும் இரண்டுமுறை, மூணுமுறை கேட்கற. என்னால் ஒருமுறை சொன்னதை அதேமாதிரி, அதே சொல்லால் மறுமுறை சொல்ல முடியவில்லை."

"அது உன் குறையில்லை"

"அப்படியா?"

"நீ சொல்வது மொழியில் சிந்தித்து மொழியிலே சொல்வது இல்லை. உன் சிந்தனையும் நீ பேசும் மொழியும் ஒன்று இல்லை."

நான் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு இருந்தேன். நான் யாரிடமும் இன்னொருமுறை சொல்லென்று கேட்பது இல்லை. அவன் சரியாகச் சொல்லாவிட்டாலும் சரி; நான் முழுதாகக் கிரகித்துக்கொள்ளாவிட்டாலும் சரி – அப்போழுது காதில் விழுந்ததுதான். எதுவும் உனக்கு அதிகமாகப் புரிய வேண்டும்; தெரியவேண்டும் என்பது

அவசியம் இல்லை. சொல்லப்படுவதின் வழியாக எதையும் பூரணமாகத் தெரிந்துகொள்ள முடியாது. ஏனெனில் எல்லாவற்றையும் தனக்குச் சாதகமாக மாற்றி, திரித்துச் சொல்லக்கூடிய ஆட்கள் இருப்பதுபோல சரியாகச் சொல்லத் தெரியாத ஆள்களும் இருக்கிறார்கள். அதனை உடைத்து உண்மை என்பதை உண்மையாகவே அறிவதற்குத்தான் நீதிபதி. வக்கீல் சொல்வதை நம்பாமல் குற்றவாளிகள், சாட்சிகள் எல்லோரையும் கூண்டில் ஏற்றி விசாரணை நடத்துகிறார்.''

''அப்படியும் உண்மை தெரிந்துவிடுமா?''

''அது கண்டுபிடிக்கிறவன் சாமர்த்தியம்''

''இது நல்லா இருக்கிறதே''

''உலகத்தில் எதுவும் கெட்டது இல்லை.''

நான் ஒவ்வொரு படியாகக் கீழே இறங்கினேன். ரகுராம் ரெட்டியுடன் சோபாவில் இடது பக்கத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த முருகேசன் எழுந்து பரபரக்க முன்னே வந்தார். என் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு, ''வாங்க இப்படித்தான் கணேசனிடம் கேட்டேன். நீங்கள் அறையில்தான் இருப்பதாகச் சொல்லிவிட்டுப் போனான். நான் மேலே வரலாம் என்று இருந்தேன். நீங்களே வந்துவிட்டீர்கள்.''

''உட்காருங்கள்'' என்று ரகுராம் ரெட்டி நகர்ந்து இடம் கொடுத்தார்.

''இல்லை. நீங்கள் என்னமோ பேசிக்கொண்டு இருந்தீர்கள்.''

''என்ன பேச்சு பேச இருக்கிறது. இந்த அநியாயந்தான். ஒரு நாட்டுப் பிரதமரை காவலாளியே சுட்டுக் கொன்றுவிட்டான். எங்கேயாவது நடக்குமா?'' என்றார் முருகேசன்.

''நடக்கிறதே'' என்றார் ரகுராம் ரெட்டி.

நான் இரண்டு பேர்களையும் மாறிமாறி பார்த்துக்கொண்டு இருந்தேன்.

''ஒரு விநாடியில் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.'' என்றார் முருகேசன்.

''அவா¢கள் எங்கே கொன்றார்கள். துப்பாக்கி கொல்கிறது. மனிதன் என்றால் அறிவு உள்ளவன். தானம் தர்மம் செய்கிறவன். நல்லது கெட்டது

அறிந்தவன் என்று சொல்லிக் கொள்கிறோம். அதெல்லாம் சும்மா. வெறும் பித்தலாட்டம். நான் சொல்றேன் மனிதன் என்றால் கெட்டவன். அயோக்கியன். நல்லவன்மாதிரி வேஷம் போடுறவன். உலகத்திலேயே மோசமான ஜீவன் என்றால் அது மனிதன்தான்.''

''நம்ப ரெட்டி ரொம்ப கோபமாக இருக்கிறார்?'' என்றேன்.

''இல்லை... இல்லை... நான் கோபத்தில் பேசவில்லை. மகாத்மா காந்தியைச் சுட்ட தினத்தில் இருந்தே எனக்கு மனிதன்மீது நம்பிக்கைப் போய்விட்டது. அவர் நடமாடும் தெய்வம். அவரையே கொன்றான் என்றால் மனிதன்மீது நம்பிக்கை வைக்கமுடியுமா? அப்புறம் இனிப்பு கொடுத்து கொண்டாடி இருக்கிறான்.''

''மனிதனை இன்னொரு மனிதன் கொல்வது தொடர்ந்து நடந்து கொண்டுதானே வருகிறது. அந்தக் காலத்தில் ராஜா தண்டனை கொடுத்தான். இந்தக் காலத்தில் நீதிபதி கொடுக்கிறார். அது ராஜநீதியாகி விடுகிறது. அது குற்றம் கிடையாது. தனிமனிதன் கொன்றால்தான் குற்றம். தண்டனை கொடுத்து அவனை கொல்கிறார்கள். அதுதான் தண்டனைக்குத் தண்டனை.''

''ராஜா, நீங்கள் சொல்லுங்கள், கொலை ஏன் நடக்கிறது?''

நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். வக்கீல் சங்கரன் வந்து கொண்டிருந்தார். கிரிமினல் வக்கீல். அவர் குடும்பம் மூன்று தலைமுறையாக வக்கீல். அவர் தாத்தாவில் தொடங்கி வருகிறது. அவர் பெரியப்பா உயர்நீதிமன்ற நீதிபதி. மயிலாப்பூர் வாசி. அவரது இரண்டு மகள்களும் வக்கீல்கள். ஒரு மருமகன்கூட வக்கீல்தான். 'என் இரண்டாவது மகள் தேவிகாவிற்கு வக்கீலைத்தான் மாப்பிள்ளையாகப் பார்த்தேன். ஆனால் அவள் என்னவோ ஒரு டாக்டரை தேடிப்பிடித்துக் கல்யாணம் செய்து கொண்டுவிட்டாள்' என்று ஒருநாள் பில்லியர்ஸ் ஆடும்போது சொன்னார். அவர் பிரமாதமாக பில்லியர்ஸ் ஆடுவார். நான் அவரிடம் பலமுறை ஆடியிருக்கிறேன்.

''நம் வக்கீல் வருகிறார்.'' என்றேன்.

''வாங்க!'' என்று முருகேசன் வரவேற்றார்.

''என்ன பெரிய விவாதம்?''

“எல்லாம் அன்னை கொலை பற்றித்தான்”

“ஆமாம். நான்கூட டி.வி.யில் பார்த்தேன். ரொம்ப மோசம். அந்த அம்மா அசாத்திய தைரியசாலி. கேபினட்டிலே ஒரே ஆம்பள அதுதான். சிங்கம் என்று சிலிர்த்துக் கொண்டு குருதுவாரக்குள் ராணுவத்தை அனுப்பி தீவிரவாதிகள் கொட்டத்தை அடக்கியது. எல்லா சீக்கியா¢களும் கோபத்தில் இருந்தாணுவோ. அப்படி இருக்கிறபோது அவா¢களையே தனக்குப் பாதுகாவலனாக வைத்துக் கொள்ளலாமா?”

“அதுதான் தப்பா?”

“அது ஒரு தப்பு. அப்புறம் சீக்கியர்களை விளைவுகள் வளர்த்துவிட்டதும் அவுங்கதான். ஒன்று செய்தால் இரண்டு விளைவுகள் இருக்கின்றன?”

“அது இல்லை, நாம் பேசுவது கொலை, எவ்வளவு கொடியது. கொடுமையான அது ஏன் நடக்கிறது என்பதுதான்.” என்றார் முருகேசன்.

“காந்தியை ஏன் கொன்றான்?”

“அதற்கு முன்னால் அமெரிக்காவில் ஆப்ரகாம் லிங்கனை சுட்டுக் கொன்றான். அவனை நாடக அரங்கத்தில் கொன்றவன் ஒரு நடிகன்தான். அவன் சொன்னான் ‘இந்தக் கொலைக்காக நான் ஒன்றும் வருத்தப்படவில்லை.’ என்று. அதான் மனிதன். எப்படிப்பட்ட அயோக்கியன். லிங்கன் என்ன சொன்னார்; ‘இன்னொரு மனிதனை அடிமையாக வைத்துக்கொள்ளாதே’ என்று.

‘அமெரிக்க ஜனாதிபதி ஜான் எப்.கென்னடிக்கு எதிராக சதிவேலைகள் நடப்பது தெரிந்து இருந்தது. உளவுத்துறை அதிகாரிகள் அவரை சுற்றுப்பயணம் போக வேண்டாம் என்றார்கள். அப்பொழுது அவர் சொன்னார். ‘என் உயிரை எடுக்க ஒருவன் துணிந்து, தன் உயிரை இழக்கத் தயாராகிவிட்டால் உலகத்தில் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது’ என்றார்.

“முட்டாள், சாவைத் தேடிக்கொண்டான்.”

“சாவுதான் பலரை வாழ வைக்கிறது.”

“நான் சாவை கொண்டாடுகிறேன். யாருடைய சாவு என்பது இல்லை. அது நல்லதுதான்”

“சாவு நல்லதா, கெட்டதா என்பது பிரச்னை இல்லை. சாவு ஏன் ஏற்படுகிறது என்பதுதான்.”

“அது பிரச்னையே இல்லை. கோவலன் கொலை செய்யப்பட்டது யாருடைய பிரச்னை. அவன் வாழத் தகுதியானவனா? கட்டின மனைவியை விட்டுவிட்டு ஒரு டான்ஸ்காரியோடு பதினைந்து பதினாறு ஆண்டுகள் குடும்பம் நடத்திவிட்டு, ஒரு பெண் பிள்ளையைப் பெற்று மணிமேகலை என்று பெயர்வைத்து சீராட்டி பாராட்டிக் கொண்டிருந்தவன், திடீரென்று என்னவோ நினைத்துக்கொண்டு வீட்டிற்கு ஓடிவருகிறான். சொத்தெல்லாம் போய்விட்டது. மானம் போய்விட்டது. இனி புகாரில் தலை காட்டமுடியாது. ‘வா... மதுரைக்குப் போய் வாணிபம் செய்து பிழைக்கலாம்’ என்று கண்ணகியை கையைப் பிடித்து ராத்திரியோடு ராத்திரியாக இழுத்துக்கொண்டு ஓடுகிறான். அப்படிப்பட்ட கோழையைக் கொன்றது சரிதான். அவன் இருந்தால், அந்தப் பெண் இந்த முட்டாளிடம் இன்னும் என்னென்னவோ பாடெல்லாம் பட்டிருப்பாள்.” என்றேன்.

“ராஜா, சிலப்பதிகாரம் பற்றி ஒரு புதிய பார்வையைக் கொடுக்கிறார். ஆனால் அவர் சாவு சரி என்றும், அது கொண்டாடக்கூடியது என்பதுதான் எனக்குச் சரியாகப் படவில்லை. சாவு ரொம்ப தவறு. அதுவும் நமக்கு ஒருவனைச் சாகடிக்கும் உரிமை இல்லை” முருகேசன்.

“நீங்கள் ரொம்ப குழப்பத்தில் இருக்கிறீர்கள். எதையும் சட்டத்தின்படி பார்க்க வேண்டும். நீதி, தர்மம், பண்பாடு, மனிதாபிமானம், நல்லது, கெட்டது, சொர்க்கம் என்று எல்லாம் பார்க்கக்கூடாது. சமூகம் என்றால் ஒரு ஒழுங்கில் இருக்க வேண்டும். ஒழுங்கை சட்டந்தான் கொண்டுவரும். சட்டம் என்றால் தண்டனையால் நிலை நாட்டப்படுவது. தண்டனையே சாசுவதமான அமைதியை ஏற்படுத்தும். எனவேதான் தண்டனை அவசியம் என்று சட்டம் சொல்கிறது.”

“இது நல்லதுதான்” என்றார் ரகுராம் ரெட்டி.

“இதுபற்றி ரொம்ப கவனமாக யோசித்தவன் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பாபிலோனியா என்ற நாட்டை ஆண்ட ஹம்முராபி என்ற மன்னன். பாபிலோனியாதான் ஈரான், ஈராக் பகுதிகள். கடவுள் தன்னிடம் அதிகாரம் கொடுத்ததாகச் சொல்லி இருநூற்று எண்பத்து ரெண்டு சட்டவிதிகளை கல்வெட்டில் செதுக்கி வைத்திருக்கிறான். ரொம்ப விவேகமான மன்னன். தானே சொல்வதாகச் சொன்னால், மன்னன் ஆனாலும் மூட மக்கள் கிளர்ந்தெழுந்து போராட்டம், மறியல் செய்வார்கள்

என்பதால் கடவுள்மீது போட்டுவிட்டான். அதோடு பெரிய கருங்கல் பாறையில் கடவுள் சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டு தன்னிடம் ஒரு செங்கோலை கொடுப்பதாக சிற்பம் செதுக்கி வைத்திருக்கிறான். கடவுளிடம் இருந்து செங்கோலை நின்றுகொண்டு வாங்கிக் கொள்கிறான். கடவுள் சிம்மாசனத்தின் கீழேதான் சட்டமும் தண்டனையும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.''

''எங்கே படித்தீர்கள்?''

சீனியர் வக்கீல் எல்லோரையும் ஒரு பார்வைப் பார்த்தார். ஒரு குவளைத் தண்ணீர் குடித்துக்கொண்டார். இங்கிலாந்தில் நடைபெற்ற 'சட்டமும் மக்களும்–' என்ற கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்றேன். சென்னையில் இருந்து பார் கவுன்சில் என்னை மட்டுந்தான் தேர்ந்தெடுத்து அனுப்பியது. டிக்கெட்டை கொடுத்து மற்ற செலவுகளையும் ஏற்பதாகச் சொல்லியது. நான் தனியாகப் போகவேண்டாமே என்று என் பெரிய மகளையும், மருமகனையும் துணைக்கு அழைத்துக்கொண்டு சென்றேன். கான்பிரன்ஸ் மூன்று நாட்கள்தான். என்னுடைய கட்டுரைக்கு நல்ல வரவேற்பு இருந்தது. நான் ஹம்முராபி, அர்த்த சாஸ்திரம், மனுநீதிசோழன், திருவள்ளுவர், சிலப்பதிகார பாண்டியன் நெடுஞ்செழியன், அவனிடம் வழக்குரைத்த கண்ணகி பற்றியெல்லாம் மேற்கோள்காட்டி, மக்கள் நீதியே மகேசன் நீதியென்று முடித்தேன்.''

''இது புதிதாக இருக்கிறது?''

''மனிதனுக்குத்தான் நீதி. மனிதனை முன் நிறுத்தியே நீதியைக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் என் கட்டுரையின் அடிப்படை. அதனைப் புரிந்துகொண்டார்கள். நான் கடைசியாகச் சொன்னேன், 'உங்கள் நாட்டு, பாபிங்டன் தாமஸ் மெக்காலே பெரிய அறிவாளிதான். அவன் ஐரோப்பிய சிந்தனையை ஹம்முராபி, சாக்ரடீஸ், பிளோட்டோவையொட்டி பயணப்பட்டிருக்கிறான். உலகத்தில் ஒரே மனிதன் வாழ்கிறான் என்றாலும் அவன் ஐரோப்பிய மனிதன் மட்டும் இல்லை. அவன் ஆப்பிரிக்காவில் தோன்றிய கருப்பு தோலுடையவன். அவன் பழுப்பு நிறம் கொண்டவன், அறிவு, நேர்மை, நீதி என்பது தோலின் நிறம் பெற்றது இல்லை என்றாலும் அம்மாதிரியான நிறம் கொண்டவர்களின் சிந்தனை மரபையும் கவனத்தில் கொள்ளவேண்டும்,'' என்றேன். அதற்கு கிழக்கு நாட்டு பிரதிநிதிகளைவிட, மேற்கத்திய நாட்டினர் பெருமளவில் வரவேற்பு தெரிவித்தார்கள்.

“அறிவுச் செல்வம் உடையோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு” என்றேன்.

என்னைப் பார்த்து வக்கீல் ஒரு சிரிப்பு சிரித்தார்.

“அடிக்கடி உங்களை கிளப்பில் பார்க்கிறேன். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?”

“அவரா, சுகஜீவி” என்றார் முருகேசன்.

“இப்படித்தான் வாழவேண்டும்” என்றபடி எழுந்து என் முன்னே வந்து நின்று கையைப் பிடித்துக் குலுக்கினார். நான் பரபரக்க எழுந்து நின்றேன்.

“இந்த சுக ஜீவனத்தை விட்டுவிடாதீர்கள். உட்காருங்கள். உங்கள் முன்னே உட்கார்ந்து பேசுவது பெரிய கௌரவம்”

“அப்படி எல்லாம் சொல்லக்கூடாது”

“நான் ஒரு சம்பவம் சொல்கிறேன். மகா அலெக்சாண்டர் மகா ராஜாவானதும் எல்லோரும் அவனைப்போய் பார்த்துப் பேசி என்னென்னவோ பரிசுகள் எல்லாம் வாங்கிக்கொண்டு வந்தார்கள். மகாராஜாவானாலும், மனிதன் அற்பன்தான். தன்னைப் பார்த்துப் புகழ்ந்து பாராட்டியவர்களைவிட, யார் எல்லாம் வந்து தன்னைப் பார்க்கவில்லை என்ற கணக்கு அவர்களிடம் எப்போதும் இருக்கிறது. அதில் யாரெல்லாம் பார்த்திருக்க வேண்டும் என்ற குறிப்பும் இருக்கிறது. அலெக்சாண்டர் தன்னை வந்து பார்க்காத, புகழ்ந்து பேசாத ஆள்களின் பட்டியலைப் பார்த்தான். அதில் முதல் ஆளாக டையோனீஸஸ் இருந்தார். அவர்தான் கிரேக்கத்திலேயே பெரிய தத்துவஞானி. பிளேட்டோவைக்கூட மதிக்காதவர். ஆனால் அவரால் ஒவ்வொருவரும் மதிக்கப்படவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அதில் அலெக்சாண்டரும் இருந்தான்.”

“நியாயந்தானே?”

“அலெக்சாண்டர் கொஞ்ச நாட்கள் பொறுத்துப் பார்த்தான். டையோனீஸஸ் அரண்மனைப் பக்கம் வரவில்லை. அது ஊர் மக்களின் பேச்சில் அடிபட்டது. அலெக்சாண்டர் காதுக்கும் எட்டியது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்க அவன் நேராக டையோனீஸஸை நேரில் சந்திக்கச் சென்றான்.”

“இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததை எல்லாம் நடந்தமாதிரியே எழுதி வைத்து இருக்கிறார்களா?” என்று கேட்டார் ரகுராம் ரெட்டி.

“அப்படியே எழுதி வைத்து இருக்கிறார்கள். அலெக்சாண்டருக்கு உற்ற துணையாக இருந்த தளபதி பிளனி ¬டா¤கூட எழுதி வைத்து இருக்கிறான். அலெக்சாண்டர் சாகும்போது சொன்ன சொல்லைக்கூட குறித்து வைத்திருக்கிறார்கள். குறிக்கப்பட்டதால்தான் எல்லாம் இருக்கிறது. நான்கூட ஏழுவயதில் இருந்து டைரி எழுதிக்கொண்டு வருகிறேன்.”

“நீங்கள் அலெக்சாண்டர்.”

“எங்கேயும் ரொம்பதூரம் போய்விட மாட்டேன். அலெக்சாண்டரைப்பற்றி சொன்னதும், பிரான்ஸ்க்குப் போய் லூவர் மியூசியத்திற்கு சென்று ஹம்முராபியைப் பார்த்ததும் சொல்லுறேன்.”

எல்லோரும் அவர் மூஞ்சியையே பார்த்துக்கொண்டு இருந்தோம்.

“அலெக்சாண்டர் தன்னுடைய மெய்க்காப்பாளர்களோடு டையோனீஸஸைப் பார்க்கச் சென்றான். அது காலைப்பொழுது. ஞானிக்கு வீடு வாசல் எல்லாம் கிடையாது. ஒரு பெரிய குழாயில் குடியிருந்தான். தன் மெய்க்காப்பாளர்களை சற்றுத் தொலைவில் நிறுத்திவிட்டு அலெக்சாண்டர் முன்னே சென்று டையோனீஸஸ் பக்கத்தில் நின்றான். ஞானி இவன் பக்கம் திரும்பவில்லை. தனக்குத்தானே பேசிக்கொண்டு ஆனந்தமாகக் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். அலெக்சாண்டர் கொஞ்ச நேரத்தில் ஞானி பார்வை படுமென்று பார்த்தான். ஆனால் அவர் இவனை நிஜமாகவே பார்க்கவில்லை. கடைசியாக பொறுமை இழந்து, கனைத்து அவர் கவனத்தைத் தன் பக்கம் திருப்பி, “அலெக்சாண்டர் வந்து இருக்கிறேன்” என்றான்.

“யார்?”

“மகா அலெக்சாண்டர். கிரேக்க மன்னன்?”

“சரி”

“உங்களுக்கு என்ன வேண்டும்; என்னால் எல்லாம் கொடுக்க முடியும்”

“வெயிலை மறைக்காதே. தள்ளி நில்.”

“டையோனீஸஸ் பதில் கேட்டு அலெக்சாண்டர் திகைத்துப் போய்விட்டான். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, “நான் அலெக்சாண்டராக இல்லாது போனால், டையோனீஸ்ஸாகவே இருக்க ஆசைப்படுகிறேன்” என்றான். இதுதான் அலெக்சாண்டர் பற்றி அடிக்கடி சொல்லப்படுகிற கதை. இதை எங்கள் தாத்தா சாம்பசிவ ஐயர் சொல்வார். அவர் பெரிய சொந்த நூலகம் வைத்துக்கொண்டிருந்தார். அதில் சட்டப்புத்தகங்களைவிட சரித்திரம்தான் அதிகம். அவர் லத்தீன், சமஸ்கிருதம் அரபு படித்திருந்தார். முகமதிய லாவில் பெரிய ஆள். அவரை துலுக்க வக்கீல் என்றுதான் செல்லமாகக் கூப்பிடுவார்கள்” என்று தண்ணீரை எடுத்துக் குடித்தார். கிளாஸை மேசைமீது வைத்துவிட்டு, கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

“தண்ணீர் குடிப்பதை என் பாட்டி அலமேலு அம்மாதான் எனக்குச் சொல்லி கொடுத்தாங்க. தொன்னூற்று இரண்டு வயது வரையில் கண்ணும் தெரிய, காது கேட்க இருந்தாங்க. டைரி எழுதிக்கிட்டு வந்தாங்க, தமிழ் கையெழுத்து சுத்தமாக இருக்கும். புத்தகம் எல்லாம் படிப்பாங்க. புதுச்சேரி துபாஷி ஆனந்த ரங்கப்பிள்ளை டைரியைப் பற்றி கேள்விபட்டு, சங்கரா, ஆனந்த ரங்கப்பிள்ளை டைரி இருக்கிறதாமே. இத்தனை நாளா தெரியாமல் போய்விட்டது’ சீக்கரமாக அந்தப் புத்தகத்தைக் கண்டுபிடித்து கொண்டுவா என்று கட்டளைப் போட்டாங்கÓ

“நான் வாங்கி வருகிறேன் பாட்டி” என்று சொல்லிவிட்டு, என் புதுச்சேரி ஜுனியர் லூயீஸ் தாமஸ் குணசேகரனிடம் விசாரித்தேன். என் மூஞ்சியைப் பார்த்துக்கொண்டே இருந்தான். பல்கலைக்கழகத்திற்குச் சென்று, பேராசிரியர் முத்து மாணிக்கனாரைக் கேட்டேன். அவர் விரிவுரையாளர் ராஜ் மனோகரனை அழைத்து, “நம்மிடம் இருக்கிறதா?” என்று கேட்டார்.

“நூலகத்தில் இருக்கும் சார்”

“சாருக்கு வேண்டுமாம். பெரிய வக்கீல். அவர் படிக்கக் கேட்கிறார். அதுவே பெரிய காரியம். என் பெயரைச்சொல்லி வாங்கி வா.”

“நான் அப்புறம் வரட்டுமா?”

“பத்து நிமிடம். உங்களைப் பற்றி ராமலிங்கம், ரொம்ப சொல்லி இருக்கிறார். அவர் வழக்கை நீங்கள்தான் திறமையாக வாதாடி வெற்றி பெற்றுக் கொடுத்ததாகச் சொல்லிக்கொண்டே இருந்தார்.”

“வழக்கு அவருக்கு சாதகமாக இருந்தது. அவர்மீதான குற்றச்சாட்டுகளில் வலுவே இல்லை. அதனால்தான் ஜெயிக்க முடிந்தது. அதில் என் திறமை என்பது அதிகம் இல்லை. ஆமாம் எங்கே இருக்கிறார்.”

“பாவம், போன மாதம் போய்விட்டார். கேன்சர்.”

“அடிப்படையில் என் நல்ல மனிதர். ஒருநாள் திருவாசகம் பாடிக் காட்டினார். நான் வீட்டிற்கு அழைத்துப் போய், பாட்டி முன்னே பாட வைத்தேன். பாட்டி கண்களில் இருந்து கண்ணீர் கரை புரண்டோடியது. ஐநூறு ரூபாய் எடுத்து வந்து கொடுத்தார். ‘நீங்கள் கேட்டது என் பாக்கியம்’ என்று சொல்லி பாட்டி காலில் விழுந்து ஆசீர்வாதம் கேட்டார். பணத்தை கையில் தொடவே இல்லை. ரொம்ப வித்தியாசமானவராகத்தான் இருந்தார்.”

“பணியிலும் அப்படித்தான்.”

“ராஜ் மனோகரன் மூன்று பெரிய பெரிய சிவப்புப் புத்தகங்களோடு வந்தார். நான் இவ்வளவு சுலபமாகக் காரியம் முடிகிறதே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டு பேராசிரியரைப் பார்த்தேன். ராஜ் மனோகரன் புத்தகங்களை பேராசிரியர் முன்னேவைத்து, “ஐயா இங்கிலீஷ்தான் இருக்கிறதாம். தமிழ் இல்லையாம்.” என்றார்.

“என்ன தமிழ் இல்லையா? யாராவது எடுத்துக்கொண்டு போய் இருக்கிறார்களா?”

“நம் பல்கலைக்கழகத்தில் வாங்கவே இல்லை என்று லைப்ரரியன் சொன்னார்.”

“இது ரொம்ப நல்லா இருக்கிறது. யார் வெளியீடு என்று பார். இரண்டு செட் வாங்கி வைத்து விடுவோம். அவசியம் இருக்க வேண்டிய புத்தகங்கள் எல்லாம் நம்மைவிட்டுப் போய்விடுகின்றன.”

நான் தலையசைத்தேன்.

“இங்கிலீஷ் எடுத்துக்கொண்டு போங்கள்”

“இல்லை. பாட்டிக்கு!”

“அடுத்த வாரம் வாருங்கள். நான் போன் பண்ணுறேன். கார்டு கொடுங்கள். மாணவர்களிடம் வீட்டிற்குக் கொடுத்து அனுப்புகிறேன்.”

நான் கார்டை எடுத்துக் கொடுத்தேன். “நான் நீதிமன்றம் போய் வர வழிதான். ஒன்னும் சிரமம் இல்லை. நானேம் வாங்கப் பார்க்கிறேன்” என்று எழுந்தேன்.

“பல்கலைக்கழகத்தில் ஆனந்த ரங்கப்பிள்ளை டைரி கிடைக்கவில்லை.”

“திலீப்குமார் என்பவரிடம் சொன்னேன். அவர் ஒரு வாரத்தில் கூரியரில் அனுப்பி வைத்தார். இரண்டாயிரம் ரூபாய்கூட ஆகவில்லை.”

“தமிழ்ப்புத்தகங்கள் விலை மலிவு.”

“வக்கீல் சார், லூவர் மியூஸியம் போனது பற்றிச் சொன்னீர்கள்”

“நம் முருகேசன் மாதிரி ஒரு ஆள் எப்போதும் கூட்டத்தில் இருக்க வேண்டும். அவர்கள்தான் படகில் சுக்கான் மாதிரி. இப்படி அப்படி போகும்போது சரியான திசையில் போக திருப்பிவிடுவார்கள்”

“நம்மை ஒன்றும் இல்லாதவன் வரிசையில் சேர்த்துவிட்டீர்கள்?”

“இல்லை இல்லை நீங்கள்தான் முதல். மணி என்ன ஆகிறது”

“ஒன்பதரை?” என்றார் ரகுராம் ரெட்டி.

“பத்து மணிக்கு எல்லாம் நான் புறப்பட வேண்டும். அதோடு நிலைமை வேறு சரியில்லை. வீட்டில் சாவு ஏற்பட்டால் வருத்தம் அடைகிறார்கள். நாட்டில் சாவு ஏற்பட்டால் கலவரம் செய்கிறார்கள். எம்.ஜி.ஆர் மரணமுற்றபோது பெரிய கலவரம் நடைபெற்றது. நான் வழியில் மாட்டிக் கொண்டேன்.”

“இந்திராவிற்கு கலவரம் ஏற்படுமா?”

“ஏற்படக்கூடாது. அவர் பெரிய தலைவர். அவரின் இழப்பு மனத்தை நோகடிக்கிறது. நம் துக்கத்தை ஆற்றிக்கொள்வது கஷ்டந்தான். ஆனால் ஆற்றிக்கொள்ளத்தான் வேண்டும்.”

“நீங்கள் சொல்வதுதான் சரி.”

“புத்தர் குசிநாரா என்ற ஊழல் பரிநிர்வாணம் அடையும் முன்பு ஆனந்தனிடம் சொன்னார். மகா அவர்தான் புத்தனின் பிரதான சீடர். அவர் ஞானம் பெற்று உபதேசம் புரிய ஆரம்பித்தபோது வந்து சேர்ந்தவர்

நாற்பதாண்டு காலமாகக்கூடவே இருக்கிறவர். தனக்கு இறுதி வந்துவிட்டது என அறிந்து அவனிடம் சொன்னார்: ‘ததாகதர் மகா பரிநிர்வாணமடைந்து விட்டாரே, என்று அழுது புலம்பாதே. உனக்கு யாரும் வழி காட்ட முடியாது. உனக்கு நீயே ஒளியாகவும் விளக்காகவும் இரு’ என்று.”

“நல்ல உபதேசந்தான்”

“அதனால்தான் அவர் புத்தர்”

வக்கீல் எழுந்தார்.

“என்ன சார்?”

“எனக்கு மனசு சரியில்லை. உங்களிடம் பேசிக்கொண்டு இருக்கும்போதே மனம் ரொம்ப வேதனைப்பட்டுக்கொண்டு இருக்கிறது. நான் என்னவோ அதிகமாகப் பேசிவிட்டது மாதிரி இருக்கிறது. எல்லோரும் சாப்பிடப் போங்கள்” என்று வேகமாக வெளியே செல்ல ஆரம்பித்தார்.

“சாவு என்பது பெரிய கஷ்டம். அதுவும் இப்படி நேர்ந்து இருக்கக்கூடாது.” என்றார் ரகுராம் ரெட்டி.

நான் ஒன்று சொல்லாமல் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தேன். துக்கம் என்பது வெளியில் சொல்லக்கூடியது என்பதற்கு அப்பால் வெளியில் சொல்ல முடியாததுதான். அதற்கு உருவம், வடிவம் எல்லாம் கிடையாது. ஆனால் அழவைக்கும். கண்களில் இருந்து கண்ணீரை உருள வைக்கும். உணவு, உறக்கத்தைப் பறித்து பதறவைக்கும். துக்கத்திற்கு இணை துக்கந்தான். எத்தனைத்தான் சாவைப் பார்த்து இருந்தாலும் –கேட்டிருந்தாலும் ஒவ்வொரு சாவும் புது சாவுதான். தனிமை, சாவை அதிகமாக உணரவைப்பதுபோல இருந்தது.

நான் அறைக்குச் சென்று படுத்தேன். சாப்பிடத் தோன்றவில்லை. மனம் சோர்ந்து போய்விட்டது. அறைக்குள் வந்து அப்படியே படுத்துவிட்டேன். தூக்கம் வரவில்லை. ஜன்னலைத் திறந்து வைத்துக்கொண்டு தொலைவில் தெரியும் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மனம் குடைந்துகொண்டிருந்தது. எழுந்து உட்கார்ந்துகொண்டு இருந்தேன். கொஞ்ச நேரம் கழிந்து தண்ணீர் குடித்தேன். உடம்பிலே இருந்து அலை வீசுவதுமாதிரி, அனல் வீசுவதுமாதிரி இருந்தது. நான் என்னையே இழந்து கொண்டிருந்தேன்.

கண்களுக்கு முன்னால் எல்லாம் கழன்று கொண்டிருந்தது. தலையணையை எடுத்து சாய்த்துக்கொண்டு பழைய பேப்பரைப் படித்தேன்.

★

## அத்தியாயம் 7

காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்துவிட்டேன். இரவு தூங்கினேனா என்பது தெரியவில்லை. பல நாட்கள் விழிப்பு, தூக்கம் என்பது தெரியாமல் போய்விடுகிறது. எது தூக்கம், எது விழிப்பு என்பது தெரியவில்லை. சம்பந்தம் சம்பந்தமில்லாத நினைவுகள் எல்லாம் வருகின்றன. ஒரு நேரத்தில் குதிரைமீது உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன். கருப்பு குதிரை. கொள்ளிடம் ஆற்றைத்தாண்டி வேகமாக ஓடுகிறது. கரைமீது ஓடிய குதிரை கீழே இறங்கித் தண்ணீரில் ஓடியது. தரையில் ஓடியதைவிட தண்ணீரில் வேகமாக ஓடியது. குதிரை ஓடஓட தண்ணீர் தானாக விலகி வழிவிட்டது. கொஞ்ச தூரம் ஓடியது. மேலே எழும்பிப் பறக்க ஆரம்பித்தது. மேலே பறக்கும்போது குதிரையின் இரண்டு பக்கமும் வெள்ளை இறக்கைகள் முளைத்து விட்டன, குதிரை தரையில் ஓடியதைவிட வேகமாகப் பறந்தது. மேகக்கூட்டத்தில் புகுந்து மேலே மேலே சென்றது. பறப்பது ஓர் ஆனந்தமென்றால் மேகக்கூட்டத்தில் புகுந்துபோவது பேரானந்தமாக இருந்தது. குதிரையில் இருந்து எழும்பி, முன்னே தாவினேன். குதிரை கீழே இறங்கியது. அதன் இறக்கைகள் முறிந்து விழுந்து கொண்டிருந்தன. நான் மேலே போய்க்கொண்டே இருந்தேன். மலையில் இறங்கி கீழே வந்தேன். நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. சந்தனம் மணத்தது. ஐநூறு, அறுநூறு பேர்கள் மௌனமாக தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்தார்கள்.

“ஆனந்தா! அழாதே! ததாகதர் மகா பரிநிர்வாணம் அடைந்துவிட்டார். ஆனால் அவர் இல்லாமல் போகவில்லை. அவர் சொன்னபடி வாழ்ந்தால் நம்முடனே இருப்பார்.” என்றார் மகா காசியபர். நான் ஆனந்தன் பக்கம்போய் நின்றுகொண்டேன். அவர் நிமிர்ந்து என்னைப் பார்த்தார்.

அது நினைவா? கனவா? எனக்குச் சரியாகச் சொல்ல முடியவில்லை. கனவு என்பது இல்லை என்றுதான் சொல்லவேண்டும். எல்லோரும் தங்கள் நினைவுகளில்தான் வாழ்கிறார்கள். நினைவிற்கு கனவு என்று பெயர் வைத்திருக்கிறார்கள். சாவும், வாழ்வும் என்று சொல்வதுமாதிரிதான்.

ஐராவதம் சொல்வார்: “சாவு பற்றி ஒன்றும் தீர்மானமாகச் சொல்லக்கூடாது. ஏனெனில் அது நல்லதோ கெட்டதோ இல்லை. அது

ஒரு நிகழ்வு. எப்பொழுது நடக்க வேண்டுமோ அப்பொழுது நடக்கிறது. அவ்வளவுதான் அதன்மீது நாம் ஒன்றும் அபிப்பிராயம் சொல்ல முடியாது. ஏனெனில் அபிப்பிராயம் என்பதற்கு அர்த்தம் கிடையாது'' என்று.

ஐராவதம் சாலையில் நடக்கும்போது சாவு எடுத்து கொண்டுபோனால் கால் செருப்பைக் கழட்டிப் போட்டுவிட்டு, ஓரமாக நின்று கையெடுத்துக் கும்பிடுவார். அது அவர்க்குச் சொந்தமாகவோ, நண்பராகவோகூட இருக்க மாட்டார்கள். அந்த முகத்தைக்கூட அவர் பார்த்திருக்க மாட்டார். ஆனால் உண்மையான இரக்கத்தோடு, 'புனிதமான ஆத்மா போகிறது' என்று முணுமுணுப்பார்.

நான் ஒருநாள், 'எப்படி இப்படிச் சொல்ல வருகிறது' என்று கேட்டேன். அவர் மூக்குக் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக் கொண்டு, 'வா காபி சாப்பிட போகலாம்' என்று எழுந்தார். நான்கூடவே நடந்தேன். சிறிது தூரம் சென்றதும், 'நேற்று கணபதியைப் பார்த்தேன். அவன் உன்னைப் பற்றி ரொம்ப விசாரித்தான். ஜபல்பூரில் இருப்பதாகச் சொன்னான். நல்ல ஊர். நல்ல மனிதர்கள். ராஜாவை அழைத்துக்கொண்டு வாருங்கள் நாலு நாட்கள் என் வீட்டில் தங்கி இருந்துகொண்டு ஊரெல்லாம் பார்க்கலாம். பெரிய வீடு' என்றான்.

"அப்படியா?"

"என்ன சொரத்தே இல்லாமல் கேட்கற"

"பின்ன?"

"என்ன சொல்லு?"

"பதினைந்து நாட்களுக்கு முன்னால் சுந்தரமோகன் காலையில் கிளப்பிற்கு வந்தான். நான் காபி குடித்துக்கொண்டு பேப்பர் படித்துக்கொண்டிருந்தேன். ஒரு நிமிஷம் என் முன்னால் நின்றுகொண்டே இருந்தான். அப்புறம், "சார், கணபதி செத்து போயிட்டான். எடுக்கணும். ஒரு ஆயிரம் ரூபாய் கொடுங்கள்!" என்றான். நான் ஒன்றும் பேசாமல் ஐநூறு ரூபாய் எடுத்துக்கொடுத்தேன். அவனும் ஒன்றும் பேசாமல் போய்விட்டான்."

"கணபதியா செத்ததாகச் சொன்னார்?"

"மகா கணபதி"

“நான் ஆயிரம் ரூபாய் கொடுத்தேன்”

“அவனும், இவனும் சாகற ஆளில்லை, என்றும் ஜீவிக்கிற பரமாத்மாக்கள்”

ஐராவதம் ஒன்றும் சொல்லவில்லை.

நான் ஒரு ஆட்டோ பிடித்து, வாலாஜாசாலை வழியாக கடற்கரைச் சென்று உழைப்பாளர் சிலை பக்கத்தில் இறங்கினேன். பல்கலைக்கழகக் கடிகாரம் ஓடாமல் நின்றுகொண்டிருந்தது. காலம் உறைந்து விட்டதுபோல இருந்தது. நான் படிக்கட்டு வழியாக கீழே இறங்கி நடைப்பயிற்சிக்கென்று கடல் மணல் பரப்பில் போடப்பட்டு இருக்கும் தார்சாலையில் கையை வீசிக்கொண்டு, மகாத்மா காந்தி சிலையை நோக்கி நடந்தேன். சென்னைக்கு வந்தால் நடப்பேன். எனக்கு நடை பிடிக்கும். எனக்காகத்தான் நடக்கிறேன். நடக்கச் சொல்லி எனக்கு டாக்டர் யாரும் ஆலோசனை சொல்லவில்லை. நடக்கும்போதே மொ¦னா சாலையையும் – நடைப்பயிற்சி பாதையையும் பார்த்துக்கொண்டேன். கண்ணகி சிலையைத் தாண்டும்போது கூட்டம் குறைவாக இருப்பது தெரிந்தது. வழக்கமாக வரும் சில தலைகள் தெரியவில்லை. நான் முன்னே நடந்தேன். எதிரே ஐந்தாறு பேர்களோடு வந்த சுப்பையா, “செய்தி தெரியும் இல்ல?” என்று கேட்டார். தலையசைத்தேன்.

“நான் அழுது புலம்பித் தீர்த்துவிட்டேன். எங்கள் அம்மா செத்த அன்னைக்கிக்கூட இப்படி அழவில்லை” என்றார்.

“நீங்கள் தீவிர ஆதரவாளர்”

“வெறி பிடித்த பக்தன்”

“ஆமாம்”

“அவ்வளவுதான். எல்லாம் நாசமாகப் போயிடுச்சி” என்று சொல்லிக்கொண்டே நடக்க ஆரம்பித்தார். நான் முன்னே ஓரடி எடுத்துவைத்தேன். குதிரைமீது சீருடை அணிந்த இரண்டு போலீஸ் காரர்கள் வந்துகொண்டு இருந்தார்கள். நான் அவர்களுக்கு வழிவிட்டு கடலைப் பார்த்தேன். கடலில் சூரியன் தொலைவில் உதயமாவது பளிச்சென்று தெரிந்தது. இரண்டு மீனவர்கள் கட்டு மரங்களை கடலில் இறக்கிக்கொண்டிருந்தார்கள். காக்கைகள் கூட்டமாகப் பறந்து கண்ணகி சிலைக்குப் பின்னால் இருக்கும் கழிப்பறைப் பக்கத்தில் உட்கார்ந்தன.

நான் காந்தி சிலையை நோக்கிச் சென்றேன். பல்கலைக்கழக மெரினா வளாகத்தின் எதிரில் ரங்கன் என்னும் ரங்கராஜன் வந்தார். அவர் தலைமைச் செயலகத்தில் பொதுப்பணித்துறையில் செயற்பொறியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி தெருவில் பிளாட் வாசி. ஸ்ரீரங்கம் சொந்த ஊர். பல ஊர்களில் வேலை பார்த்துவிட்டு எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் திருவல்லிக்கேணி வாசியாகிவிட்டார். எம்பெருமான் திவ்விய தரிசனம் கிடைக்கிறது என்று பார்க்கும் போதெல்லாம் சொல்வார். அவர் குளித்து, நெற்றியில் திருமண் இட்டுக் கொண்டுதான் நடைபயிற்சிக்கே வருவார்.

நான்தான் அவரை முதலில் பார்த்தேன்.

“எம் பெருமானே” என்றேன்.

“அட ராஜாவா. இந்த அநியாயத்தைப் பார்த்தீயா? சகிக்க முடியலே.” என்றார்.

நான் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். “நேற்று கும்பகோணம் போய் இருந்தேன். தில்லியில் இருந்து கேசவன் போன் பண்ணினான். காரை அப்படியே திருப்பிக்கொண்டு வந்துவிட்டேன். என்னைவிட சம்சாரம் ரெங்கநாயகி ரொம்பப் பதறி போய்விட்டாள். அவ அப்பா தியாகி இல்லையோ”

“ஆமாம், வீட்டில் பெரிய படம் பார்த்து இருக்கிறேன்.’

“இப்படி ஒரு சாவு வந்திருக்கக்கூடாது”

“சரிதான்”

“காபி சாப்பிட்டியா?”

“சாப்பிடணும்”

“வா போகலாம்!”

“நடை”

“ஒருநாள் நடக்காவிட்டால் உயிர் ஒன்றும் போய்விடாது.”

நாங்கள் நடந்தோம்.

“நீ ராத்திரி சரியா தூங்கினீயா?”

“ஏன்? எதற்கு?”

“உன் மூஞ்சியிலே தெரியுது. அது தூக்கம் இல்லாததால் இல்லை. மனக் கஷ்டம். அது எனக்குத் தெரிகிறது. வா, அம்பாள் கபேயில் டிகிரி காபி சாப்பிடலாம்”

“இல்ல கொஞ்சம் நடக்கலாம்”

“ராஜா. உனக்கு உடம்பு சரியில்ல. முதல்ல காபி சாப்பிடலாம். அப்புறம் நம்ப டாக்டர் மைத்ரியைப் பார்த்துவிடலாம். அவள் ஆஸ்பத்திரி போறதுக்கு முன்னாடி முக்கியமானவர்களைப் பார்க்கிறாள்.”

“நான் ரொம்ப நல்லா இருக்கிறேன். எனக்கு ஒன்னும் இல்ல.”

“சரி, என்கூட காபி சாப்பிட வா”

நானும், ரங்கனும் நடந்து மேலே வந்தோம். ஆட்டோ பிடித்து அம்பாள் கேப்க்குப் போகும்போது, வழியில் “ஆமாம், ராத்திரி எங்கே தங்கி இருந்தே?” என்று கேட்டார்.

“கிளப்புலதான்”

“தூங்கினியா?”

“தெரியல. மனசுக்கு கஷ்டமாக இருந்தது. அதே நினைப்பு.”

“ராஜா, உனக்குத் தெரியாதது இல்லை. ஆனாலும் சொல்கிறேன். மனசை எப்பவும் ‘கமகம’வென்று மணக்க வைத்துக்கொள்ள வேண்டும். அதில் சந்தோஷம் பூத்துக்குலுங்க வேண்டும். துன்பம் கஷ்டம் என்ற வாடை அடிக்கவிடக்கூடாது. செத்தால் சவம் என்று தூக்கிக்கிட்டு ஓடிப்போய் கொளுத்தி கரைத்துவிட்டு தண்ணீரில் தலைமூழ்கிவிட்டு வந்து சாப்பிட்டுவிட்டு படுப்பது மாதிரி வைத்துக்கொள்ள வேண்டும். நம் முன்னோர்கள் எல்லாம் தெரிந்து அறிந்துதான் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.”

நான் தலையசைத்தேன்.

“தெருவில் எத்தனையோ நடக்கிறது. கெட்ட நாற்றம் அடிக்கிறது. நாம் என்ன செய்கிறோம். வீட்டில் ஜவ்வாது மணக்கவிட்டு, சந்தனம் வாரி

இறைத்து, தாழம்பூ ஊதுபத்தி ஏற்றிவைத்து கெட்ட வாசத்தைத் துரத்தியடித்துவிட்டு, கதவைச் சார்த்தி கொள்வதுமாதிரி, மனக் கதவை இறுகச் சாற்றிக்கொள்ள வேண்டும்.

"உம்"

"மனக் கதவை அடைக்கத் தெரியாவிட்டால்; அடைக்க முடியாவிட்டால் பைத்தியம்தான் பிடிக்கும். சட்டையை, வேட்டியை கிழித்துக்கொண்டு தெருவில்தான் அலையவேண்டும்."

"ஆமாம்"

"எனக்கு வராத கஷ்டமா? சாவை நான் நேரில் சந்தித்திருக்கிறேன். அது என்மீது தவழ்ந்து சென்றிருக்கிறது. எம் பெருமாள்தான் என்னை விட்டுவிட்டுப் போகச் சொல்லியிருக்கிறார். அது என்னவென்று தான் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

அவர் சொல்ல வந்த கதை எனக்குத் தெரியும். பல முறைகள் புது கதைமாதிரி சொல்வார். அது சொல்லப்பட்ட, கேட்கப்பட்ட கதைதான். ஆனால் அவருக்குச் சொல்வதில் சலிப்பு ஏற்பட்டது இல்லை. கேட்பதிலும் எனக்கு வெறுப்பு ஏற்பட்டது இல்லை. அவருக்கும் தன் கஷ்டத்தைச் சொல்வதில் கஷ்டம் இல்லை. அவர் ஒரே மகன் ஏழாண்டுகளாக மனத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கிறான். செத்துப்போனதால் அவன் இல்லாமல் போய்விட்டான் என்பதில்லை என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்: 'ஸ்ரீராமபிரான் இல்லை; ஹரிச்சந்திரன் எப்படி வாழ்கிறான்? தர்மபுத்திரன் ஏன் பூஜிக்கப்படுகிறான்? கிருஷ்ண ஜெயந்தி ஏன் கொண்டாடப்படுகிறது?'

"அவர்கள் இருக்கிறார்கள்?"

"இருந்தார்கள். எனவே நினைக்கப்படுகிறார்கள். அதுதான் சிறப்பு அம்சம்." என்றார்.

"அவரது ஒரே மகன் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் பெயர் கேசவ மாதவன். 'ரங்கா' என்றுதான் கூப்பிடுவார். நல்ல படிப்பாளி. மும்பை ஐ.ஐ.டி.யில் எஞ்சினியரிங் படித்தான். அமெரிக்கா சென்று இரண்டு வருடம் மேல்படிப்பு. அலெக்சாண்டர் பெல் கம்பெனியில் நல்ல வேலை. பெரிய சம்பளம். கலிபோர்னியாவில் ஐந்து ஏக்கரில் வீடு. ஜப்பானிய பெண் முரஸாகி என்பவளைக் காதலித்தான். அம்மா பெண் பார்ப்பதற்கு முற்பட்டபோது தன் காதலை அப்பா காதில் போட்டான். நல்லது

என்று ஏற்றுக்கொண்டார். ஆனால் அவர் மனைவிதான் கொஞ்சம் முரண்டு பிடித்தாள். கறி, மீன், கரப்பான்பூச்சி, பாம்பு தின்கிறவள். வீடெல்லாம் கவிச்சி நாற்றம் அடிக்கும். என்னால் ஒருநாள்கூட இருக்க முடியாது என்று காரணம் சொன்னாள்.''

''ஸ்ரீரங்கம் தாயார் சந்நிதியில் உட்கார வைத்துக்கொண்டு, எல்லா பெண்ணும் ரங்கநாயகிதான். மருமகள் ஜப்பான் ரங்கநாயகி. நீ கொஞ்சநாளில் சொல்லப்போற, அசல் ரங்கநாயகியே மருமகளாக வந்து வாய்த்திருக்கிறாள்- என்று.''

''உங்களுக்கு ரொம்பதான் ஆசை''

''நமக்கு இந்த வயசுக்குமேலே வேற என்ன ஆசை இருக்கிறது. ரங்கா ஆசைதான் நம்முடைய ஆசை. நம் குழந்தை மனதை நோகடிக்கலாமா?''

''ரொம்ப நல்லா பேசுறேள்''

''நான் எங்க பேசுறேன். எம் பெருமான் ரெங்கநாதர்தான் பேசுகிறார்.''

''அப்பே முடிவு பண்ணிவிட்டீர்கள்?''

''நம்ம கையில் ஒரு முடிவு கிடையாது. எல்லாம் எம்பெருமான் முடிவு. ஒருமுறை மைசூர் மேல்கோட்டைக்குப் போய்விட்டு வருவோம்''

''ஸ்ரீரங்கத்துக்குமேலே ஒரு ஊர் இருக்கிறதா?''

''எம்பெருமாள் வீற்றிருக்கும் இடமெல்லாம், ஸ்ரீரங்கம்தான்''

''அந்தப் பொண்ணு போட்டோ, வீடியோ எல்லாம் பார்த்தால் நம்ம பொண்ணுமாதிரிதான் இருக்கிறது.''

அவள் அமைதியாக இருந்தாள்.

மனைவியின் மனப்பூர்வமான சம்மதத்தோடுதான் திருச்சி சங்கம் ஓட்டலில் சம்பிரதாயமாகத் திருமணம் நடத்தினார். நான் காலையில் நடைபெற்ற முகூர்த்ததிற்குச் சென்றேன். முன் வரிசையில் உட்கார்ந்துகொண்டேன். சாதாரணமாக கல்யாண சடங்கில் எல்லாம் அதிகமாகத் தலைகாட்டுகிற ஆளில்லை. கடைசியில் தலையைக்காட்டிவிட்டு, வாழ்த்தி மொய்ப்பணம் ஐநூறோ; ஆயிரமோ கொடுத்துவிட்டு வருவேன். என் பெருமான் ரங்காவிற்காக காலையிலேயே

சென்று, மந்திரம் கேட்டேன். நறுமண புகையை சுவாசித்தேன். ஜப்பானிய பெண்மணி உடையாலும் அலங்காரத்தாலும் அசல் ஆண்டாளாகவே இருந்தாள். எனக்கு நிறையாக இருந்தது. திருமணம் முடிந்ததும் ரங்கா இரண்டு கைகளையும் பற்றி நெஞ்சாரப் பாராட்டினார்.

“விருந்து சாப்பிட்டு விட்டுப்போகவேண்டும்.”

நான் கல்யாண வீட்டில் பெரும்பாலும் சாப்பிடமாட்டேன். கூட்டம், இரைச்சல், அவசர பந்தியில் என்னால் குந்தி சாப்பிட முடியாது. அது அவர்க்கு நன்றாகத் தெரியும். சில கல்யாண விருந்துகளில் என்னோடு வெளியில் வந்துவிடுவார். அவர் கையைப் பிடித்துக்கொண்டு, ‘அது சரியில்லை. எம்பெருமானே. என் பழக்கம் என்னோடு. உன் பழக்கம் உன்னோடு. உன் பழக்கப்படி திருமண விருந்துண்டு வயிறு குளிர்ந்த பின்னர் மனநிறைவாக வாழ்த்திவிட்டு தாம்பூலம் வாங்கிக்கொண்டு வா’ – என்று.

அவரோ வாழ்த்துவதில் வஞ்சகம் இல்லாதவர். என் பெருமான் மகாலட்சுமியோடு பாற்கடலில் சுகித்திருப்பதுபோல, சம்சார சுகத்தில் எப்போதும் இன்புற்று இருக்கவேண்டும் என்று உளமாற வாழ்த்திவிட்டு வருவார்.

நான் அவர் மகன் கேசவ மாதவன் முரஸாகி திருமணத்தில் விருந்து சாப்பிட்டு ஐயாயிரம் ரூபாய் மொய்யெழுதிவிட்டு மனம் நிறைந்து வாழ்த்திவிட்டு வந்தேன்.

ஆறுமாதங்களுக்குப் பிறகு ஒருநாள் ரங்கா போன் பண்ணினார். இரவு பத்துமணி இருக்கும். சாதாரணமாக அவர் இரவில் போன் பண்ணமாட்டார்.

“என்ன, எம்பெருமானே?”

“அமெரிக்காவில் கார் விபத்தில் மகனும், மருமகளும் போய்விட்டார்கள்.”

“எப்படி?”

“வால்மார்க்கெட் போய்விட்டு வந்திருக்கிறார்கள்.”

“நீ போறியா?”

“இல்லை. பாடியை அனுப்புறாங்க”

எனக்குப் பேச்சு வரவில்லை. அவரும் பேசவில்லை. மரணம் எப்படியெல்லாம் வருகிறது.

★

## அத்தியாயம் 8

இந்து பேப்பரைப் படித்துக்கொண்டிருந்தேன். மனதிற்குக் கஷ்டமாக இருந்தது. தலையை அசைத்துக் கொண்டேன். பாவிகள் இப்படி கொன்றுவிட்டார்களே என்று சொல்லிக்கொண்டேன். முதலில் இருந்து மறுபடியும் படிக்க ஆரம்பித்தேன். ‘மனிதர்களுக்கு மற்றவர்களின் கஷ்டத்தையும் துன்பதையும் கேட்பதிலும் பார்ப்பதிலுந்தான் விருப்பம் அதிகம். விழுந்து விழுந்து கேட்பார்கள். எழுதினால் மாய்ந்து மாய்ந்து படிப்பார்கள். நாடகம், சினிமா என்றால் சாவுதான் பிரதானம். சாவிலே முடித்தால் மக்கள் சந்தோஷமாகப் பார்ப்பார்கள். மூக்கைச் சிந்திக்கொள்வார்கள். கண்ணீரை துடைத்துக்கொள்வார்கள். ஆனால் துயரத்திற்குள்ளே சந்தோஷம் பூத்துக் குலுங்கிக்கொண்டே இருக்கும்’ என்று ஒருநாள் ஐராவதம் சொன்னார்.

“இது என்ன தத்துவம்?”

“எப்பொழுதும் இருக்கிற தத்துவம். கிரேக்க நாட்டில் துன்பவியல் நாடகம் என்று ஒரு பிரிவே இருக்கிறது. எத்தனைக்கு எத்தனை துக்கமான காட்சிகள், வசனங்கள் வருகிறதோ அத்தனைக்கு அத்தனை வெற்றிகரமான படைப்பு என்பது அர்த்தம்.”

நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

‘‘கலை அனைத்தும் சோக முடைத்து’ என்று காளிதாசன் சொல்லியிருப்பதாகப் படித்தேன். ஆனால் எங்கே என்பதுதான் தெரியவில்லை. அது முக்கியமல்ல. வாழ்க்கை என்பதே சோகம் உடையதுதான். சோகம் தரும் காட்சிகள், பேச்சுகள் வருத்தம் தருகின்றன என்றாலும் சுவைதான் மனத்தில் இருக்கின்றன.”

இந்து பேப்பரை மடித்து வைத்துவிட்டு தினமணியை கையில் எடுத்தேன். டெலிபோன் அடித்தது. ஒரு விநாடி டெலிபோனை பார்த்துக்கொண்டே இருந்தேன். அப்புறம் கையில் எடுத்துக்கொண்டு, “ஹலோ?” என்றேன். நன்முத்து பதிப்பகம் சிவமணி பேசினார். “சொல்லுங்க மாமா” என்று கேட்டேன்.

“நேற்று இரவெல்லாம் போன் போட்டேன்”

“கீழ இருந்துட்டேன்”

“நான் ரொம்ப பயந்து போய்விட்டேன். எங்கேயாவது போய் மாட்டிக்கொண்டு விட்டாயோ என்று”

“வெளியில் அதிகம் போகவில்லை”

“அது சரிதான்.”

“மனசுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது.”

“எப்ப ஊருக்குப் பயணம்?”

“இரண்டு மூன்று நாட்கள் கழித்துப் போகலாம் என்று பார்க்கிறேன். இன்னும் ஒன்றும் முடிவு பண்ணவில்லை.”

“அதுதான் சரி. வைத்தீஸ்வரன் போன் பண்ணினார். அவர் காலையில் டில்லி போவதாக இருந்தார். டில்லியில் நிலைமை சரியில்லை என்று நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே கேன்ஸல் பண்ணிட்டார்.”

“அவ்வளவு மோசமாகவா டில்லி இருக்கிறது.”

“ரொம்ப மோசம் என்று அவரது பிரண்ட்ஸ் சொல்லி இருக்கிறார்கள். பேப்பரிலும் அப்படித்தான் போட்டிருக்கிறார்கள். சீக்கியர்களுக்கு எதிராக கலவரம்”

“அப்படியா?”

“உன்னைப்பற்றி ரொம்ப விசாரித்தார். மூன்று மணிக்கு பதிப்பகத்திற்கு வர்றேன். நண்பரையும் வரச் சொல்லுங்கள். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தால் மனசுக்கு ஆறுதலாக இருக்கும். தனியாக இருந்தால் செத்துடலாம்போல இருக்கிறது” என்றார்.

“மூணு மணிக்கா... மாமா”

“வேலையொன்றும் இல்லையோ”

“நான் வந்துடுறேன்”

“கால் டாக்சியில வந்துடு. நான் ஏற்பாடு செய்யறேன்.”

“இல்ல வேணாம். நான் வந்துடுறேன்”

“இந்தப் பக்கம் எல்லாம் ஒன்னும் பிரச்னை இல்லை. போலீஸ் சுத்திக்கிட்டே இருக்கிறது.”

“நான் மூணு மணிக்கு வந்துடுறேன், மாமா”

எனக்குத் தெம்பு வந்ததுமாதிரி இருந்தது. டெலிபோனை கீழே வைத்துவிட்டு இரண்டு கைகளையும் மாறிமாறி உதறிக் கொண்டேன்.

ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதனால்தான் கஷ்டமெல்லாம் வருகிறது. ஆனால் மனிதர்கள்கூட இல்லாமல் வாழ முடியவில்லை. பேச ஆள் வேண்டியது இருக்கிறது. கேட்க, எதிர்த்துச் சொல்ல ஒரு ஆளேனும் தேவையாக இருக்கிறது. அதுதான் உயிர் இருக்கும் வரையில் பிரச்னை.

“உயிரே பிரச்னைதான்.” என்று சாமிநாதன் அடிக்கடி சொல்வார்.

“உனக்கென்ன பிரச்னை? நீ நல்லாத்தானே இருக்கிற”

“நீதான் சொல்லுற. பிரச்னை என்பது உருவ வடிவானது இல்லை. அதனை எந்த மொழியிலும் சொல்ல முடியாது; எந்த எழுத்தாலும் எழுத முடியாது. கொஞ்சம் கோடி காட்டுவது மாதிரி காட்டலாம். ஏனென்றால் சொல்கிற எனக்கே என்னுடைய பிரச்னையைச் சொல்ல முடியவில்லை. அது சொல்லுக்குள் இல்லாமல் இருக்கிறது. சொல்லைக் கண்டுபிடிக்க வேண்டும்.”

“இதற்கு டாக்டர் மித்திரனைப் பார்க்க வேண்டுமா? முனைவர் சீதாராமனைப் பார்க்க வேண்டுமா?”

“இரண்டு பேர்களுமே புண்ணியம் இல்லை. மருத்துவ டாக்டரிடம் போனால் அரைமணி நேரம் பேசிவிட்டு ஒன்பது விதமான மாத்திரைகள் எழுதிக் கொடுத்துவிட்டு ஆயிரத்து எழுநூறு ரூபாய் கேட்பார். இலக்கியப் பேராசிரியரிடம் போனால் நான் எண்ணூறு ரூபாய் பெறுமானமுள்ள மூன்று புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். அதில் மூளைக்கும் சொல்லுக்குமான அம்சங்கள் பற்றி விரிவாக ஏழாண்டுகள் ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறேன். அதற்காக ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பன்னிரண்டு மாதங்கள் தங்கி பகல் இரவாகப் பணியாற்றி எழுதியிருக்கிறேன். மொழியைப்பற்றி எனக்கு இணையாக ஆராய்ச்சி செய்து எழுதியவர்கள் தமிழ்நாட்டிலேயே கிடையாது. எல்லோரும் ஆராய்ச்சி என்றால் ஆங்கிலத்தில் எழுதவேண்டும் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அது இல்லை. எந்த மொழியிலும் அறிவு இல்லை என்று தமிழில்

எழுதியிருக்கிறேன். நீங்கள் அதை வாங்கிப்படித்தால் உங்கள் பிரச்னைப் புரிந்துவிடும். உங்களுக்காக முப்பது சதவீதம் தள்ளுபடி கொடுக்கிறேன். அது அறிவுக்கான தள்ளுபடி இல்லை. படிக்கும் ஆர்வத்திற்கானது என்பார்?''

''அடே அப்பா. இதில் இவ்வளவு இருக்கிறதா?''

''மனம் ஏன் துன்பத்தை நாடுகிறது.''

நான் அவரையே பார்த்தபடி இருந்தேன்.

''மனம் துக்கத்தைக் கண்டு களிப்படைகிறது. அதனை சுவைக்கத் துடிக்கிறது. சாக்ரடீஸுக்கு நஞ்சு கொடுத்தார்கள். குடிப்பதற்கு நேரமும் குறிப்பிட்டு இருந்தார்கள். ஆனால் சாக்ரடீஸ் கடைசி நிமிடம் வரையில் இருக்க ஆசைப்படவில்லை. நஞ்சு வந்ததும், 'கொடு, சீக்கிரம் கொடு. நான் குடிக்கிறேன்' என்று பறந்தார். ஏனென்றால் துன்பத்தைத் தன் சாவைத்தானே அனுபவிக்க ஆசைப்பட்டார்.''

''இது புதிதாக இருக்கிறது''

''ரொம்பப் பழசு. உலகத்தில் எதுவும் புதிது இல்லை. நாம்தான் புதிது, பழையது என்று வரிசைப் படுத்துகிறோம். ஏசுபிரான். தேவதூதன். கடவுளின் திருமகன் என்று தன்னைத்தானே பிரகடனப்படுத்திக் கொண்டவர். முப்பத்திரண்டு வயதில் சிலுவையில் அறையும்போது என்ன சொன்னார். அதுதான் திரும்பத் திரும்பச் சொல்லபடுகிறது.''

''தெரிந்தவர்கள் கதையை வைத்துக்கொண்டு சரித்திரத்தைப் பார்க்கக்கூடாது.''

''பெயர் தெரியாத பெரிய மனிதர்கள் கதைதான் பெயர் பெற்றவர்களின் வாழ்க்கைச் சரித்திரமாகச் சொல்லப்படுகிறது. சொல்லப்பட்டாலும் சரி; சொல்லப்படாவிட்டாலும் சரி வாழ்க்கை என்பதே துன்பமாகத்தான் இருக்கிறது.''

''அதைத்தானே புத்தரும் சொன்னார்?''

''ஆமாம் அவர் நீண்ட காலம் வாழ்ந்துதான் மகா பரிநிர்வாணமடைந்தார். பகவான் புத்தரின் பிரதம சீடனை சமணர்கள் கொன்றுபோட்டார்கள். துறவு பூண்டு புத்த பிட்சுவாக இருந்த அவரின் அருமை மகன் ராகுல், அவர் ஆசிரமம் பக்கம் தலை காட்டவில்லை.''

“நீ என்ன சொல்லப் போற?”

“ஒன்றுமில்லை. மகாத்மா சுட்டுக்கொள்ளப்பட்டார். அவர் என்ன தீமை செய்தார். சுட்டவன், தான் சுட்டது சரியென்றான். அவர் சாக வேண்டியவர் என்றான். அவரைத் தீர்த்துக் கட்டுவதுதான் நாட்டிற்கு சேவையென்றான். அவரைத் துன்புறுத்த அவன் நினைக்கவில்லை. அவர் இல்லாது போக வேண்டும் என்றுதான் விரும்பினான்.”

“சுட்டு தன் வெறியைத் தணித்துக்கொண்டான்.”

“இல்லை. சந்தோஷம் அடைந்தான். லட்சக்கணக்கான மக்கள் துன்பம் கண்டு சந்தோஷம் அடைந்தான்.”

“அப்படியா... சொல்லுற”

“ரஷ்ய சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலினைக் கண்டு எல்லோரும் பயந்து கொண்டிருந்தார்கள். அவரை எவராலும் பயமுறுத்த முடியாது; வருத்தமுற வைக்க முடியாது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் மனைவி தற்கொலை செய்துகொண்டு அவரைப் பதற வைத்துவிட்டார்.”

நான் தலையசைத்துக் கொண்டேன்.

“எங்கள் பெரிய மாமா சிவராமன். கெட்டவர் இல்லை. சண்டை சச்சரவுக்கு எல்லாம் போக மாட்டார். ஆனால் உல்லாச புருஷர். நாடகம், நடனம் பார்க்கப் போவார். அவர்க்கு மயிலாடுதுறை, கும்பகோணம், ஸ்ரீரங்கம் தாசி வீட்டில் எல்லாம் நல்ல பழக்கம் இருந்தது. ஒரு நாள் அத்தை கழுத்தில் போட்டிருந்த பச்சை மரகதம் பதித்த அட்டிகையைக் கழட்டிக் கொடுக்கச் சொல்லிக் கேட்டிருக்கிறார். உடனே அத்தை மறுபேச்சு பேசாமல் கழட்டி கொடுத்தது. அது தாத்தா ரங்கூன் போய் சம்பாதித்து வந்தது. அதனை மடியில் கட்டிக் கொண்டு ஜட்கா வண்டியில் கிளம்பி இருக்கிறார். அத்தை ஒருநாளும் இல்லாமல், முதன்முதலாக அவர் வண்டி முன்னே போய் வழிமறித்துக்கொண்டு, “எங்க போறீங்க?” என்று கேட்டு இருக்கிறது.

பெரிய மாமாவிற்கு ஆத்திரம், சிரிப்பு ஒன்னா வந்துவிட்டது.

“என்ன? என்ன கேட்டே?”

“எங்க போறீங்கன்னு கேட்டேன்.”

“ஆண்பிள்ளை. ஆயிரம் இடத்திற்குப் போவான். வருவான். அதையெல்லாம் பொண்டாட்டிக்கிட்ட சொல்லிக்கொண்டு இருக்க முடியாது.”

“என்னிடம் சொல்லாமல் நீங்கள் எங்கும் போக முடியாது”

“போனா, என்ன பண்ணுவே?”

“நான் ஒன்னு பண்ணுவேன்”

“செத்துப் போய்விடுவேன்னு பயமுறுத்துறியா?” என்று வண்டியில் இருந்து எழுந்து அத்தை முஞ்சியில் எட்டி அறைந்து இருக்கிறார். அத்தை அப்படியே சுருண்டு கீழே விழுந்துவிட்டது. குதிரை கனைத்திருக்கிறது. அதனைத் தட்டிக் கொடுத்து ஓட்டிக்கொண்டு போய்விட்டார். தாசி வீட்டில் இருந்து இரவு திரும்பி வந்தார். அத்தை தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தது.

“நூறு வருஷம் இருக்குமா?” என்று கேட்டார் ஐராவதம்.

“எண்பது வருஷமாகப் போகிறது. பெரிய மாமா சாமியாராகி காசிக்குப் போனார். அப்புறம் ஊர் பக்கம் வரவே இல்லை என்று ஆயா சொல்லும்.”

“பாவம்”

“பெரிய மாமா ரொம்ப நல்லவர். பெரிய படிப்பாளி. நல்ல மனுஷன் என்று ஆயா சொல்லிக்கொண்டே இருக்கும்.”

அறைக் கதவு தட்டப்பட்டது. எழுந்து திறந்தேன். முருகேசன், “என்ன அறையவிட்டு வெளியில் வரவே இல்லை. நான் இரண்டு மூன்று முறைகள் வந்து பார்த்தேன். ஒருமுறை தட்டலாமா என்றுகூட நினைத்தேன். மாத்திரை போட்டுக்கொண்டு படுத்துட்டீங்களோன்னு நினைத்தேன்.” என்றார்.

“அதெல்லாம் ஒன்றுமில்லை. சும்மா படுத்திருந்தேன்.”

“மணி இரண்டாகப் போகிறது. சாப்பிட்டீர்களா?”

சிரித்தேன்.

“வாங்க, நானும் சாப்பிடணும்” என்றார்.

மேல் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு முருகேசன்கூட சாப்பாட்டிற்குச் சென்றேன்.

★

## அத்தியாயம் 9

ஆட்டோ ஏறினேன். நகரம் தன் போக்கில் தான் இயங்கிக் கொண்டிருந்தது. சாவு கஷ்டம் என்றாலும் ஜீவிக்கத்தான் வேண்டும்; அதாவது தான் சாகிறவரையில். ஜீவிப்பது என்றால் தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பிட வேண்டும். கழிப்பறைக்குப் போய் வரவேண்டும். யாராவது ஏதாவது சொன்னால் காது கொடுத்துக் கேட்க வேண்டும். மற்றவர்களுக்குத் தகவல் சொல்ல வேண்டும் என்றால் பேச வேண்டும். இதெல்லாம் செய்ய வேண்டியது என்றால், செய்யக்கூடாதது சப்தமாகச் சிரிப்பது; ஆர்ப்பாட்டமாகப் பேசுவது. அவ்வளவுதான். முதல் நாள் இல்லை. இரண்டாவது நாள். அது ஒரு நாள். இது புதிய நாள். நேற்று என்பது கழிந்துவிட்டது. புதிய நாளில் புதிய வாழ்க்கை. போன நாள் திரும்பி வரப்போவதில்லை. செத்த உயிர் மறுபடியும் திரும்புவது கிடையாது. அது போய்விட்டது. குழந்தை பிறந்தால் புது உயிர். அது போன உயிரின் எச்சமில்லை. அதுவும் இதுவும் ஒன்றில்லை. ஓடிய தண்ணீரைப் பிடித்துக்கொண்டு வந்து ஊற்றி பூசந் தண்ணீர் என்று சொல்ல முடியாது.

"சார், கீதா கேப் பக்கம்தானே" என்று ஆட்டோ டிரைவர் ஜெமினி பாலத்தில் ஏறும்போது கேட்டார். நான் வெளியே தலையை நீட்டிப் பார்த்தேன். அமெரிக்க தூதுவர் அலுவலகத்தில் விசா வாங்க பெரிய கூட்டம் நின்று கொண்டிருந்தது.

"என்ன? சாயந்திரத்திலும் விசா கொடுக்கிறானா?"

"தெரியல சார். இன்னைக்கி காலையில இருந்து ஒரே கூட்டம் விசா வாங்கிக்கொண்டுபோய் என்ன பண்ணுவாங்க"

"அமெரிக்கா போய் கம்ப்யூட்டர் கம்பெனியில் வேலை செய்வார்கள். ஒரு நாட்டுக்குப் போக வேண்டுமென்றால் அது விசா கொடுக்கணும். விசா என்றால் எங்கள் நாட்டிற்கு வரலாம் என்ற அனுமதி."

"நான் மதுரை சார். இரண்டு மாசமா ஆட்டோ ஓட்டுறேன். இதெல்லாம் ஒன்றும் தெரியாது. அப்பாவை வெட்டி கொன்னுட்டாங்க. அதுனால ஓடியாந்துட்டேன்."

"மதுரை என்றால் கொலைதானா?"

“அதெல்லாம் இல்ல சார்! மதுரையென்றால் மீனாட்சி ஊர் சார். மல்லிகைப் பூக்கிற ஊர். என்னமோ நாலு காலிப்பசங்க இப்படி கொலைவெறி புடித்து அலையிறானுவோ. அதுனால் மதுரைக்கே கொலை நகரமென்று பெயர் வந்துடுச்சி.”

நான் ஒரு அளவிற்குமேல் யாரிடமும் பேச்சுக் கொடுக்க மாட்டேன். ஏனென்றால் ஒரு ஆளைத் தெரிந்துகொள்ள கொஞ்சம் பேசினால் போதும். அவன் பேசாத பேச்சில் இருந்து நானே மேலே பேசிக்கொள்வேன். எனக்குத் தெரியும். அவனிடம் எவ்வளவு பொய் இருக்கிறது என்று. நான் மெய்யை மட்டும் கறக்கிற ஆள்.

ஒரு நாள் ஐராவதம் கேட்டார், “அப்பா, ராஜா, உன்னிடம் நிறைய நல்ல அம்சங்கள் இருக்கின்றன. சட்சட்டென்று எல்லாவற்றையும் கிரகித்துக்கொண்டு விடுகிறே. அப்புறம் இரண்டு வயது மூணு வயசில நடந்தது; படித்தது, கேட்டது எல்லாவற்றையும் சரியா சொல்லுற!”

“அது எதுக்கு இப்ப!”

“சொல்லுறேன். நன்முத்து பதிப்பகம் உன் மாமாதானே. அவர்கிட்ட எழுதிக் கொடு. அவர் புத்தகமாகப் போடுவார்; உனக்கும் பணம் கொடுப்பார். உன்னை அறிவாளி என்று புகழ்ந்து எல்லோரும் பேசுவார்கள். நீ பெரிய விழா வைக்கலாம். நல்லி செட்டியார், நீதியரசர் சோமநாதனை கூப்பிடலாம். வித்தியாவை பாடவிடலாம். பேப்பரில் முதல் பக்கத்தில் செய்தி படத்தோடு வரும்.”

“எழுத்து பற்றி சாக்ரடீஸ் என்ன சொல்லி இருக்கிறார், தெரியுமா?” என்று நிறுத்திவிட்டு அவர் மூஞ்சியைப் பார்த்தேன். அவர் என்னையே பார்த்தபடி இருந்தார்.

“பேனாவை கையில் பிடித்துக்கொண்டு மையில் தொட்டு காகிதத்தில் எழுதுவது தண்ணீரில் எழுதுவதுமாதிரி. சற்று நேரத்திற்கெல்லாம் கரைந்து காணாமல் போய்விடும். பேசுகிற பேச்சில் ஆத்மா இருக்கிறது. எனவே அது எப்பொழுதும் ஜீவித்துக் கொண்டிருக்கும்.”

“சொன்னவரை கொன்றுவிட்டார்கள்?”

“ஆனால் அவர்தான் இரண்டாயிரம் வருஷத்திற்கு மேலே உயிரோடு இருக்கிறார். அவர் சொன்னது திருப்பித் திருப்பிச் சொல்லப்படுகிறது”

ஆட்டோவை பேட்டா கடை வாசலில், தூங்கு மூஞ்சி மரத்தடியில் நிறுத்தினான்.

“நல்லா ஆட்டோ ஓட்டுற”

“மூணு வருஷம் டூரிஸ்ட் வண்டி ஓட்டினேன் சார்.”

பேசியதற்கு மேலே பத்து ரூபாய் கூடுதலாகக் கொடுத்துவிட்டு கீழே இறங்கினேன். பாண்டி பஜார் பரபரப்பாக இருந்தது. பஸ் வேகமாகச் சென்றது. பேட்டா செருப்புக்கடையில் இருந்து நான்கு இளம்பெண்கள் குனிந்தும், நிமிர்ந்தும் சிரித்துக்கொண்டு வந்தார்கள். சிரிக்கிறவர்களைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு நன்முத்து பதிப்பகத்திற்குச் சென்றேன். என்னை வாசலிலேயே பார்த்துவிட்டு சிவமணி, “வா... வா?” என்றார். அவர் எதிரே உட்கார்ந்து இருந்த வைத்தீஸ்வரன், “வாங்க?” என்று வரவேற்றார். நான் தலையை அசைத்துக் கொண்டு அவர் பக்கத்தில் அமர்ந்தேன். இரண்டு பேரையும் மாறிமாறி பார்த்தேன்.

“சொன்ன நேரத்திற்கு கால்மணி நேரத்திற்கு முன்னேயே வந்துட்டீங்கள்” என்றார். வைத்தீஸ்வரன், வேட்டி கட்டிக்கொண்டு வெள்ளை முழுக்கை சட்டைப் போட்டுக்கொண்டு இருந்தார்.

நான் சிரித்தேன்.

“தம்பிகிட்ட நேரம் முக்கியம். எதையும் சரியாகச் செய்யும்.”

“அது ரொம்ப நல்ல பழக்கம். நான் பல்கலைக்கழகத்திற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்னால் போய்விடுவேன். அது அப்பா பழக்கம். அவர் கச்சேரி முதல் ஆளாகப் போய்விடுவார். அது தாத்தாவிடம் இருந்து வந்தது என்று பாட்டி சொல்வார்கள்.”

“ரொம்பப் பழக்கங்கள் குடும்பத்தில் இருந்துதான் வருகிறன” என்ற சிவமணி என்னைப் பார்த்து, “எப்படி வந்த?” என்று கேட்டார்.

“என்னவோ, முக்கிய விஷயம் பேசிக்கொண்டு இருந்தீர்கள்”

“நான் சென்னைக்கு வந்ததும், பதிப்பகத்திற்கு வருவது ஊரைத் தெரிந்துகொள்ளத்தான். நான்குவிதமானவர்கள் வருவார்கள். நூறுவிதமான கருத்துகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்றுதான். எனக்கு அதில் குறையே ஏற்பட்டதில்லை” என்றார் வைத்தீஸ்வரன்.

நான் அவரனைத் திரும்பிப் பார்த்தேன்.

“இந்தமுறை உங்களைச் சந்தித்தேன். அது பெரிய விஷயம். நான் எங்கேபோனாலும், எதைப் பார்த்தாலும், என்ன பேசினாலும் வீட்டிற்குப் போனதும் டைரி எழுதிவிடுவேன்?”

“டைரியா?”

“ஆமாம். நான் தமிழில்தான் டைரி எழுதுகிறேன். நான் கல்லூரிக்குச் சென்ற முதல் நாளில் இருந்து டைரி எழுதுகிறேன். ஒருநாள்கூட எழுதாமல் விட்டது இல்லை. என்ன வேலை இருந்தாலும் சரி; உடம்புக்கு முடியாமல்போனாலும் சரி, டைரி எழுதிவிடுகிறேன்.”

“எழுத விஷயம் இருக்கிறதா?”

“ரொம்ப இருக்கிறது. நான்தான் குறைத்து குறைத்து எழுதுகிறேன்”

“ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. நான் டைரி என்ற பெயரில் கணக்குதான் எழுதுகிறேன்” என்றார் சிவமணி.

“கணக்கும் ஒரு டைரிதான். நம் தனித் தமிழ்க்காவலர் மறைமலை அடிகள் ஆங்கிலத்தில் டைரி எழுதி வைத்திருந்தார் என்று கேள்விப்பட்டேன். அது புத்தகமாக வந்துவிட்டதா?”

“இல்லை. இன்னும் வரவில்லை. அது வரவேண்டாம் என்று யாரோ மை ஊற்றி அழித்து விட்டார்கள். நம் ஆனந்தரங்கப்பிள்ளை டைரிதான் முழுதாக வந்திருக்கிறது.”

“தமிழ், ஆங்கிலம் இரண்டும் படித்திருக்கிறேன். ஆங்கிலம் ஒரு செட் வாங்கி மைத்ரேயி மித்ரா என்ற வங்காளப் பேராசிரியைக்குக் கொடுத்தேன். ஆறு மாதங்கள் கழித்து, “வைத்தி நீ கொடுத்த புத்தகங்களிலேயே நல்ல சரித்திரம் டைரிதான். நான் சந்திர நாகூர்க்காரி. என் ஊரைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் ஏதாவது சந்திரநாகூர் பற்றித் தமிழில் எழுதப்பட்டு மொழி பெயர்க்கப்பட்டிருந்தால் வாங்கிக் கொடு” என்றாள்.

“தன் ஊரைப் பற்றி ஏதாவது பேசினாலோ, எழுதினாலோ எல்லோருக்கும் தனியா பற்று வந்துவிடுகிறது. சந்தோஷமாகப் பேச ஆரம்பித்துவிடுகிறார்கள்.”

“அது நல்லதுதானே. ரொம்ப விலகி விலகி இருக்கும் மனிதர்களை ஏதாவது ஒன்று சேர்க்க வேண்டும். அதில் ஊர் முக்கியமான இடம் பிடித்துக்கொண்டுவிடுகிறது. அப்புறம் மொழி. அதற்குப் பின்னால் நாடு.”

“நீங்கள் பல நாடுகளுக்குப் போய் வந்திருக்கிறீர்கள், அல்லவா?” என்று வைத்தீஸ்வரனிடம் கேட்டேன்.

“பாஸ்போர்ட் ஐந்தாகிவிட்டது!”

“அப்படியென்றால் நிறைய நாடுகளைப் பார்த்துவிட்டீர்கள்?”

“நீங்கள் எத்தனை நாடுகளைப் பார்த்து இருக்கிறீர்கள்?”

“என்னிடம் பாஸ்போர்ட் இல்லை”

“பாக்கியவான். நிஜமாகவே பெரிய மனிதர். பல பேர்களின் பாஸ்போர்ட்டை அரசாங்கம் பிடுங்கி வைத்துக்கொள்கிற நாட்டில் பாஸ்போர்ட் எடுக்காமல் வாழறது என்பது பெரிய காரியந்தான்.”

“நிஜமாகவே தம்பி பெரிய மிராசு குடும்பத்துப் பையன். மனசும் செயலும் பெரிசுதான்” என்றார் சிவமணி.

“தெரிகிறது” என்றார் வைத்தீஸ்வரன்.

“நான் உத்தரவு வாங்கிக்கிறேன்” என்று எழுந்தேன்.

“உட்காருங்கள்” என்று கையைப் பிடித்துக்கொண்டார்.

“வைத்தீஸ்வரன். உங்கள் டைரியை கொடுங்கள். புத்தகமாகப் போடலாம். புதுமையாக இருக்கும்.” என்றார் சிவமணி.

“நான் டைரியை, டைரி என்பதற்காகவே எழுதுகிறேன். எழுதின டைரியைப் படித்துக்கூட பார்த்தது இல்லை. வருஷ வாரியாக அடுக்கி வைத்திருக்கிறேன். டைரியில் என்ன இருக்கிறது என்று படித்துத்தான் பார்க்க வேண்டும்.”

“நீங்கள் படித்து, எதையெல்லாம் அச்சிடலாம் என்று நினைக்கிறீர்களோ அதை வெளியிடலாம்.”

“இல்லை. அதுபற்றி எல்லாம் யோசனை இல்லை. டைரி எழுதுவதுதான், பிரசுரம் இல்லை” என்றவர் என்னைப் பார்த்து

சொல்லுங்கள், ‘‘வாழ்க்கை எப்படி இருக்கிறது?’’ என்று கேட்டார்.

‘‘வாழ்க்கை அற்புதம். ரொம்ப ஆனந்தமாகப் போய்க் கொண்டிருக்கிறது.’’

‘‘இதுதான் பெரிய விஷயம். வாழ்க்கை என்ன என்பதை அறிந்து கொள்வதும், அறிந்ததை அறிந்த விதமாகச் சொல்வதும்’’ என்றவர் என்னைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்தார்.

‘‘நீங்கள் நிறைய நாடுகளுக்குப் போய் இருக்கிறீர்கள். அதில் சொல்லக்கூடியது என்ன?’’ என்று கேட்டார் சிவமணி.

கண்ணாடியைக் கழட்டிக்கொண்டு இப்படியும் அப்படியும் ஒரு பார்வைப் பார்த்தார். தலையை அசைத்துக் கொண்டு, ‘‘நிறைய இருக்கிறது. டைரியில் பக்கம் பக்கமாக எழுதி வைத்திருக்கிறேன். என் டைரியே பயணந்தான். அதைப் புத்தகமாகப் போட்டால், பயண டைரி என்றுதான் போட வேண்டும். அதில் நம் ஆக்கூர், சாயாவனம், திருவெண்காடு, புகார், தரங்கம்பாடி பற்றி எல்லாம் எழுதி இருக்கிறேன்.’’

‘‘நல்ல விஷயந்தான். புதுமாதிரியாக இருக்கும்.’’

‘‘ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் அலெக்சாண்டரியா போய் இருந்தேன். அலெக்சாண்டரியா பல்கலைக்கழகத்தில் ‘சமூகங்களும் நகரங்களும்’ என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கு. நான் புகார் நகரமும், சமூக கலாசார வாழ்க்கை என்பது பற்றி கட்டுரை வாசித்தேன். நான் சொல்ல வந்தது அது இல்லை. கருத்தரங்கு முடிந்ததும் எகிப்து நாட்டு தொல்லியல்துறை இயக்குநர் அகமது கான் என்பவரோடு அலெக்சாண்டரியா நகரைச் சுற்றி வந்தேன். அவர் பெரிய படிப்பாளி. நன்கு மதிக்கப்படும் சமூகப் பிரமுகராக இருந்தார். அது கருத்தரங்கு நடைபெற்றபோது தெரிந்தது.

அவர் சொன்னார்: ‘‘அலெக்சாண்டர் தான், வென்ற ஒவ்வொரு நாட்டிலும் புதிய நகர் ஒன்றை நிர்மாணித்து அதற்கு அலெக்சாண்டரியா என்று பெயர் வைத்தான். பெரிய அரண்மனைகள், மாடமாளிகைகள், நூலகங்கள் கட்டினான். ஏராளமானவர்களை குடியமர்த்தி வாழ்வதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து கொடுத்தான். பர்சியா மீது படையெடுத்து வெற்றி பெற்றான். ஏராளமான பர்சியா வீரர்கள் மாண்டுபோனார்கள். அவர்களின் மனைவிகள் கணவனை இழந்தார்கள்.

இளைஞர்கள் இறந்ததால், இளம் பெண்களுக்கு கணவன்மார்கள் கிடைக்கவில்லை. அது தெரிந்ததும் அலெக்சாண்டர் தன் தளபதிகள், போர்வீரர்கள் பர்சிய பெண்களைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றான். அதற்கு ஒரு பொது திருமண மண்டபம் அமைத்தான். அவனே பர்சிய மன்னர் மகள் ஒருத்தியை திருமணம் செய்து கொண்டான். 1500 திருமணம் ஒரே நாளில் நடைபெற்றது.''

''அலெக்சாண்டர் வெற்றியைக் கொண்டாட அவன் தளபதிகள் விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள். முப்பத்திரண்டு வயதான அலெக்சாண்டர் சிறப்பு விருந்தினர். விஸ்கி ஆறாக ஓடியது. எல்லாரும் குடித்தார்கள். அலெக்சாண்டர் அதிகமாகக் குடித்தான். உடல்நிலை பாதிக்கப்பட்டது. ஆறுநாட்கள் வலி, காய்ச்சலால் சிரமப்பட்டு செத்துப்போனான். சாவதற்கு முன்னால் தன் இறுதி விருப்பமாக – மூன்று விஷயங்களைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டுமென்று ஆணையிட்டான்.''

''சாகிறவன் விருப்பத்தைச் சாகப் போகிறவன் எப்பொழுதாவது நிறைவேற்றியது உண்டா? அதுதான் அலெக்சாண்டர் கடைசி விருப்பங்களுக்கும் ஏற்பட்டது. அவன் என்னவோ பெரிதாக ஒன்றும் கேட்கவில்லை.''

''ஒன்று : என் சவப்பெட்டியை மருத்துவர்கள் மட்டுமே தூக்கி வர வேண்டும். ஏனெனில் எந்த மருத்துவராலும் போகும் உயிரை தடுக்க முடியாது என்பதை உலகம் தெரிந்துகொள்ளும்.''

''இரண்டு: நான் போரில் கைப்பற்றிச் சேர்த்து வைத்திருக்கும் தங்கம், வெள்ளி ஆபரணங்களை என் சவ ஊர்வலத்தின் முன்னே வாரி இறைத்துவிடவேண்டும். ஏனெனில் செத்தவனுக்கு எதுவும் சொந்தமில்லை என்பதை உலகம் அறிந்து கொள்ளவேண்டும்.''

''மூன்றாவது: என் இரண்டு கைகளும் வெளியே தெரியும்படி புதைக்க வேண்டும். ஏனெனில் செத்துக் கிடக்கிறவன் எதையும் எடுத்துக்கொண்டு போகவில்லை என்பது எல்லாருக்கும் தெரிய வேண்டும்.''

வைத்தீஸ்வரன் தண்ணீரை எடுத்துக்குடித்தார்.

''நம்மூர் பட்டினத்தார்தான். காதறுந்த ஊசியும் கடைவழிக்கு வாராது என்பதுதான்'' என்றார் சிவமணி.

“எந்த நாட்டில் வாழ்ந்தாலும் மனிதன் ஒரு ஆள்தான். ஒன்றாகவே நினைக்கிறான்; ஒரே மாதிரிதான் பேசுகிறான். ஆனால் பேசும் மொழியும் எழுதும் எழுத்தும் வித்தியாசப்படுவதால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறான் என்று சொல்லிவிட்டு அகமது கான் அலெக்சாண்டரியா நகரத்தின் பழைய சமாதிகள் நிறைந்த சாலைகள் வழியாக அழைத்துச் சென்றார்.

“மகா அலெக்சாண்டர் சமாதி எங்கே இருக்கிறது? எகிப்தில்தானே புதைக்கப்பட்டான்?” என்று கேட்டேன்.

“நாங்களும் அதைத்தான் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தேடிக்கொண்டு இருக்கிறோம். அலெக்சாண்டரின் படைத் தளபதிகளிலேயே வலிமைபெற்று இருந்த பிளரைதான் அவனை அலெக்சாண்டரியாவில் பட்டுத்துணியில் சுற்றி, தங்கத் தகடுகள் போர்த்திப் புதைத்தான். அது திருடர்களுக்கு வசதியாகப் போய்விட்டது. அலெக்சாண்டர் சமாதியில் இருந்த தங்கத்தை வெகுவிரைவிலேயே திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அதன்பிறகு ஏற்பட்ட அரசியல், கலாசார மாற்றத்தில் அலெக்சாண்டர் புதைக்கப்பட்ட இடம் தெரியாமல் போய்விட்டது.”

“இவ்வாறு நடக்க முடியுமா?”

“நடந்து இருக்கிறது என்பதுதான் உண்மை. இப்போது நம் கார் போகும் சாலைக்கு அடியில்கூட மகா அலெக்சாண்டர் உறங்கிக் கொண்டிருக்கலாம்.”

“எளிதாகச் சொல்கிறீர்கள்?”

“அது சரித்திரம் சொல்லிக்கொடுத்ததுதான். எப்போதும் எதுவும் ஒரே மாதிரி இருப்பது இல்லை.”

“சரியாகத்தான் சொல்லி இருக்கிறீர்கள். சோழ மாமன்னர் ராஜராஜன் சமாதியை தமிழ்நாட்டில் தேடிக்கொண்டிருப்பதாகப் படித்தேன்.”

“நம்முடைய ராஜராஜன்தான் பதில் சொல்ல வேண்டும்”

“எனக்குக் கவலையில்லை. காவேரி ஆற்றின் கரையில் எரித்து கரைத்துவிடுவார்கள். நான் நீரிலும் நிலத்திலும் சேர்ந்து போய்விடுவேன்.” என்றேன்.

“இது நன்றாக இருக்கிறது.”

“இந்திராவை எப்பொழுது அடக்கம் செய்கிறார்கள்.”

“எரித்து முடித்திருப்பார்கள்?”

“பாவம்”

“ஒரு காபி சாப்பிட்டு வரலாம்.”

நான் எழுந்தேன். கடிகாரம் ஐந்து மணி காட்டியது.

“ரொம்ப நேரம் பேசிக்கொண்டே இருந்துட்டோம். பேச்சில் நேரம்போனதே தெரியவில்லை.” என்றெழுந்தார் வைத்தீஸ்வரன்.

மூவரும் காபிக்குச் சென்றோம்.

★

## அத்தியாயம் 10

கீதா கேப் வாசலில் இருந்த நியூஸ்மார்ட்டில் ஐந்தாறு மாலை தினசரி பத்திரிகை போஸ்டர்கள் தொங்கிக்கொண்டிருந்தன. நான் முன்னே சென்று ஒரு நிமிடம் நின்று படித்தேன். அப்புறம் வேகவேகமாகச் சென்று சிவமணியோடு சேர்ந்து நடந்தேன்.

“ராஜாவிற்கு பத்திரிகை படிப்பதில் ஆர்வம் அதிகம் என்று தெரிகிறது.” என்றார் வைத்தீஸ்வரன்.

“ராஜாவின் அப்பா, அந்தக் காலத்திலேயே சுதேசமித்திரன், இந்து எல்லாம் வரவழைத்துப் படித்தவர். ரொம்பப் படிக்கிற குடும்பம்.”

“கேட்பதற்கே சந்தோஷமாக புத்தகம் இருக்கிறது. தற்காலத்தில் படித்த குடும்பத்தில்கூட பேப்பர் படிப்பதில்லை. இந்தியாவில்தான் என்று இல்லை. அமெரிக்கா, இங்கிலாந்தில்கூட படிப்பது இல்லை. எல்லோரும் தங்கள் வேலை சம்பந்தமாக ஏதோ கொஞ்சம் படிக்கிறார்கள். அப்புறம் டி.வி. பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.”

ஓட்டல் முதலாளி, சிவமணியைப் பார்த்து, “வாங்க சார்?” என்று வரவேற்றார்.

“சௌக்கியமா? இரண்டு நாளா ஆளைக் காணோமே?”

“ஊருக்குப் போய் இருந்தேன். நீங்கள்தான் எல்லாவற்றையும் கவனிக்கிற ஆள்”

“காபி குடிக்க வர்றோம்.”

“உட்காருங்க சார்!” என்றார் முதலாளி மகன் நந்தகோபாலன்.

நாங்கள் ஏ.சி. அறைக்குள் சென்று உட்கார்ந்தோம். இருட்டாக இருந்தது. சுற்றும்முற்றும் பார்த்தேன்.

“காபி” என்றார் சிவமணி.

“காபி மட்டும்தானே. வெளிச்சத்தில் உட்கார்ந்து சாப்பிடலாம்” என்று வைத்தீஸ்வரன் எழுந்தார். அப்புறம் என்னைப் பார்த்து,

“நீங்கள் ஏதாவது சாப்பிடப் போறீங்களா?”

“காபிதான்”

“அப்ப வெளியில் உட்காரலாம்”

ஜன்னல் பக்கமாக உட்கார்ந்து கொண்டோம்.

“எத்தனை வருஷமாகக் காபி குடிக்கிறீங்க?” என்று சிவமணியைப் பார்த்து வைத்தீஸ்வரன் கேட்டார்.

“இப்பொழுது எனக்கு வயது ஐம்பத்து மூன்று. பத்து வயசில் இருந்து காபி குடிக்கிறேன்.”

“என் வயது நாற்பத்தேழு. என் டைரியை ஒரு நாள் எடுத்துப் படித்தேன். மூன்று வயதில் இருந்து காபி குடிக்கிறேன் என்று எழுதி வைத்திருக்கிறேன். எங்கள் குடும்பத்திற்கு காபி நூற்றைம்பது வருஷத்திற்கு முன்னால் வந்துவிட்டது. புதுச்சேரி துபாஷி ஆனந்த ரங்கப்பிள்ளை துய்ப்ளே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கிழக்குப் பக்கமாகத் திரும்பிக்கொண்டு காபி குடித்தான் என்று எழுதி வைத்திருக்கிறார்.”

“ரொம்ப விவரமான ஆளாகத்தான் தெரியுது.”

“பிஞ்சுக்காரன் இருநூறு வருஷத்திற்கு முன்னாலேயே காபியை புதுச்சேரிக்குக் கொண்டு வந்திருக்கிறான்.”

“நீங்கள் காபியை சாப்பிடுங்கள்?” என்றார் வைத்தீஸ்வரனிடம்.

நான் காபி சூடாகக் குடிக்கிற ஆள். எனவே காபி குடித்துவிட்டு உதட்டைத் துடைத்துக்கொண்டேன்.

“ராஜா, காபி குடித்துவிட்டீர்களா?”

நான் ஒரு சிரிப்புச் சிரித்தேன்.

“நான் ரொம்ப சூடாகவும் குடிக்க மாட்டேன்; ரொம்ப ஆற வைத்தும் குடிக்க மாட்டேன். இதமான சூட்டில் காபி மணத்தை சுவைத்துக்கொண்டே குடிப்பேன். காபி என்றால் சுவை, மணம் கொண்டது. அதனை அறிந்து அனுபவித்துக் குடிக்க வேண்டும் என்று பாட்டி சொல்லிக்கொடுத்தது. எங்கள் வீட்டில் காபி கொட்டை அரைக்கும் மெஷின் இருந்தது. பாலுக்கு பசு மாடு இருந்தது. ரொம்ப நாள் வரையில் பசும்பால் காபிதான்.”

“வைத்தீஸ்வரன், நீங்கள் சாப்பாடு, காபி பற்றிய ஒரு புத்தகம் எழுதலாம்.”

“நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் தமிழ்நாட்டு சாப்பாடு பற்றி ஒரு ஆளால் எழுத முடியாது. ஏனென்றால் தமிழ்நாட்டில் ஒரு சாப்பாடு இல்லை. கறி, மீன் சாப்பிடுகிறவர்களைத் தள்ளிவைத்துவிட்டு, கருவாடு சாப்பிடுகிறவர்களை நீக்கிவிட்டு தமிழ்ச் சாப்பாடு பற்றி எழுத முடியாது.”

“அதெல்லாம் சரிதான். நீங்கள் உங்கள் பங்கிற்கு சைவச் சாப்பாடு, காபி சரித்திரம் எல்லாம் எழுதுங்கள். நான் மதுரை பக்கத்தில் கறி, பற்றி எழுத ஒரு ஆளைக் கண்டுபிடித்துவிடுகிறேன். அப்படியே மீன், கருவாடு பற்றி எழுத நாகப்பட்டினத்தில் மூர்த்தி என்று ஒருவர் இருக்கிறார், ரொம்ப விவரம் தெரிந்தவர். அவரிடம் சொன்னால் எழுதிக் கொடுத்துவிடுவார். நமச்சிவாயம், கண்ணப்பனிடம் கொடுத்தால் சரி பார்த்துக் கொடுத்துவிடுவார்கள்.”

“நான் கனடா சைமன் பிரேசர் பல்கலைக்கழகத்திற்கு ஒரு கருத்தரங்கிற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னால் போய் இருந்தேன். வழி நெடுகிலும் சுவரில் எல்லாம் மீன் படம். பெரிய வாளை மீன். என்னவென்று விசாரித்தேன். சால்மன் மீன் என்று ஒரு மீன் கதையைச் சொன்னார்கள். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சால்மன் மீன் பிடித்து தின்றுகொண்டு செவ்விந்தியர்கள் வாழ்கிறார்களாம். கடவுள் அவர்களுக்கு கொடுத்த கொடையாம். சால்மன் மீன் அது கடலில் இருந்து ஆற்றில் எதிர்த்துப் போகிறது. அதனைப் பிடித்து சாப்பிடுகிறார்கள். எனவே சால்மன் மீனுக்கு நாடு முழுவதிலும் நல்ல வரவேற்பு. நிறைய கவிதை, கதை எல்லாம் சால்மன்மீது பாடப்பட்டிருக்கிறது என்றார்கள். செவ்விந்தியர்கள் வாழ்விலும், கலாசாரத்திலும் அதற்குப் பெரும் பங்கு என்றார்கள்.”

“நம்மூரில் மீன் அன்னிய பதார்த்தம். சாப்பிடுகிறவர்கள் வெளியில் சொல்ல மாட்டார்கள்.”

“ஆமாம்” என்றபடி சிவமணி எழுந்தார். அப்புறம் வைத்தீஸ்வரன் பக்கமாக நடந்து கொண்டே, “விஷயம் அது இல்லை. நாம் சாப்பிடுவது எல்லாம் உடம்புக்கு, அது அமிர்தம். எனவே அதுபற்றி நான் புத்தகம் போடுறேன். நீங்கள் எழுதுங்கள்.”

“பார்க்கிறேன். கையில் ஐந்து வேலைகள் இருக்கின்றன.”

“இது அதில் முதல் வேலையாக இருக்கட்டும். ராஜா நீங்கள் மூணு மாதத்தில் நூற்றைம்பது பக்கம் எழுதி கொடுக்கிறீர்கள்”

“நானா?”

“ஆள் ரொம்ப அமுக்கமாக இருக்கிறார்.”

“நீங்கள் பேராசிரியர். பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டு இருக்கிறீர்கள். நீங்கள்தான் எழுதி வழிகாட்ட வேண்டும். என் நண்பர் ஐராவதம் அடிக்கடி சொல்வார், ‘நம் நாட்டில் எவன் எந்த வேலையைச் செய்ய பயிற்சி பெற்று இருக்கிறானோ அவன் சோம்பேறியாகி அந்த வேலையைச் செய்யாமல் விட்டுவிடுகிறான். மற்றவர்கள் செய்தால் கண்டவன் எல்லாம் அறிவு சம்பந்தப்பட்ட வேலைக்கு வந்துவிடுகிறான் என்று புலம்புகிறான்” என்று–

“அவர் யார்?”

“தாலுக்கா ஆபீஸ் கிளார்க்”

“அப்படிச் சொல்லாதீர்கள். அவர்கள் எல்லாம் பெரிய அறிவாளிகள். முன்னூறு, முன்னூற்று ஐம்பது வருஷத்திற்கு முன்னால் பெரிய பெரிய அறிவாளிகள், விஞ்ஞானிகள் எல்லாம் சின்ன சின்ன வேலை பார்த்தவர்கள்தான். டைனமோ கண்டுபிடித்த மைக்கேல் ஃபாரடே பழைய புத்தகக்கடைக்காரன். தன் கடைக்கு வந்த பழைய பிசிக்ஸ் புத்தகங்களைப் படித்துப் படித்து டைனமோவில் மின்சாரம் கண்டுபிடித்தான். பெரிய தத்துவமேதை ஜேம்ஸ் மில் கிழக்கிந்தியக் கம்பெனி கல்கத்தா ரைட்ரேஸ் பில்டிங்கில் கணக்கு எழுதிக்கொண்டிருந்தான். அப்புறம்... அப்புறம் கல்லூரிகள் வந்ததும் படிப்புக்கு வேலை; வேலைக்குப் படிப்பு என்றாகிவிட்டது. ஆனால் எந்தப் படிப்பும் அறிவுக்கானது இல்லை.

“இந்திராகாந்தி” என்றேன்.

“சரியா ஞாபகப் படுத்திட்டிங்க ராஜா. நான் அதைத்தான் சொல்ல வந்தேன்.”

“சாலையை ஜாக்கிரதையாகத் தாண்டி போகணும். நாலு நாளைக்கு முன்னால் ஒரு அம்மா குழந்தையோட குறுக்கில் புடவை கடைக்கு ஓடியிருக்கிறது. பஸ் அடித்து அம்மா, குழந்தையும் போயிட்டாங்க!”

“மெட்ராஸில் ரொம்ப ஆக்சிடெண்ட்”

நான் வைத்தீஸ்வரன் கையைப் பிடித்துக்கொண்டேன். சிவமணி என் கையைப் பிடித்துக்கொண்டார். மூவரும் இப்படியும் அப்படியும் பார்த்துக்கொண்டே பதிப்பகத்திற்குள் சென்றோம்.

“ஆறு மணிக்கு போகவேண்டும் என்று வந்ததுமே சொன்னீங்க” என்றார் சிவமணி வைத்தீஸ்வரனிடம்.

“ஆமாம். பெரியப்பா மகன் ரவி கலாஷேத்ரா போகணும் என்றான். குற்றாலக் குறவஞ்சி நடனம். அவசியம் நான் பார்க்க வேண்டும் என்றான். ஆனால் அவன் சொன்னால் சொன்னபடி வர்ற ஆளில்லை. நான் போகாவிட்டாலும் கோபித்துக்கொள்ள மாட்டான். ஒரு காபி குடித்துவிட்டு, டி.வி. பார்த்துக்கொண்டு இருப்பான். ஷேர் மார்க்கெட் ஆசாமி. ஒன்னும் அவசரம் இல்லை. உங்களைவிட்டால் அப்புறம் பிடிக்க இரண்டு மூன்றாண்டுகள் ஆகிவிடும்” என்றார்.

“வெளிநாட்டுப் பயணம் இருக்கிறதா?”

“பிஜி தீவில் ஜனவரியில் இந்திய புலம்பெயர்வு பற்றி ஒரு கருத்தரங்கம். அதற்கு ஒரு கட்டுரை எழுதணும்.”

“ஒரு கட்டுரை எத்தனை நாளில் எழுதமுடியும்.”

“எனக்கு ஒரு மாதம் ஆகும். சில பேராசிரியர்கள் ஆறுமாதம், ஒரு வருஷம்கூட எடுத்துக்கொள்வார்கள்.”

“அவ்வளவு நாளாகுமா?”

“ஆராய்ச்சி செய்து எழுதவேண்டும், அல்லவா?”

“என் நண்பர் ஐராவதம் மூன்று நாட்களில் ஒரு கட்டுரை எழுதிவிடுவார்.”

“அதெல்லாம் ஆராய்ச்சி கிடையாது. பத்திரிகை எழுத்து, ஆராய்ச்சி என்றால் உண்மையைக் கண்டுபிடித்து எழுதுவது; அது பத்திரிகை எழுத்து கிடையாது.”

நான் சிரித்தேன்.

“நம்ம பதிப்பகத்திற்கு, க.நா.சுப்பிரமணியம் என்று ஒரு பெரிய எழுத்தாளர் வருவார். அவர் ஒரு மாதத்தில் ஒரு புத்தகம் எழுதிவிடுவார்.

‘நாவல் இலக்கியம்’ என்று ஒரு புத்தகத்தை முப்பது நாளில் மொத்தமாக எழுதிக் கொடுத்தார்.’’

“நான் அவரைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறேன். டில்லியில் ரொம்ப நாள் இருந்து இருக்கிறார். என்னால்தான் பார்க்க முடியாமல் போய்விட்டது. அவர் சிலப்பதிகார மொழிபெயா¢ப்பை இங்கிலீசில் படித்திருக்கிறேன்.’’

“பெரிய படிப்பாளி. எப்பொழுதும் படித்துக்கொண்டே இருப்பார். பெரிய விமர்சனர். தமிழ்நாட்டிலேயே பலருக்கு அவரைப் பிடிக்காது’’

“உங்களுக்குப் பிடித்திருந்திருக்கிறது.’’

“நீங்கள் இந்திராகாந்தி பற்றி என்னவோ சொல்ல வந்தீர்கள்?’’ என்று குறுக்கில் புகுந்தேன்.

“ஜவகர்லால் நேரு இந்திராவைப் படிக்கவைக்க சாந்திநிகேதன், இங்கிலாந்து எல்லாம் அனுப்பி வைத்தார். ஆனால் எங்கேயுமே இந்திரா படித்து முடிக்கவில்லை.’’

“படிப்பு புண்ணியமில்லை என்பதைப் புரிந்துகொண்டு விட்டார்கள் என்று சொல்லலாம். ஆனால் புத்திசாலித்தனமாகத்தான் ஆட்சி புரிந்தார்கள்.’’

“தன் சக அமைச்சர்களை எல்லாம் சவுக்கு வைத்துக்கொண்டு அடித்தார். அவர் எமர்ஜென்ஸி போட்டதுகூட பல அமைச்சர்களுக்குத் தெரியாது. ஆனால் தெரிந்தது மாதிரி காட்டிக் கொண்டார்கள். எதிர்த்தவர்களை எல்லாம் உள்ளே தள்ளினார். வாய் திறக்காதவர்களை எல்லாம் வெளியில் திரியவிட்டார். உண்மையாகவே இந்தியா ஓர் இருண்ட காலத்தில்தான் இருந்தது.’’

“அப்பொழுது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?’’

“ஆஸ்திரேலியாவில் இருந்தேன். ஐந்து நாட்கள் கழித்து டில்லிக்கு வந்தேன். விமானம் ஏறியபோது இருந்த டில்லி இல்லை, கீழே இறங்கியபோது இருந்த டில்லி வரை ஒன்றும் எனக்கு ஐந்து நிமிடம் பிடிபடவே இல்லை.’’

“தண்டனைக்குத்தான் மனிதன் பணிகிறான்.’’ என்றார் சிவமணி.

“இல்லை. நான் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டேன். மனித விரோதிகள் சொல்கிற சொல் இது. மனிதன்மீது எத்தனை குற்றச்சாட்டுகள் சொன்னாலும் மனிதன் என்கிறவன் மனித விரோதி இல்லை.”

“சென்னையில் நாங்கள் இங்கே நிறைய பார்த்தோம். குலைத்துக்கொண்டிருந்த நாய்கள் எல்லாம் அடித்த அடியில் வாயடைத்துப் போய்விட்டன.

“இந்திரா அடிக்கச் சொல்லல.”

“அடிமைகளுக்கு அதிகாரம் கொடுத்தால் அப்படித்தான் நடக்கும்.”

“அதிகாரம் என்பதே துஷ்பிரயோகம் செய்யத்தான் என்று ஒரு மேல்நாட்டு அறிஞன் சொல்லியிருக்கிறான்.”

“அதில் மேல்நாடு என்ன? கீழ்நாடு என்ன? எல்லா நாட்டிலும் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள்.”

நன்முத்து பதிப்பகத்தின் டெலிபோன் அடித்தது.

“நீங்கள் பேசுங்கள்” என்றார் வைத்தீஸ்வரன்.

சிவமணி ஒரு நிமிஷம் பேசிவிட்டு, “உங்களுக்குத்தான். ஸ்ரீராம் பேசுகிறார்?” என்று போனை கொடுத்தார்.

“சொல், ஸ்ரீராம்?”

“நான் இரண்டு மணி நேரமாகக் காத்துக்கொண்டு இருக்கிறேன். என்னை வரச் சொல்லிட்டு நீ கிளம்பிப் போயிட்ட”

“நண்பரைப் பார்த்தேன். பேச்சில் மறந்து போய்விட்டது. நீ இரு. நான் வர்றேன்.”

“நான் கார் அனுப்பி இருக்கிறேன். நீ கார்ல வந்துடு. நேரா கலாஷேத்ரா!”

“சரி” டெலிபோனை கீழே வைத்தார்.

“நீங்கள் புறப்படுங்கள் வைத்தீஸ்வரன்?” என்றார் சிவமணி.

“இன்று நல்ல பொழுது” என்று எழுந்தார்.

“எல்லா பொழுதும் நல்ல பொழுதுதான்.”

“ஆமாம். ராஜாவைச் சந்தித்ததுதான். இந்தப் பயணத்தில் பெரிய காரியம். அவரை அழைத்துக்கொண்டு டில்லி வாருங்கள். ஒரு வாரம் நம் வீட்டில் தங்கி இருக்கலாம். அப்படியே ரிஷிகேஷ் ஹிர்துவார் போகலாம்.”

“ரிஷிகேஷ் சிவானந்த ஆசிரமத்தில் நான்கு நாட்கள் தங்கி கங்கையைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்.” என்றார் சிவமணி.

“நீங்கள் சென்றமுறையும் இப்படித்தான் சொன்னீர்கள். ஆனால் புறப்பட்டு வரல்லை.”

“இந்தமுறை ராஜா இருக்கிறார். அவரோடு வந்துவிடுகிறேன்.”

“என்ன ராஜா. நீங்கள் தான் பொறுப்பு.”

“நான் இதற்கெல்லாம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள மாட்டேன்.”

“ராஜா சரியான ஆள் என்று இதனாலத்தான் நான் சொன்னேன்.”

“கார் கீழே ரொம்ப நேரமாக நிற்கப்போகிறது”

அவர் தலையசைத்துக் கொண்டு புறப்பட்டார். நாங்கள் வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்தோம்.

★

## அத்தியாயம் 11

நானும் சிவமணியும் எதிர் எதிராகப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்து இருந்தோம். நான் அதிகமாகப் பேசுகிற ஆள் என்றாலும் பேசாமலும் மணி கணக்காக உட்கார்ந்து கொண்டிருப்பேன். அது என்னால் முடியும். எப்பொழுது பேச வேண்டும் என்பதும், எப்பொழுது பேசாமல் இருக்கவேண்டும் என்பதும் தெரியும். மனிதன் என்றால் அதுதான். எல்லாம் அவன் கைவசந்தான் இருக்கிறது. கெட்டது நல்லதற்கெல்லாம் அவன் தான் பொறுப்பு. அவனின்றி அவனுக்குத் துணையும், பகையும் இல்லை. என் நண்பர் ஐராவதம் அதைத்தான் சொல்வார். அவர் எனக்காகச் சொல்கிறார் என்பது இல்லை. பொதுவாகச் சொல்கிறார் அது ரொம்பப் பேர்களுக்குப் பொருந்தி போய்விடுகிறது.

"இந்தியாவில் நூற்று இருபது கோடி மனிதர்கள் இருக்கிறார்கள் என்றால் எல்லோரையும் பத்து வகைக்குள் அடக்கிவிடலாம்." என்றேன் ஒருநாள் ஐராவதத்திடம்.

"அது அதிகம். ஐந்து வகைக்குள் அத்தனைப் பேர்களையும் பார்த்துவிடலாம். நீ பாட்டா செருப்புக் கடைக்குப் போ. உனக்கு செய்தது போலவே ஆறாம் நம்பர் செருப்பு கிடைக்கிறது. உன் காலைப்பார்த்து, கணக்கெடுத்து செய்தது போல. ஆனால் உன் காலை அவன் பார்த்ததே இல்லை. அவனுக்கு உன்னைத் தெரியாது. ஆனாலும் நீ ஆறாம் நம்பருக்குள் அடக்கம். அதுதான் மனிதன். அவனுக்கான மனோதத்துவம். சொல்வதில் பிரியம்; சொல்லாமல் இருப்பதில் கவனம். எல்லாம் இருக்கிறது."

"நீ எத்தனையாவது நம்பர்"

"நீதான் சொல்லவேண்டும். உனக்குத் தெரியும்."

"எனக்குத் தெரியும். ஆனால் சொல்லமாட்டேன். தெரியும் என்பதால் சொல்ல வேண்டும் என்பது அவசியம் இல்லை. எனக்கு எப்பொழுது சொல்ல வேண்டுமோ அப்பொழுது சொல்வேன்."

"இது நன்றாக இருக்கிறது!"

"எதுவும் விமர்சனத்திற்குள் கிடையாது. அதுவும் வாழ்க்கை என்பது யாருடைய விமர்சனத்திற்குள்ளும் உட்பட்டிருக்கவில்லை."

“பேச்சில் பயன் உண்டா?”

“பயனில்லாத சொல் சொல்லற்க என்று ஐயன் திருவள்ளுவர் சொல்லி இருக்கிறார்”

“நான் இனி பேசப்போவதில்லை.”

“மனிதர்கள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பேசாமல்தான் வாழ்ந்து வந்தார்கள். அதனால் அவர்கள் எதையும் இழந்துவிடவில்லை. பேசக் கற்றுக் கொண்டதால் புதிதாக ஒன்றும் சொல்லிவிடவில்லை.”

“கடவுள்தான் பேசக் கற்றுக் கொடுத்தார் என்றுதான் நம்பிக் கொண்டிருந்தேன்.”

“நானே கடவுள் அருளால் பிறந்தவன் என்றுதான் அம்மா சொல்லும்.”

“அபூர்வம், எல்லாம் கடவுள் அருள். கடவுளால் படைக்கப்பட்டது. மனிதன், மகத்தான மனிதன் என்பதற்கு இதுதான் முதல் காரணம். அவன் செய்த அற்புதமான காரியங்கள் மீது உரிமை பாராட்டுவதே இல்லை. தன்னுடையது என்று சொந்தம் கொண்டாடுவது கிடையாது. கடவுள் அருள் என்று அர்ப்பணித்து விடுகிறார்கள். அதுதான் சொல்வதில் இருக்கிற திறன்.”

”திறன், திறமை என்றதும் நினைவிற்கு வருகிறது. கிறிஸ்துவர்கள் நம்பிக்கைப்படி கடவுள் ஆறுநாட்கள் படாத பாடுபட்டு இந்த உலகத்தைப் படைத்தார். உழைத்தால் களைப்பு வரும். ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். ஆறு நாட்கள் உழைத்து உலகத்தை சிருஷ்டித்த கடவுள் ஏழாவது நாள் ஓய்வு எடுத்துக் கொண்டார். அதுதான் ஞாயிற்றுக்கிழமை. அரசாங்கம் விடுமுறை அளிக்கிறது.”

“ஓய்வு நல்லது. அது மூளைக்குச் சக்தியைக் கொடுக்கிறது. உடம்புக்கு வலு கொடுக்கிறது. ஆனால் அரசாங்க ஊழியர்கள் ஆறு நாள்கள் வேலை செய்கிறார்கள் என்பது அநியாயம். அது கடவுளுக்கே அடுக்காது.”

“நீ இப்படி எல்லாம் பேசிக்கொண்டிருந்தால் உனக்கு எதிராகப் பேரணி நடத்துவார்கள்; உன் வீட்டின் முன்னே மறியல் செய்வார்கள்”

“இனி நான் பேசவில்லை. பேசாமல் இருக்கிறேன்.” என்றேன்.

“நம்ப வைத்தீஸ்வரன் ரொம்ப பேசுகிறார் என்றாலும் ரொம்ப நல்லவர். கல் மனசு இல்லாதவர்” என்றார் சிவமணி.

“அதான் நீங்கள் சொல்வதில் இருந்து உடனே தெரிகிறது. அம்மா பற்றித்தான் நிறைய பேசுகிறார். மனைவி, குழந்தைகள் இருக்கிறார்களா?”

“அம்மா பிள்ளை. நான்கூட அவர் அம்மாவைப் பார்த்துப் பழகி இருக்கிறேன். எண்பத்து நான்கு வயது வரையில் திடமாக இருந்தார்கள். மகனுக்கு விதவிதமாக சமைத்துப் போட்டார்கள். நான் டில்லிக்குப் போய் இரண்டு நாள் அவர் வீட்டிலே தங்கி இருந்தேன். கோல் மார்க்கெட் பக்கத்தில் பெரிய வீடு. விருந்தினர்களுக்கென்றே இரண்டு அறைகள் ஒதுக்கி வைத்திருந்தார்.”

“திருமணம்?”

“நல்ல மனுஷனுக்கு எல்லாம் நல்ல வாழ்க்கை அமையறது இல்லை. அது அவன் தப்பா? ஆண்டவன் தப்பா? என்று சொல்ல முடியாது. ஆனால் எங்கேயோ ஒன்றும் சரியில்லாமல் போய் விடுகிறது. கும்பகோணத்தில் சொந்தத்தில் தான் பெண் எடுத்தார்கள். அதுவும் அம்மா வழி. இங்கிலீஷ் லிட்ரேச்சர் படித்த பெண். கல்யாணத்தின்போது வைத்தி ஐ.ஏ.எஸ். எழுதி இருந்தார். இண்டர்வியூவியே போய்விட்டது. பெண் வீட்டார் இவர் ஐ.ஏ.எஸ். ஆவார் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள் போலும். முதல்முறை போனதும் மறுபடியும் எழுதச் சொன்னார்கள். அதெல்லாம் சரிப்படாது என்று கல்லூரிக்கு ஆசிரியராகப் போய்விட்டார். அவர் மனைவிக்கு அது பிடிக்கவில்லை. இரண்டாவது அம்மாகூட இருந்தார். அது சுத்தமாகப் பிடிக்கவில்லை. அம்மாவும் லேசுப்பட்ட ஆள் இல்லை. வைத்தி, வைத்தி என்று மகனை தன் முந்தானையில் முடித்து வைத்து இருந்தார். அவர் மனைவி கனகசுந்தரி என்று பெயர். மூன்று வருட வாழ்க்கைக்கு அப்புறம் கும்பகோணம் வந்துவிட்டார். இவரும் கூப்பிடவில்லை – அந்தப் பொண்ணு வரவில்லை.

“பாவம்”

“பெரிய பாவந்தான். அம்மா சாவதற்கு இரண்டு வருஷத்திற்கு முன்னால், “வைத்தி போய் கனகசுந்தரியை அழைத்துக்கொண்டு வாடா” என்று சொல்லியிருக்கிறார்.

“யார் அவள்?”

“என்னடா மூளை கெட்டுப் போய் கேட்கற. நீ கட்டிய மனைவி. நான்தான் துரத்திட்டேன்னு ஊரு உலகம் எல்லாம் சொல்லிக்கிட்டு இருக்கிறது. ஆனால் பகவானுக்குத் தெரியும். யார் எதற்கு எல்லாம் காரணம் என்று. இப்ப அதெல்லாம் அவசியம் இல்லை. நீ முதலில் போய் உன் மனைவி கனகசுந்தரியை கையோடு அழைத்துக்கொண்டு வா. அவள் உள்ளே வந்ததும் நான் வெளியில் போய் விடுகிறேன். கங்கா மாதா அழைத்துக்கொண்டே இருக்கிறாள்Ó என்று சொல்லி இருக்கிறார்கள்.

“இல்லை அம்மா. இத்தனை வருடங்கள் போய்விட்டன; அவ்வளவுதான். பட்டமரம் தழைக்காது என்பது மாதிரிதான். நான் போய் அழைக்கவும் மாட்டேன்; அவள் வரவும் மாட்டாள்.”

“அப்படியானால் நான் போய் அழைக்கிறேன். நான் அழைத்தால் என் மருமகள் வருவாள்.”

“உனக்குப் பேராசை அம்மா. பேராசை எல்லாம் ஒருநாளும் நிறைவேறாது.”

“அப்ப என்ன சொல்லுற வைத்தி?”

“நீ உன் வேலையைப் பார், அம்மா!”

“இதுதானப்பா என் வேலை. அம்மா என்றால் மகன் தன் மனைவி மக்களோடு நல்வாழ்வு வாழ்வதைப் பார்த்துக் கொண்டும் பகவான் நாமத்தைச் சொல்லிக் கொண்டும் இருப்பதுதான்.”

“இப்ப நான் நல்லாதானே வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.”

“ஒரு பெண்ணின் சிரிப்பும், குழந்தையின் அழகுரலும் கேட்காத வீடு, வீடு இல்லை.”

“நீ கதையெல்லாம் நிறைய படித்தது தொ¤கிறது, அம்மா!”

“இல்லை. இல்லை. வைத்தி தெளிவு பெற்று இருக்கிறேன். எனக்கு இப்பத்தான் புத்தியே தெளிந்திருக்கிறது.”

“நீ அவசியம் டாக்டரைப் பார்க்க வேண்டும். நாளை நாம் மனோதத்துவ டாக்டர் மிருதுளா மாத்தூரைப் பார்க்கலாம்!”

“நீதான் அம்மா டாக்டரை முதலில் பார்க்க வேண்டும்.”

“நானா? நீ, எப்ப மனோதத்துவ டாக்டர் ஆன..!”

“எல்லா அம்மாவும் மனோதத்துவ டாக்டர் தான். மகன் மனத்தில் மருமகள் மனத்தில் என்ன ஓடுகிறது என்பது அம்மாவுக்குத்தான் தெரியும். படித்து பட்டம் வாங்கிட்டா, போர்டு மாட்டிக்கொண்டு உட்கார்ந்து இருக்கலாம், யார் யார்க்கெல்லாம் என்ன வியாதி வந்திருக்கிறது என்று சீட்டு எழுதிக் கொடுக்கலாம். ஆனால் அந்த டாக்டருக்கு என்ன வியாதி பிடித்து இருக்கிறது என்று தெரியறதே இல்லை.”

“அம்மா, நான் அடுத்த மாதம் வியன்னா போறேன். வந்ததும் ஆற அமர உட்கார்ந்து பேசலாம்.”

“உனக்கு கல்லூரியில் பேசிப்பேசி, வீட்டில் பேசவே தெரியல.”

“நீ என்னம்மா சொல்றே?”

“நான் போய் என் மருமகளை அழைத்துக்கொண்டு வரப் போகிறேன். அதை உன்னிடம் சொல்கிறேன்.”

“அம்மா, நான் உன்னிடம் வாதம் புரியமாட்டேன். ஆனால் யதார்த்தம் என்பதும், விருப்பம் என்பதும் ஒன்று இல்லை. இரண்டும் தனித்தனியானது. இதற்கு மேல் நான் பேசக்கூடாது.”

“அதுதான் சரி”

“அதனை நீ முதலிலேயே சொல்லி இருக்க வேண்டும்.”

“எப்பப் புறப்படுறே என்று முடிவாகச் சொல். டிக்கெட், கார் டிரைவர், கெஸ்ட் ஹவுஸ் எல்லாம் ஏற்பாடு செய்து வைக்கிறேன்.” என்றார்.

அம்மா பஞ்சாங்கம், காலண்டரை எல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்து நாள், நட்சத்திரம் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்.

வைத்தீஸ்வரன் மாலையில் திரும்பி வந்தார். வந்ததும், “அம்மா நானே கும்பகோணம் போய் கனகசுந்தரியை அழைத்து வருகிறேன்” என்றார்.

அம்மா, மகன் கையைப் பிடித்துக்கொண்டார். “இது இதுதான் அப்பா பகவான்கிட்டே வேண்டிக்கொண்டே இருந்தேன். கடவுள்தான் உன்

மனசுக்குள் புகுந்து உனக்கு நல்ல யோசனை சொல்லியிருக்கார்.''

''கடவுள் இல்லை அம்மா. நீதான். நான் நூலகத்தில் உட்கார்ந்து ஐந்து நிமிடம் யோசித்துப் பார்த்தேன் அப்புறம் நீ சொல்வதில் இருக்கும் நியாயம் தெரிந்தது. நான் ஞாயிற்றுக்கிழமை புறப்படுகிறேன்.''

''பகவான் கண் திறந்துவிட்டார்.''

வைத்தீஸ்வரன் கும்பகோணம் சாரங்கபாணி தெருவில் உள்ள கனகசுந்தரி வீட்டிற்குப் போனபோது, அவள் வாசலில்தான் நின்றுகொண்டு இருந்தாள். அவரைப் பார்த்ததும், 'வாங்க' என்று வரவேற்றாள். உள்ளே அழைத்துக் கொண்டு போய் நாற்காலியில் உட்கார வைத்து அம்மா நலம் பற்றி விசாரித்தாள். தன் அம்மாவையும், அண்ணியையும் கூப்பிட்டு, 'வைத்தி சார், டில்லியில் இருந்து வந்திருக்கிறார்' என்று அறிமுகப்படுத்தி வைத்தாள்.

''ஏழு வருஷம் ஆகிறது?'' என்றாள் அவள் அம்மா.

அண்ணி உள்ளே சென்றாள். கனகசுந்தரி எதிராக உட்கார்ந்து கொண்டு, ''புரொபஸர் வேலை எப்படி இருக்கிறது? வெளிநாடுகளுக்கு எல்லாம் கருத்தரங்கில் பேசப்போவது எப்படி உள்ளது?'' என்று கேட்டாள்.

அம்மா உள்ளே சென்றாள்.

''கனகா, நான் உன்னை அழைத்துக்கொண்டு போக வந்து இருக்கிறேன்.''

காபி வந்தது. அண்ணியிடம் இருந்து காபியை வாங்கி ஒரு ஆற்று ஆற்றி, ''காபி சாப்பிடுங்கள். டிகிரி காபி உங்களுக்குப் பிடிக்கும்'' என்று ஸ்டூல் மீது வைத்தாள்.

வைத்தி காபியை ஒரு மிடறு குடித்துவிட்டு ஸ்டூல் மீது வைத்தார்.

''கனகா, நாம் இப்போது பழசைப்பற்றி பேச வேண்டாம். நான் புதுமனிதன்; நீ புது மனுஷி.''

''இல்லை. நான் பழைய மனுஷி. என் வாழ்க்கை இனி உங்களுடன் இல்லை என்றுதான் டில்லியில் இருந்து ரயில் ஏறினேன். தனியாகவே இரண்டு நாட்கள் பயணித்து கும்பகோணம் வந்து சேர்ந்தேன். பயம் போய்விட்டது.''

“இது என்ன பேச்சு?”

“காபி சாப்பிட்டு விட்டு நீங்கள் எழுந்து போய்விடலாம். எனக்குக் கோபம், வருத்தம் கிடையாது. அம்மாவை நான் கேட்டதாகச் சொல்லுங்கள்”

அவர் நிமிர்ந்து பார்த்தார்.

“எப்பொழுது கேட்டாலும் நான் டைவர்ஸ் பத்திரத்தில் கையெழுத்திட தயாராக இருக்கிறேன். எனக்கு உங்களுடன் வாழ்ந்தது போதும் என்றுபட்டது. அதனால் தான் பிரிந்து வந்தேன். பிரிந்தது மறுபடியும் சேர்வதற்கு இல்லை.”

அவர் தலையசைத்தார்.

“எம்.ஏ. முடித்துவிட்டேன். இங்கிலீஷ் ஆசிரியையாக வேலை பார்க்கிறேன். அண்ணி, தம்பி, அம்மா எல்லோரும் ஒன்றாக இருக்கிறோம். தம்பிக்கு இரட்டை பெண் குழந்தைகள். அவர்களோடு விளையாடிக் கொண்டு சுகமாக இருக்கிறேன்.”

“கனகா, நீ அற்புதமான பெண்.”

“கேட்க ஆனந்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் அப்படி இல்லை. இந்த வாழ்க்கையும் நன்றாகத்தான் இருக்கிறது. காபி சாப்பிடுங்கள்” டம்ளரை முன்னே நகர்த்தி வைத்தாள்.

வைத்தீஸ்வரன் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

“வெயில் அதிகந்தான்” என்றாள்.

“நீ என்னோடு வர வேண்டும்.”

கையெடுத்துக் கும்பிட்டாள். தலையை அசைத்தாள்.

“அம்மாதான் முதலில் புறப்பட்டாள். நாந்தான் வேண்டாம் என்று புறப்பட்டு வந்தேன்”

“அம்மாவிற்கு என் நமஸ்காரத்தைத் தெரிவியுங்கள்.”

“முடிவா என்ன சொல்லுற?”

“என்ன சொல்ல இருக்கிறது?”

“நீ வரமாட்ட”

“இங்கதான் இருக்கப் போறேன். பிறந்த வீடுதான், என் வீடு”

“நீ பிடிவாதமாக இருக்கிற”

“இல்லை. எனக்குப் புடிச்ச மாதிரி இருக்கிறேன்.”

வைத்தீஸ்வரன் எழுந்தார்.

“காபி சாப்பிட்டு விட்டுப் போகலாம்”

“நீ கொஞ்சம்கூட மாறவில்லை”

அவள் லேசாகச் சிரித்தாள்.

வைத்தீஸ்வரன் தலையை அசைத்துக்கொண்டு வேகமாக வெளியில் வந்தார். தலை குனிந்தபடியே நடந்தார். அடுத்த நாள் பூம்புகார் சென்றார். இரண்டு நாட்கள் விருந்தினர் மாளிகையில் தங்கி இருந்தார். பிறகு தன் பால்ய கால சிநேகிதன் ராஜசேகரனோடு வைத்தீஸ்வரன் கோயில் வந்தார். புதிது புதிதாக நாடி ஜோதிடர்களின் விளம்பரப் பலகைகள் பார்த்தார்.

“நம்மூர் நாடி ஜோதிட ஊராகிவிட்டது. தமிழ்நாட்டில் இருந்து பெரிய பெரிய அதிகாரிகள், நடிகா்கள், அரசியல் வாதிகள் எல்லாம் நாடி ஜோதிடம் பார்க்க வருகிறார்கள். நீ பார்க்கிறீயா?”

“என் ஜாதகம் நல்லா இருக்கிறது.”

“எல்லா ஜாதகமும் நல்ல ஜாதகம்தான்.”

“வைத்தீஸ்வரன் கதையை ரொம்ப நேரம் கேட்க முடியவில்லை. கேட்டதே அதிகம் என்று பட்டது. ஆனால் இத்தனை இத்தனையும் தாங்கிக்கொண்டு சந்தோஷமாக இருப்பதுதான் ஆச்சரியமாக இருந்தது. எனக்கு தன்னை வெளியில் வெளிச்சம் போட்டுக்காட்டும் ஆள்களை அதிகம் தெரியும். அதுதான் சுபாவம். வாழ்க்கையே கஷ்டமென்று புலம்பித் தீர்க்கிறவர்கள். அவர்கள் பெரும் கூட்டத்தில் சேராமல் இருக்கும் சில ஆள்களில் ஒருவராக வைத்தீஸ்வரன் பட்டார்.”

“வீட்டிற்கு வா, சாப்பிட்டு போகலாம்” என்றார் சிவமணி.

“இல்லை மாமா. வேணுவை ஏழரை மணிக்கு சாப்பாட்டிற்கு வரச் சொல்லியிருக்கிறேன்.”

“யார்? சிங்கப்பூர்க்காரனா? எப்படி இருக்கிறான்”?

“அவனுக்கு என்ன? மாமனார் ஓட்டல் வைத்துக் கொடுத்து இருக்கிறாராம். அவன் அதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறானாம்.”

“அவனா ஓட்டல் பார்த்துக் கொள்கிறான். சினிமா எடுத்துக் கொண்டிருந்தான். வாகினிக்கு ஒருநாள் கூட்டிப்போய் படப்பிடிப்பு காட்டினான்.”

“அந்தப்படம் சென்சார் எல்லாம் ஆனதாம். அப்புறம் என்னென்னவோ பிரச்னை? படம் வெளிவரவில்லை. அவனைப் பார்த்தால் பிரச்னையே வாழ்க்கை என்பான்.”

“அவன்தான் ஆயிரம் பிரச்னை. என்னிடம் மூவாயிரம் ரூபாய்க்கு புத்தகங்கள் வாங்கிக்கொண்டு போனான். இரண்டு வருஷம் ஆகிறது. இந்தப் பக்கம் தலை காட்டுவதே இல்லை.”

“இப்ப மாம்பழ ஏற்றுமதி என்று சொல்லிக்கொண்டிருக்கிறான். அதற்குத்தான் வந்திருக்கிறான்.”

“உன்னை வீட்டுக்குப் கூப்டானா?”

“சிங்கப்பூர்க்கு கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறான்.”

“போய்விட்டு வா¢றதுதானே”

“போகலாம்” என்று சொல்லிக்கொண்டே எழுந்தேன். அவரும் எழுந்து பூட்டையும், சாவியையும் கையில் எடுத்தார்.

★

## அத்தியாயம் 12

நான், வேணு என்னும் வேணுகோபாலைப்பற்றி நினைத்துக் கொண்டே கிளப் உள்ளே நுழைந்தேன். சாதாரணமாக நான் யாரைப் பற்றியும் நினைக்கிற ஆளில்லை. எனெனில் எனக்கு எவனோடும் உறவும் இல்லை; பகையுமில்லை. எனக்கு இன்னொருவன் எதையும் கொடுக்க முடியாது, அது போல நான் மற்றவர்களிடம் இருந்து எதையும் வாங்கிக் கொள்ளலாம் நிலையிலும் இல்லை. நான் நன்றாக இருப்பதற்கு இதைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். பலர் தெரிந்து கொள்ளாமல் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். அற்ப பிச்சைக்காரன் மாதிரி ஒரு வேலைக்கு, ஒரு பரிசுக்கு, ஒரு சிபாரிசுக்கு நாயாக அலைந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த அலைச்சல் தான் வாழ்க்கையாக இருக்கிறது. நான் அறிந்து கொண்டு அமைதியாக இருக்கிறேன்.

எனக்கு அடிக்கடி வயிறு பற்றி நினைவுக்கு வரும். ஏனென்றால் அது ஒரு அற்புதமான உடல் உறுப்பு. கண்டதை எல்லாம் கடித்தும், கடிக்காமலும் வயிற்றுக்குள் தள்ளி விடுகிறோம். வயிறு எல்லாவற்றையும் ஒழுங்குப் பண்ணி கொண்டுவிடுகிறது. அதற்கு எத்தனை சாமர்த்தியம் வேண்டும். இதுதான் என் ஆச்சரியம். வயிறு சும்மா இருந்தால் நீ சுகமாக இருக்கிறாய் என்பது பொருள். மனிதன் என்றால் வயிறு மாதிரி சும்மா இருக்க வேண்டும். மனசு மாதிரி பரபரக்கக்கூடாது. இரண்டும் பக்கத்துப் பக்கத்தில் இருக்கிறது என்பதால் ஒன்று இல்லை. இரண்டும் வேறுவேறு என்பது மட்டுமல்ல. இரண்டும் ஒன்றுக்கு ஒன்று எதிரானது. அலை பாயும் மனசும், அமைதியாக இருக்கும் வயிறும் மனிதனுக்கு உள்ளேதான் இருக்கின்றன. எனென்னமோ தெரிந்து கொண்டிருக்கும் மனிதன் இந்த இரண்டு பற்றியும் தெரிந்து கொண்டு இருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும்?

இந்திரா காந்தியை சுட்டு இருப்பார்களா?

வைத்தீஸ்வரன் மனைவி ஏன் அவரோடு வாழ மறுத்து விட்டாள்?

நண்பர் ஐராவதத்திடம் சொன்னால் அவர் ஒரு விளக்கம் சொல்வார். நான் யோசனை கேட்க மாட்டேன். ஆனால் இன்னொரு ஆளை பேச விட்டு கேட்டுக் கொண்டிருப்பேன். எனக்கு அது பிடித்தமானது. அப்புறம் நானே குறுக்கே புகுந்து பேச ஆரம்பித்து விடுவேன். அது நான் அறிவதும்,

அறிந்து செய்வதும் ஆகும். பலர்க்குத் தாங்கள் செய்கிற காரியங்கள் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் ஒவ்வொரு செயலுக்கு எதிர்வினை உண்டு. அதாவது செடி நட்டால் இலைவிடும். இலைவிட்டால் பூ பூக்கும். பூத்தால் வண்ணத்துப்பூச்சி வரும். காய் காய்க்கும். பழமாகும் இதுதான் விளைவு. அது தெரியவில்லை என்றால் அது அவன் பாடு. அதன் பலாபலன்களை அவன்தான் அனுபவிக்க வேண்டும். நான் அதனை ஐராவதத்திடம் சொன்னேன். தலையசைத்தார்.

“நீ ஆமோதிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை.”

“ஆமாம். நீ சொல்லும் போதே தெரியும்”

“உனக்கு தெரியாது ஏதாவது உண்டா?”

“எதற்கு இந்தக் கேள்வி?”

“பள்ளிக்கூடத்தில் பையன்களை முட்டாள்கள், ஒன்றும் தெரியாதவர்கள் என்று நிலைநாட்ட ஆசிரியர்கள் என்னும் மூடர்கள் கேள்வி கேட்கிறார்கள். பதில் சொல்லாத பையனை அவமானப்படுத்தி சந்தோஷப்படுகிறார்கள். அதுதான் ஆசிரியர்களின் வேலையாக இருக்கிறது?”

“நான் என்னவோ அறிவை அறிந்து கொள்ள கேள்வி கேட்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.”

“ஐயோ, பாவம்”

“அது நன்றாக இருக்கிறது”

“உலகத்தில் நன்றாக இல்லாதது எதுவும் இல்லை. இருக்கின்ற ஒவ்வொன்றும் நன்றாகத்தான் இருக்கிறது. மூளை கெட்ட மனிதன்தான் இது நல்லது; அது கெட்டது, இது நன்றாக இல்லை. அது நன்றாக இருக்கிறது என்று பிரித்து வைத்துக் கொண்டிருக்கிறான். ரோஜாப்பூ நன்றாக இருக்கிறது என்றும், எருக்கம் பூ நன்றாக இல்லை என்றும் கூறு கெட்ட இவனுக்கு எவன் சொன்னான். ரோஜா பூக்களின் ராணியாம். மற்ற பூவெல்லாம் மட்டமானதாம். இவனுக்கு ஒன்று பிடித்துப் போய்விட்டால் அதைப் புகழ்ந்து பாராட்டிக் கொண்டாடுவான். கொண்டாடட்டும். அது அவன் பாடு. அதற்காக இன்னொன்றை ஏன் தாழ்த்த வேண்டும். எருக்கம்

பூவை ஏன் இகழவேண்டும். ஊமத்தம் பூவை ஏன் உதாசினப்படுத்த வேண்டும். இதுதான் கேள்வி. புத்தி பூர்வமாக பதில் சொல்ல வேண்டும்''

''புத்தி என்றால்''

''அதான் பிரச்னை. முதலில் அதை அறிய வேண்டும். அறியப்படாமல் இருக்கிறது என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது.''

''தப்பிப்பது, மாட்டிக்கொள்வது என்பதெல்லாம் ஒன்றும் இல்லை. அறிவு உண்டா? அதாவது இருக்கிறதா என்று கேட்டால் பதில் சொல்ல வேண்டும்.''

''நான் இல்லை என்பேன்''

''நீ முட்டாள். என்னை வெல்ல முடியாது என்பதால் சொல்வதாக எடுத்துக் கொள்ள மாட்டேன்.''

''எனக்கு காபி சாப்பிட வேண்டும் போல இருக்கிறது.''

''ஆமாம், எனக்குந்தான்''

''இதையெல்லாம் எழுதவேண்டும்''

''நானா?''

''ஆமாம். எழுதி சிவமணியிடம் கொடுத்துப் புத்தகம் போடு. படித்துவிட்டு நீ பெரிய அறிவாளி என்று திருக்காவூரில் அறிவுச்சுடர் என்று பட்டம் கொடுப்பார்கள்.''

''இது நல்ல யோசனை. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தொண்டர் டைரி எழுதி வந்தார்.''

''மகேந்திர குமார்''

''ஆமாம் அவரே தான். கஷ்ட ஜீவனம். பெரிய குடும்பம். மனைவி மற்றவர்கள் சண்டைக்காரர்கள். ஆசிரியர். பல நாட்கள் பள்ளிக்கூடம் போய் தப்பித்துக் கொண்டார். பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் வீட்டில் இருக்க முடியாமல் எங்கேயாவது ஓடி பொழுதைப் போக்கலாம் என்று ஓடியவர் தட்சணேஸ்வரம் போனார். பகவானைக் கண்டார். கண்டவற்றையும், கேட்ட வற்றையும் டைரி எழுதி வைத்தார்.''

“நல்லதுதான். எழுதினால் அழிக்க முடியாது”

“நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. அவர் எழுதியதைப் பின்னால் புத்தகமாகப் போட்டார்”

“டைரி புத்தகமாக வந்தால் பிரச்னைதான்”

“டைரி பிரச்னைக்காக எழுதப்படுவதில்லை. நடந்ததை நடந்த மாதிரி எழுதுவது”

“அதுதான் பிரச்னையே! எழுதியவர்கள் செத்துப் போன பிறகு டைரி, இருக்கற ஆளை எல்லாம் பதற வைக்கிறது. விக்டோரியா ராணி அறுபது வருஷத்திற்கு மேலே ராணியாக இருந்தார். பெரிய மகாராணி. இந்தியா, ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, ஜமைக்கா – எல்லாவற்றுக்கும் அவர்தான் ராணி. இங்கிலாந்தில் சிம்மாசத்தில் உட்கார்ந்து கொண்டு ஆட்சி புரிந்துவந்தார்.”

“பெண்ணரசியின் ஆட்சி நல்லதுதானே. அன்பு, கருணை நாட்டில் பிரவாகமாக ஓடி இருக்கும்”

“நான் சொல்ல வந்தது, ராணி ஆட்சி பற்றி இல்லை. மகாராணி டைரி எழுதி வந்தார்.”

“வில்லங்கம் வரப்போகிறதா?”

“சாமான்யன் என்றால் எல்லாம் வெளியில் வந்துவிடும். மகாராணி விஷயம் அல்லவா? ராணி மரணமுற்றதும் அவர் மகள் டைரியைப் படித்தாள். நல்லதை மட்டும் அச்சில் போட்டார். மற்றதையெல்லாம் நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டார்.”

“அது உன் சௌகரியம். சொல் உன் சொந்த சரக்கு நீ எப்படி வேண்டுமானாலும் பேசலாம்.”

“நான் பேச மாட்டேன்”

“ஏன்?”

“பேசுவதுதான் ஆபத்து. இந்திரா காந்தி எமர்ஜென்சி போட்டிருக்கார். ஏதாவது ஏடாகூடமாகப் பேசினால் பிடித்து உள்ளே போட்டு விடுவார்கள்”

''நான் இந்திரா வாழ்க! எமர்ஜென்சி வாழ்க! எமர்ஜென்சியால் வாழ்க்கை வளர்கிறது என்று கத்துவேன்.''

"அப்போதும் பிடித்து உள்ளே போட்டு விடுவார்கள். உன் பேச்சில் ஏதோ கட்சி இருக்கிறது. பின்னால் இருந்து யாரோ இயக்குகிறார்கள் என்று குற்றம் சாட்டுவார்கள்.''

"பேச்சுக்கு இவ்வளவு ஆபத்து இருக்கிறதா?''

"பேச்சே ஆபத்தானது. உலகத்தில் நடந்துள்ள பல கெட்ட காரியங்கள் பேச்சால் நேர்ந்ததுதான்''

"அதில் குடும்பத்தை முதலில் சேர்த்துக்கொள்ள வேண்டும்''

"ஆமாம். பேச்சால்தான் குடும்பங்கள் சிதைந்து உள்ளன.''

"நீ இன்றுதான் சரியாகப் பேசி இருப்பது தெரிகிறது''

"எதனால்? பேசியதாலா?''

''வேண்டாம். உன்னிடம் இனி பேசப்போவதில்லை''

"சரி. காபி சாப்பிடலாம்''

"அது நல்லது''

நாங்கள் பேசிக்கொள்வதைப் பார்த்தால் தெரு நாய்கள் கத்திக்கொண்டும், கடித்துக் கொண்டும் சண்டை போடுவது போல இருக்கும். ஆனால் எங்களுக்குள் சண்டையே கிடையாது. இன்னும் சொல்லப்போனால் அவரும் நானும் ஒரே ஆசாமிதான். சில நேரம் அவர் பேசுகிறார். பல நேரம் நான் பேசுகிறேன். மாறி மாறி நாங்கள் பேசினாலும் விரோதம் கிடையாது. பகையில்லை. பெரியவன் சின்னவன் என்ற பேதமில்லை. அறிவுள்ளவன் அறிவற்றவன் என்ற பாகுபாடு கிடையாது. அவரை நானும் என்னை அவரும் தெரிந்துக் கொண்டு இருக்கிறோம்.

அவர் மனைவி ஒருநாள் அதைத்தான் கேட்டார்: நல்ல பெண்மணி அறிந்ததை அறிந்த விதமாகக் கேட்டார். பலருக்கு அறிய அறிவு கிடையாது. அறிந்ததை அறிந்த விதமாகக் கேட்கத் தெரியாது. ஆனால் அவர் மனைவி அப்படி இல்லை. ஆனால் அவர் என்னவோ பெரிதாகப் படித்தவர் கிடையாது. பி.ஏ. எக்னாமிக்ஸ் என்று ஒருநாள் சொன்னார்.

“ஏன் படித்தே?”

“அதுதான் கிடைத்தது”

“ஏழைகளுக்குக் கிடைக்கும் கல்வி அதுதான். பெரிய பெரிய பணக்காரர்கள் எல்லாம் என்ன படிக்கவேண்டும் என்பதை இரண்டு வயது, ஐந்து வயதிலேயே தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. படிப்பு என்ற பெயரில் பாவம் ஏழைகளுக்கு ஏதோ ஒன்று கொடுக்கப்படுகிறது. அதில் படிப்பு மட்டுந்தான் என்று இல்லை. பணம் இல்லாதவனுக்கு உலகத்தில் கடைசி இடந்தான். அது என்னவோ கேட்க கஷ்டமாக இருக்கும். ஆனால் உண்மை அதுதான்.

ஐராவதம் மனைவி என் தங்கை மாதிரிதான். மாதிரி என்பது உபசார வார்த்தை. என் தங்கைதான். உலகம் நிறைய தங்கைகளைக் கொண்டிருக்கிறது. அயோக்கியர்கள் காதலிகளைக் கொண்டிருக்கிறது என்பார்கள். உள்ளே இருந்து வெளியே எடுத்துவிட ஏராளமான அழுக்கு மூட்டைகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நேரம் வாய்த்தால் உன்னிடம் கொடுத்துவிடுவார்கள். எனவேதான் நான் எவனையும் பேசவிடமாட்டேன். என் செவி அற்பனாகிய இவன் பேச்சைக் கேட்பதற்காக இல்லை. நான் ஒருபொழுதும் எனக்குச் செவி இருப்பது பற்றி வருத்தப்பட்டது இல்லை. ஆனால் அவனுக்குப் பேச வாய் இருப்பது பற்றி கோபப்பட்டிருக்கிறேன். அவனுக்கு வாயடைத்துப்போக வேண்டுமென்று சாபம் விட்டு இருக்கிறேன். அது எனக்கான சாபம் இல்லை. கேட்கும் செவி படைத்த எல்லோருக்குமானது. ஏனெனில் அவன் பேச்சு கேட்கக்கூடியதில்லை. அதுமட்டுமல்ல அவன் பேச்சு காற்றில் கலக்கக்கூடாது. காற்று என்பது தூய்மையானது. இனிமையான அனுபவம் கொடுக்கக்கூடியது. மெல்லிய மஸ்லீன் பட்டுத்துணி போல மேனியைத் தழுவிக்கொண்டு போகக்கூடியது. ‘மென்காற்றில் விளைசுகமே’ என்று ஒரு கவி பாடியிருப்பதை எங்கள் தமிழாசிரியர் நமச்சிவாயம் சொல்லக் கேட்டிருக்கிறேன். காற்று என்றால் மாசற்று. ஆனால் மாசற்ற காற்று மாசுபட்டு விட்டது. கரியமில வாயு அதிகமாக காற்றில் சேர்ந்து விட்டது. அதனால் மழை இல்லாமல் போய்விட்டது என்கிறார்கள். அதைவிட காற்றுக்குப் பெரிய தீங்கு இவர்கள் போடும் சப்தங்கள். அது காற்றில் ஏறிக் கொண்டு எல்லோரையும் படாதபாடு படுத்துகிறது. அதில் ஒரு ஆள் வேணுகோபாலன்.

அவன் ஒருநாள் என்னிடம், பேச்சுக் கலை வளர்ப்போம் என்ற புத்தகத்தைக் கொண்டு வந்து நீட்டினான்.

“நீயே வைத்துக்கொள்”

“தலைவர் போட்ட புத்தகம். நல்லா இருக்கிறது?”

“எனக்குத் தலைவனே கிடையாது. யாமார்க்கும் குடி அல்லோம்”

“நீங்கள் இப்படி சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். ஐராவதம் நேற்றே சொல்லி விட்டார். நீ ராஜாகிட்ட புத்தகத்தைக் காட்டி வாங்கிக் கொள்ளப்போறே என்று.”

“அது இருக்கட்டும், என்ன விலை போட்டு இருக்கு”

“அதெல்லாம் எதற்கு?”

ஐநூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தேன்.

“தாராள மனசு” என்றான்.

“குறைத்துக் கொடுத்தால் பேச்சுக்கலை வளராமல் போய்விடும்.”

“ஆனாலும் உங்களுக்குப் பேச்சுக்கலை வளர்ப்பவர்கள் மீது ரொம்பதான் எரிச்சல்.”

நான் பதிலொன்றும் சொல்லாமல் முன்னே நடந்தேன்.

வேணுகோபாலன் இரண்டு மாதங்கள் கண்களில் படவில்லை. சிங்கப்பூர் போய் இருக்கிறான் என்று ஐராவதம் ஒரு நாள் சொன்னார். ஏன்? எதற்கு? என்று கேட்கவில்லை, என் பழக்கம் அது இல்லை. என்ன சொன்னாலும் அதைக் கேட்டுக் கொள்வேன். அதற்கு மேல் விமர்சனம் ஏதும் கிடையாது. உன்னிடம் சொல்லப்படும் எதுவும் உனக்கானது இல்லை. அதில் எந்தவிதமான உரிமையும் உனக்குக் கிடையாது. அது சொல்லப்படுகிறது. அவ்வளவு தான். நீ காதில் வாங்கிக்கொண்டு கஷ்டப்பட வேண்டியதில்லை. இது திடமான கொள்கை. யோசித்துப் பெற்றதில்லை. நான் அதுவாகவே இருக்கிறேன். என்ன சொல்லியும் என்னை நோகடித்துவிட முடியாது. அதுதான் நான். தன்னை அறிதல் என்பது. அதற்கு தியானம் புரியவேண்டும். மந்திரம் கற்க வேண்டும் என்பது கிடையாது. வாழும் வாழ்க்கையிலேயே எல்லாவற்றையும் அறிந்து கொண்டுவிடலாம். கால்பந்து ஆடிக்கொண்டே கடவுளை அடைந்துவிடலாம் என்று விவேகானந்தர் சொல்லியிருப்பதாக ஐராவதம் சொன்னார். அதுவும் சரிதான். கால் பந்தாடுவது என்பது பெரிய

வேலைதான். இரண்டு கால்களால் பந்தை உருட்டிக்கொண்டு பத்துப் பதினொரு பேர்களுக்கு ஆட்டம் காட்டிவிட்டு கோல் போடுவது சாதாரணமான காரியமா? வாழ்க்கையில் எனக்குச் சாதாரணம், அசாதாரணம் என்று ஒன்றும் கிடையாது. எல்லாம் சிரமமானது; அதுபோல எல்லாம் உயர்வானது. எளிதானது. அது உனக்குத் தெரியவேண்டும். எது உனக்குத் தெரியவில்லையோ அதனோடு நீ இல்லை. அவ்வளவுதான்.

நான் கிளப் உள்ளே நுழைந்தேன். விளக்குகள் அணைந்து மறுபடியும் எரிய ஆரம்பித்தன. வாசலில் நின்று கொண்டிருந்த அவன் என்னைப் பார்த்ததும் கையெடுத்துக் கும்பிட்டான்.

“வா, வேணு” என்றேன்.

‘எப்படியும் பார்த்துவிட்டுப் போவது என்று உட்கார்ந்து விட்டேன். முருகேசன்கூட இரண்டு முறைகள் ரொம்ப நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறீர்கள்’ என்று கேட்டார்.

நான் முன்னே நடந்தேன்.

“இரண்டு நாட்களாக மனசே சரியில்லை. இந்திரா காந்தியைக் கொன்றது அம்மாவைக் கொன்றது மாதிரியே இருக்கிறது. அம்மா செத்தபோதுகூட நான் இவ்வளவு வருத்தப்படவில்லை. அன்னை கொல்லப்பட்டதும் ரொம்ப ஆடிப்போய்விட்டேன்.” என்றான்.

நான் திரும்பி ஒரு பார்வை பார்த்துவிட்டு நடந்தேன்.

“கணேசன், வா டில்லிக்கு போகலாம் என்று கூப்பிட்டான். எனக்கு மனசே சரியில்லை. அதனால் போகவில்லை”

“அப்படியா?”

“அவன் உதவாக்கரை. அவனோடு எல்லாம் போகமுடியுமா?” என்று கேட்டான்.

நான் நின்று அவனை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு முன்னே நடந்தேன்.

★

## அத்தியாயம் 13

இவனுக்கு கணேசன் உதவாக்கரையாகப் படுகிறான். கணேசனுக்கு இவன் உதவாக்கரை. ஐராவதம் ஒருநாள் வேணுகோபால், கணேசன் என்ற இரண்டு பேரும் உதவாக்கரை ஆள்கள். இவர்களைக் கிட்ட சேர்க்கக்கூடாது என்றார். நான் பேசாமல் கேட்டுக்கொண்டேன். மனிதர்கள் சுபாவம் என்றால் அது இன்னொருத்தன் பற்றிய அபிப்பிராயத்தைச் சொல்வதுதான். அதுசரியா? தவறா என்பது இல்லை பிரச்னை. அந்த அபிப்பிராயம் எப்படி உருவாகிறது? அதுதான் கேள்வி. கேள்வி இருந்தால் பதில் வந்துவிடும். இல்லாவிட்டால் பதில் வருகின்ற வரையில் கேள்விக்கு மேல் கேள்வியாகப்போட்டு பதில் கொண்டு வந்துவிடுகிற ஆள் ஐராவதம்.

நான் ஐராவதத்திடம் கேள்வி கேட்பதோ, விவாதம் புரிவதோ இல்லை. இரண்டும் அர்த்தம் இல்லாதது. வாழ்க்கைக்கு ஒன்றுக்கும் உதவாதது என்றால் அது கேள்வி கேட்பதுதான். கேள்வி கேட்பதால் நீ ஒன்றும் புத்திசாலி இல்லை; பதில் சொல்வதால் நீ மேதை இல்லை. கேள்விக்கும் பதிலுக்கும் பொருள் கிடையாது. உன் வாழ்க்கைதான் உனக்கு முக்கியம். அதனை வாழத்தெரியாவிட்டால் கேள்வியாலும், பதிலாலும் ஒரு பலனும் கிடையாது.

காவிரி ஆற்றின் கரையின் பக்கத்தில் மாரியம்மன் கோயில் தெரு இருந்தது. பெரிய கோயில். இருநூறு வருஷத்தது என்று சொல்லிக்கொண்டார்கள். நான் சின்ன வயதில் அம்மாவோடு அடிக்கடி சென்று இருக்கிறேன். பூசாரி முனியாண்டி. நெற்றி நிறைய திருநீறு பூசிக்கொண்டு அதில் பெரிய சிவப்புக் குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டிருந்தார். வெளுப்பாக தாடி, மீசை, உருண்டை உருண்டையான கண்கள், நல்ல கறுப்பு. அவர் எங்கள் பக்கத்து ஆளே இல்லை என்பது மாதிரி இருந்தார்.

“இது அம்மா?”

“பூசாரி. ரொம்ப நல்லவர்.பெரிய பக்திமான்!” என்றது அம்மா.

“பார்த்தால் பயமாக இருக்கிறது அம்மா.!” என்றேன்.

“ரொம்ப தங்கமானவர். மதுரை பக்கம். நம்ப ஊருக்கு வந்து பத்து வருஷமாகப் போகுது. இவங்க பூசாரியானதும் அம்மன் அருள் கேட்க

ரொம்ப பேர் வராங்க'' என்றது.

நான் கண்களை மூடித்திறந்தேன்.

முனியாண்டி பூசாரி தட்டில் ஒரு தேங்காய் மூடி, இரண்டு வாழைப்பழம். குங்குமம், விபூதி எல்லாம் வைத்துக் கொடுத்தார். அம்மா பயபக்தியோடு வாங்கிக் கொண்டது. என்னிடம் ஒரு வாழைப்பழத்தை நீட்டியது. நான் அம்மாவைப் பார்த்தேன்.

நான் சின்ன வயதில் இருந்தே மற்றவர்களிடம் கை நீட்டி எதையும் வாங்க மாட்டேன். ஏற்பது இகழ்ச்சி என்று நான் அப்புறம் தான் படித்தேன். எனக்கு இயல்பிலேயே அது இகழ்ச்சியாகப்பட்டது. நான் இதைச் சொல்கிறேன் என்றால் சொல்வதற்கு முன்னே நான் இருக்கிறேன். எதை அறிந்து கொண்டிருக்கின்றேனோ அதையே சொல்கிறேன். பலருக்கு தன் இருப்பு பற்றி– தன் இருத்தல் பற்றித் தெரியாது. அதனால் சொல்ல முடியவில்லை.

ஐராவதம் ஒருநாள் நடைப்பயிற்சியின்போது சொன்னார். ''ராஜா, வாழ்க்கையை அறிவது என்பதும், வாழ்வது என்பதும் ஒன்று கிடையாது. இரண்டும் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இல்லை.''

நான் கூடவே நடந்தேன்.

''வாழ்க்கையைப்பற்றி அதிகமாக அலசி ஆராய்ந்து சொல்லக் கூடியவர்களுக்கு சொந்த வாழ்க்கை சுகமானதாக அமைந்து விடுவதில்லை. ஒன்றுமே அறியாதவர்களுக்கு நல்ல வாழ்க்கை அமைந்து விடுகிறது. அதற்கு நிறைய எடுத்துக்காட்டுகள் சொல்லலாம்.''

''வாழ்க்கை என்பது எடுத்துக்காட்டுகளால் அறிவதில்லை.''

''ஆனால் வாழ்க்கையைப்பற்றி அறிந்து கொள்ள எடுத்துக்காட்டுகள் அவசியமாகின்றன. நான் எங்கள் குடும்பத்தில் இருந்தே ஒரு உதாரணம் சொல்றேன்.''

''வேண்டாம். நான் கேட்க மாட்டேன். ஒன்று இரண்டு உதாரணத்தை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் பொதுமைப்படுத்தும் காரியம் வேண்டாம். அது பெரிய பெரிய பூதங்களை குங்குமச் சிமிழ்க்குள் அடைப்பது மாதிரி பனித்துளியில் சூரியன் தெரிகிறான் என்று காட்டுவது போல. எனக்கும் எடுத்துக் காட்டிற்கும் சம்பந்தம் கிடையாது.''

“வாழ்க்கை விவாதத்தில் இல்லை”

“அதுதான். வாழ்க்கை இருக்கிறது ஒவ்வொருவரும்வாழவேண்டும். ஆனால் வாழ்கிற வாழ்க்கை பற்றி உனக்கு விமர்சனம் இல்லாமல் இருக்கலாம். மற்றவர்களுக்கு உன் வாழ்க்கை ஒரு அபிப்பிராயத்தைக் கொடுக்கிறது.”

“இல்லை. அவர்கள் தங்களிடம் இருக்கும் கருத்து, அபிப்பிராயம் அப்புறம் நீ என்னென்னவோ சொல்லிக்கொள்ளலாம். அது எல்லாம் வாழ்க்கை இல்லை. உன் மதிப்பீடுக்கு என் வாழ்க்கை இல்லை என்பதால் நான் சரியாக வாழவில்லை என்பது கிடையாது.”

“நீயும் நானும் ஒன்றா? உன் வாழ்க்கை என்பது, என் வாழ்க்கை இல்லை. நாம் ஒன்றாக இருக்கிறோம் என்பதால் ஒன்றும் கிடையாது. அலெக்சாண்டர் அதுதான் மகா அலெக்சாண்டர் இருபது வருஷ காலம் பக்கத்து நாடுகளை எல்லாம் பதற அடித்தவன் என்ன ஆனான் தெரியுமா? முப்பத்திரண்டு வயதில் செத்துப் போனான். அவன் செத்தது சரிதான். நினைத்த காரியம் முடிந்து விட்டது. அப்புறம் வாழ்வதில் அர்த்தம் இல்லை. செத்துப்போனான். எப்படி செத்தான் என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் இரண்டாயிரம் வருஷமாக மாற்றி மாற்றிச் சொல்லி வருகிறார்கள். ஒரு கோஷ்டி அவன் நண்பர்கள், தளபதிகள் விஷம் கொடுத்துக் கொன்றார்கள் என்கிறார்கள். இன்னொரு கோஷ்டி அதிகமாகக் குடித்து போதை உச்சத்திற்கு ஏறி விழுந்து செத்தான் என்று சொல்கிறார்கள். மூன்றாவது கோஷ்டி, எதையும் நல்லதாகச் சொல்ல வேண்டும் என்கிறவர்கள், காய்ச்சல் கண்டு மாமன்னர் போய்விட்டார் என்கிறார்கள். எப்படியானாலும் அவன் இல்லை. இல்லாமல் போய்விட்டான்.”

“சாவு மர்மமாக இருக்கிறது?”

“சாவு மர்மம் இல்லை. பெரிய மனுஷன் எப்படி செத்தான் என்று சொல்வதில் தான் மர்மம் இருக்கிறது. பெரிய மனிதன் என்றால் அவன் சாவு கௌரவமான முறையில் இருக்க வேண்டும்; சின்ன மனிதன் என்றால் எப்படியும் சொல்லலாம்.”

“பாவம்”

“அலெக்சாண்டர். ஒரு என்ற தத்துவ ஞானியைப் பார்க்கச்சென்றான். ஞானியோ பைத்தியக்காரன். பகலில் விளக்கை எடுத்துக்கொண்டு தெருத் தெருவாக என்னவோ தேடிக்கொண்டிருந்தான். அரிய பொருளைத் தொலைத்து விட்டு தேடுகிறான் என்று மக்கள் பரிதாபப்பட்டு ‘என்ன தேடுகிறீர்கள்?’ என்று கேட்டார்கள்.”

“பெரிய ஆளைத் தேடுகிறேன்?”

“ஆளா? யார்?”

“நல்ல மனிதனைத் தேடிக் கொண்டிருக்கிறேன்” விளக்கைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு தேட ஆரம்பித்தான்”

“கண்டு பிடித்தாரா?”

“தெரியவில்லை. ஆனால் தேடிக்கொண்டுதான் இருக்கிறார் என்று நினைக்கிறேன்.”

“இது மனிதனை சிறுமைப்படுத்த சொன்னதா?”

“முழுக்க முழுக்க அப்படி இல்லை.”

“அப்படியானால் பெருமைப் படுத்த சொல்லப்பட்டதா?”

“அப்படியும் சொல்ல முடியவில்லை.”

“இப்படியும் சொல்ல முடியாது, அப்படியும் கூற முடியாது என்றால் அது என்ன?”

“அதுதான் நீ, நான். நம்மைப்பற்றி என்ன சொல்ல முடியும்?”

“கெட்டவர்கள் என்று கண்டிப்பாகச் சொல்ல முடியாது?”

“கர்வம் கொள்ளாதே. உனக்கு, உன்னைப்பற்றி பேசப்படுவது தெரியாது. எல்லோரும் ஒன்றில்லை.”

“அது என் பிரச்னை இல்லை. நான் நெஞ்சுக்கு நீதியாக இருக்கிறேன். தன் நெஞ்சறிவது பொய்யற்க. அதுதான் இலட்சியம்”

“இலட்சியங்கள் ஒரு பொழுதும் ஈடேறுவதில்லை. அவை பழிக்கும் நிந்தனைக்கும் ஆளாகி வருவதுதான் சரித்திரம். அது தெரியவில்லை என்பது உன் பிரச்னை. அதனை நீ தான் தீர்த்துக்கொள்ள வேண்டும்.”

“அப்படியா?”

கணேசன் ஒருநாள் சொன்னான். “நம்ப ஐராவதம் என்னமோ சாதாரண ஆளென்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் அவர் லேசுப்பட்ட ஆளில்லை. அது இப்பத்தான் தெரிந்தது.” என்றான். அவன் ஒரு கையில் தீப்பெட்டியும், இன்னொரு கையில் பெட்ரோலும் வைத்துக் கொண்டிருந்தான். கொளுத்திப் போட தயாராக இருந்தான். ‘என்ன கணேசா’ என்று ஒரு வார்த்தை கேட்டிருந்தால் கிடுகிடுவென்று நிறைய சொல்லியிருப்பான். ஆனால் நான் ‘கணேசா, நீ கிளம்பு. நண்பரைப் பார்க்கப் போறேன்’ என்றேன். அவன் சமாளித்துக் கொண்டான். ‘என் நன்மைக்காக ஒன்றும் சொல்ல வர்ல; எல்லாம் உங்கள் நன்மைக்குத்தான். கணேசனுக்கு இவ்வளவும் தெரிந்து இருந்தும் சொல்லாமல் இருந்து விட்டான என்று சொல்லக்கூடாது என்றுதான்’ என்றான்.

தூண்டியில் மீன் பிடிக்கும் விவகாரந்தான். முள்ளில் மீனைக் கொக்கிப்போட்டு பெரிய மீன் பிடிப்பதுதான், ஆட்டைக்காட்டி புலியைப் பிடிப்பதுதான், மனிதர்களைப் புகழ்ந்து புறம் பேசி அமுக்கி விடுவது, புகழ்ந்து பிடிப்பது. அது அற்பர்கள் காரியம் என்றாலும் வெல்ல முடியாத ஆயுதம்.”

ஐராவதம் ஒரு சிரிப்பு சிரித்தார். என்ன சொல்லக்கூடாது என்று நினைத்தாலும் முடியாமல் போய் விடுகிறது அதுதான் பேச்சு என்பதின் அர்த்தம். ‘சொல்லப்பட்டதில் இருந்து சொல்லப்படாததை அறிந்து கொள்வது’ என்று அவர் ஒரு முறை சொன்னார்.

“என்ன, சொல்லு இன்னொரு முறை” என்று கேட்டேன் சாதாரணமாக நான் எதையும் இன்னொரு முறை சொல்லென்று கேட்க மாட்டேன். ஒருமுறை பாதி கேட்டாலும், எனக்குப் புரிந்து விடும். நடுவில் குறுக்காகக் புகுந்து விடுவேன்.”

“நான் இன்னும் முடிக்கவே இல்லை. அதற்குள் பேசினால் எப்படி?” என்று முருகேசன் ஒருமுறை கேட்டார்.

“முதல் சொல்லிலேயே நீங்கள் சொல்ல வந்தது அப்படியே தெரிகிறது. எதற்காக அப்புறம் நீட்டி முழங்கி சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.”

“ராஜா. நான் கிளப்பில் பதினேழு வருஷமா உறுப்பினர். ஒருமுறை செயற்குழு உறுப்பினர்; இன்னொரு முறை துணைத்தலைவர்; என்னை இப்படி யாரும் அப்படி மடக்கிப் பேசியது இல்லை.”

நான் பதில் சொல்லவில்லை.

“அவர் துணியை சோப்புப்போட்டுத் துவைத்து அலசிக் கொள்கிறார். வெளுப்பு அவர்க்குத் திருப்தி தரும் வரையில் அலசிக் கொண்டுதான் இருக்க வேண்டும். ஆனால் ஒருபொழுதும் துணி வெளுப்பது இல்லை. வெளுத்து விட்டதாகத் திருப்தி அடைகிறோம்.”

“வாழ்க்கை அதுதான். சாவில் சட்டென்று முடிந்து விடுகிறது.”

“சாவிற்குப் பிறகுதான் வாழ்க்கையே தொடங்குகிறது என்று நம்புகிறேன்.’

“உன் நம்பிக்கை உன்னோடு. அதுபற்றி நான் ஒன்றும் சொல்ல முடியாது.”

“அப்படி இல்லை. கொஞ்சம் நினைத்துப்பார். செத்தவர்கள் என்று சொல்லக் கூடியவர்களில் எத்தனை பெயர்கள் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும். உனக்கு அது தெரியவில்லை என்பதால் அவர்கள் இல்லை என்பது கிடையாது. சாவிற்குப் பின்னால் அவர்கள் வாழ்கிறார்கள். புத்தர் எத்தனை நூற்றாண்டிற்கு முன்னால் வாழ்ந்தார். ஆனால் இன்னைக்கு அவரைப் போல் உயிரோடு இருப்பவர்கள் யாருண்டு? அவ்வளவு ஏன்? நானே என் தாத்தா தான். தாத்தா பெயரை பேரனுக்கு வைத்து பரம்பரையை நிலை நாட்டினார்கள். அதுதான் குடும்பம் என்பது”

“குடும்ப சரித்திரம் அப்படியொன்றும் சொல்லக் கூடியது இல்லை.”

“எதைப்பற்றியும் மூர்க்கத்தனமாக அபிப்பிராயம் சொல்லலாம். அதனால் சொல்வதெல்லாம் உண்மை என்பதாகி விடுவதில்லை.”

“உண்மை என்பது ஒன்றில்லை. அதைத்தான் சொல்லிக் கொண்டே வருகிறேன். பிரியமானதை உண்மையென்றும், பிரியம் இல்லாததை பொய் என்றும், நடக்கவே இல்லை என்று மூடி மறைத்துவிடுகிறோம். ஒவ்வொரு நிகழ்வும் பொய்யுரைகளால் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. பொய்யுரைகளை நீக்கிவிட்டால் அதனைப் பார்க்க முடியாது. எனவே தான் மேலும் மேலும்

பொய்யுரைக்கப்பட்டு பிரமாண்டமான மாளிகைக் கட்டப்பட்டு வண்ண விளக்குகள் ஏற்றி வைத்து ஏமாற்றுகிறார்கள்.”

★

## அத்தியாயம் 14

“வாங்க ராஜா. ஆளே கண்ணில் படவே இல்லை. இந்திரா காந்தி சாவுக்கு அனுதாபம் தெரிவித்து ஒரு சின்னக் கூட்டம் போட்டோம். அதற்கு உங்களையும் தேடினோம்” என்றார் முருகேசன்.

”கொஞ்சம் வெளியில் போய்விட்டேன்.”

“ரொம்பக் கொடுமையான சாவு. ஆனால் பாருங்கள். அவர்கள் புகழின் உச்சிக்குப் போகப்போகிறார்கள். வாழ்வில் பெற முடியாததை சாவில் பெறப் போகிறார்கள்.”

“அப்படியா?”

“நான் சொல்வது பலிக்கப் போகிறது.”

“என்ன முருகேசா, ராஜாகிட்ட அளந்துக்கிட்டு இருக்கிற” என்றார் ரெட்டி.

“ரெட்டி. தப்புத் தப்பா பேசுற”

ரகுராம் ரெட்டி சிரித்தார்.

Òமகாத்மா காந்தியைச் சுட்டபோது உலகம் அழுதது. ஏசு பிரானுக்குப் பிறகு ஜீவித்த மகான் என்று அவரைச் சொன்னார்கள். அப்படிப்பட்டவர் ஒரு நிமிஷத்தில் இல்லாமல் போய்விட்டார். என் அப்பா, அன்றைக்கு அழுது புரண்டார். அவர் அழுது அன்றைக்குத்தான் பார்த்தேன். பரியாரியை கூப்பிட்டு மொட்டையடித்துக் கொண்டார். சொந்த மகன் மாதிரியே கர்ம காரியங்கள் செய்தார்.”

“அவர் தேசத்தந்தை. நாம் எல்லாரும் அவரது பிள்ளைகள் தான்.”

“சாவு தேசமக்களை உலுக்கிவிட்டது. இந்திரா சாவும் அப்படிப்பட்டது தான்.”

“நான் இரண்டு பேர்களையும் மாறிமாறி பார்த்துக்கொண்டு இருந்தேன். சாவு என்பது பிரயோசனமுள்ளது. வாழ்வதென்பது அர்த்தமில்லாதது. இரண்டும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இருக்கிறது. பிறந்தால் இறக்க வேண்டும், அது தெரிகிறது. ஆனால் இறந்தால் பிறக்க வேண்டும், அது தெரியவில்லை. பழைய நினைவுகளோடு ஒருவனும்

பிறப்பதில்லை. பிறப்பு புதிது. அதன் வழியாக அவன் நினைவுகள் துளிர்க்கின்றன. அதைப் பிடித்துக்கொண்டு பழையதைச் சொல்ல வேண்டும். ஆனால் சாவு ஒன்னும் கெட்டதில்லை. அதனைக் கொண்டாட வேண்டும். அதுதான் என் கட்சி.''

''அறியாததைப் பற்றி அதிகம் பேசுவதில்தான் ஆர்வம் இருக்கிறது. ஏனெனில் அது அறிய முடியாததாக இருக்கிறது. பகவான் புத்தரிடம் மூடர்கள் கூட்டமாகச் சென்று, 'ததாகதரே, சாவு என்றால் என்ன? வாழ்வு என்றால் என்ன?' என்று கேட்டார்கள். ஞானவானான புத்தர் மனத்திற்குள் பெரும் சிரிப்பு சிரித்துக்கொண்டார். ஆனால் வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவர் அந்தக் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார். என்ன சொல்லி விளங்க வைப்பது என்பது அவர்க்குப் பிரச்னையாக இல்லை. ஆனால் விளங்கிக் கொள்ளவே முடியாதவர்களுக்கு உரைத்தது என்னவாகப் போகிறது என்று அவர் மௌனமாகவே இருந்தார். முட்டாள்கள் காதுக்கு மௌன மொழி புரியவில்லை. அவர்கள் காதடைக்கும் சப்தம் கேட்டுப் பழகியவர்கள். எனவே அவர் சப்தமாக ஒன்றும் சொல்லாமல் போனதும் இவர்களுக்கு நல்லதாகப் போய்விட்டது. ததாகதருக்குப் பதில் தெரியவில்லை என்று குதூகல மடைந்தார்கள். அதுதான் மனிதர்கள் சுபாவம். இன்னொரு மனிதன் தன்னினும் மூடனாக, தன்னிலும் பலமற்றவனாக தன்னிலும் சக்தியில்லாதவனாக இருப்பதைக் காணவே ஆசைப்படுகிறார்கள். எனவே அவர்க்குப் பதில் தெரியவில்லை என்றே பரப்பிவிட்டார்கள். வாழத்தெரியாதவன் சாக முடியாது; சாகத்தெரியாதவன் வாழ்ந்ததில்லை. அது பறக்கும் பட்டம். நூல் அறுந்தால் பட்டம் தள்ளாடி தடுமாறி விழுகிறது. அது வாழ்க்கை இல்லை. எப்பொழுது சாவும் வாழ்வும் உன் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். எதன்மீது உன் அதிகாரம் செல்லுபடியாகிறதோ – அதுதான் உன் வாழ்வு. அதுதான் உன் சாவு.''

''நீ ரொம்ப யோசிக்கிற ராஜா'' என்றார் ஐராவதம்.

''நான் ஜீவிக்கிறேன்.''

''சந்தோஷம்''

''ரொம்ப பேர்கள் ஜீவிப்பதே இல்லை.''

''எல்லாம் தன்னறிவு சொல்வதுதான். எதற்கும் அளவு இல்லை. எவ்வளவு தூரம் பறக்க முடியுமோ அவ்வளவு தூரம்தான் எல்லை என்பது

இல்லை. ஒரு காலத்தில் பூமி தட்டையாக இருக்கிறது என்று நம்பினார்கள். பாய்போல விரிந்து கிடக்கிறது. படுத்துப்புரண்டு கொண்டே போகலாம். போகப் போக உடம்புதான் நோகிறது. அது முடிவு இல்லாத பயணம். சுருட்ட முடியாத பாய். சுருட்டுவதற்குள் உயிர் போகிறது. இன்னொரு ஆளை வைக்க வேண்டும். ஆனால் அவன் இவன் இல்லை. இவன் அனுபவம் அவனுக்கானது கிடையாது. இவன் பட்டதும் அவன் படப்போவதும் ஒன்றில்லை. பூமி சுருட்டப்படாத பாயாக இருக்கிறது.''

''இது நல்லதுதான்''

''கெட்டது என்பது ஒன்றுமில்லை.''

''ஆமாம். யோசனை என்பதுதான் கெட்டது. அது நல்லது என்பதற்கு எதிராக இருக்கிறது. நாம் எல்லோரும் ஒரே குரலில் வேறுவேறு விதமாகப் பேசுகிறோம். நான் பேசுவதும்; நீ பேசுவதும் சப்தந்தான். ஆனால் இரண்டும் ஒன்றில்லை.''

''அதுதான் சாவு. சாவு ஒன்று என்றாலும் எல்லா சாவும் ஒன்றில்லை.''

''ஆனால் பிறந்தால் மரணமடையவேண்டும்''

''அது மகத்துவமானது''

''எது தெரியவில்லையோ, எது தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறதோ அது பற்றி அதிகமாகப் பேசுகிறோம். அதுதான் பிரச்னை. அதில் இருந்து தெரிவது பேசக்கூடாது என்பதுதான்.''

''அப்படியானால் திருக்கடையூர் சென்று காலசம்கார மூர்த்தியை வழிபட்டு வரலாம்.''

''கடவுளிடம் சாவை சமர்ப்பித்துவிடலாம் என்று சொல்வது போல இருக்கிறது.''

''அது இல்லை. சாவு இன்னொருவன் சம்பந்தப்பட்டதே இல்லை. நான் என்றால் நான், நீ என்றால் நீ. அதில் இன்னொருவன் பங்களிப்பு ஒன்றும் கிடையாது. இவனுக்காக அவனோ - அவனுக்காக இவனோ உயிர் கொடுத்து தப்புவிக்க முடியாது.''

''அது எளிய உண்மை.''

“உண்மைதான் இருக்கிறது. அதில் எளிய உண்மை; பெரிய உண்மை என்பதெல்லாம் கிடையாது.”

“புரிகிறது?”

“அதுவரையில் சரிதான்”

அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றேன். டி.வி. போட்டுக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். சினிமா. கூட்டமாக ஆண்களும் பெண்களும் கையையும், கால்களையும் தூக்கித் தூக்கி ஆடிக் கொண்டிருந்தார்கள். அடுத்த சேனல் மாற்றினேன். டெலிபோன் அடித்தது. எடுத்தேன்.

“சொல்லு, ஐராவதம்”

“எப்படி இருக்க?”

“நான் நல்லாதான் இருக்கிறேன். ஊர் நிலவரம் எப்படி?”

“ஒன்றும் பிரச்னை இல்லை. எல்லாம் அமைதியாகத்தான் இருக்கிறது. இரண்டு நாட்கள் கொஞ்சம் கஷ்டம் தெரிந்தது.”

“இங்கேயும் அப்படித்தான். உன்னை சிவமணி ரொம்ப கேட்டார்.”

“நல்லவர். நீ எப்ப வர்றே?”

“நாளைக்குப் புறப்படுறேன்”

“டில்லி போயிட்டியோ என்று நினைத்தேன்.”

“இல்லை நாளைக்கு வந்துடுறேன்.”

“உனக்கொரு செய்தி இருக்கிறது”

“சொல்லு”

“இல்லை. நேரில்தான் சொல்லத்தக்கது.”

“ரொம்ப சரி” என்று டெலிபோனை வைத்தேன். மேசைமீது பேப்பர்கள் பிரிக்கப் படாமல் இருந்தன. இந்து பேப்பரை எடுத்து முதல் பக்கத்தைப் பார்த்தேன். இந்திரா காந்தி படம். தலைமுடி முன்னால் கற்றையாக கொஞ்சம் மயிர்கள் நரைத்திருக்கின்றன. பழைய படந்தான்.

அவர் இல்லை. படம் பார்த்துக் கொள்ளத்தான் வேண்டும். மனத்திற்கு வருத்தமாக இருந்தது. பேப்பரை வைத்துவிட்டு சாய்ந்து உட்கார்ந்து கொண்டேன்.

★

## அத்தியாயம் 15

டெலிபோன் அடித்தது. திரும்பிப் பார்த்தேன். நான் பெரும்பாலும் டெலிபோன் பேச மாட்டேன். யாருக்கும் நம்பர் கொடுக்க மாட்டேன். அதுவும் கிளப் நம்பரை அறவே தர மாட்டேன். என்னிடம் பேச யாருக்கும் விஷயம் கிடையாது. எனக்கும் ஒருத்தரிடம் பேச ஒன்றும் இல்லை. டெலிபோன் நல்லது என்றாலும் அதுவே கெட்டதுமாகிவிட்டது. நல்லது கெட்டது என்பது தனியாக இல்லை; கெட்டதில் நல்லதும், நல்லதில் கெட்டதும் இருக்கிறது என்பது மாதிரிதான்.

ஒருநாள் டெலிபோன் கெட்டதா என்று ஐராவதத்திடம் கேட்டேன். அவர், 'பேச்சு கெட்டதா' என்று கேட்டார்.

"அது எப்படி கெட்டதாகும். பேசுற ஆள் பொறுத்தது நல்லது கெட்டது இருக்கிறது"

"அதான். அலெக்சாண்டர் கிரகாம்பெல் என்ற விஞ்ஞானி படாதபாடு பட்டு டெலிபோனைக் கண்டு பிடித்தார். எவ்வளவோ தொலைவில் இருந்து பேசுவதைக் கேட்பதும், பதில் சொல்வதும் சுவாரஸ்யமாக இருக்கிறது. அப்புறம் பேச்சு என்பதே டெலிபோன் என்றாகிவிட்டது."

நான் தலையசைத்தேன்.

"உன்மேல் நிறைய புகார். டெலிபோனை நீ எடுக்கறது இல்லையென்று"

"நமக்கு டெலிபோனில் சரியா பேசத்தெரியவில்லை; ஒன்று கேட்டால் இன்னொன்று சொல்லிவிடுகிறேன். நமக்கு மூஞ்சியைப் பார்த்து பேசித்தான் பழக்கம், அதான்."

"டெலிபோன் மணி அடித்தால் எடுக்க வேண்டும்"

"அது நல்ல பழக்கந்தான். ஆனால் நமக்கு சரிப்பட்டு வரவில்லை. ஒருத்தருக்கு நல்லா இருக்கிற காரியம். மற்றொருவர்க்கு சரியில்லாமல் போறது மாதிரிதான்."

"நீ விஷயத்தைச் சொல்லு"

“பெரிதாக ஒன்றும் இல்லை. உனக்கு குடவாசல் கதிரேசனை நினைவில் இருக்கிறதா? அண்ணாமலையில் படித்தான்.”

“ஆகா! அவனை நினைவில் இல்லாமலா? வாய் சவாடல். மிமிக்கிரி எல்லாம் செய்வான், அவன்தானே”

“ஆமாம். அவனே தான் ஒருநாள் இரவு பன்னிரண்டு மணிக்கு டெலிபோன் பண்ணினான். ஒரு மலையாளப் படம் பார்த்தேன். அற்புதமான படம். சினிமா என்றால் அதுதான் சினிமா. தமிழ் நாட்டில் சினிமாவா எடுக்கிறவன் சுத்த முட்டாள்” என்று என்ன என்னவோ பேச ஆரம்பித்துவிட்டான்.”

“அவன் பேசினால் என்ன? நீ டெலிபோனை வைப்பதுதானே?”

“எங்க விட்டான். இரண்டு முறை கட் பண்ணினேன். அவன் மறுபடியும் மறுபடியும் கூப்பிட்டான். சினிமாவில் பேசப்பட்ட வசனத்தை எல்லாம் மிமிக்கிரி பண்ணி பேச ஆரம்பித்துவிட்டான். என்னால் தாளவே முடியவில்லை. டெலிபோனை எடுத்து கீழே வைத்துவிட்டேன். ஆனால் அப்புறம் ஒரு மணிக்கு வீட்டுக்கு வந்து கதவைத் தட்டி, ‘இதைக்கேள் உன்னிடம் சொல்லா விட்டால், என்னால் தூங்க முடியாது’ என்று அடம் பிடித்தான். மூன்று மணி வரையில் அவன் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். போகும் போது, “இப்பத்தான் நிம்மதி. பகல் பன்னிரண்டு மணி வரையில் தூங்குவேன் என்று சொல்லிவிட்டுச் சென்றான்.”

“அது டெலிபோன் தப்பு இல்லை”

“மனிதன் தப்பு”

“வாழ்க்கையென்றால் எல்லாவற்றையும் எதிர்கொள்ளத்தான் வேண்டும். எப்பொழுதும் தியாகராஜர் பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. அமிர்தம் பருகிக்கொண்டே இருக்கக்கூடாது. பகல் என்றால் இரவு. வெயில் என்றால் குளிர்.”

“உபதேசம் நன்றாகத்தான் இருக்கிறது.”

“கதிரேசன் என்னை ஒரு நாள் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு சென்றான். வீராணம் ஏரி மீன் ஆக்கி அவன் மனைவி சாப்பாடு போட்டார். என்ன விசேஷம் என்று கேட்டேன். ‘உன் பிறந்தநாள். நான் எழுதி வைத்திருக்கிறேன்’ என்றான்.”

‘‘கிறுக்கன்’’

‘‘அவன் இப்ப கோடம்பாக்கத்தில் சினிமாவிற்கு டப்பிங் குரல் கொடுத்து கொண்டிருக்கிறான். தெலுங்கு படத்திற்கெல்லாம் வாய்ஸ் கொடுக்கிறேன் என்றான்.’’

‘‘அவன் எதையாவது செய்து நன்றாக இருக்கட்டும்!’’

ஒருநாள் அவன் சொன்னான்: ‘‘நம்ப ராஜா படிப்பை முடித்துவிட்டு கலெக்டர் மாதிரி ஒரு பெரிய வேலைக்குப் போவார் என்று நினைத்தேன். அவர் என்னமோ பெரிய ஆள் என்று நினைத்துக்கொண்டு படிப்பை பாதியிலே நிறுத்திவிட்டு வீணா போயிட்டாரோ. நீ கொஞ்சம் சொல்லி சரி படுத்தி இருக்கக்கூடாது?’’ என்று கேட்டான்.

‘‘சரியாகத்தான் சொல்லி இருக்கிறான்’’

‘‘ஒருத்தரைப்பற்றி ஒரு அபிப்பிராயந்தான் என்பது கிடையாது. அவர் மாதிரியே இன்னொருவர் சொல்லவேண்டும் என்பதும் இல்லை. ஒரு வாழ்க்கையைப் பற்றி பத்து விதமாகச் சொல்லலாம்.’’

‘‘பத்து என்பது என்ன? நூறு விதமாகச் சொல்லலாம்?’’

‘‘பத்தில் சொல்ல முடியாததை நூறில் சொல்லமுடியாது என்று ஒருநாள் சிவமணி சொன்னார்.’’

‘‘அவர் புத்தகம் வெளியிடுகிற ஆள். நம்நாட்டில் பணம் சம்பாதிக்க எவ்வளவோ தொழில்கள் இருக்க அவர் ஏன் புத்தகம் போட்டு அடுக்கி வைத்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறார். யாராவது புத்தகம் படிக்கிறார்களா? நான் நன்கைந்து முறை அவர் கடைக்குப் போய் இருக்கிறேன். ஒருநாள்கூட ஒரு ஆள் வந்து புத்தகம் வாங்கிக்கொண்டு போனதில்லை.’’

நான் தலையசைத்தேன்.

‘‘கீழே பாட்டா செருப்புக்கடை இருக்கிறது. நூறு பேர் செருப்பு வாங்கிக் கொண்டு போகிறார்கள். பக்கத்தில் நல்லி ஜவுளிக் கடை. ஐநூறு பேர்கள், புடவை, துணிகள் என்று அள்ளிக்கொண்டு போகிறார்கள். எதிர்த்தாற்போல கீதா கேப். ஆயிரம் பேர் வந்து சாப்பிட்டு போகிறார்கள்.’’

“அவர் தெரியாமல் தான் பதிப்பகம் நடத்துகிறார், என்றுதான் சொல்லப் போறீயா?”

“இல்லை இல்லை அவர் என்னைவிட அறிவாளி. ரொம்ப விஷயம் தெரிந்தவர். அதுதான் பிரச்னை.”

“வாழ்க்கை என்பதே பிரச்னைகளோடு வாழ்வதுதான்.”

“அது பேச்சால் சாத்தியமாகி இருக்கிறது.”

“பேச்சுத்தான் காரணமா?”

“மனசுதான்”

“கை கொடு”

“பாராட்டு என்பதால் மகிழ்ச்சி அடையக்கூடாது.”

“கதிரேசன் சொன்னான், எனக்கு சந்தோஷம் வந்துவிட்டால் தனியாக அதனை அனுபவிக்க முடியாது. அதனால் இன்னொரு ஆளைத் தேடிக்கொண்டு போகிறேன். சிலருக்கு அது புரிவதில்லை. என்னை என்னவோ பைத்தியக்காரன், கிறுக்கு, பித்துப்பிடித்தவன் என்று சொல்கிறார்கள். என்னைக் கண்டதும் ஓடுகிறார்கள்.”

“அது உனக்குத் தெரிகிறது?”

“ரொம்ப நல்லா தெரிகிறது. ஆனாலும் ஆர்வத்தை அடக்க முடியவில்லை. எனவேதான் மறுபடியும் மறுபடியும் பழைய ஆள்களையே தேடி ஓடுகிறேன். ஏனெனில் பழைய சிநேகிதம் என்றால் கொஞ்சமாவது தெரியும். புரிந்து கொள்வார்கள் என்று. இரண்டொருவர் என் பிரச்னையை உண்மையில் தெரிந்து கொள்கிறார்கள்.”

“பாவம்”

“கதிரேசன் இல்லை. எதிராள்தான் என்பது என் அபிப்பிராயம்.”

“இதில் உன் அபிப்பிராயம், என் அபிப்பிராயம் என்பதெல்லாம் ஒன்றும் கிடையாது. அவன் ஜீவிக்கிறான். அவனோடு மற்றவர்களும் ஜீவிக்கிறார்கள். அவர்கள் சில சமயங்களில் அவனோடு மாட்டிக்கொள்கிறார்கள். மாட்டிக்கொண்டவர்கள் பாக்கிய சாலிகளா? மாட்டிக் கொள்ளாதவர்கள் பாக்கியசாலிகளா என்பது தான் முக்கியம்.”

“எல்லோரும் பாக்கியசாலிகள் தான். கதிரேசன் தனியென்றோ, ஐராவதம் அவன் இல்லை என்றோ, ராஜாதான் இந்தக் கூட்டத்தில் சேர்கிறார் என்றோ சொல்ல முடியுமா?”

“நீ என்ன தீர்ப்பு சொல்லப் போறே என்பதைக் கேட்க நான் தயாராக இல்லை.”

“இதுதான் சரி. நீ நிதானமாக இருப்பதாகச் சொல்வதற்கு”

“நான் ஒரு பொழுதும் நிதானத்தில் இருப்பதில்லை.”

“தன்னை அறிதல். அது சரியாக இருக்கவெண்டும் என்பது அவசியமில்லை.”

“தன்னை அறிந்து கொண்டு – அறிந்ததை அறிந்தவாறு யாராவது சொல்லியிருக்கிறார்களா? நாலாயிரம், ஐயாயிரம் ஆண்டுகளாக எழுதி வருகிறோம் என்று சொல்கிறவர்கள் ஏதாவது ஆதாரம் காட்ட முடியுமா?”

“அசோகர் கல்வெட்டுத்தான் நமக்கு கிடைத்து இருக்கும் முதல் ஆதாரம். சாரநாத் சென்றபோது பார்த்தேன். ஆனால் படிக்கத் தெரியவில்லை. பார்த்துக் கொண்டே இருந்தேன். ஆதாரம் அர்த்தமில்லாது இருந்தது. இன்னொரு முறை நம் தஞ்சாவூர் பெருவுடையார் கோயில் கோபுரத்து வடக்குச் சுவரில் ராஜராஜன் கல்வெட்டுப் பார்த்தேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ கோடு கோடாக இருந்தது. பார்த்துக்கொண்டே நடந்தேன். வீடியோ படம் பிடித்துக்கொண்டு இருந்தார்கள். முன்னே சென்று கொண்டு இருந்த என்னை நகர்ந்து நிற்கச் சொன்னார்கள். கேமராமேன் பின்னால் நின்று கொண்டு வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தேன்.”

“எத்தனை வயதானாலும் வேடிக்கைப் பார்ப்பதில் ஆர்வம் குறைவதே இல்லை. இரண்டு மூணு மாத குழந்தையில் வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்த மனிதர்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள்.”

“வேடிக்கைக் காட்டிக் கொண்டும் இருக்கிறார்கள்.”

“வேடிக்கைக் காட்டுவதும் அவர்களே; வேடிக்கைப் பார்ப்பதும் அவர்களே”

“இதுதான் சரி”

“நீ சொல்லு. கேமராமேன் பின்னால் நின்றுகொண்டு வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்த”

“தஞ்சாவூர் ஊர் கோயில் கல்வெட்டை ஓர் ஆள் புத்தகத்தைப் பார்த்துப் படிப்பது மாதிரி படித்தார். படம் பிடித்தார்கள். ஐந்து நிமிடம் பார்த்துக் கொண்டு இருந்தேன், அவர்கள் படம் பிடித்துக்கொண்டே இருந்தார்கள். அவரும் நிறுத்தி நிறுத்திப் படித்துக் கொண்டிருந்தார். கோடு மாதிரி படிக்க முடியாமல் இருந்த கல்வெட்டை புத்தகம் மாதிரி படித்தார். படப்பிடிப்பு குழுவில் இருந்த ஒரு பையனைத் தனியாக கூப்பிட்டு படிக்கிறது யார்? எதற்கு என்று விசாரித்தேன், படிக்கிறவர் பேராசிரியர் குடவாயில் சண்முகனார். தமிழ் நாட்டு கல்வெட்டுப் பற்றி தொலைக்காட்சிப் படம் என்று சொன்னான். நாட்டில் ஆயிரம் நல்ல காரியங்கள் நடக்கின்றன. அதில் இது ஒன்று என்று நினைத்துக் கொண்டேன்.”

“ஆனால் கெட்ட காரியங்களைப்பற்றித்தான் நமக்கு அதிகம் தெரிகிறது. பத்திரிகை எல்லாம் அதைத்தான் வெளியிடுகின்றன.”

“அதுதான் செய்தி. ஒரு பத்திரிகை ஆசிரியர் செய்தி என்றால் என்னவென்று கேட்டதற்குச் சொன்னார். நாய் மனிதனைக் கடித்தால் செய்தி இல்லை. மனிதன் நாயைக் கடித்தால் அதுதான் செய்தி. அதனைப் பத்திரிகைகள் போடும்” என்றார்.

“என்ன இன்னொரு முறை சொல்”

“அதுதான் செய்தி ஒருமுறைக்கு இரண்டு முறைகள் படிக்கிறார்கள். டெலிபிரிண்டர், தந்தி, டெலிபோன் எல்லாம் உலகம் முழுவதிலும் இருந்து செய்தியைக் கொடுக்கின்றன.”

“கெட்ட செய்திகளை”

“அவர் செய்தி என்றுதான் சொன்னார்.”

“அவர் சொல்லாமல் விட்டது கெட்ட செய்தி என்பது”

“டெலிபோன் வந்ததும் செய்தி பரவுதல் அதிகமாகி விட்டது”

என் டெலிபோன் அடித்துக் கொண்டே இருந்தது. எனவே எடுத்தேன்.

“ராஜா எப்படி இருக்கிறீர்கள்? நான் வைத்தீஸ்வரன். டில்லியில் இருந்து கூப்பிடுகிறேன்.” என்றார்.

“சொல்லுங்க?”

“எப்படி இருக்கிறீங்கள்? உங்களைச் சந்தித்தது இந்தப் பயணத்தில் ரொம்ப முக்கியமானது”

“அது இருக்கட்டும், டில்லி எப்படி இருக்கிறது?”

“ரொம்ப மோசம். அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியாது. பெரிய கலவரம் நடந்து முடிந்து இருக்கிறது. ஒரு சாவில் இருந்து ஆயிரம் சாவு.”

“பேப்பரில் எல்லாம் அதுதான் வந்திருக்கிறது?”

“வெளியில் வந்திருப்பது குறைவு. வெளிவராதது அதிகம். முப்பது வருஷத்தில் டில்லியில் இப்படி எல்லாம் நடந்ததுவே இல்லை என்று பல்கலைக்கழகத்தில் பேசிக்கொள்கிறார்கள்?”

“பழி நடவடிக்கையா?”

“யார், யாரை பழி வாங்குவது. சமூகம் அறிவுப் பூர்வமாக இல்லை. எவ்வளவு பெரிய உயரமான கட்டடம் கட்டிக்கொண்டாலும், ரப்பர் சாலை அமைத்துக் கொண்டாலும் ஹெலிகாப்டரில் பறந்தாலும் மனிதர்கள் அடிப்படையில் காட்டுமிராண்டுகள் தான். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று ஹம்முராபி சொன்னதுதான். அவன் சொல்லி நாலாயிரம் வருஷந்தான் ஆகிறது. ஆனால் மனிதன் நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் வருஷமாக ஒரே மாதிரி, கொஞ்சமும் மாறாமல்தான் இருக்கிறான்.”

“டில்லியே ரத்தம் ஓடுகிற ஊர்தான் என்று படித்து இருக்கிறேன்.”

“அது ஓரளவு சரிதான். மகாபாரத காலத்தில் டில்லி முதன்முறையாக பூமி ரத்தம் குடித்தது. அதில் இருந்து அதற்கு ரத்த வெறி அடங்கவே இல்லை. ரத்தம் குடித்துக் கொண்டே இருக்கிறது.”

“மகாத்மா காந்தி”

”ஆமாம். குர்ரம் என்கின்ற ஷாஜகான் முகரம் நாளிலேயே செங்கோட்டைக் கட்டி டில்லியில் இருந்து கொண்டு ஆட்சி புரிந்தான். டில்லி ரத்தவாடை ஆட்சியாளர்களுக்கு வெறியூட்டுகிறது. மறுபடியும் மறுபடியும் டில்லியை தலைநகரமாக்கிக் கொள்கிறார்கள். ஆங்கிலேயர்கள்

முதலில் கொல்கத்தாவைத் தான் தலைநகரமாக வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களால் அங்கேயே இருக்க முடியவில்லை. டில்லி ரத்தவாடை கூவியழைத்துக் கொண்டே இருந்தது. புதுடில்லி என்று பெயர் வைத்துக் கொண்டு பழைய டில்லிக்கே ஓடி வந்துவிட்டார்கள். ஆனால் டில்லியில் ரத்தம் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது.''

''பரிதாபந்தான்''

''எனக்கு பழக்கமான டாக்ஸி டிரைவர் கிஷன்சிங் குடும்பத்தோடு வெட்டிக் கொலை செய்யப்பட்டுவிட்டான். நாற்பது வயது இருக்கும். ரொம்ப நல்லவன். அம்மா இருந்தவரையில் அவன்தான் வெளியிடங்களுக்கு எல்லாம் அழைத்துக் கொண்டு போவான். அம்மா அவனோடு வெளியில் போய்விட்டு வந்ததும், 'வைத்தி, நம்ப கிஷன் உன்னைவிட நல்லா பார்த்துகிட்டான் என்று சொல்வார்கள்.'

''அவன் அவன் நம்ப கிருஷ்ணன் அம்மா''

''பாகிஸ்தானில் இருந்து கடைசி ரயிலில் வந்தானாம். பெரிய வீடு, மாடு, நிலம் இருந்ததாம். நான்கு நாய் வளர்த்தார்களாம். நாயை விட்டுவிட்டு வந்தோம். அதுதாம்மா மனசுக்கு ரொம்ப கஷ்டம் என்றான்Ó என்று அம்மா சொல்வார்கள்.''

''மனிதர்களுக்கும் நாய்களுக்கும் நல்ல புரிதல் இருக்கிறது''

''அம்மா நாய் வளர்த்ததில்லை. ஆனால் பிராணிகள் வளர்ப்பு சங்கத்தில் ஒன்பதாண்டுகள் உறுப்பினர். நல்ல சேவை செய்வதாக துணை ஜனாதிபதி விருதுகூட வழங்கினார். பத்திரிகையாளர்கள் பேட்டி காண வந்தபோது, ''பிராணிகளைத்தான் படம் எடுத்துப் போட வேண்டும் அவைகளோடு ஒப்பிட்டால் மனிதர்கள் ஒன்றுமே கிடையாது. அன்பு, நேசம், பரிவு என்பதற்கு அவைதான் அத்தாட்சி என்று போட்டோவிற்கு போஸ் கொடுக்க மறுத்துவிட்டார்.''

''அம்மா என்றால் அதுதான்''

''ஆமாம். சில மகன்கள் அதனை அறிந்து கொள்கிறார்கள். பல மகன்கள் அறிந்து கொள்வது இல்லை. ஆனால் அது அம்மா சம்பந்தப்பட்டதில்லை. மகன்கள் சம்பந்தப்பட்டது.''

“ஆமாம்”

“ராஜா எப்ப டில்லி வரப்போகிறீர்கள்?”

“வர்றேன்”

“இப்படி எல்லாம் சொல்லக்கூடாது. நீங்கள் அவசியம் கோடையில் மே, ஜூன் மாதத்தில் வாருங்கள். சிவமணி வருவதாகச் சொல்லியிருக்கிறார். சைவ சித்தாந்தம் பற்றி அடிப்படையான புத்தகங்கள் இருப்பதாகச் சொன்னார். அவற்றையும் எடுத்துக்கொண்டு வாருங்கள். எனக்கு சைவசித்தாந்தம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசை. இங்கே பல்கலைக்கழகத்தில்கூட சைவ சித்தாந்தம் பற்றிய புத்தகம் ஒன்றுகூட இல்லை.”

“நானும் தேடிக்கொண்டுதான் இருக்கிறேன்.”

“ரொம்ப நல்ல விஷயம்”

“மணி என்னவாகிறது”

“இரவு ஒன்றாகிறது”

“நீங்கள் தூங்கப் போகவேண்டும்”

“நான் இரண்டு மணிக்குத்தான் தூங்குவது வழக்கம்”

“பரவாயில்லை. நான் பதினொரு மணிக்கெல்லாம் தூங்கி விடுவேன்.”

“சாரி. உங்களை தூங்கவிடாமல் அடிக்கிறேன்.”

“பரவாயில்லை”

“இல்லை. இல்லை. ஒருவர் தூக்கத்தைக் கெடுப்பது பாவம் என்று அம்மா சொல்லிக்கொண்டே இருப்பார். தூங்கினால் எழுப்ப மாட்டார்”

“நல்ல குணந்தான்”

“அம்மாவிடம் நிறைய நல்ல குணங்கள் இருந்தன. ஒரு புத்தகத்தில் படித்தேன். கடவுள் எல்லா இடத்திலும் இருக்க முடியாது என்பதால் அம்மாக்களை அனுப்பி வைத்திருக்கிறார் என்று. கடவுள், அம்மா எல்லாம் வேறு கிடையாது. இரண்டும் ஒன்றுதான். பலர் அறிந்து கொள்வதில்லை.”

“எல்லாவற்றையும் நன்றாகச் சொல்கிறீர்கள்”

“நீங்கள் தூங்கப் போகவேண்டும். நான் முடித்து விடுகிறேன். ஜூன் மாதத்தில் டில்லிக்கு வந்து விடுங்கள். வீட்டில் ஒருவாரம் தங்கியிருக்கலாம். நான் பல்கலைக்கழகத்திற்கு லீவு போட்டுவிட்டு வருகிறேன். ரிஷிகேஷ் போய் சிவானந்த ஆசிரமத்தில் மூன்று நாட்கள். கங்கையில் நீராடிக் கொண்டும், பேசிக்கொண்டும் யோகா செய்து கொண்டும் சந்தோஷமாக இருப்போம்.”

“நாம், எப்பொழுதும் சந்தோஷமாகவே இருக்கிறோம்.”

“நாம் இருக்குமிடம் சந்தோஷமானது. இது நல்ல தத்துவந்தான் ராஜா, நான் பேசிக்கொண்டே இருக்கிறேன். பிரியமானவர்களை விட முடிவதில்லை.”

“பிரிவதே கூடுவதற்குத்தான்”

“நான் இப்போது போனை வைக்கிறேன். அடுத்த வாரம் பேசுகிறேன். பத்திரமாக ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும், தகவல் தெரிவியுங்கள். குட் நைட்.”

இரவுபொழுது அடங்கி வெகு நேரமாகிவிட்டது.

நான் அறை விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தேன்.

★

## அத்தியாயம் 16

காலை மணி ஒன்பது. அறையை பூட்டிவிட்டு வரவேற்பு நடத்தப்பக்கம் வந்தேன். கணேசன் எதிரே வந்து கரம் கூப்பி வணக்கம் தெரிவித்தான்.

"என்ன கணேசா. டில்லியில் இருந்து வந்துட்டியா?"

"ரொம்பக் கஷ்டம். மனசு தாங்கல. காரியம் முடிஞ்ச உடனே பிளேன் பிடித்து பறந்து வந்துட்டோம்."

"அப்படியா?"

"நம்ப எம்.பி. பாவம். அவரால் நிற்கக்கூட முடியல. மயக்கமா வருது கணேசன் என்று என் மேல சாய்ந்துட்டார். நான் அவரை கைத்தாங்கலா பிடித்துக் கொண்டே இருந்தேன்."

"அவர் பெரிய தைரியசாலி. அஞ்சா நெஞ்சன் என்று பெயர் எடுத்தவர் இல்லையா?"

"அதெல்லாம் சும்மா. நிஜத்தில் கிடையாது. நான்கூட போகலேன்னா, ஆள் ரொம்ப தவிச்சி போயிருப்பார். அறையில் படுத்துக்கிட்டு நெஞ்ச எல்லாம் தடவிவிடச் சொன்னார். நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டே இருந்தது. 'என்ன தலைவா? இப்படி இருக்கிறதே. டாக்டரைக் கூப்பிடட்டுமா' என்று கேட்டேன்.

"அதெல்லாம் ஒன்றும் வேணாம். நீதான் இப்ப எனக்கு டாக்டருக்கு மேல. நீ கூட வர்லன்னா, நான் கீழே விழுந்து இருப்பேன். அதுனால நீ எங்கேயும் போயிடாத. ஊருக்குப் போய் சேர்ற வரைக்கும்கூடவே இரு."

"அவ்வளவு மோசமா போயிருச்சா!"

"நல்ல மனுஷன். உண்மையாகவே தவிச்சிப் போயிட்டார். டேய், கணேசா, நான் அன்னையை இழந்துட்டேன்டா. இனி எனக்கு சீட் கொடுக்க, யாருடா இருக்கா. போச்சு. எனக்கு எல்லாம் போச்சுன்னு ராத்திரி எல்லாம் புலம்பிக்கிட்டே இருந்தார். அவுங்கள எரிச்ச அன்னைக்கி ராத்ரி எல்லாம் தூங்கவே இல்லை. படுக்கையில் இருந்து திடீர் திடீரென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு அழ ஆரம்பித்துட்டார்."

“மற்ற எம்.பி.யை எல்லாம் அவர் பார்க்கலியா?”

”ஒருத்தனையும் பார்க்கல. நான்கூட ஆஜாத்த பார்க்கலாம். குரோஷியைப் பார்க்கலாம். அவுங்க எல்லாம் உங்களுக்கு ரொம்ப வேண்டியவங்க தானே” என்றேன்.

“இல்ல. வேணாம். நான் ஒருத்தனையும் பார்க்கப் விருப்படலே. நீ ஒருத்தன் கூட இருந்தால் போதும் என்று சொல்லி விட்டார். அப்பத்தான் எனக்கே தெரிந்தது; அவருக்கு நம்ப எவ்வளவு விசுவாசமாக இருக்கிறோம் என்று. அவரும் அதைத் தெரிந்து வைத்துக் கொண்டுதான் இருக்கிறார். அதான்.”

“இப்ப எங்க இருக்கிறார்? நீ பாட்டுக்கு வந்துட்ட”

“நல்ல இடத்திலேயேதான் இருக்கிறார். அதையெல்லாம் வெளியில் சொல்லக்கூடாது. ஏர்போர்ட்டுக்கே அந்தம்மா வந்து கூட்டிக்கொண்டு போய்விட்டது. அப்புறம் நமக்கு வேலை இல்லை. ஏதோ, நம்மால் முடிந்தது. கூட்டிக்கொண்டு போனது மாதிரி கூட்டியாந்து சேர்ப்பித்து விட்டேன். அதுதான் திருப்தி.”

“சாப்பிட்டியா?”

“காலையில் எட்டு மணிக்கே வந்துட்டேன். இங்க விசாரித்தேன். அறையில் தான் இருக்கிறார். இன்னும் கீழே வர்லே என்று சொன்னார்கள் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டே இருந்தேன். பேப்பர்ல போட்டு இருக்கிறது எல்லாம் ரொம்பக் கொஞ்சம். தில்லியிலே ரத்த ஆறு ஓடியது. ஒருத்தனும் என்ன ஏதுன்னு கேட்க வர்ல? ரொம்ப பயங்கரம். ஏர்போர்ட்டில் இருந்து எம்.பி. மாளிகைக்கு டாக்ஸியே வரமாட்டேன்னு சொல்லிட்டானுவோ. என்ன பண்ணுறதுன்னு சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு இருந்தோம். அப்பப் பார்த்து குஜராத் எம்.பி. ஒருத்தன் வந்தான். பி.ஜே.பி. எம்.பி. ஆனாலும் நம்ப தலைவர்க்கு சிநேகிதம். அவன் தம்பி டில்லியில் போலீசில் இருந்தான். போலீஸ் கார் கொண்டு வந்து இருந்தான். எங்களை காரில் ஏற்றி, போலீஸ் பாதுகாப்போடு கொண்டுவந்து மீரா பார்க்கில் சேர்த்தான். இல்லாவிட்டால், ரொம்ப கஷ்டப்பட்டுப் போயிருப்போம். அப்பத்தான் நம்ப எம்.பி. எல்லோர்க்கிட்டேயும் எவ்வளவு இணக்கமாக இருக்கிறார் என்பது தெரிந்தது”

“அப்படியா?”

“ஒரு முறை நீங்கள் அவசியம் அவரை சந்திக்கணும்”

“ஏன்? எதற்கு?”

“இதான். நான் டில்லியில் பார்த்து இருக்கிறேன். பலதரப்பட்ட ஆள்கள் வந்து தங்கள் எம்.பி.யைப் பார்த்து பேசுறாங்க. எம்.பி.க்களும் நல்லா பழகுனாங்க. ஆனால் நம்ப எம்.பி.க்களை கட்சிக்காரர்களைத்தவிர வேறு யாரும் வந்து பார்த்து பேசறது இல்லை. இவர்களும் கட்சிக்காரனைத்தவிர வேறு யாரையும் பார்க்கறதும் இல்லை.”

“கணேசா, உனக்கு நல்ல கண்ணு.”

“அதைத்தான் அவரும் சொன்னார். கணேசா அங்கே இங்கே போயிடாதே. எந்தக் கட்சியில் சேர்ந்தமோ அந்தக் கட்சியிலேயே மேலே வரவேண்டும். அதுதான் உழைப்புக்கு பெரிய மரியாதை. வர்ற அசம்பிளிக்கு சீட் வாங்கப் பார்ப்போம்”

“நல்லதுதான் சொல்லியிருக்கார்.”

”அன்னை போனதுதான் அவர்க்கு பெரிய கஷ்டம். இனி யாரைப் புடிக்கிறது; எங்கே போவது என்பது புரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார். தனக்கு வேண்டியவர்களை எல்லாம் கூட்டி ஆலோசனை கேட்கணுமென்று பார்க்கிறார்.”

“அவருக்கு யோசனை சொல்ல வேற ஆட்கள் வேணுமா? அவரே நூறு பேர்களுக்கு யோசனை சொல்வார்.”

“நான் அதைத்தான் சொன்னேன். நீங்கள் அமைச்சராகி இருக்க வேண்டியவர் தலைவா? அந்த முட்டாள் மோகன் உள்ளே வந்து புகுந்து கெடுத்துட்டான். நீங்கள் மூப்பனார் பக்கத்திலேயே இருந்து இருக்கணும் –”

“எத்தனைப் பேருடா. ஒரு ஆளுடனே இருக்க முடியும்? கட்சிக்கு குறைந்த பட்சம் இரண்டு கோஷ்டி வேண்டும். அதை வைத்துக் கொண்டுதான் காரியம் பண்ணணும். நம்ப எதிர் கோஷ்டியிலே இருக்கிறதாலத்தான் ஜொலிக்க முடியுது?”

”ஆமாம்” என்றேன். நான் என்னமோ அவர்க்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவர் அரசியலையே கரைத்துக் குடித்து விட்டிருந்தார்.”

“சாப்பிட்டியா? என்று கேட்டுக்கொண்டு காலை சிற்றுண்டிக்காகச் சென்றேன். கணேசன் கூடவே வந்தான்.

கணேசனை, ஐராவதம் ‘ஜன்னல்’ என்றுதான் சொல்வார்.”

“அது என்ன ஜன்னல்?” என்று கேட்டேன்.

“ஜன்னல் போர்த்துக்கீஸ் வார்த்தை. ஒரு நானூறு ஆண்டுகளில் தமிழோடு நன்றாகப் பொருந்திப் போய்விட்டது. நாம் அறைக்குள் இருந்தபடியே வெளியில் என்ன நடக்கிறது என்பதை ஜன்னல் வழியாகப் பார்க்கலாம். அதுபோல ஜன்னலுக்கு வெளியில் அறைக்குள் நடப்பதையும் பார்க்கலாம். ஜன்னல் இரண்டு பேர்களுக்குமானது.

“நல்ல உதாரணம். நம் ஜன்னல் எப்படி?”

“நிறைய தெரிந்து கொள்ளலாம்.”

“அவசியமா?”

“உனக்கு அவசியம் இல்லை. எனக்கு அவசியம். வாழ்க்கையை சுவாரசியம் ஆவதும் அக்கப்போர் பேசுவதாலும், கேட்பதாலுந்தான் இருக்கிறது. இல்லாவிட்டால் நிராசையும் சலிப்பும்தான் வரும்”

“அவ்வளவு இருக்கிறதா?”

“அது பற்றி எவ்வளவு சொன்னாலும் சொல்லி முடிக்க முடியாது. சொல்லப் பட்டதைவிட சொல்லப்படாதது அதிகம் இருக்கிறது என்று சொன்னவனுக்கும் தெரிகிறது; கேட்டவருக்கும் புரிகிறது.”

“ஜன்னல் அவசியந்தான். காற்று, வெளிச்சம் தருகிறது.”

“தமிழில் சாளரம் என்றார்கள்.”

“அதுவும் நன்றாகத்தான் இருக்கிறது.”

“எது மக்களால் அதிகமாகப் பேசப்படுகிறதோ அது நிலைத்துவிடுகிறது.”

”நான் ஜன்னல் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறேன்.”

“நல்லது. எழுதுவது என்று நினைப்பது நல்லது. எழுதுவது. அதைவிட நல்லது”

“ஏன்? எழுத முடியாதா?”

“எழுத முடியும். ஆனால் எழுதுவதில்லை.”

“காரணம்?”

“விளக்கம் சொன்னால் புரியாது. நீ முதலில் ஒரு காகிதத்தை எடுத்து வைத்துக்கொள். உனக்குப் பிடித்த – அல்லது பிடிக்காத ஒன்றைப் பற்றி எழுத ஆரம்பித்துப் பார். இரண்டு வரிக்கு மேலே பேனா போவதில்லை.”

“ஆமாம். எனக்கு ஒரு பெரியவரைத்தெரியும். முனைவர் பட்டம் வாங்கியவர். மேடைகளில் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். பார்வையாளர்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு இருப்பார். தமிழ்நாட்டில் எல்லோர்க்கும் இனியவர்.”

“சுருக்கமாக சொல்ல வந்ததை மட்டும் சொல்.”

“சொல்லி முடித்து விடுகிறேன். நான் அவரை ஒருநாள் மதுரையில் இருந்து பாண்டியனில் சென்னை வரும்போது சந்தித்தேன். மேடையில் பேசுவது போலவே தாம்பரம் வரும்வரையில் பேசிக்கொண்டு வந்தார். பயணம் கலகலப்பாகப் போய்க் கொண்டிருந்தது”

“ஐயா, இவ்வளவு நன்றாகப் பேசுகிறீர்களே இதையெல்லாம் எழுதி புத்தகமாகப் போட்டால் நிறைய பேர்கள் படித்துப் பயன் அடைவார்களே. முதலில் நான் பயன் அடைவேனே” என்றேன். அதற்கு அவர் பெரிதாகச் சிரித்தார். இரண்டு முறை, மூன்று முறை குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். நான் ஆச்சர்யப்பட்டுப் போனேன். சிரிக்கும்படியாக என்ன சொல்லிவிட்டோம் என்று என்னையே கேட்டுக் கொண்டு அவரையே பார்த்தபடி இருந்தேன்.

“தம்பி, பேச்சு என்றால் எரிகின்ற நெருப்பு. எழுத்து என்றால் அவிந்த கரி. கரிக் கட்டை. அது எ£¤ய வேண்டுமென்றால் மறுபடியும் கட்டையைக் கொளுத்த வேண்டும் என்று சமத்காரமாகச் சொல்லலாம். சாக்ரடீஸ் எழுதினாரா? பகவான் புத்தர் எந்த மொழியில் எழுதினார் என்று கேள்வி போடலாம். ஏசுநாதர் ஹீப்ரு மொழிதான் எழுதினாரா? என்று கேட்கலாம். நான் இப்படி எல்லாம் கேட்டு எழுதாமல் இருப்பதற்குக் காரணம் சொல்லமாட்டேன். பின் என்ன காரணம் சொல்வேன். கொஞ்சம்

யோசித்துப் பார்.'' என்றபடி கால்களை மேலே தூக்கிச் சம்மணம் போட்டுக்கொண்டார்.

எனக்கு ஒன்றும் பிடிபடவில்லை. அவர் முகத்தையே பார்த்தபடி இருந்தேன். அவர் திடீரென்று என் பக்கம் பாய்ந்து தொடையில் தட்டி, ''நமக்கு எழுத்தே வரவில்லை. எழுதி எழுதி நான்கு ஐந்து முறைகள் பார்த்தேன். எல்லாம் கரிக்கட்டையாக அவிந்து போய் இருந்தது. அதனால், 'நடராஜா நீ பேசு; பேசறதை மட்டும் செய்' என்று சொல்லிக் கொண்டு பேசிக் கொண்டே இருக்கிறேன்.''

'உண்மையா' ஐயா?

''மெய் மட்டுமே பேசுகிறேன். என்னை எத்தனையோ நேர்காணல்களில் இதே கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நானும் ஆளுக்கொரு பதில் சொல்லி இருக்கிறேன். ஆனால் தம்பி இன்று உன்னிடம் சொல்வதுதான் உண்மையான காரணம்?''

''அப்படியா, ஐயா?''

''உண்மையை என்றைக்காவது சொல்லித்தானே ஆகவேண்டும். உண்மை என்பது மறைக்கப் படுவதற்காக உரைக்கப் படுவதில்லை.''

'நல்லறிவு கொடுத்த பயணம் என்று சொல்லலாமா?'

''அறிவு விற்கப்படுவதோ, வாங்கக்கூடியதோ இல்லை. முதலில் அவனவனும் தனக்கு அறிவு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதை அறிந்து கொள்ளாமல் புத்தகம் படித்து, குருவிடம் பாடம் கேட்டு, ஆராய்ச்சி என்று என்னென்னவோ காரியமெல்லாம் செய்து அறிவை பெற முடியாது.''

''சிவகாமி நாச்சியார் பேராசிரியர் முத்துக்கருப்பனிடம் ஆராய்ச்சியாளராகச் சேர்ந்தார். இரண்டு ஆண்டுகள் கழித்து அவரின் இளைய தாரமாகிவிட்டாள்.''

''பெண்களைப் பற்றி அவதூறாகப் பேசக்கூடாது. அவர்கள் தவறே செய்யத் தெரியாதவர்கள். செய்ய முடியாதவர்கள். அற்ப ஆண்மகன்கள் தங்கள் அழுக்கை மாசற்ற மகளிர் மீது பூசி விடுகிறார்கள்.''

''ராஜா, நீ பேசுவது நியாயமில்லை. எனக்கு என்னவோ நீ பெண்களுக்கு ஆதரவாகப் பேசவில்லை. எதிராகப் பேசுவது மாதிரி

இருக்கிறது.''

''நான் அப்படியா பேசினேன்? உனக்கும் அப்படியா படுகிறது. பதினைந்து நாள்களுக்கு முன்னால் அனந்தராமன் சொன்னான். பேசாமல் இருப்பது பெரும் பாக்கியம். மனிதர்கள் பேசக்கற்றுக் கொள்ளவேகூடாது. இங்கிலீஷ், ஸ்பானீஷ், மாண்டீ£¤ன், ஜெர்மன் சம்ஸ்கிருதம் என்று ஒரு மொழியும் கற்றுக் கொள்ளக்கூடாது. மொழியே சப்தம். உலகம் என்ற பெரும்பரப்பில் மூலைக்கு மூலை மனிதர்கள் போட்ட சப்தம் காற்றில் கலைந்து போகாமல் பறந்து கொண்டே இருக்கிறது. அதுதான் நம் அவலங்களுக்கெல்லாம் காரணம். சாத்தான், பேய், பிசாசு – என்பதெல்லாம் மனிதன் போட்ட சப்தங்கள். அவனிடம் இருந்தே பிறந்தது அவனையே பயமுறுத்திக்கொண்டிருக்கிறன. பயம் பெருகாமல் இருக்க முதலில் பேசாமல் பெருவாழ்வு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றான்.

''இது யார் கண்டுபிடிப்பு?''

''பப்பு கினியாவில் இருபத்தைந்தாயிரம் ஆண்டுகளாக மனிதர்கள் போட்ட சப்தத்தின் கனபரிமாணம், ஒலி டெஸிபில் பற்றி ஆராய்ந்து அறிக்கை விட்டிருக்கிறார்களாம்.''

''அது உனக்குத்தான் முதல் சொல்லி இருக்கிறார்கள். அது என்ன காரணம் தெரியுமா?''

நான் தலை அசைத்தேன்.

''யாருக்கிட்ட சொல்லவேண்டுமென்று தேடிப் பிடித்து உன்னிடம் சொல்லி இருக்கிறார்கள்.''

''ஆமாம். சொல்ல வேண்டியவனிடந்தான் சொல்லி இருக்கிறார்கள்.''

''நான் ஒரு விஷயம் உன்கிட்ட சொல்லணும். அதற்குத்தான் வந்தேன். அதற்குள் என்னென்னமோ பேச்சு வந்துவிட்டது, பாவம்''

''என்ன பேச்சா?''

''பேச்சு பற்றி சொன்ன அனந்தராமன் நேற்று இரவு ரயில் முன்னே பாய்ந்து தற்கொலை செய்து கொண்டு விட்டானாம். அவன் அண்ணன் ரங்காராம் போன் பண்ணினான். உனக்குத்தான் முதலில் போன் போட்டானாம். நீ எடுக்கவில்லையாம். உன்னிடமும் சொல்லச் சொன்னான்.''

எனக்கு பேச்சு வரவில்லை. வாயடைத்து நின்று கொண்டு இருந்தேன்.

“இப்ப எல்லாம் நீங்க ரொம்ப பேசமாட்டேன் என்கிறது மாதிரி இருக்கிறீங்க” என்றான் கணேசன்.

‘‘பேசாமல் என்ன? பேசிக்கிட்டுத்தான் இருக்கிறேன்.’’ என்றேன். அவன் காபியைக் குடித்துவிட்டு உதடுகளைத் துடைத்துக்கொண்டான்.

“சொல்லு, கணேசன். அப்புறம் என்ன வேலை?”

“உங்களைப் பார்த்துவிட்டேன். டில்லிக்குப் போய்விட்டு வந்துட்டேன். எம்.பி.யை சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்துவிட்டேன். இருந்தாலும் மனசு கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. ஊர்ல போய் பத்து நாள் கிடக்கலாம் போல இருக்கிறது”

“நல்ல முடிவுதான். பார்த்து போய்வா?”

“ரத்தம் ஓடுகிற டில்லிக்கே போய்விட்டு வந்துட்டேன். நம்ப ஊர்க்குப் போறதுல்ல என்ன இருக்கிறது?”

நான் எழுந்தேன்.

”எப்ப ஊருக்குப் பயணம்? நான் வேணுமென்னா கூட வர்றேன்.”

“இல்லை இல்லை, நீ புறப்படு. நான் மத்தியானம் கிளம்பிடுவேன்.”

“அப்ப ஊர்ல வந்து பார்க்கிறேன். எம்.பி. ஐயாயிரம் ரூபாய் கையில் கொடுத்தார். செலவு போக மூவாயிரம் இருக்கிறது. அதைக் கொடுக்க நேரமில்லை. அப்புறம் பார்த்துக் கொடுக்கணும்.”

“பணம் வேணுமா?”

“இருக்குன்னு” என்றான்.

முருகேசன் எதிரில் வந்தார். கைகளைப் பிடித்துக்கொண்டு “நீங்கள் என்ன? பில்லியர்ஸ் ஆட வர்றதே இல்லை. புதுசா ரெனிவேட் பண்ணி மூனுமாசம் ஆகிறது. உங்களைப் பார்க்க முடியல” என்றார்.

“வந்துடுறேன்.”

“இல்ல. என்கூடவே வந்து ஒரு பார்வை பார்த்துட்டுப் போங்க!” என்று இழுத்துக் கொண்டு முன்னே நடந்தார். நான் அவர்கூடவே பில்லியர்ஸ் ஆடுகளத்தைப் பார்க்கச் சென்றேன்.

★

## அத்தியாயம் 17

என்னை இப்படித்தான் யாராவது இழுத்துக்கொண்டு போய் விடுகிறார்கள். நான் எத்தனை வீரமாகப் பேசினாலும், நண்பர்கள் முன்னால் பணிந்து போய் விடுகிறேன். அதனை ஒரு முறை ஐராவதத்திடம், ‘என் பலவீனம் அதான்’ என்றேன்.

“இல்லை இல்லை. இதுதான் பலம். வாழ்வதற்கு உந்து சக்தி கொடுக்கிறது. நீ அப்படியே இரு”.

“நீ என்னை காயடிக்கிற”

“அதெல்லாம் உன் நினைப்பு. நீ எப்படி இருக்கிறீயோ அப்படியே இரு. அதுதான் நீ. அதைவிட்டுவிட்டு முகமூடி போட்டுக்கொண்டால், முண்டாசு கட்டிக்கொண்டால் அதோடு ரொம்ப நேரம் இருக்க முடியாது. கொஞ்ச நேரத்திற்கு அப்புறம் முகமூடியைக் கழட்டனும்; முண்டாசை அவிழ்க்கணும்.”

”தெரியுது”

“அது தெரியற உனக்கு எது இயல்போ அப்படி இருக்க வேண்டும் என்பது தெரியவில்லையே. அதுதான் கஷ்டமாக இருக்கிறது.”

“யாருக்குக் கஷ்டம்”

“எனக்குத்தான்”

“இல்லை. நீ மாற்றிச்சொல்வது போல இருக்கிறது.”

“தெரிந்தால் சரி. அது போதும். நாளைக்கு ஒன்று ஒன்றாகத்தெரியும்.”

“தெரிந்தும் ஒன்றும் ஆகபோவதில்லை. தெரியாமலும் ஒன்றும் ஆகப் போவதில்லை.”

“நான் உன்னிடம் தர்க்கம் புரியப் போவது இல்லை. தர்க்க ஞாயம் வெறும் பிதற்றல். இரண்டு பேரும் மாறிமாறிப் பேசிக்கொண்டே இருக்கலாம். அதுதான் பயனற்றது பற்றிப் பேசுவது.”

“பேசுவதே பலனற்றது.”

“இதுதான் சரியான பேச்சு. நான் எதற்கு உன்னைத்தேடி வந்தேன் தெரியுமா?”

“கேட்பதற்குத் தயாராக இருக்கிறேன்.”

“நம்மிடம் இன்னும் நாடகம் போதுமான அளவிற்கு வளர்ச்சி பெறவில்லை. மெட்ராசில் மியூசிக் அகாதமி, நாரத கான சபாவில் போடும் நாடகங்களை யாரும் நாடகம் என்று ஏற்றுக்கொள்வதில்லை”

“தில்லியில் ஸ்கூல் ஆப் டிராமா பேராசிரியர் ராஜேந்திரன் அப்படித்தான் கூறினார்”

“அப்படிச் சொல்ல ஒரு பேராசிரியர் தேவையில்லை. நானே சொல்கிறேன்.”

“நீ பத்து பேராசிரியர்களுக்கு மேல். உன்னைப் பற்றி, உன் படிப்பு பற்றி எனக்குத் தெரியும். நீ விஷயத்திற்கு வா.”

“நம்ப இரண்டு பேரும் டில்லிக்கு ஒருமுறை போய்விட்டு வருவோம்.”

“ஏதாவது வேலை இருக்கிறதா?”

“ஒரு வேலையும் இல்லை. டில்லியைப் பத்து வருஷத்துக்கு முன்னால் ஒரு முறை பார்த்தேன். அப்புறம் அந்தப்பக்கம் போகவே இல்லை. உன்னோடு போனால் நன்றாக இருக்குமென்றுபட்டது, அதான்.”

“இது நல்ல யோசனைதான். எப்படி இந்த யோசனை வந்தது?”

“நல்ல யோசனை வருவதற்கு எல்லாம் காரணம் சொல்ல முடியாது. அது தானாக வரும்.”

“அப்படி எல்லாம் கிடையாது. எல்லாவற்றுக்கும் ஒரு காரணம் உண்டு. காரணம் இன்றி காரியம் கிடையாது. தெரியவில்லை என்பதற்காக எதுவும் இல்லை என்பது கிடையாது. அது இருக்கிறது.”

“நான் எப்பொழுது என்னை முட்டாள், ஒன்றும் தெரியாதவன் என்று தெரிந்து கொண்டேன், தெரியுமா?”

“எனக்கு அது தெரிய வேண்டியதில்லை. நீ சொல்லவேண்டியதும் கிடையாது.”

“நீ ஏன் அவசர அவசரமாக கதவுகளை மூடிக்கொண்டே வருகிறாய்?”

“நான் அகலத் திறந்து வைக்கிறேன்.”

“நான் ஒருமுறை நாகமுத்துவோடு டில்லி போய் இருந்தேன். அவனுக்கு ஜவகர்லால் நேரு வாழ்ந்த தீன்மூர்த்தி பவனைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அதற்காகவே வந்தான் போலும். எனக்கு நேரு மேல ரொம்ப ஈடுபாடு. பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது சரித்திர ஆசிரியர் ரங்கசாமி ஐயங்கர் நேரு ‘டிஸ்கவரி ஆப் இந்தியா’ படிக்கணும். நான் முழு புத்தகத்தையும் மனப்பாடம் பண்ணி வைத்திருக்கிறேன். அதில் இரண்டு விஷயம் இருக்கிறது. முதல் விஷயம் சரித்திரம். இரண்டாவது விஷயம் இங்கிலீஷ். நீங்கள் மனப்பாடம் செய்ய வேண்டியது இல்லை. ஒரு முறை முழு புத்தகத்தையும் வாங்கிப்படிங்கள் என்றார். ரொம்ப விஷயம் தெரிந்த பேராசிரியர். ஆள் உயரமாக வெடவெடவென்று இருந்தார். கொக்கு என்று மாணவர்கள் அவருக்குப் பெயர் வைத்து இருந்தார்கள். எனக்கு நல்ல பேராசிரியர் என்றால் அவர்தான். நான் படித்துப் பார்த்தேன். உண்மையாகவே நல்ல புத்தகந்தான். ஆகையால் ‘டிஸ்கவரி ஆப் இந்தியா’வை எடுத்துக்கொண்டு அவரிடம் சென்று, சார் இதில் கையெழுத்துப் போடுங்கள் என்றேன்.”

நான் அவரிடம் பேசியது கிடையாது. அவர் என்னிடம் பேசியது இல்லை.

“நீ?” என்றார். “நான் உங்கள் மாணவன் சார். பெயர் ராஜராஜன்”

“உன்னை எனக்கு நல்லா தெரியுமே?” என்றார்.

“பெரியவர். யாரைத்தெரிந்து கொள்ளவேண்டுமோ அவனைத் தெரிந்து கொண்டிருக்கிறார்.”

“நான் நான்கைந்து ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். நீ ஒருத்தன்தான் நேரு புத்தகம் வாங்கிவந்து காட்டுற ஆள்”

“படித்துவிட்டேன் சார்.”

“ரொம்ப நல்லது.” என்று தமிழில் கையெழுத்து இட்டு, என் பெயரையும் எழுதிக் கொடுத்தார். நான் பேராசிரியர் கையெழுத்திற்காகவும், நேரு புத்தகம் என்பதற்காகவும் பத்திரமாக வைத்துக் கொண்டிருந்தேன்.”

“நல்லது”

“புத்தகம் வாங்குவது நல்லதுதான். ஆனால் பணம் கொடுத்து புத்தகம் வாங்குற ஆளெல்லாம் படித்து விடுகிறானா?”

“புத்தகம் படிப்பது அப்படியொன்றும் சுலபமான காரியம் இல்லை. ரொம்பப் படித்து இருப்பதாலேயே நீ படிக்க முடியும் என்பது இல்லை. உலகத்திலேயே கஷ்டமான வேலையென்றால் படிப்பதும், படித்ததின் வழியாகச் சொல்லப் பட்டதை அறிந்து கொள்வதுந்தான்.”

“அவ்வளவு கஷ்டமா?”

”அது வார்த்தைக்கு அடங்காதது. சொல்லவே முடியாதது. பலர் எழுதுகிற புத்தகங்கள் படிக்கவே வேண்டியது இல்லை. சிலர் எழுதிய புத்தகம் படித்து அறிந்து கொள்ள முடியாது.”

“ஏன் அப்படி?”

“அது அப்படித்தான் சுயமாக எழுதுவது என்பதை அறிந்து கொள்ள அறிவு வேண்டும்”

“புத்தகம், அறிவுக்குத்தானே”

“பலர் அப்படித்தான் நம்புகிறார்கள். ஏதோ புத்தகத்தில் அறிவு தங்கக்கட்டி மாதிரி உருட்டி வைக்கப்பட்டிருக்கிறது; ஏடுகூடாகத் தள்ளி எடுத்துக்கொண்டு வந்துவிடலாம் என்று. புத்தகம் படிப்பது சல்லடை போட்டு ஆற்றுத்தண்ணீரில் மணல் அள்ளி சலித்து சலித்து தங்கம் எடுப்பது மாதிரிதான். புத்தகத்தில் அறிவே கிடையாது. உன் அறிவால் அதனை அறிந்து கொள்ளவேண்டும்.”

“நான் புத்தகம் படித்துப் படித்து என்னை முட்டாள் என்று அறிந்துகொண்டேன். அதை இன்று உன்னிடம் சொல்கிறேன்”

“அவசியமில்லை. அறிவது போதும். ஆனால் முட்டாள் எப்போதும் முட்டாள் கிடையாது.”

“நான் பேசுவதுதான் முட்டாள்தனம்”

“நீ என்னவோ தில்லி போனது பற்றி சொல்ல வந்தே”

“ஆமாம் நாகமுத்துவோடு டில்லி போனேன். ஜவகர்லால் நேரு பிரதம மந்திரியாக இருந்தபோது வாழ்ந்த வீட்டிற்குப்போனோம். அங்கேதான் அவர் காலமானார். எனவே அதனை அரும்பொருட்காட்சியகமாக வைத்திருந்தார்கள். நாங்கள் போனபோது குர்கானில் இருந்து பள்ளிக்கூட மாணவிகள் ஐம்பது பேர் சீருடையில் வந்து இருந்தார்கள். அவர்களுக்கு பின்னால் தமிழ்பேசிக்கொண்டு ஐந்தாறு பேர்கள். அவர்களுக்குப் பின்னால் நானும் நாகமுத்துவும் சென்றோம்.”

“உனக்கு எதையும் சுருக்கமாகச் சொல்லத்தெரியவில்லை?”

நான் சிரித்தேன்.

“ஏன் எதற்கு சரிக்கற”

“எவ்வளவோ தெரிந்து கொண்டிருக்கிற உனக்கு எதையும் சுருக்கமாகச் சொல்ல முடியாது. அதோடு சுருக்கமாகக் கேட்டு மனத்தில் பதிய வைத்துக் கொள்ளமுடியாது. எதையும் ஒன்றுக்கு நான்கு முறைகள் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும். அதுவும் திரும்பத் திரும்பிச் சொல்ல வேண்டும்.”

“இது ஒன்று இருக்கிறது?”

“பள்ளிக்கூடத்தில் ஒரே பாடத்தை ஆசிரியர் ஓராண்டு முழுவதும் கற்றுக் கொடுக்கிறார். அதையே கல்லூரியில் கற்றுக் கொடுக்கிறார்கள். படிப்பு என்பதே ஒரு அம்சத்தை மறுபடியும் மறுபடியும் படிப்பதுதான். அதனால் ஒருமுறை சொன்னால் போதும், சுருக்கமாகச் சொன்னால் போதும் என்றெல்லாம் சொல்லக்கூடாது.”

“அப்படியா?”

“நீ வேண்டுமானால் சுருக்கமாகக் கேட்டுக்கொள். கேட்கும்போதே எடிட் செய்து கொள்.”

“இதுதான் ஒருவேலை. நீ சொல்வதைச் சொல். நான் எது தேவையோ அதை மட்டும் எடுத்துக் கொள்கிறேன். பழைய காலத்தில் அன்னபட்சியென்று ஒரு பறவை இருந்ததாம். அதற்குப் பாலும் தண்ணீரும் கலந்து வைத்தால் பாலை மட்டும் தனியாகப் பிரித்து குடித்துவிடுமாம்”

“நல்ல பறவை. சிறந்த காரியத்தைச் செய்து இருக்கிறது. மனிதன் பறவைக்கு மேலானவன். ஆறறிவு கொண்டவன். எல்லாம் அறிந்தவன்.

எது தனக்குத்தேவை என்பதைக் கண்டு அதைமட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த அறிவு இல்லாதவன் பற்றி என்ன சொல்ல முடியும்?''

''நீ எதுவும் சொல்ல வேண்டாம். ஜவகர்லால் நேரு தீன்மூர்த்தி இல்லத்திற்குள் சென்றீர்கள். அவர் படுக்கை அறை, புத்தகம் படித்த அறை, அவர் நூலகம் எல்லாம் பார்த்தீர்கள்''

''எனக்கு இன்னொருவர் நினைவுப்படுத்த வேண்டியது இல்லை. எனக்கு எது தேவையோ அதனை நானே நினைவு படுத்திக் கொள்வேன்.''

''சரி''

''இப்படி எல்லாம் அலட்சியமாகச் சொல்லக்கூடாது. சொல்லுக்குப் பொருள் வார்த்தையில் மட்டுமல்ல, சொல்லப்படும் முறையிலும் இருக்கிறது. அதைத்தான் தொனி என்கிறார்கள். அதை வைத்துக்கொண்டுதான் பேச்சு மேலே போகிறது.''

''எனக்கு தொனி எல்லாம் தெரியாது''

''அது அவசியமில்லை. ஆனால் குதர்க்கமாக, அவமானப்படுத்தும் விதமாகப் பேசத்தெரிகிறது. நான், நீ பேசுவதாகச் சொல்லவில்லை. எல்லா மனிதர்களுக்கும் தெரிகிறது. அதற்குப் படிப்பு வேண்டியது இல்லை. அனுபவம் பெற வேண்டியதில்லை. அது இல்லாமல் எல்லோருக்கும் தெரிகிறது''

''ஆச்சரியந்தான்?''

''அதுதான் முக்கியம். எதெல்லாம் ஆச்சரியம் அளிக்கிறதோ அதெல்லாம் அற்புதமாகிவிடுகிறது. அதனைத் தேடித் திரிகிறோம்''

''நீ இன்னும் நேரு வீட்டிலேயேதான் இருக்கிற''

''நண்பர் வைத்தீஸ்வரன் சிவமணியிடம் சொன்னார்: ஜவகர்லால் நேருவிற்கு உலக அரங்கில் கொஞ்சம் நல்ல பேரும்; இந்திய அளவில் அதிகமான நல்ல பேரும் இருந்தன. இரண்டையும் இந்திரா காந்தி குறைத்து விட்டார்.'' என்று.

''அவர் பெரிய பேராசிரியர் அவா¢ சொன்னால் சரியாகத்தான் இருக்கும்.

''மேலே போன குடும்பம் எல்லாம் கீழே தான் வருகிறது.''

“பட்டம் எப்பொழுதும் பறந்து கொண்டே இருக்க முடியாது. நீ எவ்வளவு உயரமான மேட்டில் நின்றுகொண்டு நூலை மேலே மேலே பறக்க விட்டாலும், காற்று இல்லாவிட்டால் பட்டம் பறக்காது. தள்ளாடிக் கொண்டு கீழே விழுந்துவிடும். பட்டம் பறக்க விடுவதற்குப் போகும் முன்னால் காற்று இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் அதுவும் எந்தத் திசையில் வீசுகிறது என்பதை.”

“மேலே பட்டத்தைத் தூக்கிப்போட்டு, நூலை வெட்டி இழுத்தால் பறந்து போகும் என்பதுதான் ஒவ்வொருவர் நினைப்பாக இருக்கிறது. அதற்கு இந்தக் குடும்பம், அந்தக் குடும்பம் என்பதெல்லாம் கிடையாது. ஒவ்வொரு குடும்பமும் உச்சியில் வீற்றிருக்க ஆசைப்படுகிறது.”

“குறைகேட்க நான் எப்பொழுதும் தயாரில்லை!”

“நான் யாரையும் குறை சொல்வது கிடையாது. வாழ்க்கையில் குறை, நிறை என்பது ஒன்றும் கிடையாது. அது ஆளைப்பொறுத்தது. அவன் அறிந்ததும் அறியாததும் சார்ந்தது. அதுதான் ஒவ்வொரு முறையும் சொல்லப்படுகிறது. சொல்லப்படுவதில் ஆளுக்கு ஆள் தங்களுக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டு போய் விடுகிறார்கள். அதற்குக் கொஞ்சம் கொஞ்சமாக உருவேற்றி மாற்றி விடுகிறார்கள். அதனால் எது முதலில் உருவானது, எது பிறகு இணைக்கப்பட்டது என்பது கண்டுபிடிக்க முடியாமல் போய்விடுகிறது.”

“ஜவகர்லால் நேரு தீன்மூர்த்தி பவனைப் பார்த்துவிட்டு பின்னால் சென்றீர்கள்?”

“ஆமாம். தீன்மூர்த்தி பவன் பாராளுமன்றத்திற்குப் பக்கத்தில் இருக்கிறது. காரில் மூன்று நிமிஷத்தில் பாராளுமன்றம் போய்விடலாம்.”

“ரொம்பப் பக்கம்”

தீன் மூர்த்தி பவன், பழையபெயர் மேஜர் ஜெனரல் மாளிகை. பிரிட்டிஷ் காலனி ஆட்சிக் காலத்தில் ராணுவ தளபதி மாளிகை. பிரமாண்டமான இரண்டடுக்குக் கட்டிடம். விசாலமான, காற்றோட்டம், வெளிச்சம் கொண்ட அறைகள். வாழவும், அனுபவிக்கவும் தெரிந்தவர்கள். நானும் நாகமுத்தும் பின்கட்டு வாசலில் நின்று கொண்டு முன்னே பார்த்தோம். பெரிய மைதானம். முன்னே இருந்ததைவிட பின்னால் அதிகமான இடம் விட்டிருந்தார்கள் பச்சைப் பசும்புல்வெளிÓ

“ஏன் எதற்கு?”

“பிரிட்டிஷ் கலாச்சாரம். பின்கட்டில் அடிக்கடி பார்ட்டி நடைபெறும். ஒரு கட்டடக்கலைஞர் எழுதி இருந்தார். வீட்டைச்சுற்றி இருக்கும் திறந்த வெளி என்பது வெற்றிடம் கிடையாது. அது வீட்டோடு சேர்ந்து போவது. சுவர் கட்டடப்படாத இடம். மாளிகைக்கு அழகே அதனைச் சுற்றிவிடப்பட்டிருக்கும் இடந்தான். எனவே மாளிகை, வீடு கட்டினால் இடம் விடுங்கள் என்று.”

“நன்றாகத்தான் சொல்லியிருக்கிறார்.”

“நானும், நாகமுத்தும் தீன்மூர்த்தி பவன் பின்கட்டில் நடந்தோம். எங்களுக்கு முன்னால் தமிழ் பேசிக்கொண்டு சென்ற கூட்டத்தில் இருந்து ஒருவன் சொன்னான்: “அடே அப்பா எம்மாம் இடம். சும்மா கிடக்குது. குடிசை மாற்று வாரியத்திடம் கொடுத்தால் ஐநூறு ஆயிரம் குடும்பத்துக்கு வீடு கட்டலாம். சும்மா போட்டு வைத்து இருக்கிறார்கள்.”

“அடே சுந்தரம், என்ன சொல்லுற, இது பிரதமர் மாளிகை.”

“அதான் வேஸ்டா இடம் விட்டுவைத்து இருக்கிறார்கள்.”

“அப்படியா?”

“இதெல்லாம் ரொம்ப தப்பு. கோடிக்கணக்கானவர்கள் சின்ன குடிசைகூட இல்லாத நாட்டில் இது பெரிய அநியாயம்.” என்று அழுத்தமாகச் சொல்லிக் கொண்டிருந்தான். நான் கொஞ்சம் முன்னே சென்றேன்.

“தம்பி” என்று அவர்களைக் கூப்பிட்டேன். நான் சாதாரணமாக ரோட்டில் எவனாது பேசிக்கொண்டு போனால் குறுக்கே நுழைய மாட்டேன். காதில் விழுவதையெல்லாம் மனத்தில் ஏற்றிக்கொள்ள மாட்டேன். ஆனால் தீன்மூர்த்தி பவன் பின்கட்டில் பேசப்பட்ட்து. என்னைப் பாதித்து விட்டது. என் குரல் கேட்டு அவர்கள் திகைத்துப் போய் விட்டார்கள்.

“நீங்கள் எல்லாம் எந்த ஊர்?”

“சேலம் சார். கிராமக் கூட்டுறவு சங்கத்தில் வேலை செய்யறோம். இவன் இந்திரன். இவன் சுந்தரம். இவன் தான் சார் குடிசை மாற்று வாரியம் கட்டச் சொல்லிக்கிட்டே இருந்தான். நான் பழனிச்சாமி” என்றான்.

“ரொம்ப நல்ல யோசனை. உடனே உங்கள் முதலமைச்சரைவிட்டு கடிதம் எழுதி ஜனாதிபதிக்குப் போடுங்க. அதோட இந்தியா கேட் பகுதியில் ஒரு குடிசை மாற்று வாரியம் கட்டச் சொல்லுங்க.”

“அது இல்ல சார். இம்மாம் இடம் கிடக்கிறதப் பார்த்ததும் குடிசை மாற்று வாரியம் கட்டத்தோன்றியது. அதான் சார். நீங்கள் சார்? –”

“ஊர் சுற்றி பார்க்க வந்த உன்ன மாதிரி ஆள்”

“நான் தப்பா பேசிட்டேனா சார்?”

“ரொம்பத் தப்பு. அதுமட்டுமல்ல நிறைய பொதுக்கூட்டம் கேட்கிற ஆளா?”

“தொழில் சங்க மாவட்டச் செயலாளர் சார்”

சுந்தரம் பயந்து போய்விட்டான். நான் அவன் தோளில் தட்டி, “பயப்படாத?” என்று சொல்லிவிட்டு புல்வெளியில் நடந்து சென்றேன்.

“உலகம் இப்படித்தான்”

“டில்லி என்றால் அதுதான் அடிக்கடி நினைவுக்கு வருகிறது.”

“நல்ல சம்பவந்தான்”

“ஆமாம்.”

“ராஜா நீ எழுதலாம்”

“ஆமாம், நீ என்னவோ சொல்ல வந்தே?”

“ஆமாம். ஒரு முறை டில்லிக்குப் போய் வரலாம்.”

“நமக்கு டில்லியில் என்ன வேலை?”

“கும்பகோணத்தில் என்ன வேலை?”

“அது சரியான கேள்வி

“யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று ஒரு தமிழ்க் கவிஞன் பாடி வைத்திருக்கிறான்.”

“அதை சிங்கப்பூரில் பறக்கும் ரயிலில் எழுதி வைத்து இருக்கிறார்களாம்.”

“நல்லது என்றால் எல்லோரும் எடுத்துக் கொள்கிறார்கள்.”

“ஆமாம். டில்லி எப்படி தலைநகரம் ஆனது? வெள்ளைக்காரன் முதல்ல கொல்கத்தாவைத்தானே தலைநகரமாக வைத்துக்கொண்டு இருந்தான்.”

“இது என்ன பல்கலைக்கழகத்தில் கேள்வி கேட்பது மாதிரி இருக்கிறது. அதெல்லாம் பழைய கதை. ஒன்றுக்கும் உதவாது. பழைய குப்பைகளைப் புரட்டிப் புரட்டிப்பார்த்து, என்னென்னவோ புதிதாகக் கண்டு புடித்துவிட்டதாக எழுதுகிறார்கள். அதிகாரத்தில் இருக்கும் ஐந்தாறு பேர்கள் என்ன நினைக்கிறார்களோ அதுதான் நிகழ்வாகிறது.”

“டில்லிக்குப் போவதற்கு முன்னால் ஏன் தலைநகரமாகியது என்று தெரிந்து கொள்ளலாம் என்று?”

“நீ பி.ஹெச்.டி., ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் செய்யலாம்.”

“அவ்வளவு இருக்கிறதா?”

“பெரிய நகரம் இல்லை”

“ஆமாம். பார்த்தேன். பழைய டில்லி. புதுடில்லி ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இல்லை.”

“நீ சென்னைக்குப் போய், நீ புளியந்தோப்பு, கொண்டித்தோப்பு, வியாசர்பாடி பார்த்துவிட்டு அண்ணா நகர், பெசன்ட் நகர் பார். ஊரென்றால் ஒன்று கிடையாது. புதிது புதிதாக நகரம் வளரவளர பழைய நகரம் பொழிவிழக்கும். பழையதாகும். அதனால்தான் தன் இருப்பைக் காட்ட மன்னர்கள் புதிய நகரங்களை நிர்மாணிக்கிறார்கள். ஆமாம். நீ யார் வீட்டில் இருக்கற.”

“நான் கட்டிய வீட்டில்”

“அதான். உனக்கு அப்பா கட்டிய வீடு பழசாகிவிட்டது; உன் மகனுக்கு உன் வீடு பழசாகி விடுகிறது”

“நான் அதைக்கேட்கவில்லை. அது எனக்குத்தெரியும்.”

“உனக்குத் தெரியாத எதுவும் எனக்குத்தெரியாது”

“சரி. நான் நம்புகிறேன். டில்லிக்குப் போவது பற்றி என்ன சொல்லுற”

“மே, ஜூன் மாதத்தில் போகலாம். வைத்தீஸ்வரன் வேறு கூப்பிட்டுக்கொண்டே இருக்கிறார். சிவமணியும் வரலாம்.”

“அப்படியே ரிஷிகேஷ் ஹரிதுவார்.”

“கேதார், பத்ரிநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி”

“சாரநாத், புத்த கயா”

“பெரிய பயணம்”

“யாத்திரை. புனித யாத்திரை”

“வாழ்க்கையில் ஒவ்வொருவரும் ஒருமுறை புனித யாத்திரை செய்ய வேண்டும்”

“நல்ல யோசனை. நான் எழுதி வைத்துக்கொள்கிறேன்.”

“நீ ரொம்ப நிதானத்தில் பேசுவது மாதிரி இருக்கிறது. நான் புறப்படுகிறேன்.” என்று ஜராவதம் எழுந்து வேட்டியை இறுக்கக் கட்டிக்கொண்டு நடக்க ஆரம்பித்தார் நான் பதில் ஒன்றும் சொல்லாமல் அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

★

## அத்தியாயம் 18

சிவமணி போன் பண்ணினார். சாதாரணமாக அவர் போன் பண்ணக்கூடிய ஆளில்லை. நானும் அவர் பதிப்பகத்திற்கு அடிக்கடி போகக்கூடியவன் இல்லை. நினைத்துக்கொண்டால் போய் இரண்டு மணிநேரம் மூன்று மணிநேரம் பேசிக்கொண்டிருப்பேன். ஒன்று அவர் பேசுவார்; இல்லாவிட்டால் நான் பேசுவேன். இரண்டு பேரையும் பேசவிடாமல் வைத்தீஸ்வரன் மாதிரி பேராசிரியர்கள் எழுத்தாளர்கள் வந்து பேச்சுக் கொடுத்தார்கள். எல்லோரிடமும் சொல்வதற்கு நிறைய இருக்கிறது. புது ஆட்களைக் கண்டால் மனம் திறந்து சொல்கிறார்கள். சொல்வதில் அவர்களுக்கு மனம் ஆறுதல் அடைகிறது. கேட்கிறவர்களுக்கு உலகம் புரிகிறது. பொழுது போகிறது. கேட்டது மனத்தில் ஏறிவிடுகிறது. எப்பொழுதாவது வந்து தொந்தரவு கொடுக்கிறது.

“சொல்லுங்கள்?” என்றேன்.

“ரொம்ப வேலையா? ஊருக்குப் போய் விட்டாயோ என்று பார்த்தேன்.”

“இன்னும் ஊருக்குப் போகவில்லை. போகணும்”

“வேலை இருக்கிறதா?”

“என்ன வேலை?”

“சும்மா இருந்தால் இந்தப்பக்கம் வந்து விட்டுப் போகவும். வைத்தீஸ்வரன் போன் பண்ணினார். அவர்க்கு உன்னை ரொம்பப் பிடித்துப் போய்விட்டது.”

“நான் வர்றேன்.”

மத்தியானம் சாப்பிட மதுரா ரெஸிடென்சிக்குச் சென்றேன். பீடாவை வாய்நிறைய கொதப்பிக்கொண்டு வந்த ஓவியர் மகேந்திரன் கரம் கூப்பி வணங்கி, “என்ன பாக்கியம்.” என்றான். மகேந்திரன் பிரபலமான ஓவியன். சண்டைக்காரன் என்று பெயரெடுத்தவன். ஆசிரியர். மூன்று மாதங்கள் காமன்வெல்த் நாடுகள் திருவிழாவிற்காக கனடா போய் இருப்பதாகச் சொன்னார்கள். போகும்போது சந்தித்தேன். நிறைய குடிப்பான். ஆனால் நிதானமாகப் பேசுவான்.

“எப்ப வந்தது?”

“வந்து இருபது நாட்களாகிறது. நான்கைந்து நாட்களாக உங்களைத்தான் தேடி கொண்டு இருக்கிறேன். கிளப்பிற்கு ஒருமுறை வந்தேன். வெளியில் போய் இருப்பதாகச் சொன்னார்கள். அறையில் சீட்டு எழுதி வைத்துவிட்டு வந்தேன்”

“சொல்லு என்ன விஷயம்?”

“பெரிய விஷயம்”

“உன்னிடம் என்ன பெரிய விஷயம் இருக்கப்போகிறது?”

“அசல் கலைஞனிடம் பெரிய விஷயம் எதுவும் இருக்க முடியாது என்று உலகம் கருதுகிறது. ஏனென்றால் பெரிய விஷயம் என்பது வஞ்சம், பொய் பித்தலாட்டம். ரகசியத்தில் பேசவும், செய்யக்கூடியது. அதெல்லாம் என்னைப் போன்ற கலைஞனால் ஆகாது. அதனால் பெரிய விஷயம் இருக்க முடியாது என்று கருதுகிறார்கள்.”

“சாப்பிட்டு விட்டாயா?”

“முருங்கைக்காய் சாம்பார் மணம் வீசுகிறது. சாப்பிட்டு வயிறு நிறைந்துவிட்டது”

“சரி நான் சாப்பிட வேண்டும்”

“ஐயா, நான் பெரும்பாவி. பசியோடு வந்தவரை வழிமறித்து பேசிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் அமர்ந்து அமைதியாக சாப்பிடுங்கள். நான் மாலையில் வந்து பார்க்கிறேன்”

“என்ன விஷயம்?”

“அன்னையை அநியாயமாகக் கொன்றுவிட்டார்கள். எனக்கு ரத்தக் கண்ணீர் வந்து விட்டது. தாளவே முடியவில்லை. ஒரு அசல் கலைஞன் என்ன பண்ண முடியும். அன்றிரவு முழுவதும் தூங்காமல் பெரிய பெரிய படமாக பதினைந்து படம் போட்டிருக்கிறேன். அற்புதமாக வந்து இருக்கின்றன. எல்லாம் கறுப்பு வெள்ளை. ஓவியம் என்றால் கறுப்பு வெள்ளைதான். அதுதான் வண்ணம் என்பதில் முதல்”

நான் தலையசைத்தேன்

“ஒரு கண்காட்சி வைக்கிறேன். லலித் கலா அகாதமியில். மூப்பனாரைப் பார்த்துக் கூப்பிட்டேன். ரொம்ப வேலை இருக்கிறது என்றார். நான் ஒரு போடு போட்டேன். ‘நீங்கள் வந்து திறந்து வைக்காவிட்டால் நான் கண்காட்சியே நடத்த மாட்டேன். அன்னை படத்தை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் கூவம் சாக்கடையில் போட்டுடுவேன்’ என்றேன். அதைச் சும்மா சொல்லலே. நிஜமாவேதான் சொன்னேன். அவர் நல்லவர். நான் சொன்னால் அப்படியே செய்துவிடுவேன் என்று தெரியும் எனவே, சரியென்று அவர் தேதி கொடுத்திட்டார். அன்றிலிருந்து உங்களைத் தேடிக்கொண்டு இருக்கிறேன்.”

“என்னை இப்படி எல்லாம் பயமுறுத்தாதே. நான் வந்துடுறேன்.”

“நீங்கள் வந்துவிடுவீங்கனு தெரியும். ஆனால் நான் அழைக்கனும்னு இருக்கிறது இல்லையா.”

நான் முன்னே காலெடுத்து வைத்தேன்.

“நீங்கள் சாப்பிடுங்கள். நான் வாசலில் காத்து இருக்கிறேன்.”

“இல்லை. நீ புறப்படு”

“நான் இரவு கிளப்பிற்கு வருகிறேன்”

“நான் சாப்பிடவேண்டும்”

“ஆமாம் ஐயா” என்று மகேந்திரன் விடைப்பெற்றுக் கொண்டான்.

மகேந்திரன் எங்கள் ஊர்ப்பக்கம். அவன் தந்தையார் சோலையப்ப ஆசாரி. மருத மரத்தில் செடி கொடிகள், தாமரைப்பூ, அன்னப்பட்சி செதுக்குவார். சொந்தமாக பட்டறை வைத்து இருந்தார். எப்பொழுது பார்த்தாலும் வேலை செய்து கொண்டே இருந்தார். அவர் மூன்றாவது மகன் மகேந்திரன். நான் அவனை பட்டறையில் பார்த்ததாக நினைவு இல்லை. கும்பகோணத்தில் தனபால் மாஸ்டர் காலத்தில் ஓவியம் படித்ததாகச் சொன்னான்.

“மாஸ்டர் எப்படி?”

“ரொம்ப நல்ல மாஸ்டர். கையைப் பிடித்துக்கொண்டு கோடெல்லாம் கிழிக்கக் கற்றுக் கொடுத்தார். அவர் ஒருநாள் தான் கற்றுக் கொடுத்தார்.

நான் அப்புறம் கிர்கிர்றென்று மேலே வந்துவிட்டேன். நான் கிழித்த கோட்டைப் பார்த்து விட்டு கையைப்பிடித்து முத்தம் கொடுத்தார்.''

''அப்படியா?''

''டேய், மகேந்திரா நீ பெரிய ஓவியனா வரப்போற. உன் கை பேசுது. நீ கிழிக்கற கோடு சொல்லுது'' என்று என்னை ஐயா செட்டியார் ஜவுளிக் கடைக்கு அழைத்துக்கொண்டு போய் முதன்முதலாக புல் பேண்ட்; முழுக்கை சட்டை வாங்கிக் கொடுத்தார்.''

''கேட்கவே நன்றாக இருக்கிறது?''

''அப்படியே சிவாஜிராவ் போட்டோ ஸ்டுடியோவிற்கு அழைத்துக் கொண்டு போய் பேண்ட் சட்டையெல்லாம் போட்டுக் கொள்ள வைத்து ஒரு போட்டோ எடுக்கச் சொன்னார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அப்புறம் ஒரு நாற்காலியில் அவர் உட்கார்ந்து கொண்டார். என்னைப் பக்கத்தில் நிற்க வைத்து இரண்டு போட்டோ எடுக்க வைத்தார். அந்தப் போட்டோவை பெரிது பண்ணி அண்ணா நகர் ஸ்டுடியோவில் மாட்டி வைத்து இருக்கிறேன்.

''ரொம்ப விஷயம் சொல்றே''

''நான் சொல்லலே ஐயா, தனபால் மாஸ்டர் சொல்ல வைக்கிறார். அவர் இல்லேன்னா நான் அப்பா பட்டறையில் மரத்தைக் கீறிக்கிட்டுதான் இருப்பேன். இன்னக்கி பெரிய ஓவியனா பரிசு எல்லாம் வாங்கிக் கொண்டிருக்கிறேன் என்றால் அவர்தான் காரணம்.''

''சரி''

''நன்றி மறக்கக்கூடாது. அதுவும் கலைஞன் மறக்கவே கூடாது'' என்றான்.

ஐராவதம் வந்ததும் மகேந்திரன் பற்றித்தான் சொன்னேன்.

''நல்ல ஓவியன்'' என்றார்.

''நிறைய பேசுகிறான். தேவையில்லாமல் பேசுகிறான்''

''அவன் ஓவியத்தில் பேச்சு இல்லை. ஆழ்ந்த அமைதியும் பூரண அழகும் இருக்கிறது?''

“நீ எங்கே பார்த்த?”

“நாலு வருஷத்திற்கு முன்னால் சென்னைக்குப் போய் இருந்தேன். நீ அப்ப சிங்கப்பூர் சென்று இருந்த. ஒரு நாள் சாயந்தரம் கிரிம்ஸ் ரோடு வழியாகப் போய்க்கொண்டு இருந்தேன். லலித் கலா அகாதமியில் கண்காட்சி நடப்பதாக போஸ்டர் ஒட்டி இருந்தார்கள். உள்ளே நுழைந்தேன். வாசலில் நின்று கொண்டு யாரோடோ பேசிக்கொண்டிருந்த மகேந்திரன் அவசர அவசரமாக ஓடி வந்து, “வாங்க சார். வாங்க இது குரூப் ஷோ சார். நான் நளினிராவ், முரளிதரன் கந்தவேள், திவ்விய நடராஜன் எல்லாம் கூட்டாக வைத்து இருக்கிறோம். இதுதான் எங்கள் முதல் கண்காட்சி. மூன்று நாட்களுக்கு முன்னால் தனபால் மாஸ்டர் தலைமையில் சூரி திறந்து வைத்தார். ஜெர்மன் கான்சல் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார்.” என்று என்னை அழைத்துக் கொண்டு முன்னே சென்றான். சக ஓவியர்களை அழைத்து அறிமுகப் படுத்தி வைத்தான்.

“தன்னுடைய, பெயரற்றப் படம் – என்பது பற்றி ஐந்து நிமிடம் பேசினான். வெள்ளிக்கிழமை ‘இந்து’வில் லட்சுமி சுந்தர்ராஜன் கண்காட்சி பற்றி எழுதியிருப்பதாகவும், அதில் தன் படம் போட்டு இருப்பதாகவும் சொன்னான்.”

“ரொம்ப சந்தோஷம்” என்றேன்.

நளினிராவிடம் இருந்து இந்துப் பத்திரிக் கையை வாங்கிக் காட்டினான். வண்ணப்படம். மகேந்திரன் சோலையப்பா வளர்ந்து வரும் முக்கியமான இளம் ஓவியர். வர்ணத்தை அற்புதமாகக் கையாண்டிருக்கிறார் என்று எழுதி இருந்தார். நான் அதைப்படித்துவிட்டு, நன்றாகத்தான் எழுதி இருக்கிறார்’ என்றேன்.

“ஆமாம் சார். லட்சுமி சுந்தர்ராஜன் பெரிய ஆர்ட் கிரிட்டிக். அவுங்க எழுதியது பெரிது என்று விஸ்வம் சொன்னார். திவ்விய நடராஜன் நான் ஓவியங்களைப் பார்ப்பதைப் போட்டோ எடுத்துக் கொண்டாள். கடைசியாக நான்கு பேர்களும் குரூப்பாக படகராவை கூப்பிட்டு போட்டோ எடுக்கச் சொன்னார்கள். கண்காட்சி ஏ.சி. அறையில் பார்க்க சுகமாக இருந்தது.

மகேந்திரன் ரொம்ப நேரம் என்னை விட்டுப் போகவே இல்லை. யார் யாரோ வந்து கொண்டிருந்தார்கள். அவன் ஒரு பிரமுகர் மாதிரிதான் இருந்தான்.

“ஊர்லே உங்களையும், சாரையும் ஒன்னா அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஆனால் பேசியது இல்லை. ரொம்ப வெட்கம்”

“எதற்கும் வெட்கப்படக்கூடாது”

“சார், வர்லியா?”

“சிங்கப்பூர் போய் இருக்கார். வர பத்து நாட்கள் ஆகும்.”

“சனிக்கிழமையோட முடியுது. நளினிக்கு ரெண்டு படம் விற்று இருக்கிறது. எனக்கு ஒன்று. அடுத்தபடியாக ஜனவரியில் பம்பாய் ஜஹாங்கீர் ஆர்ட் காலரியில் ஷோ வைத்து இருக்கிறோம்”

“அப்படியா? ரொம்ப சந்தோஷம்”

“ஜஹாங்கீர் ஆர்ட் காலரி கிடைக்கிறது ரொம்ப கஷ்டம். ரெண்டு வருஷத்திற்கு முன்னே புக் பண்ணினோம் எங்கள் ஓர்க்கையெல்லாம் பார்த்துவிட்டு அப்புறமாகத்தான் கொடுத்தார்கள்.”

“படிப்பு முடிந்துவிட்டதா?”

“எம்.எப்.ஏ. பைனல் இயர். நீங்களும் சாரும் கல்லூரிக்கு வந்து ஓவியத்தையெல்லாம் பார்க்கனும்.”

“ராஜா வரட்டும், வந்ததும் காலேஜ் வந்து பார்க்கிறோம்.”

“அவசியம் வரனும். பாஸ்கரன்தான் பிரின்ஸிபால். பெரிய ஓவியர்.” என்று வழியனுப்பி வைத்தான் என்று சொன்னான்.

“வாழ்க்கையில் எவ்வளவோ படிப்பு இருக்கிறது. அதை அறிவதும், கற்பதும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே வருகிறது.”

“மகேந்திரன் கற்கவே இல்லை அவன் தன்னிடம் உள்ள படைப்பாற்றலை வெளிக்காட்டிக்கொண்டு வருகிறான்.” என்றேன்.

“கலை, படிப்பு இல்லை. யாரும் சொல்லிக்கொடுக்க முடியாது. கற்றுக் கொள்கிறவன் எல்லாம் கடைசிவரையில் கலைஞனாக இருப்பதில்லை.”

“அது சரி மகேந்திரன் வந்தானா?”

“அவன் கலைஞன், ஆயிரம் வேலைகள் இருக்கும். நாந்தான் ஒருநாள் அவனைத் தேடிக்கொண்டு கல்லூரிக்குச் சென்றேன். மரத்தடியில் படம் போட்டுக் கொண்டிருந்தவன் என்னைப் பார்த்ததும் ஓடிவந்து கரம் குவிந்து, “வரவேண்டும். வரவேண்டும்!” என்று வரவேற்றான்.

“உன்னைத்தான் பார்க்க வந்தேன், மகேந்திரா” என்றேன்.

“என்னைத்தவிர இந்தக்கல்லூரியில் நீங்கள் பார்க்க யார் இருக்கிறார்கள்.”

“பிரமாதம் மகேந்திரா. படம் போட்டுக்கொண்டிருக்கிறயா?”

“இப்பத்தான் பேப்பரை வைத்தேன். திரும்பிப் பார்த்தால் நீங்கள் வருகிறீர்கள்.”

“அப்படியா?”

”கொஞ்சம் முன்னால் வந்து அப்படியே ஸ்டூல் மீது உட்காருங்கள் சார். உங்களை போர்ட்ரைட் வரைந்து விடுகிறேன்.”

“இல்லை இல்லை நான் உன் ஓவியங்களைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன்.”

“வரைந்தது எல்லாம் கிடக்கட்டும் வரைவதையே நீங்கள் பார்க்க வேண்டும். அதுதான் என் ஆசை.”

“உன் ஆசை இருக்கட்டும். ஆனால் உனக்கு மாடலாக உட்கார வர்ல.”

“அதுவும் சரிதான்”

ஒரு பையன் வந்து பிரின்ஸிபால் கூப்பிடுவதாக மகேந்திரனிடம் கூறினான்.

“வாங்க சார். பிரின்ஸிபாலை பார்த்துவிடலாம்.”

“அவர் உன்னைத்தான் கூப்பிட்டு இருக்கார்.”

“இல்லை. உங்களைப் பார்த்துவிட்டுத்தான் என்னைக் கூப்பிட்டு இருப்பார். நீங்கள் வாங்க!” என்று முன்னால் நடந்தான். நான் பின்னால் நடந்து சென்றேன்.

★

## அத்தியாயம் 19

நான் நன்முத்து பதிப்பகத்திற்குள் சென்றேன். நோட்டுப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதை சிவமணி படித்துக் கொண்டு இருந்தார். காலடி சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்து, ‘வா’ என்றபடி நோட்டுப் புத்தகத்தை மூடினார். இடது பக்கமாக வைத்துவிட்டு உட்காரச் சொன்னார். அவருக்கு எதிராக உட்கார்ந்து கொண்டேன்.

“இப்பொழுதுதான் வெங்கட்ராமன் வந்து இந்திரா காந்தி பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறேன். இரண்டு நாளில் எழுதியது. ரொம்ப நன்றாக வந்திருக்கிறது. போட்டால் விற்கும்.” என்று கொடுத்துவிட்டுப் போனார். புரட்டிப் பார்த்துக்கொண்டு இருக்கிறேன்.

“ரெண்டு நாளிலேயே.”

“அவர் ராவும் பகலுமாக எழுதக்கூடியவர். பத்திரிகையில் எழுதி எழுதிப் பழக்கமானவர். அவர் எழுதிவிடுவார்.”

“அப்படியா?”

“பெரிய தலைவர்கள் பற்றிய தகவல்கள் எல்லாம் இப்ப சுலபமாகக் கிடைக்கிறன. அதனால் எழுதிவிடுகிறார்கள். அப்புறம் வைத்தீஸ்வரன்; டில்லியில் இருந்து காலையில் போன் பண்ணினார். நான் இந்திராகாந்தி பற்றி ஒரு புத்தகம் இங்கிலீஷ்ல் எழுதலாம் என்று இருக்கிறேன். லால்ஜி தண்டனிடம் பேசினேன். உடனே எழுதிக் கொடு. போடுகிறேன். பத்து நாள் டைம் கொடுத்திருக்கிறான். இந்தியா இண்டர்நேஷனல் சென்டரில் உட்கார்ந்து கொண்டு எழுதலாம் என்று இருக்கிறேன். ரொம்ப கிரிட்டிகல். விமர்சனப் பூர்வமான புத்தகமாக இருக்கும். அதைத் தமிழில் மொழி பெயர்த்துப் போடுங்கள் என்றார்!”

“நல்ல யோசனைதான்”

“நான் சொன்னேன், மொழி பெயர்ப்பாக வேண்டாம் நீங்கள் தமிழில் எழுதிக் கொடுங்கள். உடனே போட்டுவிடலாம் என்றேன்.”

“என்ன சொன்னார்?”

“நான் தமிழில் எழுதுவதா என்று இழுத்தார்?”

“ஏன் தமிழில் எழுத மாட்டாரா?”

“எழுத மாட்டார் என்பது இல்லை. எழுத முடியாது. மூன்று வருஷமாக ‘நெய்தல்’ என்று ஒரு புத்தகம் எழுதித் தருகிறேன். என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார். ஆனால் இன்னும் எழுதவே ஆரம்பிக்கல்லை. அவர் மாதிரி பேசுகிறவர்களால் எழுத முடியறது இல்லை. நம்ப வெங்கடராமன் இரண்டு ராத்திரியில் ஒரு புத்தகம் எழுதிக் கொடுத்துவிட்டு ஐநூறு ரூபாய் வாங்கிக் கொண்டு போயிடுவார்.”

“கேட்க ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது?”என்றேன்.

வெளியில் இருந்து, ‘வணக்கம்’ என்ற குரல் கேட்டது. திரும்பிப்பார்த்தேன். மகேந்திரன் இரண்டு இளைஞர்களோடு நின்று கொண்டிருந்தான்.

“வா, மகி” என்றார் சிவமணி. அவன் உள்ளே வந்தான்.

“இவர் பெரிய ஓவியர். நமக்கு அட்டைப்படமெல்லாம் போட்டுக்கொடுப்பார். பணம் கொடுத்தால் வாங்க மாட்டார்.” என்றார். அப்புறம், “மகி சார் வந்து...” என்றார்.

“எனக்கு நல்லா தெரியும். எங்கள் ஊர் மிராசு நேற்று ஓட்டலில் பார்த்துப் பேசினேன்”

“உலகம் ரொம்பக் குறுகியது. யாரும் தொலைவில் இல்லை. உட்கார் மகி. என்ன விஷேசம்?”

“நான் உங்கள் முன்னே உட்கார வரவில்லை. நவம்பர் இருபதாம் தேதி அன்னை இந்திரா காந்தி ஓவியக் கண்காட்சி வைத்திருக்கிறேன். தம்பி புலிகேசி அழைப்பிதழ் தயார் பண்ணினார். பிரஸில் இருக்கிறது. தயாராக மூணு நாட்கள் ஆகுமாம். நீங்கள் அவசியம் வரணும். அதைச் சொல்லத்தான் வந்தேன். நாட்டிலேயே இதுதான் அன்னை இந்திரா காந்திக்கு முதல் ஓவிய கண்காட்சி.”

“சரி, வந்துடுவோம். தம்பியை விட்டுடாதே”

“நேற்றே சொல்லிட்டேன். மூப்பனார் வராங்க.”

“அது ரொம்ப சரி”

“அப்ப நான் புறப்படுறேன்” என்று என்னைப் பார்த்து மகேந்திரன் கை கூப்பினான்.

“ஒரு காபி சாப்பிட்டு போ” என்றார் சிவமணி.

“இல்லை தம்பிகளுக்கு நிறைய வேலை இருக்கிறது. நாங்கள் புறப்படுகிறோம்” என்று கிளம்பிச் சென்றான்.

“எல்லாம் இந்திரா காந்தியாக இருக்கிறது?” என்றேன்.

“ரொம்பக் கொடுமையான காரியம். பஞ்சாப் சீக்கியர்கள் பொற்கோவில் மீது ராணுவ நடவடிக்கை எடுத்து கலவரத்தை ஒடுக்கியதும், அரசு மீதும், இந்திரா மீதும் சீக்கியர்களுக்குக் கோபம் இருக்கிறது. அவர்கள் ஏதாவது செய்வார்கள் என்று அதிகாரிகள் பயந்தார்கள். அவர்கள் இந்திராவிடம், “சீக்கிய சிப்பாய்கள் உங்கள் பாதுகாப்பிற்கு வேண்டாம்” என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த அம்மா அதைக் கேட்கவில்லை, “அது வேறு, இது வேறு. எனக்கு சீக்கியர்கள் ஒரு கெடுதலும் செய்ய மாட்டார்கள்” என்று தன் தனிப்பட்ட வீட்டு பாதுகாப்பில் அவர்களை வைத்துக் கொண்டார்கள். அவரது அபரிமிதமான நம்பிக்கையே அவா¤ன் உயிரைப் பறித்துவிட்டது.”

“இரண்டு காவலர்களும் இந்திரா காந்தி நடந்து வரும்போது மாறி மாறி சுட்டு இருக்கிறார்கள். பெரிய திட்டம் போட்டு பேசி வைத்துக் கொண்டு செய்திருக்கிறார்கள்.”

“அதுதான் மகத்தான சோகம்”

“சீக்கியர்களின் பத்தாவது குரு சொன்னார்: ‘சீக்கிய இளைஞர்களே’ ‘நீங்கள் எல்லோரும் சிங்கம்.’ அதனை எல்லோருக்கும் தெரிவிக்க உங்கள் பெயர்களுக்குப் பின்னால் ‘சிங்’ என்று போட்டுக்கொள்ளுங்கள். இளம் பெண்களே நீங்கள் எல்லோரும் இளவரசிகள். எழில் மங்கையர்கள். எனவே ‘கவுர்’ என்று அறிவித்துக் கொள்ளுங்கள். அதில் இருந்துதான் ஒரு முன்னூறு வருஷமாக சிங்கங்களும், இளவரசிகளும் வருகிறார்கள்.”

“இரண்டு சிங்கங்கள் செய்த காரியம் நாட்டையே நிலைகுலைய வைத்து விட்டது.”

“நான் என் வேலையை முடித்துவிட்டேன். நீங்கள் உங்கள் வேலையை செய்து கொள்ளுங்கள்” என்று இந்திராவை சுட்ட ஒரு சிங்

துப்பாக்கியைக் கீழே போட்டு விட்டுச் சொல்லி இருக்கிறான்.''

''அவன் சிங்கம் இல்லை'' அசிங்கம்.

''மனிதர்கள்தான் நிறைய தப்பு செய்கிறார்கள்.''

''அதைச் சரியான காரியம் என்று நம்பிக்கொண்டு செய்வதுதான் முரணாக இருக்கிறது.''

''அதுதான் டில்லியில் கலவரமாகிவிட்டது.''

''வைத்தீஸ்வரன் டில்லி கலவரம் பற்றி, தீ வைப்புப்பற்றி நிறைய போனில் சொன்னார். டில்லி பத்திரிகை எல்லாம் அனுப்பி வைக்கிறேன் என்றார். 'நாந்தான் வேண்டாம் எதற்கு அதெல்லாம் படித்தால் மனசு சங்கடப்படும்' என்று சொல்லிவிட்டேன்.''

''ஆமாம் அது நல்லதுதான். கலவரத்தைப் பற்றி விவரமாக தெரிந்து கொண்டு ஒன்றும் ஆகப் போவதில்லை.''

''அதுதான் சரி''

''வைத்தீஸ்வரனை இந்திரா காந்தி பற்றிய புத்தகத்தை சீக்கிரம் எழுதச் சொல்லி போடுங்கள்''

அவர் என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''வெங்கடராமன் இந்திரா புத்தகம் எப்போது வரும்?''

''ஒரு கம்போசிட்டரை வரச்சொல்லி இருக்கிறேன். அவர் இரண்டு நாளில் புரூப் கொடுத்து விடுவார். புரூப் பார்க்கும்போதே படித்துவிடுவேன்.''

''இது நல்ல சௌகரியம்''

''மகேந்திரன் கண்காட்சிக்குப் போய், நல்ல படம் எடுத்துக்கொண்டு வந்து அட்டையில் போட்டுவிடவேண்டும் ரொம்ப திறமைசாலி. எப்போதும் விழித்துக்கொண்டே இருக்கிற ஆள். யாரும் அவனுக்கு யோசனைச் சொல்ல தேவையில்லை. அவனே யோசனையாகவும் – அதனை விற்கிறவனாகவும் இருக்கிறான்.''

''ரொம்பப் பாராட்டணும்''

“இப்படித்தான் திடீர் திடீரென்று வந்து ஏதாவது புதுசு புதுசாக யோசனை சொல்வான். அதை நாம் கேட்க வேண்டும், அபிப்பிராயம் சொல்ல வேண்டும் என்பது எல்லாம் இல்லை. அவனுக்கு அவன்தான் முக்கியம். அசல் கலைஞனாக இருக்கிறான்.’

“அவன் பிரின்ஸிபாலை ஒரு முறைப் பார்த்தேன். ‘கை இருக்கிறது, அதைவிட வாய் பெரிசா இருக்கிறது’ என்றார்.

Óயாரையும் மதிக்க மாட்டேன் என்று அலையறான்Ó என்று கவலைப்பட்டுக் கொண்டார் என்றார்.

“அவன் தன்னைப்பற்றி கவலைப்படுவதில்லை.”

“அது உயர்ந்த குணம் என்று ஐராவதம் சொல்வார்.”

“அவர் இந்தப்பக்கம் ஆளையே காணோம். முன்னையெல்லாம் நீ இல்லாவிட்டாலும் மூணு மாதம், ஆறுமாதத்திற்கு ஒரு முறை வந்து தலை காட்டிவிட்டு, புத்தகங்கள் வாங்கிக்கொண்டு போவார்”

“கொஞ்சம் நிலம் இருக்கிறது. விவசாயம் பண்ணப்போறேன் என்று நிலத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தார். இரண்டு வருஷமாக பப்பாளி போடப்போறேன்னு கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி, மைசூர் என்று அலைந்து கொண்டிருக்கிறார்.”

“விஷயம் தெரிந்த மனுஷன். எது செய்தாலும் நல்லாதான் செய்வார்.”

“பப்பாளி மேல் என்ன அக்கறை?”

“ஒன்னும் கிடையாது. கோயம்புத்தூர்க்கு பழனிச்சாமி என்ற சிநேகிதனைப் பார்க்கப் போய் இருக்கிறார். அவன் ஆழியாற்றுப் பகுதியில் தென்னைப் பயிரிட்டுக் கொண்டிருக்கிறான். பக்கத்தில் ஒருத்தன் பப்பாளி போட்டிருக்கிறான். அதைப் பார்த்ததும் பப்பாளி மீது ஆசை வந்துவிட்டது.”

“ஆசை பொல்லாதது”

“அதைத்தான் சொன்னேன். ஆனால் இன்னொருத்தான் சொன்னால் யார் கேட்பார்கள்”

“அதற்குத்தான், நான் புத்தகம் போடுறேன்”

“புத்தகம் என்பதின் மகிமை இப்போதுதான் புரிகிறது. இந்திரா காந்தி புத்தகம் சாவின் மகிமையைச் சொல்கிறதா? வாழ்வின் பெருமையைச் சொல்கிறதா என்று பார்க்க வேண்டும்”

அவர் தலையசைத்தபடி சிரித்தார். “புத்தகம் எழுத்தாளன் திறமையால் எழுதப்படுகிறது. அதில் அவன்தான் முக்கியம். தன் மேதைமையைக் காட்டத்தான் எழுதுகிறான்.”

“வாழ்க்கைச் சரித்திரம், இன்னொருத்தன் வாழ்க்கையைச் சொல்கிறது.”

“ஆனால் அந்த வாழ்க்கையை இவன் தனக்கு ஏற்ற மாதிரி எழுதி விடுகிறான்.”

“அப்படி எல்லாம் எழுத முடியுமா?”

நான் வெங்கடராமனிடம், ஒருநாள் கேட்டேன், ‘ஐயா, நீ எழுதுறதில் எத்தனை சதவீதம் உன் சரக்கு, எத்தனை சதவீதம் எழுதப்படுகிறவன் சரக்கு என்று? அவர் வெற்றிலைப் பாக்கை குதப்பிக்கொண்டே, “உனக்கு என்ன தெரியுது” என்று கேட்டார்.

“அதெல்லாம் கிடக்கட்டும், நீங்கள் சொல்லுங்கள்?”

“நான் ஒருத்தர் வாழ்க்கைச் சரித்திரம் எழுதினால், முழுக்க முழுக்க அவர் சரித்திரந்தான். அவர் வாழ்க்கையில் நடந்தது தான். நான் ஒன்றையும் குறைக்கவோ, திரிக்கவோ மாட்டேன். ஆனால் எதையெல்லாம் சொல்லக்கூடாது என்று படுகிறதோ அதை மறைத்துவிடுவேன். அதாவது எழுத மாட்டேன். அவ்வளவுதான் என்றார்.”

“இது நன்றாக இருக்கிறது?”

“அவர்தான் சொன்னார்: எந்த வாழ்க்கைச் சரித்திரமும் உண்மை கிடையாது. ஆனால் முழுக்க முழுக்க பொய் இல்லை. அது எழுதியவனைவிட படிக்கிறவர்களுக்கு அதிகம் தெரியும். தெரிந்து கொண்டுதான் படிக்கிறார்கள். வாசகர்கள் பெரிய மனிதர்கள். எழுத்தாளர்களை மன்னித்து விடுகிறார்கள். அதனால் தான் எழுத்தாளர்கள் மதிக்கப்பட்டு வருகிறார்கள்.”

“வெங்கடராமன் பெரிய ஆள்தான்”

“ரொம்ப பெரிய மனுஷன் வெகுளி மாதிரி இருப்பார். பேச்சு என்னவோ பட்டிக்காட்டான் மாதிரி இருக்கும். ஆனால் பேனாவை கையில் எடுத்தார் மகாஞானி.”

டெலிபோன் அடித்தது. சிவமணி எடுத்தார். “சொல்லுங்கள் வைத்தி”

“இந்திரா காந்தி புத்தகத்தைத் தமிழில் எழுதுவது என்று தீர்மானித்துவிட்டேன்.”

“நல்ல தீர்மானம்”

“பத்துப் பக்கங்கள் எழுதி முடித்து விட்டேன். இங்கிலீஷில எவன் எவனோ எழுதுவான். தமிழில் எழுதத்தான் ஆள் கிடையாது. கவிஞன் பத்து வரி அஞ்சலி எழுதி புலம்புவான். நான் இந்திராவின் ஆளுமை, எமர்ஜென்ஸி, நிர்வாகத்திறன், கல்வி, குடும்பம் – என்று எல்லாவற்றைப் பற்றியும் விமர்சனப் பூர்வமாக எழுதப்போகிறேன்.”

“ரொம்ப நல்ல விஷயம்”

“இதைச் சொல்லத்தான் போன் போட்டேன்.”

“முடித்தால் உடனே அனுப்பி வையுங்கள். புத்தகமாகப் போட்டுவிடலாம்.”

“நல்லா போக ஆரம்பித்து இருக்கிறது. அக்டோபர் 31 – இந்திரா வீட்டில் சுடப்பட்டதில் இருந்து தொடங்கி, பின்னோக்கிப் போகிறேன்.”

“அதுவும் நன்றாகத்தான் இருக்கும்.”

“லூயிஸ் பிஷர் மகாத்மா காந்தி சா¤த்திரத்தை இப்படித்தான் எழுதி இருக்கிறான் என்பது எழுத ஆரம்பித்தப் பிறகுதான் நினைவுக்கு வந்தது.”

“அதற்கென்ன? எங்கே இருந்தாவது சொல்ல வேண்டும். அதுவும் நல்ல ஆரம்பமாக இருக்கும்.”

“அவன் புத்தகத்தைப் பார்த்து எழுதியது மாதிரி இருக்காதே”

“அது எப்படி? நீங்கள் கதையா எழுதுகிறீர்கள் மகாத்மா சுடப்பட்டார்; இந்திராவும் சுடப்பட்டார். அதுதான் இரண்டு பேர்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை. அதற்கு அப்பால் ஒவ்வொருவருக்கும் தனியாக வாழ்க்கை இருக்கிறது. வரலாறு இருக்கிறது. அதைத்தான் எழுதப் போகிறீர்கள்.”

“இதுதான் குடைந்து கொண்டே இருந்தது. இப்போது சரியாகி விட்டது.”

“ராஜா இருக்கிறார். பேசுகிறீர்களா?”

“பேசணும். ஆனால் எழுதப் போகிறேன். நாளை பேசுகிறேன்” என்றவர், ‘திடீரென்று கொடுங்கள்’ என்றார்.

நான் டெலிபொன் வாங்கினேன்.

“ராஜா எப்படி?”

“நான் நன்றாக இருக்கிறேன். நீங்கள் எழுதப் போங்கள். உங்கள் இந்திராகாந்தி புத்தகத்தைப் படிக்க ஆவலாக இருக்கிறேன்.'' என்று சொல்லி போனை வைத்துவிட்டேன்.

“சார்” என்று கம்போசிட்டர் உள்ளே நுழைந்தார்.

“சைக்கிள் வர வழியில் பஞ்சராகி விட்டது. அதான் சார்” என்றார்.

“அதெல்லாம் கிடக்கட்டும். நீ வந்ததே போதும். ஒரு வாரத்தில் புரூப் வரணும்” என்று வெங்கடராமன் எழுதிய இந்திரா காந்தி நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தார்.

“சரி சார்” என்றபடி சிவமணி முகத்தைப்பார்த்தார். அவர் இருநூறு ரூபாய் எடுத்து மேசை மீது வைத்தார்.

”இதோட ஐநூறு ரூபாய் அட்வான்ஸ் இருக்குது சார்.”

“வேலையை சீக்கிரம் முடிக்கப் பார்.”

“உங்கள் வேலைதான் சார் நடக்கிறது” என்று இந்திரா காந்தி பற்றிய நோட்டுப் புத்தகத்தை எடுத்து பையில் வைத்துக்கொண்டார்.

“ஒரு புத்தகம் வெளிவருவதில் ரொம்ப பேர்களுக்கு பங்கு இருக்கிறது”

“புத்தகம் தயாரிப்பதே பெரியவேலைதான். அதுபற்றி மேல் நாட்டில் நிறைய புத்தகங்கள் போட்டிருக்கிறார்கள். புத்தகம் வந்ததும் படிக்கிறது பெரிய வேலை. படிப்பது பற்றியும், புத்தகம் போட்டிருக்கிறார்கள்.”

ஐராவதம் சொல்வார். “மனிதர்கள் கண்டுப்பிடித்ததில் மகத்தானது பேசறதும், எழுதுறதுந்தான் என்று.”

“நம்ம ஐராவதம், வைத்தீஸ்வரன் எல்லாம் நல்ல ஆத்மாக்கள். இரண்டு பேரும் நல்லா பேசத் தெரிந்து வைத்துக்கொண்டு இருக்கிறார்கள் அதுவே பெரிய விஷயம்தான்.”

“ஆமாம்”

“ஊருக்குப் போக இரண்டு மூன்று நாட்கள் ஆகுமா?”

“இல்லை. காலையில் புறப்படலாம் என்று இருக்கிறேன்.”

“வந்து பத்து நாள் இருக்குமா?”

“பதினைந்து நாட்கள் ஆகுது. இந்திராகாந்தி மரணத்தால் உடனே புறப்பட முடியல.”

“ஆமாம். ரொம்ப வேலை நின்னு போய்விட்டது.”

“பெரிய சாவு”

“ரொம்ப கஷ்டமாக இருக்கிறது” என்று சொல்லிக்கொண்டே எழுந்தேன்.

“வெங்கடராமன் புத்தகம் தயாரானதும் அனுப்பி வைக்கிறேன்.”

“எனக்கு வைத்தீஸ்வரன் புத்தகம்தான் வேண்டும். அவரை எழுத வையுங்கள்”

“பார்க்கிறேன். உற்சாகமாக இருக்கிறார். எழுதி விடுவார். என்றுதான் நினைக்கிறேன்” என்று பூட்டையும் சாவியையும் எடுத்துக்கொண்டு வெளியில் வந்தார்.

★

## அத்தியாயம் 20

காலை மணி எட்டு அடித்தது.

மேல்சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு, வேட்டியை அவிழ்த்து மறுபடியும் கட்டிக்கொண்டு பசியாற புறப்பட்டேன். டெலிபோன் அடித்தது. எடுக்க வேண்டாம் என்று முன்னே ஓரடி எடுத்துவைத்தேன். அதுவிடாமல் அடித்துக் கொண்டே இருந்தது. திரும்பி வந்து எடுத்தேன்.

“வணக்கம். வைத்தீஸ்வரன் டில்லியில் இருந்து அழைக்கிறேன்.” என்றார்.

“வணக்கம். சொல்லுங்கள்” நான் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன்.

“காலை வணக்கம்” எப்படி இருக்கிறீர்கள்? சிவமணி இடம் பேசினேன். அவர்தான் நீங்கள் கிளப்பில் இருப்பதாகச் சொன்னார். இன்னும் ஊருக்குப் போகவில்லை என்றார்.”

“ஆமாம். நாளை போகலாம் என்று இருக்கிறேன். டில்லி எப்படி இருக்கிறது”

“ரொம்ப மோசம். மகாத்மா காந்தி கொலையின்போதுகூட இப்படிப்பட்ட வன்முறை இல்லை. யாரோ பின்னால் இருந்து கொண்டு கலவரம் செய்கிறார்கள். கையாலாகாத அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஒருவேளை அதுதான் தூண்டி விடுகிறதா என்ற சந்தேகம்கூட வருகிறது.”

“அப்படிச் சொல்ல முடியுமா?”

“நடக்கறதைப் பார்த்தால் அப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது. பாவம்... சீக்கியர்கள். தலைப்பாகைக் கட்டியவன் தெருவில் தலைகாட்ட முடியவில்லை. தேடித்தேடி அடிக்கிறார்கள். ஒரு வாரமாக பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு சீக்கியனைக்கூட காணவில்லை.”

“கஷ்டந்தான்”

“ராஜீவ் காந்தி சொல்கிறார். பெரிய மரம் கீழே விழும்போது அடியில் இருக்கும் சிறு செடிகள் நசுங்கத்தான் செய்யுமென்று. எப்படி இருக்கிறது.

அவர் என்ன சொல்ல வருகிறார். ஏதாவது தெரிந்து தான் பேசுகிறாரா? இல்லை அம்மா போன துக்கத்தில் பிணாத்துகிறாரா? பல்கலைக்கழகத்தில் அதுதான் ஒரே பேச்சாக இருக்கிறது? அது பற்றியும் எழுதிக்கொண்டு வருகிறேன்.''

``நான் உங்கள் புத்தகம் பற்றி விசா£¤த்துக் கொண்டு இருக்கிறேன்.''

``சிவமணி சொன்னார்.''

``எத்தனை பக்கம் எழுதி இருப்பீர்கள்?''

``நன்றாகப் போகிறது. அறுபது, எழுவது பக்கம் எழுதி முடித்துவிட்டேன். இன்னும் ஒரு நூறு பக்கம். ஒரு வாரத்தில் முடித்துவிடலாம். என்று இருக்கிறேன்.''

``முடித்து விடுங்கள். நாங்கள் படிக்க ஆவலாக இருக்கிறோம்.''

``கேள்விப்பட்டேன். நானே முதல் இரண்டு அத்தியாயத்தைப் படித்துக் காட்டலாம் என்றுதான் போன் போட்டேன். அப்புறம் வேண்டாம் என்று பட்டது''

``ஏன்? எதற்கு?''

``படித்துக் காட்டலாம் என்று சொன்ன மனசு, அப்புறம் வேண்டாம் என்று சொல்லிவிட்டது. அதனிடம் காரணம் எல்லாம் கேட்க முடியாது.''

``இது ரொம்ப நன்றாக இருக்கிறது''

``இங்கே நடப்பது ஒன்றுமே நன்றாக இல்லை. நான் பதினைந்து ஆண்டுகளாக டில்லியில் இருக்கிறேன். இவ்வளவு மோசமான டில்லியை பார்த்தது இல்லை. ஆக்ராவில் கோட்டைக்கட்டிக்கொண்டு ஆட்சி புரிந்து கொண்டிருந்த ஷாஜகான், எதற்காக மொகரம் திருநாளில் பூசையோடு டில்லியில் கோட்டை கட்ட ஆரம்பித்தான் என்று தெரியவில்லை. பாவம், அவனும் தான் புதிய தலைநகரில் இருந்து ஆள முடியாமல் அருமை மகன் ஔரங்கசீப்பால் ஆக்ரா கோட்டையிலேயே எட்டாண்டுகள் சிறை வைக்கப்பட்டான். தான் கட்டிய தாஜ்மகாலைப் பார்த்துக்கொண்டே செத்தான்.''

``டில்லி சரித்திரம் ரொம்ப கொடுமையாகத்தான் இருக்கிறது.''

“ராஜா, தெரியுமா? ஷாஜகான் செத்துப் போனதும் அவர் மகள் ஜகானரா பேகம் மகாராஜா சவ அடக்கத்தை ராஜமரியாதையுடன் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார். அது ஒளரங்கசீப் காதிற்கு எட்டி இருக்கிறது. ‘இந்த ஆடம்பரம் எல்லாம் ஒன்றும் வேண்டாம். சீக்கிரம் முடியுங்கள்’ என்று கட்டளை போட்டான். அவசர அவசரமாகக் கொண்டு போய் புதைத்தார்கள்.”

“கேட்கவே கஷ்டமாக இருக்கிறது.”

“நாம் கஷ்டப்படுத்திக் கொள்ளக்கூடாது. மனிதர்கள் எவ்வளவு கெட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைத்தான் தெரிந்து கொள்ளவேண்டும். சரித்திரத்தில் இருந்து மனிதர்கள் பாடம் கற்றுக்கொள்வது இல்லை.”

“அப்படியானால் எதில் இருந்துதான் கற்றுக்கொள்கிறார்கள்.”

“சொன்னால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். அவர்கள் யாரிடம் இருந்தும் எதையும் கற்றுக்கொள்வதில்லை. தங்கள் மனதில் இருப்பதில் இருந்தே எடுத்து எடுத்துக் கற்றுக்கொள்கிறார்கள் அவர்களுக்கு வெளியில் இருந்து கற்கப் பாடம் ஏதுமில்லை. தங்களின் மனசில் இருக்கும் பாடத்தைத்தான் வெளியில் பரப்புகிறார்கள். அதனை சில சமயம் சரியாகச் சொல்கிறார்கள்; பல நேரங்களில் சரியாகச் சொல்வதில்லை.”

“நீங்கள் சமூகவியல் பேராசிரியர் என்று சிவமணி சொன்னார்.”

வைத்தீஸ்வரன் பெரிதாகச் சிரித்தார். அப்புறம் சொன்னார்: “ஆமாம் நான் என்னப் படித்திருக்கிறேன்; என்ன கற்றுக் கொடுக்கிறேன் என்று ஒரே சமயம் சந்தேகம் வந்துவிடும். பாடப்புத்தகம், படிப்பு என்பதெல்லாம் அர்த்தம் இல்லாதது. இந்திரா காந்தி என்ன படித்து விட்டு ஆட்சிக்கு வந்தார்? எத்தனைப் பெரிய பெரிய படிப்பாளி எல்லாம் அவருக்கு அடங்கி நடந்தார்கள், ஆள்வதற்கும், ஆளப்படுவதற்கும் இடையில் ஒரு சிறிய வேறுபாடுதான் இருக்கிறது. நான் எத்தனை விமர்சனம் வைத்தாலும், இந்திரா காந்தி பெரிய மனுஷி. தைரியசாலி. அது அவர் படிக்காமல் பெற்றது. இப்படித்தான் எழுதப் போறேன்.”

“ரொம்ப வித்தியாசமாக யோசிக்கிறீங்க”

“இல்லை. இல்லை. நான் இல்லாத எதையும் சொல்வது இல்லை. அவர்கள் வாழ்க்கை என்ன சொல்கிறதோ, அதைத்தான் நான் கொஞ்சம் விளக்கமாகச் சொல்கிறேன். அதில் என் கை சரக்கு என்பது கொஞ்சம்கூட

கிடையாது. அவர்களிடம் இருந்து பெற்றதை மறுபடியும் எல்லோருடனும் பகிர்ந்து கொள்கிறேன்.''

''தெரிகிறது''

''பலருக்குத் தெரிவதில்லை. நான் தெரிந்து கொண்டதைத் தெரிந்து கொண்ட விதமாகச் சொல்கிறேன். அது புதிய கண்டு பிடிப்போ, இல்லாததோ இல்லை. இருந்தது என்பதை எடுத்துச் சொல்கிறேன். அது சிலருக்குப் பிடிக்கிறது. பலருக்குப் பிடிப்பதில்லை. எனவே யாரும் சொல்வது கிடையாது. நான் சொல்கிறேன்.''

''ஆமாம்''

''மனிதன் தன் அறிவால் ரொம்ப விஷயத்தைக் கண்டு பிடித்து இருக்கிறான். அவற்றில் யார் யாரோ எது எதற்கோ முதலிடம் கொடுக்கிறார்கள். இதுதான் சமூகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றது என்று பட்டியல் இடுகிறார்கள். ஒருத்தன் சுற்றும் சக்கரம் என்றான். இன்னொருவன் பேசும்மொழி என்றான். மூன்றாவது ஆள் மொழியும் எழுத்தும் என்கிறான். அப்புறம் இன்னும் என்னென்னவோ சொல்கிறான். எவன் சொல்வதும் சரியில்லை. ராஜா, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''நீங்கள் சொல்லுங்கள். இது விஷயமாக ரொம்ப யோசித்து வருகிறீர்கள்''

''சரியாகக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்கள். நம்ப பழக்கமே கொஞ்ச நாட்கள்தான். ஆனாலும் ஓர் ஆள் யார் என்பதை அந்தக் கொஞ்ச நாட்களிலேயே கண்டு பிடித்துவிட்டீர்கள்!''

''நான் எங்கே கண்டு பிடித்தேன். நீங்கள் தான், யார் என்பதை வெளிக்காட்டினீர்கள்?''

''ஆமாம். பகவான் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுப்பது மாதிரி என்று சொல்லிவிடலாமா?'' என்று கேட்டுவிட்டுப் பெரிதாகச் சிரித்தார். அப்புறம், ''சொல்லலாமா?'' என்று கேட்டார்.

''சொல்லுங்கள். மனிதன் கண்டு பிடிப்புக்களிலேயே முதல்தரமானது என்று ஆரம்பித்தீர்கள்''

“ஆமாம். ஆமாம். முதலில் கண்டுப்பிடிக்கப்பட்டது என்பதால் ஒன்றுக்கு மதிப்புக் கிடையாது. எது முதல் தரமானதோ – எதைக்கொண்டு நாம் எல்லா வேலைகளும் செய்து முடித்துக் கொள்கிறோமோ, அது முதலாகிறது”

“அது சரிதான்”

“அப்படிப் பார்த்தால், இரும்புதான் முதல் தரமானது. அதுதான் முதலில் இருக்க வேண்டும். இரும்பில் மண்வெட்டி செய்துதான் மனிதன் பூமியைக் கொத்தினான். இரும்பில் அரிவாள் செய்துதான் மரத்தை வெட்டினான். இரும்பு கத்தியால் தான் ஆட்டின் கழுத்தை அறுத்தான். இரும்பு கலப்பையால் நிலத்தை உழுது பயிரிட்டான். இரும்பு ஈட்டியால் ஆளைக் குத்திக் கொலைசெய்தான். கழுத்தில் வெட்டினான். இரும்புதான் மனிதன் கண்டு பிடிப்புகளிலேயே முதன்மையானது. போரின் வெற்றித் தோல்வி என்பது இரும்புக் கருவிகளால் தான் தீர்மானிக்கப் படுகிறது.”

“இரும்புக்கு சமூகத்திலும், சரித்திரத்திலும் முக்கியமான இடம் இருக்கிறது”

“முதலிடம் இருக்கிறது”

“ஆமாம் சொல்லுங்கள்”

“இரும்பு மற்றவர்களைத் தீர்த்துக் கட்டத்தான் பயன்படுகிறது என்பது இல்லை. தன்னையே தீர்த்துக்கட்டிக்கொள்ளவும் கருவியாக இருக்கிறது. எவ்வளவோ பெரிய வீரன், தைரியசாலி என்று சொல்லப்படுகிற ஆளெல்லாம்தான் ஒன்றுக்கும் லாயக்கில்லை என்பது தெரியும்போது கத்தியை எடுத்து கழுத்தை அறுத்துக் கொண்டு செத்துப்போகிறான். ராஜா, ராபர்ட் கிளைவ் பற்றி படித்து இருக்கிறீர்கள் அல்லவா?”

“சொல்லுங்கள்”

“இங்கிலாந்தில் தெரு பொறுக்கி; வீட்டுக்கு அடங்காத பிள்ளை. தறுதலையாகச் சுற்றிக்கொண்டிருந்தான். வயது பதினேழுவாகிவிட்டது. கண்காணாத தேசத்திற்குப் போய் ஒழிந்து போகட்டும் என்று அவன் பெற்றோர் இந்தியாவிற்கு புறப்பட்டுக் கொண்டிருந்த கப்பலில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள். ஒரு கூட்டம் அமெரிக்காவிற்கு ஓடிக் கொண்டிருந்தது. இன்னொரு கூட்டம் இந்தியா வந்து கொண்டு இருந்தது. இந்தியா வந்த ராபர்ட் கிளைவ் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில்

கிழக்கிந்திய கம்பெனியில் குறைந்தச் சம்பளத்தில் எழுத்தராக வேலை பார்த்தான். அப்போது அவனுக்கு பத்தொன்பது வயதாகி இருந்தது.''

''செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குப் போய் இருக்கிறேன்.''

பொர்னால்டு பிரான்சில் ''கோட்டை சர்ச்சில்தான் கல்யாணம் செய்து கொண்டான். அங்கேதான் குடியிருந்தான். அதற்கு முன்பு பிரெஞ்சுக்காரன் மகி – டி – லபர்த்தானே பெரிய கடற்படையோடு வந்து அடிஅடியென்று அடித்து சென்னை கோட்டையைப் பிடித்துக் கொண்டான். கிளைவ் ஒரு படகில் ஏறி ராவோடு ராவாக கடலூர் டேவிட் கோட்டைக்கு ஓடிப்போய் ஒளிந்து கொண்டான். அதை துபாஷி ஆனந்த ரங்கப்பிள்ளை எழுதி வைத்திருக்கிறார். மகே என்ற ஊர் புதுச்சேரியில் அவன் பெயரில் காண இருக்கிறது. ரொம்ப பெரிய ஆள். அருமையாக டைரி எழுதி வைத்து ஆனந்தரங்கப்பிள்ளை இருக்கிறார். நீங்கள் அவசியம் படிக்க வேண்டும்''

''நண்பர் ஐராவதம் படித்துவிட்டுச் சொன்னார்.''

''துபாஷி டைரி படித்திருந்தால் அவர் பெரிய ஆள்தான். நான் அவரை அவசியம் சந்திக்க வேண்டும். நீங்கள் டில்லி வரும்போது அவரையும் அழைத்துக்கொண்டு வாருங்கள்.''

''கண்டிப்பாக. அவரை உங்களுக்கு ரொம்பப்பிடிக்கும்''

''நீங்கள் சொன்னால் சரியாக இருக்கும்''

''நான் இரும்பு விஷயத்தை முடித்து விடுகிறேன்.''

''ராபர்ட் கிளைவ்''

''அவன் மாதிரியான பொறுக்கிகள் தான் பெரிய போர்வீரனாவார்கள். அதுதான் சரித்திரம். அதிர்ஷ்டக் காற்று அவர்கள் பக்கமே வீசும். இந்த கிளைவ் பானிபட்டில் வெற்றி கண்டான். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உதயமாகியது. நாம் அடிமையானோம். ஒரு தேசம் அடிமைப்படுவதைவிட –அவமானம் ஒன்றும் கிடையாது. நாம் முன்னூறு வருஷங்கள் அடிமைப்பட்டு அவலமான வாழ்க்கை வாழ்ந்தோம். அதற்கு வழிவகுத்தவன் ராபர்ட் கிளைவ்தான். மகாமுரடன். எப்பொழுதும் கெட்ட காரியம் செய்யத் துடிதுடித்துக் கொண்டே இருந்தான். கொஞ்ச நேரங்கூட அவனால் சும்மா இருக்க முடியாது. ஏராளமான பணம் சேர்த்துக்கொண்டு கப்பல் ஏறி இங்கிலாந்து சென்றான்.

“அவன் மீது ஊழல், லஞ்சப்புகார் வந்தது, இல்லையா?”

“நிறைய புகார். நாளுக்கு நாள் வந்து கொண்டே இருந்தன. இந்தியாவில் மாவீரன் என்று புகழப்பட்டவன்மீது இங்கிலாந்து பாராளுமன்றத்தில் விசாரணைக் கமிஷன் போட்டார்கள். ராபர்ட் கிளைவ் எப்பொழுதும் ஒரு இரும்புக் கத்தி வைத்துக்கொண்டு இருந்தான். இரும்புக் கத்தி அவனை சும்மா இருக்கவிடவில்லை. லஞ்சம், ஊழல் பற்றிய புகார்க்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருப்பதைவிட கத்திக்கு வேலை கொடுக்கலாம் என்று நினைத்தான்.”

“என்ன பண்ணினான்?”

“நாற்பத்திரண்டு வயதாகி இருந்தது. நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தவன் திடீரென்று இரும்புக் கத்தியை எடுத்தான். கழுத்தை அறுத்துக் கொண்டு தன்னைத் தீர்த்துக்கொண்டான். சின்ன கத்திதான். ஆனால் இரும்புக் கத்தி தன் வேலையைக் காட்டிவிட்டது. அதுதான் இரும்பு என்பதின் மகத்துவம்.”

“நல்லா சொல்கிறீர்கள்”

“இன்னும் நிறைய சொல்லலாம். இது டெலிபோன், நான் ரொம்ப நேரம் பேசிட்டேன். டில்லி வாருங்கள். நாம் பேசிக்கொண்டே ஆக்ரா, பதேர்பூர் சிக்கி சென்று வரலாம்.”

“அவசியம்”

“நான் போனை வைக்கிறேன்” என்றார் வைத்தீஸ்வரன்.

“இல்லை. நீங்கள் பேசலாம்”

“நீங்கள் கேட்கிறீர்கள் என்பதற்காக நான் பேசிக்கொண்டே இருக்க முடியாது. எப்பொழுது நிறுத்தத் தோன்றுகிறதோ அப்போது நிறுத்தவேண்டும். நிறுத்தும் இடம் தெரியாதவன். பேசத்தெரியாதவன். எனவே நான் போனை வைக்கிறேன்.” என்றார்.

நான் ஒன்றும் சொல்லவில்லை. டெலிபோனை கீழே வைத்துவிட்டு ஒரு கிளாஸ் தண்ணீர் குடித்தேன். தொண்டையைத் தடவி விட்டுக்கொண்டே நாற்காலியில் இருந்து எழுந்தேன். அறையைப் பூட்டிவிட்டு வரவேற்பு நோக்கி நடந்தேன்.

★

## அத்தியாயம் 21

மாடிப்படி வழியாகக் கீழே இறங்கிக் கொண்டிருந்தேன்.

“சார், வணக்கம்” என்றார் ராஜவேலு. சீனியர் வக்கீல்.

“வணக்கம், வக்கீல் சார்.” என்றேன்.

“கிளப்பில்தான் தங்கியிருப்பதாக முருகேசன் சொன்னார். ஆனால் ஆளே கண்களில் படுவதில்லை.”

நான் சிரித்துக் கொண்டேன்.

“சத்தியமூர்த்தி பவனில் அன்னை இந்திராகாந்திக்கு ஒரு

அஞ்சலி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அடுத்த வாரம். அவசியம் கலந்து கொள்ள வேண்டும்.”

“கண்டிப்பா”

“எதிர்பாராத இழப்பு”

“ஆமாம்”

“இந்தியாவை முன்னேற்றப்பாதையில் அழைத்துக்கொண்டு சென்றார்கள். மகா தைரியசாலி. சட்டென்று கொன்று விட்டார்கள். இதற்கு நாம் எல்லோருந்தான் பொறுப்பு.”

நான் தலையசைத்தேன்.

“கோபண்ணா ஒரு புத்தகம் எழுதிக் கொண்டு வருகிறார். ரொம்ப நல்லா எழுதியிருக்கிறார். நிறைய படங்கள் புத்தகம் வந்ததும் ஒரு பிரதி கொடுக்கிறேன். படித்துவிட்டுச் சொல்லுங்க”

“கண்டிப்பா”

“புத்தகம் விஷயமாகத்தான் பிரஸ்க்குப் போய் கொண்டிருக்கிறேன். மாலையில் பார்க்கிறேன்.”

“நல்லது”

ராஜவேலு 'பெயில் வக்கீல்' என்று பெயர். ஒரே நாளில் நாலு கோர்ட்டில் பெயில் வாங்கிக் கொண்டு வந்துவிடுவார் என்று கிளப்பில் பேசிக்கொள்வார்கள். உயர் நீதிமன்ற நீதிபதிக்கு அவர் பெயர் பரிந்துரைக்கப்பட்டது என்றும், ஆனால் டில்லியில் தள்ளிவிட்டார்கள் என்பது இன்னொரு பேச்சு. அவர் ஜூனியர் எல்லோரும் பெண்கள். அதற்காக அவரை யாரும் குறை சொல்லி கேட்டதில்லை. கிளப்பில் வக்கீல்கள் பற்றி நிறைய கதை உண்டு. ஆனால் ராஜவேலு எந்தக் கதையிலும் கிடையாது. அதுவே ஒரு வக்கீலுக்கு நல்ல பெயர்தான். நான் வரவேற்பு பக்கத்திற்கு சென்றதும், ஷோபாவில் உட்கார்ந்து கொண்டிருந்த கணேசன் எழுந்து இரு கை கூப்பியபடி முன்னே வந்தான்.

"வா, கணேசா. எப்ப வந்தே"

"காலையிலேயே ஏர்போர்ட்டில் இருந்து நேரே வந்துவிட்டேன்."

"நீ பிளேன் ஏறிப்போன ஆள் தானே. எப்படி வந்தே?"

"நம்ப எம்.பி.க்கு ரொம்ப முடியாமல் போய்விட்டது. இங்கே எல்லாம் பார்த்தால் சரிப்படாதென்று, அந்த அம்மா சிங்கப்பூருக்கு அழைச்சிக்கிட்டு போயிடுச்சி."

"சிங்கப்பூர்க்கா? அவ்வளவு மோசமா?"

"அதெல்லாம் ஒன்றும் இல்ல. ஆளு நல்லாத்தான் இருக்கார். இந்தம்மாவிற்கு அவரைத் தன் கஸ்ட்டடியில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று ஆசை. அதனால சிங்கப்பூர் இழுத்துக்கிட்டுப் போயிடுச்சி."

"நீ தானே எப்பவும் அவர்கூடவே இருப்ப. எப்படி நீ போகல."

"அவர் என்னைத்தான்கூட வரச்சொன்னார். அந்த அம்மாகூட ஏர்போர்ட்டுக்கு வரச் சொன்னிச்சி. கடைசி நிமிஷத்தில் அந்த அம்மா அக்கா பையன்னு ஒருத்தன் வந்தான். அவனை சேர்த்துக்கிட்டு என்னைக் கழட்டி விட்டுவிட்டது."

"அப்படியா?"

"எனக்கு அதில் ஒன்றும் வருத்தமில்லை. நான்கூட இருந்தால் அவர்களுக்குத் தான் லாபம். சிங்கப்பூர் மூணுதடவை போய் இருக்கிறேன். திருவாரூர் அன்பழகன் ரொம்ப வேண்டியவர். அவர் மளிகைக் கடையில்

நமக்கு எப்பொழுதும் ஒரு அறை உண்டு. நல்லதுக்கு எப்பவும் காலம் இல்லை.''

''அதை விடு கணேசா''

''அதை ஏர்போர்ட்டிலேயே விட்டுட்டேன்.''

''அதுதான் சரி''

''உங்களைப்பார்த்து ஒரு வார்த்தைச் சொல்லிட்டு ஊருக்குப் போகலாமென்று வந்தேன்.''

''ஊரில் ஏதாவது பிரச்னையா?''

''ராத்திரி என்னென்னவோ காதில் விழுந்தது. நிலைமை என்னவோ சரியில்லை.''

''அப்படியா?''

''அதான் உங்கள் காதில் போட்டுவிட்டுப் போகலாமென்று வந்தேன்.''

''நீ நினைக்கிறதுமாதிரி எல்லாம் ஒன்றும் நடக்காது.''

''நீங்கள் சொன்னால் சரியாகத்தான் இருக்கும். உங்களுக்கும் தகவல் வந்திருக்கும்.''

''சரி. ஏதாவது பணம் வேணுமா?''

''இப்ப வேணாம். கை நிறைய பணம் இருக்கிறது, வேண்டுமென்றால் நான் வாங்கிக் கொள்கிறேன்.''

''சாப்பிட வா?''

''இல்லை. நான் உத்தரவு வாங்கிக் கொள்கிறேன்.'' என்று சொல்லிவிட்டு கணேசன் புறப்பட்டுச் சென்றான்.

நான் ஐராவதத்தை நினைத்துக்கொண்டேன். அவர்தான் சொல்வார், மனிதன் ஒரு ஆள் கிடையாது. அவனை எந்த இடத்திலும் நிறுத்த முடியாது. அதில் படித்தவன், படிக்காதவன் என்றெல்லாம் கிடையாது. படிப்புக்கும் மூளைக்கும் சம்பந்தம் இல்லை. மூளை ஒவ்வொருவனுக்கும் இருக்கிறது. படிப்பு சொந்த புத்தியை மழுங்கடிகிறது. மனசில் இருக்கும் தைரியத்தைப் பிடுங்கிக் போட்டு விடுகிறது. அதனால் படிக்காமல்

இருக்கவேண்டும் என்று சொல்லமாட்டேன். படிப்புக்கும் புத்திக்கும் சம்பந்தமில்லை. அவ்வளவுதான் நான் சொல்வது. அதற்கு நம்முடைய கணேசன் ஓர் ஆள். எத்தனைப் படிப்புப் படித்தவனும் கணேசன் மாதிரி ஆக முடியாது. அவன் ஓர் அற்புதமான மனிதன். நிஜமாக அவனைப் போன்றவர்களால்தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

"நீ எந்த வேலையை வேண்டுமானாலும் கணேசனிடம் கொடுத்துப்பார். அவன் அதனை செய்து முடித்துவிடுவான். அவன் செய்த முறை, வழி எல்லாம் சரியா என்றெல்லாம் கேட்கக்கூடாது. காரியம் முடிந்ததா? பலன் வந்து சேர்ந்ததா என்றுதான் பார்க்க வேண்டும். அதுதான் வாழ்க்கை என்னும் வியாபாரத்தில் லாபம். லாபம் இல்லாமல் ஏதாவது இருக்கிறதா?"

"இது நன்றாக இருக்கிறது?" என்றேன்.

'ஒருத்தன் சொல்லி இருக்கிறான். நான் சொல்வது என்னவோ பாவம் போல இருக்கும். என்னைப் பைத்தியக்காரன் என்பீர்கள். ஆனால் உங்களுக்கு வரும்போது சொல்லுங்கள். நான் சொல்வதுதான். எப்படியாவது முடித்துவிடு. காரியம் நல்லபடியாக முடிந்தால் போதும்' இப்படி நல்ல படியாக முடிக்கும் சாமர்த்தியம் பெற்றவர்கள் ரொம்ப கொஞ்ச பேர்கள்தான் இருக்கிறார்கள், உலகம் என்பதும், ஊர் என்பதும், குடும்பம் என்பதும் அவர்களால் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது."

"கணேசன் இல்லாவிட்டால் காரியமே நடக்காதா?"

"இன்னொரு நேசன் வந்துவிடுவான். அவனுக்கு நீ ஏதாவது பெயர் வைத்துக் கொள்ள வேண்டும்."

"உங்கள் அறிவால் ஏதாவது சொல்லி பயமுறுத்திக்கொண்டே இருக்கிறீர்கள்"

"நாங்கள் ஒன்றுமே புதிதாகக் கண்டு பிடித்துச் சொல்வது இல்லை. என்ன இருக்கிறதோ – அதைக் கொஞ்சம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறோம். இருப்பதில் ஒரு பங்கைகூட எங்கள் கண்களுக்குத் தெரியவருவது இல்லை. அவ்வளவு குறைச்சல். அதுவே இவ்வளவு சொல்கிறது என்றால் அரை மடங்கு முக்கால் மடங்கு எவ்வளவு சொல்லும்"

“வேண்டாம். நான் யார் பேச்சையும் கேட்கத் தயார் இல்லை. ரேடியோ, பேப்பர், தொலைக்காட்சி எல்லாவற்றையும் விட்டுவிடப்போகிறேன்.”

“நீ விடலாம். ஆனால் அவை உன்னை விடாது.”

“நான் பார்க்கவில்லை; கேட்கவில்லை. படிக்கவில்லை என்றால்”

“உனக்குத்தான் நஷ்டம். நீ எதில் இருந்தும் தப்பித்துக்கொள்ள முடியாது. அப்பா காலத்திற்கு, தாத்தா காலத்திற்குப் போக முடியுமா?”

“ஏன் முடியாது. நான் எப்படி வாழ விரும்புகிறேனோ அப்படி வாழ்வது என் உரிமை.”

“ரொம்ப நன்றாக இருக்கிறது. காலத்தைப் பின்னோக்கிக் கொண்டு போக முடியாது. அது ஓடிய தண்ணீரைத் திரும்பிக் கொண்டுவந்து பாய்ச்சுவது மாதிரி. ஓடிய தண்ணீர் பழைய தண்ணீர். அதனைப் புதுத் தண்ணீராக்க முடியாது.”

“இது”

“நான் வீம்புக்குப் பேசவில்லை.”

“நான் அப்படிச் சொல்லவில்லை.”

“அதுதான்?”

“மகாத்மா காந்தியால் இன்றைய சூழலில் வாழ முடியுமா?”

“நல்ல கேள்விதான்.”

“அதுதான் சமூகம். வாழ்க்கை”

“பழைய காலம் பொற்காலம் என்றுதான் ரொம்ப பேர்கள் சொல்கிறார்கள். ஆனால் எல்லா காலமும் பொற்காலந்தான். எல்லோருடைய வாழ்க்கையிலும் கொஞ்சம் பொன் இருக்கவே செய்கிறது.”

“என் வாழ்க்கையிலும் நிறைய பொன் கிடைத்து இருக்கிறது.”

“பாக்கியவான்” என்றார் ஜராவதம்.

எனக்கு அவரோடு பேசிக்கொண்டிருப்பது பிடிக்கும். ஏனென்றால் என்னையே தெரிந்து கொள்ள அந்தப் பேச்சு வைக்கும்.

"உன் சிநேகிதன்" என்றேன்.

அவர் கலகலவென்று சிரித்தார்.

சிரிப்புக்கு வசீகரம் உண்டு. நான் அடிக்கடி நாகரிக கோமாளி என்.எஸ். கிருஷ்ணன் சிரிப்புப் பற்றி சிரித்துக்கொண்டே பாடியிருக்கும் பாட்டை நினைத்துக்கொள்வேன். சிரிப்புதான் மனிதன் சொத்து. உலகத்தில் எத்தனையோ ஜீவராசிகள் இருக்கின்றன. அதில் மனிதன் மட்டுந்தான் சிரிக்கக் கூடியவன்; சிரிக்கத்தெரிந்தவன் என்று படித்திருக்கிறேன். ரொம்ப நாட்களுக்கு முன்னால் படித்தது."

"நல்ல நினைவாற்றல்."

"அது உண்மையா என்று ஒரு நாள் ஐராவதத்திடம் கேட்டேன்.

"சந்தேகமா?"

"எனக்கு அடிக்கடி ரொம்ப விஷயத்தில் சந்தேகம்"

"அது நல்லதுதான். சந்தேகப்பட்டால்தான் சரியாக இருக்கிறோம் என்பது பொருள்."

"அப்படியா?"

"இது சந்தேகப்பாடு இல்லையே"

நான் சிரித்தேன்.

அறைக்கு வந்ததும், பகல் ஒரு மணிக்கு ஊருக்குப் போகலாம் என்று பட்டது. சாதாரணமாக சென்னைக்கு வந்தால் நான்கு நாட்களுக்கு மேல் தங்கமாட்டேன். மனசும், காலும் தரிக்காது. எவ்வளவு வேகமாக வந்தேனோ அவ்வளவு வேகமாகத் திரும்பி விடுவேன். இதுதான் அதிக நாட்கள் தங்கிவிட்டதுமாதிரி இருந்தது. அதில் முதலில் இருந்தது இந்திரா காந்தி மரணம். அது பதறவைத்துவிட்டது. நான் பதறும் ஆனில்லை ஆனாலும் பதறிவிட்டேன். அதைக் கொஞ்சம் ஆற்றியது வைத்தீஸ்வரன் பழக்கம். நல்ல ஆத்மா. ஐராவதம் மாதிரி இருவரும் என்று சொல்லிக் கொண்டேன்.

டெலிபோன் அடித்தது. வைத்தீஸ்வரனாக இருக்குமோ என்று நினைத்துக் கொண்டு எடுத்தேன். இன்ஸ்பெக்டர் பேசினார்.

"சொல்லுங்கள்?" என்றேன்.

"சார்! உங்கள் சிநேகிதர் ஐராவதம்..."

"ரொம்ப நல்ல சிநேகிதர் சொல்லுங்க."

"அவரை காலையில் நடைப்பயிற்சி போனபோது யாரோ மர்டர் பண்ணிட்டாங்க சார். நாங்கள் விசாரணைப் பண்ணிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் அவருக்கு நெருக்கமானவர் என்றார்கள். அதான் சார்... உங்களிடம் சொல்கிறோம்"

"அப்படியா, எப்போ"

"காலையில் ஆறுமணி. வாக்போகும்போது"

எனக்கு என்ன பேசுவது, என்ன கேட்பது என்று தெரியவில்லை. டெலிபோனை வைத்துவிட்டு, நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டேன். உடம்பு படபடவென்று அடித்துக்கொண்ட்து. கண்களை மூடிக்கொண்டேன். எங்கும் இருள் சூழ்ந்தது. நான் இருளில் மூழ்கிப்போனேன்.

★